# பூக்கோலம் போடவா...



முத்துலட்சுமி ராகவன்

# பூக்கோலம் போடவா...

## 1



கோவையிலே குடியிருக்கும் கோமகளே தாயே!

பாவையிவள் பாரம் குறைத்த நாமகளும் நீயே!

வெயிலும் இல்லாத குளிரும் இல்லாத கோவை நகரத்தின் இதமான சீதோஷ்ண நிலை. மருதமலைக்குச் செல்லும் வழியில் அமைந்த கோவை வேளாண்மைக் கல்லூரி. மரங்களடர்ந்த காம்பவுண்டிற்குள் பூங்காவின் மத்தியில் அமைக்கப்பட்டிருந்ததைப் போன்று அமைந்த கல்லூரியின் கட்டிடம் இருபுறமும் மரங்கள் நிழல் கொடுக்க மெயின் ரோட்டிலிருந்து கல்லூரிக்குள் செல்லும் நீண்ட சிமெண்ட் கல்லூரிப் பாதை. இருபுறமும் மரநிழலில் அமைக்கப்பட்டிருக்கும் சிமெண்ட் பெஞ்சு

கள். அதில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் வண்ண மலர்களைப்போல் பல வண்ணங்களில் உடையணிந்த கல்லூரியின் மாணவ, மாணவிகள்... இது எதுவுமே த்ரிணியின் மனதில் பதியவில்லை.

தன் போக்கில் யோசித்துக் கொண்டே சென்றவளை யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். மேனகா வந்து கொண்டிருந்தாள்.

''என்ன தாரிணி கூப்பிடக் கூப்பிடத் திரும்பிப் பார்க்காமல் போய் கொண்டிருக்கிறாயே... அப்படியென்ன யோசனை?''

''பெரிதாய்... புதிதாய்... எதுவுமில்லை வழக்கமான யோசனைதான்.''

''வழக்கமானதென்றால்... சாயந்திரம் யாராவது பெண் பார்க்க வருகிறார்களா?'' மேனகா பட்டென்று கேட்டாள்.

'இவள் எப்படி இவ்வளவு கரெக்டாக கண்டுபிடிக்கிறாள்?' தாரிணி உதடு கடித்தபடி 'ஆமாம்' என்று தலையை அசைத்தாள்.

''உன் வீட்டாருக்கு வேறு வேலையே இல்லையா? யார் பெண் கேட்டு வந்தாலும் உன்னைக் கல்யாணம் செய்து கொடுக்கும் உத்தேசமே அவர்களுக்கு இல்லை. அப்புறம் எதற்கு வாராவாரம் இந்தக் கண் துடைப்பு பெண் பார்க்கும் படலம்? எல்லாம் வெறும் நாடகம்...''

''இந்த உலகமே ஒரு நாடக மேடைதானே மேனகா. நாமெல்லோரும் நடிகர்கள்தானே. அது என் வீட்டாருக்கு மட்டும் மறக்காமல் நினைவிலிருக்கிறது. நாம்தான் மறந்து விட்டோம்.''

''அது சரி. ஆனாலும் இப்பேர்பட்ட நடிகர்களை நான் பார்த்ததே இல்லை. அப்பப்பா... என்ன நடிப்பு.. என்ன நடிப்பு.''



மேனகா சொல்வது உண்மையென்றாலும் சொல்வது தன் வீட்டை என்பதால் தாரிணி மனம் குன்றினாள்.

''இது ஒரு வகையான டார்ச்சர் தாரிணி. அலங்காரம் பண்ணி கண்டவங்க எதிரில் ஷோ கேஸ் பொம்மை போல் நிறுத்தி... அவங்க பிடிக்கலைன்னு சொன்னால் சந்தோசப்பட்டு பிடிச்சிருக்குன்னு சொன்னால் வேண்டுமென்றே ஆயிரம் பிரச்னைகள் பண்ணி குறை கண்டு பிடித்து கல்யாணத்தை நிறுத்தி... என்ன கொடுமை இது தாரிணி? இதற்கு கல்யாணம் பேசாமலேயே இருந்து விடலாமே...'' மேனகா பொருமினாள். சிவந்த நிறத்துடன் அழகான தோற்றத்துடனிருந்தாள். மடிப்புக் கலையாத சேலையை பாந்தமாய் உடுத்திக் கூந்தலை கொண்டையிட்டிருந்தாள்.

Uploaded by Naghu

''கல்யாணம் பேசாமல் இருந்தால் சொந்த பந்தங்களும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களும் கேள்வி கேட்பார்களே... அதிலிருந்து தப்பிக்கத்தான் இந்த நாடகம்'' கசப்புடன் சிரித்த தாரிணி மாநிறத்தில் உயரமாய் ஒடிசலாய் மிக அழகாய் இருந்தாள்.

வட்ட முகத்திற்கு சோபை அளித்தன அவளது பெரிய கருவிழிகள். சிவந்த நிறமுடைய மேனகாவை விட பார்வைக்கு வசீகரமாய் இருந்தாள் தாரிணி. ஆரஞ்சு நிற காட்டன் புடவையை மடிப்புக் கலையாமல் உடுத்தியிருந்தாள். மேனகாவைப் போலவே இவளும் கூந்தலை கொண்டையிட்டிருந்தாள்.

மேனகாவின் கைப்பையிலிருந்து செல்போன் ஒலித்தது. எடுத்துப் பேசினாள் அவள்.

''ம்ம்... வந்திடறேங்க... ஜஸ்ட் பைவ் மினிட்ஸ்.''

போனை அணைத்துக் கைப்பையில் போட்டுக் கொண்டவள் தாரிணியைப் பார்த்துப் பெருமையுடன் புன்னகைத்துக் கொண்டாள்.

"அவர்தான்... குழந்தைகளைக் கூட்டி வந்திட்டாராம். என்னைத் தேடுதுகளாம். அதான் போன். அப்பப்பா... ஐந்து நிமிடம் லேட்டாகக் கூடாதே. உடனே வான்னு போன் மேல் போன் போட்டு விடுவார்."

தாரிணி மௌனமாய் நடந்தாள். மேனகா தாரிணியின் வயது தான். ஆறு வருடங்களுக்கு முன்பே அவளுக்குத் திருமணம் ஆகி விட்டது. ஐந்து வயதில் யு.கே.ஜி. படிக்கும் பையனும் மூன்று வயதில் பிரிகேஜி படிக்கும் பெண்ணும் இருக்கிறார்கள். கணவர் பாரெஸ்ட் ஆபிஸில் வேலை பார்ப்பவர்.

பேசிக் கொண்டே கௌலி பிரவுன் ரோட்டில் நடந்தார்கள். ஜி.சி.டி. ஹவுஸிங் யூனிட்டில் உள்ள குவார்ட்டர்ஸிற்கு போகும் பாதையில் திரும்பிய மேனகா,

"வீட்டுக்கு வந்திட்டுப் போயேன்" என்று அழைத்தாள்.

"இன்னொரு நாள் வருகிறேன்" என்றவாறு குவார்ட்டர்ஸிற்கு போகும் பாதையில் திரும்பி மேனகாவுடன் இணைந்து நடந்தாள் தாரிணி.

"இந்தக் குவார்ட்டர்ஸில் ஒரு வீட்டில் குடியிருக்கும் என் வீட்டிற்கு வர மாட்டாய். ஆனால் இங்கே கோவில் கொண்டிருக்கும் விஷ்ணு துர்க்கையை மட்டும் பார்க்காமல் இருக்க மாட்டாய்..." மேனகா புன்சிரிப்புடன் கையாட்டி விட்டு அவள் போர்ஷன் இருந்த மாடிப்படியில் ஏறிச் சென்றுவிட அந்தக் குவார்ட்டர்ஸின் கடைசியில் அமர்ந்திருந்த 'விஷ்ணு துர்க்கையம்மன்' கோவிலுக்குள் நுழைந்தாள் தாரிணி.

Uploaded by Naghu



அம்மனுக்கு அலங்காரம் பண்ணி முடித்துவிட்டு நின்று கொண்டிருந்த பாலன் குருக்கள்.

"வாங்கம்மா.. இன்றைக்கு சீக்கிரம் வேலை முடிந்து விட்டதா?" என்று வரவேற்பாய் கூறினார்.

"ஆமாங்கய்யா... அம்பாளை தரிசனம் பண்ணிவிட்டு சீக்கிரம் வீட்டுக்குப் போகணும்" சோர்வாய் பதில் கூறினாள் தாரிணி.

"என்ன விசேஷம்மா... யாரும் பெண் பார்க்க வருகிறார்களா?" பழகிய பாசத்தில் வினவினார் குருக்கள்.

தோழியிலிருந்து குருக்கள் வரை தன் கதை எப்படி அத்துபடியாகி இருக்கிறது என்று மனம் நொந்த தாரிணி சங்கடத்துடன்,

"ஆமாம் குருக்களே..." என்று கூறினாள்.

"இதற்கு ஏம்மா சோர்ந்து போய் பதில் சொல்றீங்க... அன்றைக்கு தள்ளிப் போனால் இன்றைக்குமா தள்ளிப் போகும். அம்மன் மேலே பாரத்தைப் போடுங்கம்மா... நடப்பதெல்லாம் நன்றாகவே நடக்கும்" ஆறுதல் வார்த்தைகளை உதிர்த்த அந்த மனிதநேயம் கொண்ட அர்ச்சகர் அம்மனுக்கு ஆராதனையைத் தொடங்கினார்.

கண் மூடித் துர்க்காதேவியை வேண்டிக் கொண்டவளின் விழியோரம் நீர் கசிந்தது.

'தாயே... என் குறை தீர்க்காமல் வேடிக்கை பார்க்காதே. வழிகாட்டு..'

"வழிகாட்ட அம்மன் இருக்கிறாள். நிம்மதியாய் வீட்டுக்குப் போங்கோ..." குருக்களின் குரலில் கண் விழித்தவள் தீபாராதனையைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு குங்குமம் வாங்கி நெற்றியில் இட்டுக் கொண்டாள்.

சன்னதியை வலம் வந்து விட்டு நவக்கிரகங்களை வணங்கி வலம் வந்து கன்னத்தில் போட்டுக் கொண்டவள் கோவில் பிரகாரத்தில் ஒரு நிமிடம் அமர்ந்து எழுந்தாள்.

''கிளம்பிட்டிங்களாம்மா...'' குருக்கள் வினவ,

''ஆமாங்கய்யா...'' என்றபடி விடை பெற்றுக் கொண்டாள் தாரிணி.

''வழக்கம்போல வேண் தானா?''

''ஆமாம்.''

நீண்ட பின்னலாட கம்பீரமாய் சென்று கொண்டிருந்த தாரிணியைப் பார்த்துக் கொண்டிருந்த கோவிலுக்கு வந்திருந்த பெண்களில் ஒருத்தி.

''தெரிந்த பெண்ணா குருக்களே...'' என்று வினவினாள்.

Uploaded by Naghu

''தினமும் வருகிறதால் தெரிந்த பெண்...''

''ஓஹோ... இந்தக் குவார்ட்டர்ஸில் குடியிருக்கும் பெண்ணா?''

''இல்லைம்மா.. கோவை வேளாண்மைக் கல்லூரியில் லெக்சரரா வேலை பார்க்கிறவங்க.''

''பெரிய படிப்பு படித்து விட்டு பெரிய வேலை பார்க்கிற பெண் போல இல்லையே... எவ்வளவு அடக்கமா இருக்குது.''

''அதனால்தான் அம்பாளைத் தேடி வருகிறாங்க. அலட்டல் இல்லாதவங்கதானே அம்மனின் பக்தை ஆக முடியும்?''

''கண்ணுக்கு லட்சணமா இருக்குதே.. இது மனசில் என்ன குறை?''



''வேறு என்ன? கல்யாணம் தள்ளிப் போகுது. அந்தக் குறைதான்.''

''இது என்னய்யா... ஊரில் இல்லாத அதிசயமாய் இருக்கு. பார்க்க மூக்கும் முழியுமாய் அழகாய் இருக்குது. பதவிசா... பக்தியான பொண்ணா இருக்குது. பெரிய படிப்புப் படிச்சு... கை நிறைய சம்பாதிக்கும் பெரிய வேலை பார்க்குது. இதுக்கா கல்யாணம் தள்ளிப் போகுது?''

''இவங்களுக்குத் தான் தள்ளிப் போகுது.''

''இதுகிட்ட குறை கண்டவன் வேறு எந்தப் பெண்ணைக் கட்டுவான்?''

''குறை இவங்ககிட்ட இல்லம்மா... இவங்க கை நிறைய சம்பாதிக்கிறாங்களே. அதுதான் குறை.''

''சம்பாதிக்கிறது ஒரு குறையா?''

''ஆமாம்மா... அது இல்லாமலிருந்தால் இவங்களோட அக்காளுக்கும், தங்கைக்கும் கல்யாணம் ஆனது போல இவங்களுக்கும் ஆகியிருக்கும்.''

''என்னய்யா இது அநியாயமா இருக்கு. இதோட தங்கைக்கு கல்யாணம் ஆகிடுச்சா. கேட்கவே கொடுமையா இருக்கே...''

''கொடுமைதான்.. அதிகமா சம்பாதித்துக் கொடுக்கிற பெண்ணைக் கைநழுவ விட அண்ணன்காரனுக்கு விருப்பமில்லை.''

''பெத்தவங்க பேசாமலா இருக்கிறாங்க?''

''பெத்தவங்க போய் சேர்ந்துட்டாங்க... அதனால்தான் பெற்றவளாய் இந்தக் கொற்றவையை நினைத்து தினமும் வந்துவிட்டுப் போகிறாங்க... அந்தப் பெண்.''

பாலன் குருக்கள் விளக்கமளித்தார். கோவிலைத் தன் உயிராய் நினைத்து வாழ்பவர். அங்கு வரும் பக்தர்கள் எல்லாம் அவர் சுற்றத்தார். ஒவ்வொருவரின் இன்ப, துன்பங்களில் பங்கெடுக்கும் மனித நேய மிக்கவர்.

"சரி... நீங்கள் வந்த வேலையைப் பாருங்கோ. அர்ச்சனை யார் பெயருக்கு? பையன் பெயருக்கா... வேலையில் ஜாயின் பண்ணி விட்டாரா?"

"அம்மனுடைய அருள்... வேலையில் ஜாயின் பண்ணிட்டான். இவள் யாரு? கேட்டால் கேட்ட வரம் தரும் துர்கா தேவியாச்சே."

தாரிணியை மறந்த குருக்கள் இன்னொரு பெண்மணி வீட்டுச் சந்தோசத்தில் பங்கெடுத்துக் கொண்டு அர்ச்சனையை ஆரம்பித்தார்.

Uploaded by Naghu

தாரிணி மெயின் ரோட்டிற்கு வந்தாள். மனம் படபடக்க சாலையைப் பார்த்தாள். வேன் வருவது தெரிந்தது. மெயின் ரோட்டிலிருந்து குவார்ட்டர்ஸ் செல்லும் பாதையில் திரும்பிய வேனுக்குள் இருந்த சிறுவர், சிறுமிகள் இவளைக் கண்டதும் சந்தோசமாய் கை அசைத்தனர்.

"குட் ஈவினிங் அக்கா..."

பதிலுக்கு கையாட்டிச் சிரித்த தாரிணி காத்திருந்தாள். சிறுவர், சிறுமிகளை இறக்கி விட்டுக் காலியாக திரும்பி வந்த வேன் அவளருகில் வந்ததும் நின்றது.

ஏறி அமர்ந்தாள். வேன் புறப்பட்டது. டிரைவர் சீட்டில் அமர்ந்திருந்த விக்னேஷைப் பார்த்தாள்.

வழக்கம் போல் மௌனமாய் காரோட்டிக் கொண்டிருந்தான் அவன். முகம் எந்த உணர்ச்சியையும் பிரதிபலிக்காமல் பாறை போல் இறுகியிருந்தது. கருப்பான... ஆனால் மிக...



மிகக் களையான முகம். ஐந்தடி உயரமுள்ள தாரிணியை குள்ளமாக்கும் ஆறடி உயரம். அகன்ற தோள்கள். நீண்ட கால் கைகள்.

"இன்னைக்கு எங்க வீட்டில் விசேஷம்..." அவன் எதை யாவது பேசுவானா என்று எதிர்பார்த்து இன்றும் ஏமாந்து போன தாரிணி தானாய் பேச்சை ஆரம்பித்தாள்.

"ஓஹோ..." அவன் ஒற்றை வார்த்தையில் பேச்சை முடித்தான்.

'என்னவென்று கேளேன்..." ஏங்கியது அவள் மனம்.

அவன் வாயைத் திறக்காமல் சாலையில் கவனமாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

'கேட்க மாட்டாயே... மௌனமாய் இருந்து என்னைக் கொல்வாயே..' பொறுக்க மாட்டாமல் புலம்பியது அவள் மனம்.

கார் சாலை வளைவில் திரும்பி பேரூர் செல்லும் மார்க்கத்தில் விரைந்தது.

'இனியும் தாமதித்தால் வீடு வந்து விடும். இவன் என்றுதான் வாய் திறந்து பேசினான்? இன்று வாய் திறந்து பேச?'

"என்ன விசேஷம்னு நீங்க கேட்கலையே?"

அவன் 'எதற்குக் கேட்க வேண்டும்?' என்பது போல் பட்டும் படாமலும் ஓர் பார்வை பார்த்துவிட்டு மௌனமாகவே தன் வேலையில் கண்ணும் கருத்துமாய் வேனை ஓட்டிக் கொண்டிருந்தான்.

"என்னைப் பெண் பார்க்க வருகிறார்கள்..?"

"அப்படியா..."

அவன் அவள் வீட்டின் முன் வேனை நிறுத்தினான்.

'இறங்கிக் கொள்கிறாயா?' என்பது போல் திரும்பி வேறு பார்த்தான். தாரிணி திரும்ப வீட்டு வாசலைப் பார்த்தாள். யாருமில்லை.

''நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே...'' தயங்கிக் கேட்டாள்.

''எதைப் பற்றி...?'' அவன் புருவம் உயர்த்தினான்.

''என்னைப் பெண் பார்க்க வருவதைப் பற்றி...''

''நான் என்ன சொல்ல வேண்டும்?''

அப்பொழுது வீட்டுக் கதவைத் திறந்து காம்பவுண் டுக்குள் வந்து நின்ற தாரிணியின் அக்கா ஜானகி.''

''தாரிணி வந்திட்டாள்...'' என்று உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தாள்.

Uploaded by Naghu

வேறு வழியின்றி வேனை விட்டு இறங்கிய தாரிணி ஏக்கத்துடன் விக்னேஷைப் பார்த்தவாறு வாசல் கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே சென்றாள்.

'இவள் என்ன சொல்ல விழைகிறாள்..?'

புரியாமல் தோள் குலுக்கிய விக்னேஷ் வண்டியை எதிர் வீட்டினுள் செலுத்தி நிறுத்திவிட்டுக் கீழே இறங்கினான். வாசல் கேட்டைப் பூட்டி விட்டு மாடிப்படி நோக்கி நடந் தான்.

''என்னப்பா விக்னேஷ். வந்து விட்டாயா?'' கீழ்வீட்டு அபிராமியம்மாள் வினவினாள். அறுபது வயது இருக்கும். மூக்குக் கண்ணாடி போட்டிருந்தாள்.

''வந்து விட்டேன்ம்மா.''



''எதிர் வீட்டில் என்ன விசேஷம்?'' தலை நரைத்திருந்த அபிராமி கேட்டாள்.

''எனக்கு எப்படித் தெரியும்?'' அவன் வியப்பாய் வின வினான்.

''அந்தப் பெண் தாரிணியை நீதானே வேலைக்கு கூட்டிப் போய் விட்டுக் கொண்டு வந்து வீட்டில் விடு கிறாய்...'' அவள் தூண்டில் போட்டாள்.

''அதற்காக... அவர்கள் வீட்டு விஷயம் எனக்குத் தெரிந்திருக்கணும்னு அவசியமில்லை. வேனுக்கு மாத வாடகை தருகிறாங்க... என் வண்டியில் வருகிறாங்க... அவ்வளவுதான்...'' பட்டுக் கத்தரித்தான் விக்னேஷ்.

மடமடவென்று இரண்டிரண்டு படிகளாய் அவன் தாவி ஏறிவிட அபிராமியம்மாள் மூக்குக் கண்ணாடியை தூக்கி விட்டுக் கொண்டு அவனை ஆராய்ந்தாள்.

'அவ்வளவுதானா...?' நம்பாதவளாய் வீட்டினுள் சென் றாள்.

## 2



திருமகளும் நீயே! திவ்யத் திருத்தாயே...!

திசைதேடும் என் வாழ்வில் துணைக்கு வந்திடுவாயே..!

மாடியில் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே போனான் விக்னேஷ். நீண்ட ஹால்... அதன் ஒரு பக்கம் இரண்டு அறைகள். மறுபக்கம் ஒரு கோடியில் சமையலறை... மறுகோடியில் பூஜையறை.. நடுவில் டைனிங் ஹால்.

ஹாலின் ஒரு பக்கமிருந்த இரு அறைகளில் ஒன்றைத் திறந்தான் அட்டாச்சுடு பாத்ரூமோடு இருந்த அறையில் கட்டில் மெத்தை, தலையணை பெட்சீட்களோடு இருந்தது. அறையின் ஜன்னலோரமாய் டேபிள், சேர் சுவரில் பதிக் கப்பட்டிருந்த அலமாரி. அட்டாச்சுடு பாத்ரூம். கட்டிலின் மேல் அலங்கோலமாய் கிடந்த கைலியை எடுத்துக் கட்டிக் கொண்டவன் பேன்ட் சர்ட்டை சுவரிலிருந்த ஹேங்கரில் மாட்டி விட்டு பாத்ரூமுக்குள் புகுந்தான். குளித்து வெளியே வந்தபோது காலிங் பெல் ஒலித்தது. கதவைத் திறந்தான். குமரன் உள்ளே வந்தான்.

''என்னடா சீக்கிரம் வந்துட்டே?''

''நைட் சவாரிக்குப் போகணும்.''

''எங்கே...?''

''பெங்களூர்.''

''உன் பாடு தேவலைடா... இந்தியாவிலிருக்கிற எலலா ஊர்களையும் பார்த்துவிட்டு அதற்குப் பணம் வேறு வாங்கி சம்பாதிக்கிறே.. ம்ம்...''

குமரன் ஹாலின் ஒரு பக்கமாயிருந்த மற்றொரு அறையைத் திறந்து கொண்டு உள்ளே போனான். விக்னேஷின் அறையிலிருந்ததைப் போலவே கட்டில், டேபிள், சேர், சுவர் அலமாரி, அட்டாச்சுடு பாத்ரூம்... எக்ஸெட்ரா... எக்ஸெட்ராவுடன் அந்த அறையும் இருந்தது. அவனைப் போலவே கைலிக்குக் குமரன் மாறிக் கொண்டிருந்தபோது... விக்னேஷின் குரல் ஒலித்தது.

''ஏண்டா காலிங் பெல்லை அலற விடாமல் உன்னிட மிருக்கும் சாவியை வைத்து திறந்து கொண்டு உள்ளே வருவதுதானே... சப்போஸ் நான் குளித்துக் கொண்டிருக்



கும்போது வந்த பெல்லை அடித்திருந்தால் என்ன செய் வது? பாதிக் குளியலோடு ஓடி வருவேனா? மண்டையில் ஏதாச்சும் இருக்கணும்...''

''அதெல்லாம் நிறைய இருக்கு. நீதான் கதவைத் திறந்தவுடன் முன் ஜாக்கிரதை முத்தண்ணா மாதிரி கதவை உள் தாழ்ப்பாள், மேல் தாழ்ப்பாள்ன்னு ஒன்பது தாழ்ப்பாள் போட்டு வைத்து விடுகிறாயே. அப்புறம் நான் எப்படித் திறந்து கொண்டு வருவது...?''

''ஓ... நான் அதை மறந்து விட்டேன்.''

''அதை மட்டுமா மறந்தாய்? ஒரு போஸ்ட் கிராஜுவேட்டிடம் வெறும் பிளஸ் டூ மட்டுமே படித்த நாம் மண்டையில் மாசாலா இருக்கிறதான்னு கேட்கலாமாங் கிறதையும் மறந்து விட்டல்லவா கேள்வி கேட்டாய்.''

''மண்டையின் மசாலாவிற்கும் படிப்பிற்கும் என்னடா சம்பந்தம்? அதிகம் படித்திருந்தால் அறிவாளி... குறைத்து படித்திருந்தால் கூமுட்டையா? தம்பி குமரா... படிப்பிற் கும், அறிவிற்கும் சம்பந்தமே இல்லைடா கண்ணா...''

''அதைச் சொல்லு. எம்.எஸ்ஸி படித்து விட்டு லோலோன்னு வேலை தேடி அலைஞ்சு இப்போதுதான் பத்தாயிரத்தைத் தாண்டி நான் சம்பளம் வாங்குகிறேன். நீ ஒரு வேன், ஒரு இன்டிகா காரை வைத்துக் கொண்டு என்னை மாதிரி மூன்று மடங்கு சம்பாதிக்கிறாய். நீ புத்தி சாலியா இல்லை நான் புத்திசாலியா?''

''ஆ, ஊன்னா இதைச் சொல்லிடு. ஏன்டா உனக்கு இந்தப் பொறாமை? சரி வா.. காபி சாப்பிடு.''

சூடாய் மணக்கும் காபியுடன் வந்தான் விக்னேஷ். அவசரமாய் வந்து காபியை எடுத்துக் கொண்ட குமரன்.. முதலில் காபியை வாசம் பிடித்து,

"ம்ஹா..." என்றான் ரசனையுடன்.

"ஏண்டா காபி குடிப்பதற்கா... இல்லை வாசம் பிடிப்ப தற்கா?"

"போடா வாசமில்லாமல் எது ருசிக்கும்? காபிக்கு அதன் வாசனையே ஆளை இழுக்கும். நீ காரக் குழம்பு வச்சேன்னு வை.. அதன் வாசனை நான் ஆபீஸில் இருந்தாலும் என்னை வீட்டுக்கு இழுத்து வந்துவிடும். நீ புளிக்காய்ச்சல் கிளறினேன்னு வை..."

"போதும்டா சாப்பாட்டு ராமா... முதலில் காபியைக் குடி."

"மொத்தத்தில் வாசனையென்பது ஆளை வசீகரிப்பது."

ஏனோ விக்னேஷிற்கு அந்த நொடியில் தாரிணியின் கூந்தலில் இருந்து வரும் மல்லிகை வாசம் நினைவுக்கு வந்தது.

'வாசனை என்பது ஆளை வசீகரிப்பது...'

தலையை உலுக்கி அந்த நினைவைத் துரத்தினான். வேளாண்மைக் கல்லூரியின் லெக்சரரை பிளஸ் டூ கூடத் தாண்டாத தான் நினைப்பதா?

"என்னடா மந்திரிச்சு விட்டக் கோழி போல் ஒரு மார்க்க மாய் முழிக்கிறே... தலையை வேற தானாய் ஆட்டறே... என்ன விஷயம்?"

"ஒன்றுமில்லை."



"நம்ப முயற்சி செய்கிறேன்... ஆமாம்... எதிர் வீட்டில் என்ன ஆளும் பேருமாய் காரில் வந்து இறங்கிக் கொண் டிருக்கிறார்கள். இந்த வாரமும் பெண் பார்க்கும் படலமா?"

"அதை என்னிடம் ஏன் எல்லோரும் கேட்கறீங்க?"

குமரன் தலையைத் திருப்பி தன்னைச் சுற்றி ஓர் பார்வை பார்த்துக் கொண்டான். விக்னேஷ் சந்தேகமாய் அவனைப் பார்த்தான்.

"ஏண்டா என்னையேன் இந்த முழி முழிக்கிறன்னு கேட்டு விட்டு நீ சந்தையிலே வித்த ஆடு போக இருக்கும் சொச்ச ஆடு மாதிரி சுற்று முற்றும் இந்தப் பார்வை பார்க் கிற? இந்த ஹாலில் நீயும், நானும் தானே இருக்கிறோம்?"

"தெரியுதில்ல...? அப்புறம் ஏண்டா நான் கேள்வி கேட்டால் ஊரே திரண்டு வந்து இங்கு உட்கார்ந்து கேள்வி கேட்பது போல் எல்லோரும் கேள்வி கேட்கறீங்கன்னு ஒரு பிட்டைப் போடறே?"

"ஏண்டா நீ வேறு எரிச்சலைக் கிளப்பிக்கிட்டு இருக்கிற. கீழ் வீட்டு அபிராமியம்மா நான் வந்து இறங்கியதுமே இந்தக் கேள்வியைத்தான் கேட்டாங்க."

"அந்தம்மாவிற்கு அபிராமியம்மான்னு பெயர் வைக் கிறதுக்கு பதில் சி.ஐ.டி. சகுந்தலான்னு பெயர் வைத்திருக் கலாம். எப்பப் பாரு எதிர் வீடு, அடுத்த வீடு, பக்கத்து வீடுன்னு அவங்களோட விவரங்களை தெரிஞ்சுக்க அவ் வளவு ஆர்வம் காட்டறாங்க. ஏண்டா இப்படி இருக் கிறாங்க?"

"எனக்கு எப்படித் தெரியும்? இதை அவங்க வீட்டுக் காரர்கிட்ட கேட்டாலாவது யோசித்து எதையாவது பதில் சொல்வார்."

''யாரிடம் கேட்கச் சொல்லுகிறாய்? மிஸ்டர் சோமசுந் தரத்துக்கிட்டயா? கிழிஞ்சது போ.. அவர் வீட்டில் எலி... வெளியில் புலி... அதோட அவர் அபிராமியம்மாளோட வீட்டுக்காரர் மட்டுமில்லை...''

''இதுவேறா..? ஆளைப் பார்த்தால் நல்ல மனுசன் மாதிரி தெரிகிறார். இதில் இன்னொரு கல்யாணமா? இந்த வயதிலா?''

''ஏண்டா இது உனக்கே நல்லாயிருக்கா... பாவம் அந்த மனுசனுக்கு அறுபத்தி ஐந்து வயதிருக்கும்... அவரைப் போய்... நமக்கும் அவர்தாண்டா வீட்டுக்காரர்.''

''அடச்சை... ஹவுஸ் ஓனர்ன்னு சொல்லித்தொலைடா.''

''வீட்டுக்காரர் கதையை விடு... அந்த வார்த்தையில் ஆயிரம் அர்த்தம் வருகிற மாதிரி வைத்த மகராசன் வாழ்க. நம்மளை மாதிரி ஆண் பிள்ளைகள் சொன்னால் பரவாயில்லை. பெண்களுக்குத்தான் ரொம்பக் கஷ்டம்.''

''அவங்களுக்கு இது மட்டுமா கஷ்டம் எத்தனையோ கஷ்டம். அத்தனை கோடி கஷ்டங்களில் இதுவும் ஒன்று.''

''உன் தாரிணிக்கு வாரம் ஒரு மாப்பிள்ளையின் முன் பெண் பார்க்கும் படலத்தில் நிற்கும் கஷ்டம் போல...''

''என் தாரிணியா... என்னடா உளருகிறாய்?''

''உன் வேனில் வரும் தாரிணிடா. வாய் தவறி சொல்லி விட்டேன்..'' குமரன் கண் சிமிட்டிச் சிரித்தான்.

''நீ வாய் தவறிச் சொன்னது போல் தெரியவில்லையே...'' விக்னேஷ் முறைத்தான்.

''டேய் சும்மா... நடிக்காதேடா... உனக்கு அந்தப் பெண் மேல் ஒரு சாப்ட் கார்னர் இருப்பது எனக்கும் தெரியும்...''



''நீயாய் எதையாவது கற்பனை பண்ணிக் கொண்டு உளறக் கூடாது.''

''சரி... இந்தப் பஞ்சாயத்தை இத்தோடு விடு... அந்தப் பெண்ணின் கதைக்கு வருவோம். ஒன்று கல்யாணத்தை பண்ணி வைக்க வேண்டும். இல்லைன்னா உன் கதி எங்களுக்குக் காலம் பூராவும் சம்பாதித்துப் போட்டுக் கொண்டு இருப்பதுதான். கல்யாணம்கிறது உனக்குக் கனவுதான்னு தெளிவாய் அந்தப் பெண்ணிடம் சொல்லி விட்டுப் பேசாமல் இருக்க வேண்டியதுதானே. அதை விட்டு விட்டு அந்தப் பெண்ணின் பூஞ்சை மனதை ஏன் பந்தாடிக் கொண்டிருக்கிறான் அந்த மாசிலாமணி?''

''அவளுக்கு பூஞ்சை மனதுன்னு உனக்கு எப்படித் தெரியும்?''

''எல்லாம் ஓர் யூகம் தான்... இவ்வளவு படித்து பெரிய வேலை பார்க்கும் ஒரு பெண் பூம்பூம் மாடு மாதிரி அண் ணன் சொல்வதற்கு தலையாட்டிக் கொண்டு இருந்தால் வேறு என்ன சொல்ல? பாவம்... பார்க்கும் போதே தெரி கிறதே... அதிர்ந்து பேசாத குணம்... அழகு... ம்ம்... இவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள ஒருத்தனுக்கும் கொடுத்து வைக்காமல் போகிறதே...''

குமரன் பெருமூச்சு விட்டான். பேச்சு போகும் திசையை விக்னேஷ் விரும்பவில்லை. காரணமில்லாமல் குமரன் மேல் எரிந்து விழுந்தான்.

''ஏன் இவ்வளவு பெருமூச்சு விடுகிறாய். உனக்கு எதுவும் அப்படி கொடுத்து வைத்தவன் ஆகும் எண்ணமிருக்கா?''

''எனக்கு இருந்து என்னடா பண்ண? அந்தப் பெண் எங்கள் ஜாதிதான். எனக்கும் அந்தப் பெண்ணைப் பார்த்து

ஓர் ஈர்ப்புதான். ஆனால் எனக்கு ஓர் தங்கை இருக் கிறாளே... அவளுக்கு ஒழுங்காய் கல்யாணம் நடக்க வேண்டுமே..."

"இப்போதுதான் அவள் குணமுள்ள பெண்ணென் றாய்... அவளைக் கல்யாணம் பண்ணினால் உன் தங்கை யின் கல்யாணத்தில் என்ன பிரச்னை வரும்? எனக்குப் புரியவில்லை..."

"விக்னேஷ்... முறைப்படி பெண் கேட்டு பத்திரிகை அடித்து இரு வீட்டார் சம்மதத்துடன் நான் கல்யாணம் பண்ணிக் கொண்டால் தானே என் தங்கைக்கும் அப்படி ஒரு கல்யாணம் நடக்கும்?"

"ஆமாம்..."

"ஆல்ரெடி அந்தப் பெண்ணின் அண்ணனிடம் தெரிந்தவர் மூலமாய் பெண் கேட்டு விட்டேன்..."

விக்னேஷிற்கு தூக்கி வாரிப் போட்டது. 'இது எப்போது நடந்தது?'

"ஏண்டா கூடவே இருக்கிறேன். என்னிடம் இது விசய மாக வாயைத் திறந்து ஓர் வார்த்தை நீ சொல்லவில்லையே."

"காரணமாகத்தான் சொல்லவில்லை. ரிசல்ட் தெரி யாமல் முன் கூட்டியே சொல்லி அந்தப் பெண் மனதில் வீணாய் ஏன் சலனத்தை ஏற்படுத்த வேண்டும்? பாவம் அது நல்ல பெண். உன் வேனில் ஆபிஸ் போய் வரு கிறது. நீ வாய் தவறி ஓர் வார்த்தை அந்தப் பெண்ணிடம் சொல்லி விட்டால்..."

"சரி.. அந்தப் பெண்ணின் அண்ணன் என்ன பதில் சொன்னார்...?"



"சொன்னா'ன்னு கேளு. அவனுக்கெல்லாம் மரியாதை ஒரு கேடு. மாசிலாமணி என்ன சொல்லி விட்டான் தெரியுமா? அவன் தங்கைக்கு செவ்வாய் தோசமாம் மூல நட்சத்திரமாம். பெண் கல்யாணம் பண்ணிப் போன இடம் மண் மூடிப் போகும்ன்னு பேசும் ஜாதகம் அவன் தங்கை யோட ஜாதகமாம். என் அம்மாவும், அப்பாவும் உயிரோடு ரொம்ப நாள் இருக்க வேண்டுமாம். என் தங்கை போன இடத்தில் பூவும் பொட்டுமாய் வாழ வேண்டுமாம். நான் பல்கிப் பெருக வேண்டுமாம். அதனால் அந்த தோச முள்ள பெண்ணை விட்டுவிட்டு வேறு ஒரு சந்தோச முள்ள பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு நான் தீர்க்காயுளாய் வாழ வேண்டுமாம்."

"அடப்பாவி... இவனும் ஓர் அண்ணனா?"

"நீயே சொல்லு.. இவனிடம் பெண் கேட்டு என் அப்பா வும் அம்மாவும் போனால் அரண்டு போய் அங்கேயே ரத்த வாந்தி எடுத்து விட மாட்டார்களா? இது தேறாத கேஸ்டா விக்னேஷ். நான் தூக்கிப் போய் தாலி கட்டினால் என் நினைப்பு நடக்கும். எனக்கு அதற்கெல்லாம் உடல் பலமும், மன பலமும் போதாது. உனக்கு ரெண்டுமே உண்டு. ஆள் பார்க்க ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் இருக்கிறாய்... எதற்கும் அஞ்சாத குணம்... நான் பார் பூஞ்சை உடம்பு... தெருக்கோடியில் சண்டை நடந்தால் பூஜையறைக்குள் போய் பதுங்கி விடும் ரகம். எனக் கெதற்கு இந்த ஆசை? நீ வேண்டுமானால் டிரை பண்ணு. நான் என் பெத்தவங்க பார்க்கும் பெண்ணை சொஜ்ஜியும், பஜ்ஜியும் சாப்பிட்டு விட்டு ஓ.கே. பண்ணி பணம், நகை, டூ வீலர், சீர் வரிசையோடு கல்யாணம் பண்ணிக்

கொண்டு பர்ஸ்ட் நைட் கொண்டாடி பத்தாம் மாதமே ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டு என் தங்கைக்கும் அதே போல் படியளந்து மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி கொடுக்க வேண்டும். மாசிலாமணியை பந்தாட வெல்லாம் என்னிடம் தெம்பு இல்லை...''

விக்னேஷ் யோசனையில் ஆழ்ந்தான். என்ன மாதிரி யான கொடுமை இது? அண்ணனே தங்கையின் கல் யாணத்திற்கு எதிரியா? காலம் ஏன் இப்படிக் கொடுமை யான மனிதர்களை நமக்கு அறிமுகப்படுத்துகிறது?

''ஏண்டா அந்தப் பெண்ணிற்கு சின்ன வயசிலேயே பெத்தவங்க இறந்து விட்டாங்களா?''

''அப்படியெல்லாமில்லை.. பாவம்... அந்தப் பெண் ணின் அப்பா கவர்ன்மெண்ட் சர்வன்ட்... உயிரோடு இருக் கும்போதே பெரிய பெண்ணிற்கு கல்யாணம் பண்ணி வைத்து விட்டார். இந்தப் பெண் படித்து முடித்து அப் போதுதான் வேலையில் சேர்ந்திருந்தது. சொந்தக்காரங்க கல்யாணத்திற்குப் போயிட்டு வந்து கொண்டு இருந்த போது இந்தப் பெண்ணோட அப்பாவும் அம்மாவும் போன ஆட்டோவின் மேல் லாரி மோதி ஆட்டோ டிரை வரும் இவங்க ரெண்டு பேரும் அந்த இடத்திலேயே 'ஸ்பாட் அவுட்.'''

''அடப்பாவமே... அப்புறம்?''

''இந்தப் பெண்ணின் தங்கைக்கு படிப்பு ஏறவில்லை. மாசிலாமணியின் பெண்டாடிக்கும் அவளுக்கும் பயங் கரத் தகராறு... அவளை வீட்டை விட்டு ஓட்டினால்தான் நான் உன்னோடு வாழ்வேன்னு மூட்டை முடிச்சைக் கட்டிக்கிட்டு அடிக்கடி அம்மா வீட்டிற்குப் போய் விடு



வாள். தங்கையைக் கண்டித்துப் பார்த்தும் பிரச்னை தீரவில்லை. மாசிலாமணியின் கடைசித் தங்கை மாசிலா மணியின் ஜெராக்ஸ். அதே அடாவடி. ரோட்டில் நின்று கொண்டு வர்றவன் போறவனிடமெல்லாம் அண்ணன் பண்ணும் கொடுமையை சொல்லி அழுக ஆரம்பித்தாள். பொறுக்க முடியாமல் இவனே மாப்பிள்ளை பார்த்து அவங்க அம்மா நகையில் பாதியைப் போட்டு மீதியை தாரிணிக்கு வேணும்ன்னு கதை சொல்லி அவன் பெண டாட்டியிடம் கொடுத்து விட்டு புருசன் வீட்டுக்கு துரத்தி விட்டான். இவன் அப்பன்காரர் இறந்ததும் வந்த பணத்தில் இவன் பெயரில் இன்னும் இரண்டு வீடு கட்டிக் கொண்டு தங்கையின் பணத்தில் சுகமாய் வாழ்கிறான். வீடுகளின் வாடகைப் பணம் பேங்கில் சேர்கிறது.''

''இவனுக்கு வேலை வெட்டி இல்லையா...''

''வேலையில்லை. வெட்டியாய் இருப்பதை ஒப்புக் கொள்ள மாட்டான். எதையெதையோ கதை சொல்லுவான்.''

''இந்தக் கதையெல்லாம் உனக்கு எப்படிடா தெரியும்?''

''அபிராமியம்மா உபயம்தான்.''

''அந்தம்மா கிட்டப் போய் உட்கார்ந்து கதை கேட்பியா?''

''கதை சொல்லி கதை கேட்டால்தான் நீயில்லாத சமயத்தில் காபி கிடைக்கும்.''

விக்னேஷ் சிரித்துக் கொண்டே பால்கனிக்குப் போனான். சரியாக அதே சமயத்தில் எதிர் வீட்டுப் பால்கனிக்கு தாரிணி வந்தாள். பட்டுப் புடவையில் இருந்தாள். கண் களும் கண்களும் சந்தித்துக் கொள்ள விக்னேஷ் படக் கென்று வீட்டுக்குள் வந்து விட்டான்.

# 3



மருதமலை முருகனைப் பெற்றவளும் நீயே!

மங்கைபோல் பலருக்கும் பெற்றதாய் ஆனாயே!

தாரிணியைப் பெண் பார்க்க வந்திருந்தவர்கள் ஹாலில் அமர்ந்திருந்தனர். மாப்பிள்ளை பேங்க் மேனேஜர். பெற்றோருக்கு ஒரே பிள்ளையாம். திருமணத் தகவல் மையத்தில் விவரம் கேட்டு பெண் பார்க்க வந்திருக்கிறார்கள். தாரிணி வந்து அமர்ந்ததும் மாப்பிள்ளையின் கண்கள் மின்னின. அவன் தாய் வெளிப்படையாகவே கூறினாள்?

''பார்ப்பதற்கு மகாலட்சுமி போல் மங்களகரமாய் இருக்கிறாய்ம்மா.. பக்கத்தில் வந்து உட்கார்.''

மாப்பிள்ளையின் தந்தை ரிட்டயர்டு பிரின்ஸிபால். படிப்பின் அருமை தெரிந்தவர். தாரிணியின் பதவியின் அருமை புரிந்தவர்.

''எவ்வளவு வருசம் சர்வீஸ்ம்மா.''

சொன்னாள். புருவம் உயர்த்தி வியந்தார். அவள் வேலை சம்பந்தமாய் கேள்விகள் கேட்டார். பணிவாய் பதில் சொன்னாள். பிரின்ஸிபால் ஆயிற்றே... அவளது பணிவு பிடித்துப் போனது.

''என்னடா... நீ எதுவும் பேசாமல் உட்கார்ந்திருக்கிற?'' மகனைப் பார்த்து வினவினார் பிரின்ஸ்பால்.

பேங்க் மேனேஜர் உற்சாகமாகி விட்டான்.



''உங்களுக்கு படிக்கப் பிடிக்குமா?''

''என்னடா இது என்னடா கேள்வின்னு கேட்கிற? படிக்கப் பிடிக்காமலா இவ்வளவு படிப்பு படித்திருக்கு...'' பிரின்ஸிபால் பெரிய ஜோக் சொல்லி விட்டது போல் பலமாய் சிரித்தார்.

அவரது மனைவியின் முறைப்பில் அவர் சிரிப்பு பாதியில் நின்று போக வியர்வையை கைக்குட்டையால் துடைத்துக் கொண்டார்.

தாரிணி சிரிப்பை வாய்க்குள்ளேயே அடக்கிக் கொண்டு ''பிடிக்கும்...'' என்றாள்.

''யார் எழுதினதைப் படிப்பீங்க...''

''லாசரா... புதுமைப்பித்தன்... மௌனி..''

''எல்லோரும் அந்தக் கால எழுத்தாளர்கள் ஆச்சே.''

''ஆனால்.. அவர்களுடைய எழுத்துக்கள் எந்தக் காலத்து ஆளுகளும் படிக்கலாமே... அப்படிப் பொருந்தியிருக்கும்.''

''ஓ ஐஸீ.. நான் படித்துப் பார்க்கிறேன்.''

குடும்பம் மொத்தத்திற்கும் தாரிணியைப் பிடித்துப் போனது புரிந்துவிட மாசிலாமணி எரிச்சலுற்றான்.

''மாப்பிள்ளை எந்த பேங்கில் மேனேஜரா இருக்கிறார்?''

சொன்னார்கள்.

''அப்படின்னா வரதட்சணை நிறைய எதிர்பார்ப்பீங்களே.. அப்பா அம்மா இல்லாத பொண்ணு. ஏதோ நம்ம தங்கையாச்சே கடைசி வரைக்கும் நாம் தான் பார்த்துக்கணும்னு என் பெண்டாட்டிகிட்ட சொல்லி கூட தங்க வச்சிருக்கிறேன்.''

'கடைசி வைரக்கும்...' தாரிணி விரக்தியாய் மனதில் நினைத்துக் கொண்டாள். அதுதானே அவன் கணக்கு. கடைசி வரை கன்னியாகவே தங்கையை வீட்டில் நிறுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.. மாதா மாதம் அவள் கொண்டு வந்து கொடுக்கும் புது ரூபாய் நோட்டுக்களை எண்ணி மகள்களின் கல்யாணத்திற்கு சேர்த்து வைக்க வேண்டும்.

''ஸோ.. நீங்க என்ன சொல்ல வர்றீங்க?'' பிரின்ஸிபால் தேங்காய் உடைத்தது போல் வெளிப்படையாகவே கேட்டார்.

''எங்களாலே வரதட்சணைன்னு சல்லிக்காசு கொடுக்க முடியாதுங்க.''

''நாங்க கேட்கவில்லையே. நாங்க வாய் திறந்து பேசு முன்னால் நீங்களாகவே கற்பனை செய்து கொண்டு பேசினால் எப்படி? வரதட்சணை கொடுப்பதும் குற்றம். வாங்குவதும் குற்றம்ங்கிற கொள்கையுடைவர்கள் நாங் கள்...'' பிரின்ஸிபாலின் கண்களில் பொறி பறந்தது.

'சரியாப் போச்சு. என் அண்ணன், தங்கைக்கு அவள் சம்பாதித்த பணத்தில் சேர்த்து வைத்த பணத்திலிருந்து சல்லிக்காசு வரதட்சணை கொடுக்க மாட்டான். ஆனால் தங்கையின் பணத்திலிருந்து மகள்களுக்கு அள்ளி அள்ளி வரதட்சணை கொடுக்க யோசிக்கவே மாட்டானே..' தாரிணியின் உதட்டோரம் ஏளன முறுவல் உதித்தது.

மாசிலாமணி உட்காரும் இடத்தில் முள்களை பரப்பி வைத்திருப்பது போல் உட்கார முடியாமல் தவித்தான். முதல் அஸ்திரம் பயனற்றுப் போய்விட... அடுத்த அஸ் திரத்தை எய்தான்.



''நகை நட்டுன்னு ஒண்ணும் சேர்த்து வைக்கலைங்க. அது போட்டிருக்கிற சின்ன செயின்.. தேய்ந்து போன இரண்டு தங்க வளையல்கள். தோடு ஜிமிக்கிதான் நகை. வேறு ஒன்னும் போட முடியாது.''

'பேங்க் மேனேஜருக்கு போடும் நகையின் அளவு இது...' தனக்குள் சிரித்துக் கொண்டாள் தாரிணி. இதை யெல்லாம் முன்னாடியே இவன் சொல்லி விட்டிருக்க வேண்டாமோ. சபை கூட்டி... அதன் மத்தியில் அவளை உட்கார வைத்து.. பிடித்திருக்கின்றது என்று மாப்பிள்ளை வீட்டார் சொன்ன பின் தான் சொல்வானா? எவ்வளவு குரூரமானவன் இவன்?

'நல்லவேளை..' தனக்குள் தன்னை மெச்சிக் கொண் டாள் தாரிணி. இவன் குணம் அறிந்துதான் தாரிணி பெண் பார்க்கும் படலங்களில் யாருக்கு வந்த விருந்தோ என்பது போல் கலந்து கொள்வாள். வீணா கற்பனைகளை வளர்த் துக் கொள்வதில்லை. மாப்பிள்ளையை அறிமுகப்படுத் தும்போது முன்பின் தெரியாதவர்களை அறிமுகப்படுத்தி னால் ஒரு 'ஹலோ' சொல்வது போல் பார்த்து வைப்பாள்.

''பெண் போட்டிருக்கும் நகைகளை அவிழ்த்துக் கொடுத்து விட்டே வரலாம். எங்கள் மருமகளுக்கு நாங்கள் நகை போட்டுக் கல்யாணம் செய்து கொள்கிறோம்'' பிரின்ஸிபால் புரட்சிகரமான மனிதராய் இருந்தார்.

'அட்ரா சக்கை' என்று மனதிற்குள் நினைத்துக் கொண் டாள் தாரிணி. பிரின்ஸிபாலுக்கு மாசிலாமணியின் குணம் தெரியாது போல. எவ்வளவு இறங்கி வந்தாலும் இவளது அண்ணன் இவளுக்குக் கல்யாணம் செய்து வைக்கப் போவதில்லை. வாராவாரம் வேடிக்கை பார்ப்பது போல் இந்த வாரமும் வேடிக்கை பார்க்கத்தான் இவளே வேசம்

போட்டுக் கொண்டு வந்து உட்கார்ந்திருக்கிறாள். காலா காலத்தில் இவர்கள் கிளம்பிப் போனால் சீக்கிரம் சாப் பிட்டு விட்டுப் படுத்துத் தூங்கலாம். பிரின்ஸிபால் ஆனாலும் இவ்வளவு 'நல்லவரா..' இருக்கக் கூடாது.

''அது எப்படிங்க பொண்ணு வெறும் கழுத்தோடு வந் தால் நாலு பேரு நாலு விதமாய் என் தங்கச்சியைப் பார்த் துப் பேசவா? நான் இதற்கு ஒத்துக் கொள்ள மாட்டேன்.''

'நீதான் ஒத்துக் கொள்ள மாட்டாயே. எனக்குக் கல்யாணம்ன்னு ஒன்று நடப்பதை நீ ஒத்துக் கொள்ள மாட்டாய். அது எனக்குத் தெரியும். உனக்குத் தெரியும். உன் பெண்டாட்டி பிள்ளைகளுக்குத் தெரியும். ஏன் இந்த ஊருக்கே தெரியும். உள்ளூர் மாப்பிள்ளைகள் எல்லாம் ஓடி விட்டார்கள். வெளியூர் மாப்பிள்ளைகளை நீ ஓட்டிக் கொண்டிருக்கிறாய். இது தெரியாமல் இந்த வெளியூர் காரர்கள் உன்னிடம் வந்து மாட்டிக் கொண்டிருக்கிறார்கள் பார்.' தாரிணி மனதிற்குள் பிரின்ஸிபாலுக்காக அனுதாபப் பட்டுக் கொண்டாள்.

''பெண் வீட்டார் நகை போடலைன்னு நாங்கள் சொன்னால் தானே.. நாங்கள் போட்ட நகைகளை நீங்களே போட்டதாகத்தானே சொல்லப் போகிறோம். அப்புறம் எப்படி நாலு பேர் நாலு விதமாய் பேசுவார்கள்?'' பிரின்ஸிபால் தன்மையாய் பேசினார்.

'சபாஷ். சரியான போட்டி..' மனதிற்குள் பிரின்ஸி பாலை பாராட்டிக் கொண்டாள் தாரிணி. இப்படி மனிதரை அவளே எதிர்பார்க்கவில்லை. எல்லாம் அண்ணன் வீசும் முதல் பந்திலேயே அவுட்டாகி விடுவார்கள். இவர் இரண் டாவது பந்தையும் சிக்ஸர் அடிக்கிறாரே... இன்றைக்கு 'மேன் ஆப் தி ஷோ' ஆகாமல் விட மாட்டார் போல.



மாசிலாமணி பல்லைக் கடித்துக் கொண்டு கலை யரசியைப் பார்த்தான். அவள் என்ன சாமான்யப்பட்ட வளா... மாசிலாமணியின் மனைவி ஆயிற்றே.

திருமதி மாசிலாமணி வாயைத் திறந்தாள்.

''எல்லாம் சரிங்க... நீங்க ஜாதகம் பார்க்கணும்னு சொல்லி வைப்பீங்க. என் நாத்தனாரின் ஜாதகம் தோச ஜாதம். செவ்வாய் தோசம்.. மூல நட்சத்திரம்.''

'இதுதான் சரியான அடி. இதிலிருந்து இவர்கள் தப்பப் போவதில்லை' மனதிற்குள் அலுப்பாய் உணர்ந்தாள் தாரிணி. அவள் ஜாதகம் சரியானபடி எழுதவில்லை யென்று கிழித்துப் போட்டு விட்டு இப்படி ஒரு 'அட்ட ஜாதகத்தை' எழுதி வைத்த புண்ணியவானும், புண்ணிய வதியும் இன்னும் எத்தனை பேரிடம் இவளை தோச ஜாதகமென்று பொய் சொல்லி புண்ணியம் கட்டிக் கொள் ளப் போகிறாங்களோ... பெருமூச்சு விட்டாள் தாரிணி.

'அது சரி.. இந்த ஒட்டு ஓட்டியும் இந்த பிரின்ஸி குடும் பம் அசையாமல் இங்கே உட்கார்ந்து இருக்கிறாங்களே..'

பிரின்ஸிபாலின் மனைவி முகத்தில் கலவரம் வந்தது. கலையரசியின் முகத்தில் ஜீவன் மீண்டது. தொடர்ந்து அவள் கதையளந்தாள்.

''இதையெல்லாம் இந்தக் காலத்தில் யாரு நம்புறாங் கன்னு ஒரு பகுத்தறிவாளர் குடும்பத்தில் பெண் பார்க்க வந்து பேசி முடிச்சிட்டுப் போனாங்க.''

'அது யாராயிருக்கும்?' தாரிணி யோசித்தாள். நூற்றுக் கணக்கில் வந்து விட்டுப் போனவர்களில் பகுத்தறி வாளனை எப்படிப் பகுத்து அறிவது?

''போனவுடனே... அவரோட அம்மா... பொக்குன்னு போயிட்டாங்க...''

பொக்கென்று போன அந்த அம்மாளின் வயது தொண்ணூறு என்பதை மட்டும் தெளிவாய் மறைத்து விட்டுக் கலையரசி கூற பிரின்ஸிபாலின் மனைவியின் முகம் இருண்டது.

''அப்புறம்... தாரிணியோடு வேலை பார்க்கிறவர் ஆசைப்பட்டுப் பெண் கேட்டு வந்தார்...''

'பாவம் அவன்..' மனதிற்குள் பரிதாபப்பட்டுக் கொண்டாள் தாரிணி. முறையாய் பெண் கேட்டு வந்தவனை... தன் குடும்பத்தின் அருமை பெருமைகளை அள்ளி வீசி... காதலென்று எவன் வந்தாலும் காலை முறிப்பேனென்று சொல்லி. அதற்கும் மேல் வேலை பார்க்கும் இடத்தில் தங்கை மனதில் ஆசை விதையைத் தூவிவிட்டால் என்ன செய்வதென்று ஆள் வைத்து அடித்தவன் தானே... இந்த அன்பு அண்ணன்.

''முதல் நாள் பெண் கேட்டு வந்தார். அடுத்த நாளே ஆக்ஸிடென்டில் மாட்டி ஒரு வாரம் பெட்டில் அட்மிட் ஆயிட்டார். பாவம் பிள்ளையைப் பெற்றவங்க காஞ்சிபுரம் பக்கத்தில் இருந்தாங்க. அலறி அடிச்சுக்கிட்டு வந்து மகனைக் கூட்டிக்கிட்டுப் போனாங்க. தயாராய் காத்திருந்த அத்தை மகளைக் கல்யாணம் பண்ணி வைத்து தம்பதி சமேதராய்த்தான் கோயம்புத்தூருக்கு அனுப்பி வைத்தாங்கன்னா பாருங்களேன்...''

'ஒழுங்காய் மரியாதையாய் உன் பிள்ளைக்கு ஒரு கால் கட்டு போட்டு கோயம்புத்தூருக்கு அனுப்பி வை. இல்லாட்டி அவன் உயிர் உடம்பில் நிற்காது. காதலா பண்ணுகிறான் காதல்? இந்த மாசிலாமணியை யாருன்னு நினைத்தான்? கையைக் காலை முறித்து விடுவேன் ஜாக்கிரதை...'



காஞ்சிபுரம் தேடிப்போய் மிரட்டி விட்டு வந்த கதையை மறைத்து விட்டு நாத்தனாரின் கல்யாணத்தை நிறுத்திய வைபவத்தை வெகு உற்சாகமாய் சொல்லிக் கொண்டிருந்தாள் கலையரசி.

யாரு இவள்..? மாசிலாமணி தாலி கட்டிய மாமணியாயிற்றே. புருசன் காலடியைத் தொடரும் பத்தினி தெய்வம். அவன் பேச நினைப்பதையெல்லாம் இவள் பேசுவாள். அண்ணியை மகா வெறுப்புடன் பார்த்துக் கொண்டு அசைவின்றி அமர்ந்திருந்தாள் தாரிணி.

பிரின்ஸிபாலின் மனைவி கணவனிடம் முணுமுணுத்தாள். ஆசையாய் தாரிணியைப் பார்த்துக் கொண்டிருந்த மாப்பிள்ளையின் கையை ஜாடையாய் தட்டி பிடித்தமில்லாததை உணர்த்தினாள். பேங்க் மேனேஜர் பிரின்ஸிபாலைப் பார்க்க... பிரின்ஸிபால் மாசிலாமணியைப் பார்த்தார்.

''இதெல்லாம் சரிங்க. பொதுவாய் பெண் ஜாதகத்தில் குறையிருந்தால் எல்லாம் அதை மறைத்துத்தான் கல்யாணம் செய்யப் பார்ப்பாங்க. நீங்க இவ்வளவு விலாவாரியாய் பெண்ணோட ஜாதக விசேஷத்தை எடுத்துக் கூறி... அதுவும் போதாதுன்னு பெண் பார்க்க வந்தவர்களின் கை போன கதை கால் போன கதை, பத்தாததுக்கு ஆளே போன கதையெல்லாம் எடுத்துச் சொல்லி இந்தப் பெண்ணே வேணாம்ன்னு முடிவு பண்ண வைக்கறீங்களே... என்னே... உங்க நல்ல மனசு... நல்லாயிருங்க... அது சரி... உங்க நலத்துக்கு என்ன குறை? நீங்க நல்லாத்தான் இருப்பீங்க... பாவம் உங்க தங்கச்சி...'' மனம் வருந்தி அவர் கூற மாசிலாமணி துணுக்குற்றான்.

'தன் தகிடுதத்த வேலைகள் இந்த வாத்திக்கு தெரிந்து போச்சோ.'

''ஏன் சார் அப்படிச் சொல்றீங்க...?'' தன் மனதை மறைத்துக் கேட்டான்.

''இப்படி ஓர் பிறப்போடு.பிறந்திருக்கே...'' பிரின்ஸிபால் அவனை முறைத்தார்.

''என்ன... என்ன சொல்றீங்க..'' மாசிலாமணி விறைத்துக் கொள்ள...

''இப்படி ஓர் ஜாதகத்தோடு பிறந்திருக்கேன்னு சொன்னேன். ம்ஹூம்.. நான் வருத்தப்பட்டு என்ன செய்கிறது? பரந்த மனசு... பகுத்தறிவாளன்.. அப்படி இப்படின்னு என்னைப் பற்றி எனக்கே தற்பெருமை உண்டு... அப்படிப்பட்ட நானே.. என் மகனுக்கு உங்கள் தங்கையைக் கட்ட யோசிக்கும்படி வைத்துட்டீங்க... வேறு யார் நீங்கள் சொல்லும் இத்தனை கதைகளையும் மீறி உங்கள் தங்கையைக் கல்யாணம் செய்து கொள்ள வரப் போகிறார்கள்?'' என்று பிரின்ஸிபால் பதில் சொன்னார்.

''என்னது... நான் கதை சொல்கிறானோ...'' மாசிலாமணி சண்டைக்கு தயாராக கலையரசி கவலையுற்றாள்.

'அவர்களே... துண்டைக் காணோம்.. துணியைக் காணோம்ன்னு பெண்ணே வேணாம்ன்னு ஓட ரெடியாயிட்டாங்க. இந்த நேரத்தில் போய் இந்த மனுசன் ஏன் விடைச்சுக்கிறார். எல்லோரும் காஞ்சிபுரத்து ஆளுக மாதிரி சண்டை வேண்டாம்னு ஒதுங்கிப் போறவங்களா இருப்பாங்களா... வாத்தி வந்து உட்கார்ந்ததுமே அவருகிட்ட படிச்ச பையன்கள் எல்லாம் பெரிய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். ஆகியிருக்காங்கன்னு பெருமையா அளந்து வச்சதே. யாரையாவது கூப்பிட்டு வந்து விட்டால் என்ன செய்வது?'



''ஏங்க... நடந்ததைத்தான் கதைன்னு அவங்க சொல்றாங்க. இது தெரியாமல் நீங்க தப்பர்த்தம் பண்ணிக்காதீங்க. அவங்க பாவம் இந்த சம்பந்தம் வேண்டாம்ன்னு முடிவு பண்ணிட்டுக் கிளம்பிக்கிட்டு இருக்காங்க. அவங்க மனசைப் புரிஞ்சுக்கங்க.''

'புரிஞ்சுக்கங்க...' என்று அழுத்தமாய் மனைவி சொன்னதை மிகச் சரியாய் புரிந்து கொண்ட மாசிலாமணி வாயெல்லாம் பல்லானான்.

''என்னமோ... உங்க நல்லதுக்குத்தான் நான் நடந்ததைச் சொன்னேன். உண்மை தெரியாமல் என் தங்கையை உங்க தலையில் கட்டி விட்டு நாளைக்கு எதுனாச்சும் உங்க குடும்பத்தில் கெட்டது நடந்திருச்சுன்னு வைங்க... நீங்க எங்களைக் குற்றம் சொல்லிடக் கூடாது பாருங்க...''

பிரின்ஸிபாலின் மனைவி படக்கென்று எழுந்து விட்டாள்.

''எழுந்திருடா... நல்லாப் பெண் பார்க்க வந்தோம்.''

'ஒரு வழியாய் கிளம்பி விட்டார்கள்' தாரிணி எழுந்து கொண்டாள். பிரின்ஸிபால் அவளருகே வந்தார். இரக்கத்துடன் பார்த்தார். அவள் அர்த்தத்துடன் புன்னகைத்தாள். அவள் தலையில் ஆசிர்வதிப்பது போல் கை வைத்தவர்,

''அம்மா.. உன் ஜாதகத்தில் தோசமிருக்குன்னு இவங்க சொல்கிறதால் நான் போகவில்லை., என் குடும்பத்தில் நடக்கிற யதார்த்தமான செயல்களுக்குக் கூட உன்னைப் பொறுப்பாக்கி விடுவார்கள் என்பதால் போகிறேன். உன்னை தெய்வம் தான் காப்பாற்ற வேண்டும்...''

பெற்றவர் போல் அந்த சம்பந்தமில்லாத பெரிய மனிதர் கூறிய வார்த்தைகளில் கண் கலங்க உதடு கடித்து இமைகளை சிமிட்டி அதைத் தடுத்தாள் தாரிணி.

'அழுது விடக் கூடாது... என்னை விஷ்ணு துர்க்கை காப்பாற்றுவாள்...'

போட்ட வேஷத்தைக் கலைக்க வேண்டுமென்ற அலுப்புடன் பால்கனிக்கு வந்தபோது எதிர் வீட்டின் பால்கனியில் விக்னேஷ் தெரிந்தான். இவளைப் பார்த்ததும்... இவள் பார்ப்பதைப் பார்த்ததும் படக்கென்று உள்ளே போய் விட்டான்.

தாரிணி பெருமூச்சு விட்டபடி வீட்டுக்குள் போனாள்.

# 4



விஷ்ணு துர்க்கை அருளிருக்க

வீண் பயமே உனக்கெதற்கு?

வேன் சீராக ஓடிக் கொண்டிருந்தது. தாரிணி எதுவும் பேசாமல் ஜன்னல் வழியே சாலையைப் பார்த்துக் கொண்டே வந்தாள். எப்போதும் சளசளவென்று பேசா விட்டாலும் தானாய் எதையாவது பேசுபவள் இன்று மௌனம் சாதித்தது விக்னேஷிற்கு என்னவோ போல் இருந்தது. வேனின் முன்புறக் கண்ணாடி வழி பின் சீட்டிலிருந்தவளைப் பார்த்தான். சோர்வாக, தெரிந்தாள்.

'உடல் நிலை சரியில்லையா? முதல் நாள் லீவ் தானே.. அப்புறமேன் டல்லாக இருக்கிறாள்? எப்போதும் இப்படி இருந்ததில்லையே...' கவலையுடன் அவன் பார்த்துக் கொண்டிருந்தபோது தற்செயலாய் கண்ணாடியை அவளும் பார்த்து விட்டாள். படக்கென்று பார்வையை விலக்கிக் கொண்டான் விக்னேஷ்.



'ம்ஹூம்... வள்ளுவர் குறளில் சொன்னாரே.

யான் நோக்க நிலம் நோக்கும் - நோக்காங்கால்

தான் நோக்கி மெல்ல நகும்ன்னு... அது இவனைத்தான் போல... வள்ளுவரென்னவோ பெண்களின் நாணப் பார்வையை அப்படிச் சொன்னார். இவன் பார்வை என்ன பார்வை? இந்தப் பார்வைக்கு அர்த்தமென்ன?

தாரிணி மீண்டும் ஜன்னல் வழியே சாலையைப் பார்க்க சங்கடமுற்றான் விக்னேஷ். 'தான் பார்த்ததை அவள் பார்த்து விட்டாளே...' ஏதாவது பேசினால் இந்த சங்கடம் விலகும். அவள் பிடிவாதத்துக்கென்று பேச மாட்டேன் என்கிறாளே.

அவள் சலனமில்லாமல் சாலையையே பார்த்துக் கொண்டு வர அவன் சலனப்பட்டுப் போயிருந்தான். சாலையில் கவனம் வைத்து வேனை ஓட்ட முடியாமல் போகத் தனக்குள் தன்னை கடிந்து கொண்டான்.

'ஊஹூம்.. இதை இப்படியே விட்டால் மனம் ஒரு நிலைப்படாது.. இப்போது என்ன? அவளிடம் பேசிவிட வேண்டும். அவ்வளவுதானே... பேசி விட்டால் போகிறது... அவளென்ன முன்பின் தெரியாதவளா.. இந்த ஒரு வருடமாய் அவனது வேனில் வரும் மாதவாடகை கொடுக்கும் வாடிக்கையாளர்தானே...'

மீண்டும் முன்புறக் கண்ணாடி வழி அவளை நோக்க இம்முறை அவள் பார்வையை சற்றுக் கூடத் திருப்பாமல் நேர் பார்வை பார்த்தபடி வந்தாள். மெல்ல தொண்டையைக் கனைத்துக் கொண்டான். அவள் அதற்கும் திரும்பவில்லை. வேறு வழியில்லாமல் வாய் திறந்தான்.

"உடம்பு சரியில்லையா?"

அவள் ஆச்சரியத்துடன் அவனைக் கண்ணாடி வழி பார்த்தாள். இம்முறை அவன் பார்வையைத் திருப்பிக் கொள்ளவில்லை.

"என்னையா கேட்டிங்க...?"

"இந்த வேனில் நீங்க மட்டும்தான் வருகிறீங்க... பசங்களையெல்லாம் காலையிலேயே இறக்கி விட்டு வந்து விட்டேன்."

"இது என்ன புதிதாய் விளக்கம் சொல்றீங்க. காலையில் வீட்டிலிருந்து ஏறிக் கொள்வேன். சாயந்திரம் நான் கோவிலுக்கு வருவதால் அங்கேயே வேனில் ஏறிக் கொள்வேன். இதுதானே வழக்கம்."

"இல்லை.. என்னையா கேட்டிங்கன்னு கேட்டிங்களே... நீங்கள் மட்டும் இருக்கும் வேனில் உங்களிடமில்லாமல் வேறு யாரிடம் பேசுவேன்?"

"அப்பா.. எத்தனை வார்த்தை பேசி விட்டீர்கள். வழக்கமாய் மௌனச் சாமியாராய் தானே வருவீர்கள்? இன்றைக்கு என்ன புது கரிசனம்?"

"சோர்வாய் தெரிந்தீர்களே உடல் நலம் சரியில்லையோன்னு..."

"மனநிலை தான் சரியில்லை..."

"ஏன்? நேற்று முன் தினம் பெண் பார்க்க வந்தார்களே... அவர்கள் எதுவும் நெகடிவ் ஆன்ஸர் சொல்லி விட்டார்களா...?"

ஒரு கணம் அவள் நிமிர்ந்து கண்ணாடி வழி அவன் விழிகளை ஊடுருவிப் பார்த்தாள். ஏன் இப்படிப் பார்க்கிறாள்? அவள் பார்வையின் வேகம் தாங்காமல் அவன்



தவித்தான். அவன் தவிப்பைக் கண்டு அவள் முகம் இளகியது.

"அவர்கள் பாஸிடிவ் ஆன்ஸர் சொல்லியிருந்தால் நான் சந்தோசப்பட்டிருப்பேன்னு நினைக்கிறீர்களா?"

"இல்லைங்க... உங்கள் சோர்விற்குக் காரணம் அது வோன்னு நினைத்தேன்."

"இது வழக்கமாய் நடக்கும் நாடகம்தான். ஒன்று தெரியுமா? எதிர்பார்ப்பு இருந்தால்தான் ஏமாற்றம் வரும். எனக்கு எதிர்பார்ப்பு இல்லை..."

"அப்புறமேன் இந்தச் சோர்வு...?"

"ஒரு வகையில் முந்தா நாள் பெண் பார்க்க வந்தவர்கள் தான் என்னைப் பாதித்து விட்டார்கள்."

விக்னேஷின் மனம் ஏனோ சிணுங்கியது.

"உங்களுக்கு அந்த மாப்பிள்ளையைப் பிடித்து விட்டதா?" மனம் படபடக்கக் கேட்டான். அவள் என்ன பதில் சொல்லப் போகிறாள் என்ற எதிர்பார்ப்பில் அவன் மனம் பதைத்தது.

"மாப்பிள்ளையின் அப்பாவைப் பிடித்து விட்டது."

விக்னேஷிற்கு தூக்கி வாரிப் போட்டது. இவள் என்ன கதையையே மாற்றுகிறாள்... அபூர்வராகம் இசைக்கிறாளோ...

"நீங்கள் சொல்வது விளங்கவில்லை..."

"என் அப்பா உயிரோடு இருந்திருந்தால் என் மேல் எப்படி பரிவு காட்டியிருப்பாரோ... அப்படி ஒரு பரிவைக் காட்டினார் அவர். இதுவரை எனக்காக யாரும் இரக்கப் பட்டு நான் பார்த்ததேயில்லையா.. அவரது இரக்கத்தில் மனம் நெகிழ்ந்து விட்டது. எனக்கென்று யார்

இருக்கிறார்கள் என்று ஏக்கமாய் இருக்கிறது. என் அம்மா, அப்பா இல்லாத குறை எப்போதையும் விட இப்போது தான் அதிகமாய் என்னைத் தாக்குகிறது. ஒருவித தனிமையுணர்வு மனதில் தோன்றுகிறது...'' எப்போதுமில் லாமல் இப்போது அவள் தன் மன உணர்வுகளை அவனிடம் கொட்டினாள்.

அந்தப் பகிர்ந்து கொள்ளலில் மனம் கவரப்பட்டான் விக்னேஷ். 'சொல்லி அழுதால் சோகம் குறையும்? சொல்லி அழ யார் இருக்கிறார்கள்?' அவளை வாட்டிய தனிமை யுணர்வை தன் வார்த்தைகளால் உணர்த்தினாள் அவள்.

''ஏங்க அப்படி நினைக்கறீங்க... உங்களுக்காவது அண்ணன், அக்கா, தங்கையென்று சொந்தங்கள் இருக் கின்றன. எனக்கு? இதே கோயம்புத்தூரில் தாய், தகப்ப னோடு சந்தோசமாக வாழ்ந்தவன் தான் நான். ஆனால் பாருங்கள். அப்பா திடீர்ன்னு கேன்ஸரில் இறந்து போய் விட்டார். அப்பா போன துக்கத்தில் அம்மாவும் அவர் பின்னாலேயே போயிட்டாங்க. பிளஸ் டூ படித்துக் கொண்டிருந்தேன். படிப்பைத் தொடர வழியில்லை. அம்மாவும் அப்பாவும் லவ் மேரேஜ் பண்ணிக்கிட்ட வங்க. ரெண்டு பக்க சொந்தமும் என்னை ஏற்றுக்கலை. சேர்த்து வைத்திருந்த ஒன்றிரண்டு காசும் அப்பாவோட வைத்தியத்திற்கு செலவாகிருச்சு. அநாதையாய் நின் றேன். அடுத்த மாத வீட்டு வாடகைக்கு வழி தெரியாமல் ஆட்டோ ஓட்டக் கற்றுக் கொண்டு ஆட்டோ ஓட்ட ஆரம்பித்தேன். அதில் வந்த பணத்தைப் பார்த்து பார்த்து செலவு பண்ணி மீதம் பிடித்தேன். சொந்தமாய் ஒரு ஆட்டோ வாங்கினேன்... அப்புறம் அதை விற்று நல்ல வங்க தயவில் வேன் வாங்கினேன்.. ஸ்கூல் பசங்க.



உங்களை மாதிரி ஆபிஸ் போறவங்க கொடுக்கிற மாத வாடகை போக லீவு நாளில் மற்ற விசேஷ வீடுகளுக்கு வாடகைக்குப் போக ஆரம்பித்தேன். இப்போது இன்டிகா கார் ஒன்றும் வாங்கி விட்டேன். வசதியான வீடு எடுத்து என்னுடன் ப்ளஸ் டூ வரை ஒன்றாகப் படித்து விட்டு இப்போ கவர்ன்மென்ட் வேலை பார்க்கும் குமரனுடன் பாதி வாடகையைப் பகிர்ந்து கொண்டு இருக்கிறேன். எனக்குன்னு யாருமில்லைன்னு நினைக்க நேரம் என் மனதிற்கு நான் கொடுப்பதில்லை. நீங்களும் அப்படி இருந்து பாருங்க.. மன பாரம் குறையும்...''

என்றும் பேசாதவன் எல்லாவற்றிற்கும் வட்டியும் முதலுமாய் மொத்தமாய் பேசி தன் குடும்ப வரலாற்றை அவளிடம் கொட்டித் தீர்த்து விட்டான்.

''உங்க காலேஜ் வந்து விட்டது... நீங்க பாடம் சொல் லித் தர்றவங்க... உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய தில்லை. போயிட்டு வாங்க...'' அவளின் வேளாண்மை கல்லூரி வாசலில் வேனை நிறுத்தினான் அவன்.

இறங்கும் முன் அவனைத் திரும்பிப் பார்த்தவள்.

''இல்லைங்க... நான் தனிங்கிற எண்ணம் இனி எனக்கு வராது. சொல்லி அழுக எனக்குன்னு ஒரு ஆள் இல்லையேன்னு நினைத்தேன். என்னைப் போலவே இருக்கும் நீங்க கிடைச்சிருக்கீங்க. இன்றைக்கு நாள் நல்ல முறையில் விடிஞ்சிருக்கு. ஒரு நல்ல மனிதரின் ஆதரவு கிடைச்சிருக்கு. வாழ்க்கையில் ஒரு நம்பிக்கை வந்திருக்கு.''

தாரிணி இறங்கி அவளது கல்லூரிக்குள் சென்றாள். சீரான நிமிர்ந்த நேர் கொண்ட நடையுடன் பெண்மையின் நளினத்துடன் அன்ன பட்சி போல் அவள் நடக்கும் அழகைப் பார்த்துக் கொண்டிருந்த விக்னேஷ் அவள்

வார்த்தைகளை மனதிற்குள் அசை போட்டவாறு வேனைக் கிளப்பினான்.

'சொல்லி அழுக நீங்க கிடைத்திருக்கீங்க..'

என்ன மாதிரியான துயரம் மிகுந்த வார்த்தைகள் இவை. சாய்ந்து கொள்ள தோள் தேடும் சோகம் இந்த மாதிரியான படித்த பண்புள்ள சுய சம்பாத்தியம் உள்ள பெண்ணிற்கு வரவேண்டுமா?

மனதில் பாரம் அழுந்த வேனைக் கிளப்பினான் விக்னேஷ்.

மதிய உணவு இடைவேளையில் எதிரே வந்து கொண்டிருந்த மேனகா,

''சாப்பிடப் போகிறாயா தாரிணி.''

''ஆமாம்.. நீ வீட்டுக்குப் போய் விடுவாய்.. நான் இங்கே தானே ஆறிப்போன டப்பா சாதத்தைச் சாப்பிட வேண்டும்.''

''இன்றைக்கு அதை கூட்டுகிற ஆயாவுக்கு கொடுத்து விட்டு சூடாய் பிரைட் ரைஸும், காலி ப்ளவர் வறுவலும் சாப்பிடு.''

செலோ டப்பாவை தாரிணியின் கையில் திணித்தாள் மேனகா.

''என்னடி இன்றைக்கு விசேஷம்?''

''என்னோட வெட்டிங் டே. கேசரியும் வைத்திருக்கேன் சாப்பிடு.''

தாரிணி மௌனமாய் புன்னகைத்தாள். மேனகா கனிவுடன் அவள் தோளில் கை போட்டுக் கொண்டு இதமாய் வினவினாள்.

''நேற்று பார்க்க வந்த அலையன்ஸ் என்ன ஆச்சு.''



தாரிணி கட்டை விரலைக் கீழ் நோக்கி மடித்துக் காட்டிப் புன்னகைத்தாள்.

''வழக்கம் போல ஊத்திக்கிச்சு.''

''தாரிணி நான் ஒன்று சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டாயே.''

''நீ நூறு சொன்னால் கூடக் கோபித்துக் கொள்ள மாட்டேன் சொல்லு.''

''உன் தங்கைக்கு இருக்கிற தைரியம் உனக்கில்லைடி. அவள் பார்... எதற்கெடுத்தாலும் கேள்வி கேட்டு எதிர்த்துப் போராடி தனக்குன்னு ஓர் வாழ்வை அமைத்துக் கொண்டு போய் விட்டாள் நீ...? முதுகெலும்பில்லாமல் கோழையாய் அந்த வீட்டில் அடிமை வாழ்வு வாழ்கிறாய். உன் ஜாதகத்தை கிழித்துப் போட்டு விட்டு அவர்கள் மாற்றி எழுதியபோதே நீ தட்டிக் கேட்டிருக்க வேண்டாமா? இளங்கோ துணிந்து வந்து உன்னைப் பெண் கேட்டபோது அவனுக்கு சப்போர்ட்டாய் நீ நின்றிருக்க வேண்டாமா? உனக்காக அடிபட்டு அவர் ஹாஸ்பிடலில் கிடந்தபோது ஓடிப்போய் நீ பார்த்திருக்க வேண்டாமா? போலிஸின் உதவியை நாடியிருக்க வேண்டாமா? வீட்டை விட்டு வெளியே வந்து இளங்கோவை திருமணம் செய்து கொண்டிருக்க வேண்டாமா?''

# 5



எண்ணத்திலே அவளையழைத்தால்
ஏழையிடம் ஓடியே வருவாள்

மரங்களடர்ந்த சூழலில் வந்த இதமான காற்று அது மதிய நேரமென்பதை மறக்கச் செய்தது. செண்பக மரத்தின் ஓரமாக இருந்த ஜன்னலின் கம்பியை பிடித்துக் கொண்டு நின்றிருந்தாள் தாரிணி. லெக்சரர்களுக்கான ஓய்வு அறை அது. மேனகா கொடுத்திருந்த உணவு டப்பா திறக்கப்படாமல் அப்படியே மேஜை மேலிருந்தது. மற்றவர்கள் சாப்பிட்டு முடித்து விட்டுப் போயிருந்தனர். தாரிணிக்கு அன்று மதியம் வகுப்புகள் எடுக்க வேண்டியது இல்லை. மனதில் அலை பாய்ந்த உணர்வுகளுக்கு வகுப்புகள் இல்லாதது தேவையாக இருந்தது.

அமைதியாக்க முயன்று கொண்டிருந்த தாரிணியின் மனத்தை மேனகா 'வேண்டாமா? வேண்டாமா?' என்று கேள்வி கேட்டு அலையடிக்க வைத்து விட்டுச் சென்று விட்டாள். கேள்வி கேட்பது யார்க்குமே எளிது. மேனகா எளிதாய் கேட்டு விட்டாள். தாரிணியின் சூழலில் இருந்து பார்த்தால்தான் துன்பத்திலிருந்து விடுபட முடியாமல் அவள் மாட்டிக் கொண்ட துயரம் தெரியும்.

பசுபதி, மீனாட்சி தம்பதியினரின் மூத்த மகன் மாசிலாமணி... மாசில்லாத மணியாக மகன் இருக்க வேண்டும் என்ற நினைவில் வைத்த பெயர் அது. இவ்வளவு மாசுடைய மனத்தினனாக அவன் ஆவான் என்று தெரிந்திருந்தால் அந்தப் பெயரை அவனைப் பெற்றவர்கள் அவனுக்கு வைத்திருப்பார்களா என்ன?

மாசிலாமணிக்கு அடுத்துப் பிறந்த மூன்று பெண்களுக்கும் முறையே ஜானகி, தாரிணி, மாதவியென்று பெயர் வைத்தார்கள். அது என்னவோ... பசுபதி பெற்ற பிள்ளைகளில் தாரிணி ஒருத்திக்குத் தவிர மற்ற மூன்று பேருக்கும் படிப்பு மண்டையில் ஏறவேயில்லை.



கலெக்ட்ரேட்டில் பணிபுரிந்த பசுபதி எவ்வளவோ எடுத்துக் கூறியும் டியூசன் வைத்தும் பள்ளியிறுதியை தடுக்கி விழுந்து விழுந்து ஒரு வழியாக அவர்கள் மூவரும் முடிப்பதற்குள் பசுபதிக்கே மூச்சுத் திணறி விட்டது.

வீணாய் விஷப்பரீட்சை எதற்கு என்று தீர்மானித்தவராய் ஜானகிக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பித்தார். நல்ல வேளையாய் பெண்கள் மூவருமே பார்ப்பதற்கு அழகாய் இருப்பார்கள். ஜானகியின் அழகில் மயங்கிய தென்காசி மாப்பிள்ளைக்கு அவன் கேட்டதைக் கொடுத்து ஜானகியைக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து விட்டார்.

மாசிலாமணி அடிக்கடி சொல்வதைப் போல ஜானகியின் கணவர் மூர்த்தி கொடுத்து வைத்தவன். பெற்றவர்கள் உயிரோடு இருந்து திருமணம் முடித்து வைத்தால் ஒரு பெண்ணுக்கு எவ்வளவு சீரும் சிறப்புமாய் திருமணத்தை நடத்தி வைப்பார்கள் என்பதற்கு ஜானகியின் திருமணம் மிகச் சிறந்த உதாரணம். ஜானகியைப் பெண் கொடுத்த வழியிலேயே அவளது சிறிய மாமனாரின் மகள் கலையரசியை மாசிலாமணிக்கு பெண் கொடுக்க முன் வந்தபோது பசுபதி கொஞ்சம் தயங்கத்தான் செய்தார். அடுத்து இரு பெண்களையும் கரையேற்றி விட்டு மகனுக்கு முடிக்கலாமேயென்பது அவரது ஆசை.

ஆனால் மாசிலாமணி தகப்பனுடன் மல்லுக்கு நின்றான்.

"உங்க செல்லப் பொண்ணு தாரிணி படிக்கிற வரை படிக்கட்டுமின்னு நீங்களே சொல்லிட்டிங்க... அவள் எப்போது படிப்பை முடித்து எப்போது நான் கல்யாணம் பண்ணுவது? படிப்பில்லைன்னு யாரும் பொண்ணு கொடுக்க மாட்டேன்னு சொல்லிட்டால் என்ன செய்

வீங்க? வந்த சம்பந்தத்தை வளைச்சுப் போடப் பாருங் கப்பா.''

அன்று வந்த சம்பந்தத்தை வளைத்துப் போடச் சொன்ன அதே மாசிலாமணிதான் இன்று தாரிணிக்கு வருகின்ற சம்பந்தங்களையெல்லாம் கலைத்து விட்டுக் கொண்டிருக்கிறான்.

பின்னாளில் மகன் செய்யப் போகும் துரோகச் செயல் களைப் பற்றி அறியாதவராக பசுபதி மகனின் வார்த்தை களை செவிமடுத்தார். கலையரசி மாசிலாமணியின் மனைவியாகி அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாள்.

''வேலையில்லாமல் நான் இருக்கேன்னு என் பெண்டாட்டி கண்ணிலே தண்ணி விடறா. எனக்கு ஒரு கடையை வைத்துக் கொடுங்கப்பா.''

கடை ஆரம்பிக்கறதாய் சொல்லி தாரிணியின் திருமணத்திற்கு சேர்த்து வைத்திருந்த பணத்தை வாங்கி பெயருக்கு ஒரு பெட்டிக்கடையை போட்டு விட்டு மீதத்தை பதுக்கிக் கொண்டான் மாசிலாமணி.

தாரிணி எம்.எஸ்ஸி. அக்ரி முடித்து விட்டு அதற்கு மேலேயும் படித்தாள். அவள் படித்த வேளாண்மை கல்லூரியிலேயே லெக்சரர் வேலை கிடைத்து விட்டது. அன்றைக்குத்தான் பசுபதியும், மீனாட்சியும் எவ்வளவு சந்தோசப்பட்டார்கள். பேரூரில் இருந்து ஆறுபடை வீடு முருகனின் கோவிலுக்கு அவளை அழைத்துச் சென்று ஆறுபடை வீட்டு முருகனின் ஆறு சந்நிதிகளுக்கும் அபிசேகம் செய்தார்கள்.

''என் பெயரைக் காப்பாற்றப் பிறந்தவள் தாரிணி மட் டும்தான்..'' பசுபதி வந்தவர், போனவர்களிடமெல்லாம் சொல்லி மகிழ்ந்து போனார்.



ஒருவேளை அந்த வன்மம்தான் மாசிலாமணியின் மனதில் ஆழ ஊன்றி விட்டதோ...?

தாரிணிக்கு பெரிய பதவியிலிருக்கும் மாப்பிள்ளை களைப் பார்க்க ஆரம்பித்தார் பசுபதி. அன்றுகூட உறவினர் வீட்டுத் திருமணத்தில் கலந்து கொண்டபோது அங்கே வந்திருந்த மீனாட்சியின் ஒன்றுவிட்ட அண்ணன் ஒருவர் தாசில்தாராக இருக்கும் தன் மகனுக்கு தாரிணியை பெண் கேட்டார். இவர்களும் சம்மதம் சொல்லிவிட்டு சந்தோஷ மாய் திரும்பி வரும்போது அநியாயமாய் இறந்து போனார்கள்.

பசுபதி, மீனாட்சியின் மறைவுக்குப் பின்னர் அந்த மாமன் தன் மகனுக்கு தாரிணியை பேசி முடித்ததை மாசிலாமணிக்குத் தெரியப்படுத்த, வேண்டுமென்றே முன்னால் போன பங்காளிச் சண்டையையெல்லாம் கிளறி 'யாருக்குப் பெண் கொடுத்தாலும் உன் மகனுக்கு மட்டும் பெண் கொடுக்கக் கூடாதுன்னு எங்க அம்மா சத்தியம் வாங்கிக் கொண்டு செத்துப் போனாங்க' என்று மாசிலாமணி அவரை விரட்டியடித்தது ஒரு கிளைக் கதை.

பசுபதியும், மீனாட்சியும் கடைசி மூச்சில் இருந்தபோது மருத்துவமனையில் தாரிணியும், மாசிலாமணியும் அருகில் இருந்தார்கள். சாகும் முன் மகளின் கையைப் பிடித்து மகனிடம் ஒப்படைத்தபோது பெற்ற மகளுக்கு மகன் தாய், தகப்பனாய் இருந்து பார்த்துக் கொள்வான் என்ற நம்பிக்கையில் தான் அவர்கள் அதைச் செய்தார்கள்.

மாசிலாமணியோ தாரிணியின் சம்பளத்தை தன் வசம் தாய், தகப்பன் ஒப்படைத்து விட்டதாக வானில் பறந் தான். பெற்றவர்களின் நம்பிக்கையை நாசம் செய்தான். பசுபதிக்கு சேர வேண்டிய தொகைகளை வைத்து தன்

பெயருக்கு வீடுகளை வாங்கிப் போட்டான். படிப்பு வராமல் வீட்டிலிருக்கும் மாதவி தன் நடவடிக்கைகளை கண்காணிக்கிறாளென்று அவளைத் திருமணம் என்ற பெயரில் வந்த மாப்பிள்ளையின் தலையில் கட்டி வீட்டை விட்டுத் துரத்தினான்.

"நீ படித்து வேலை பார்க்கிற பொண்ணு தாரிணி. உனக்கு ஆயிரம் மாப்பிள்ளைகள் வருவார்கள். அதிலும் அலசி ஆராய்ந்து நிறுத்தி நிதானமாக ஒருவனைத் தேர்ந்தெடுத் துத்தான் உன்னைக் கொடுக்க வேண்டும். இந்த மாத வியை கேட்டு வந்த இடத்தில் கட்டிக் கொடுக்கலைன்னு வை. கடைசி வரை நமக்குச் சுமையாகி விடுவாள்."

மாதவியின் திருமணத்தை முடிவு செய்து விட்டு தாரிணியிடம் மாசிலாமணி கூறிய வார்த்தைகள் இவை. சம்பாதிக்காத தங்கை ஒரு சுமை தானே...? எது எப்படியோ... படிக்காத, வேலை பார்த்து சம்பாதிக்காத ஒரே காரணத்தினால் தாரிணியின் அக்காளுக்கும், தங்கைக்கும் அமோகமான திருமண வாழ்க்கை அமைந்து விட்டது. அவர்களது கணவன்மார்கள் அவர்களை கண்ணுக்குள் வைத்துப் பார்த்துக் கொண்டனர். இருவரும் ஆணொன்று, பெண்ணொன்று என்று குழந்தைகளைப் பெற்று வாழ்க்கையில் செட்டிலாகி விட்டனர்.

தாரிணி மட்டும் வேலைக்குப் போக வீட்டுக்கு வர... மாதம் பிறந்தால் தன் செலவுக்கு ஒரு தொகையை எடுத்துக் கொண்டு மீதத்தை மாசிலாமணியின் கையில் கொடுத்து விட... என்று இயந்திர வாழ்க்கை வாழ்ந்து வந்தாள்.

தனக்கென அவள் ஒரு தொகையை எடுத்துக் கொள் வதை மாசிலாமணி ஆட்சேபிக்க முயன்றான். நான்கும் தெரிந்த கலையரசி அவனை அடக்கி விட்டாள்.



"தங்க முட்டை போடற வாத்தை ஒரேயடியாய் கத்தியைச் செருகி வீட்டை விட்டு லேடிஸ் ஹாஸ்டலுக்கு ஓட வைத்துராதீங்க..."

மாசிலாமணி அடங்கிப் போனான்.

'முதுகெலும்பு...' தாரிணிக்கும் முதுகெலும்பு உள்ளது. ஆனால் அது இருக்கும் காரணத்திற்காக வீட்டை விட்டு வெளியில் போவது நியாயமாகுமா? பெற்றவர்கள் கண் மூடும்போது அண்ணனின் பாதுகாப்பில் அவளை விட்டு விட்டுச் சென்றிருக்கும்போது அதை உதறிவிட்டு தனித்துச் செயல்படுதல் சரியா?

இந்தத் தயக்கம்தான் அவளை தடுத்து நிறுத்தியது. வந்த வரன்கள் ஓடிவிடக் காரணமென்னவென்று அறி யாமல் அவள் குழம்பிக் கொண்டிருந்த போது வருடங்கள் கடந்து ஓடின. ஓர் நாள் அவளுக்கு உண்மை தெரிய வந்தது.

"என் நாத்தனாருக்கு தோச ஜாதகம். செவ்வாய் தோசம்... மூல நட்சத்திரம்" கலையரசி ஒரு பெண் பார்க் கும் படலத்தில் கூறியபோது தாரிணி அதிர்ந்து நின்று விட்டாள்.

வந்தவர்கள் முன்னிலையில் எப்படி வாய் திறப்பது? அவர்கள் சென்றதும் மாசிலாமணியிடமும் அவன் மனைவியிடமும் மோதினாள்.

"என்னுடைய ஜாதகம் தோச ஜாதகமா? இத்தனை வருடமாய் இப்படித்தான் நாடகமாடி என் கல்யாணத்தை நடக்க விடாமல் கலைத்தீர்களா...?"

"அ...ப்...பா.." என்று வாயில் அடித்துக் கொண்டாள் கலையரசி.

"நாங்கள் நாடகமாடுகிறோமா... உன் ஜாதகம் தோச ஜாதகம்ங்கிற உண்மையைச் சொன்னால் அது நாடகமா? பொய் சொல்லி உன் கல்யாணத்தை நடத்தச் சொல்கிறாயா? நாளைக்குக் கல்யாணம் ஆனதும் மாப்பிள்ளை வீட்டினருக்கு யாராவது மொட்டைக் கடுதாசி போட்டால் வாழ்நாளெல்லாம் உனக்கு நரகமாகி விடாதா...?"

ஜாதக விஷயத்தை மறைத்து தாரிணி திருமணம் செய்து கொண்டால் அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை கலையரசி சூசகமாய் உணர்த்தினாள்.

"என் ஜாதகம் எப்படி மாறியது?"

"நீ என்னம்மா புதிதாய் கதை சொல்லுகிறாய்? இது தானே உன் ஜாதகம்..."

"இது வீடா... சே.. நான் லேடிஸ் ஹாஸ்டலில் போய் தங்கப் போகிறேன்."

"போ... உன்னை யாரு கையைப் பிடித்து நிறுத்தி வைத்தது? கூடப் பிறந்த அண்ணனும் அண்ணியும் குத்துக் கல்லு போல் உள்ளூரில் குடித்தனம் பண்ணிக் கொண்டிருக்கும்போது நீ அதே ஊரிலேயே லேடிஸ் ஹாஸ்டலில் தங்கினால் ஊர் என்ன சொல்லும்?"

"என்ன சொல்லும்?"

"உன் நடத்தை சரியில்லைன்னு நாங்க உன்னை வீட்டை விட்டு வெளியே துரத்திட்டோம்ன்னு ஊர் சொல்லும்."

கலையரசியின் மறைமுக எச்சரிக்கையை புரிந்து கொள்ள முடியாத முட்டாளல்ல தாரிணி. கண்ணுக்கு முன் தாக்கும் எதிரியுடன் போரிடலாம். இது உள்ளிருந்து கொல்லும் பகை... இதை வீட்டின் உள்ளேயிருந்து கொண்டுதான் எதிர்க்க வேண்டும்.



# 6



பண்ணெடுத்துப் பாடிவிட்டால்

பாரினிலே துணை வருவாள்

தன் மேல் தாரிணிக்கு நம்பிக்கை இருந்தது. தன் அழகிற்கும், படிப்பிற்கும், பதவிக்கும் நிச்சயம் மாசிலாமணியும், கலையரசியும் கட்டிவிட்ட தோச ஜாதகத்தை நம்பாமல் தனக்கு மாலை சூட ஒருவன் வருவான் என்று 'நடப்பவை நாராயணன் செயலென்று' கடவுள் மேல் பாரத்தைப் போட்டு விட்டுப் பல்லைக் கடித்துக் கொண்டு நாட்களை ஓட்டினாள். அவளது நம்பிக்கையை மெய்ப்பிப்பது போல் அவளுடன் பணி புரிந்த இளங்கோ அவள் மேல் காதல் கொண்டான். இதில் துயரம் என்னவென்றால் இளங்கோ தன் மேல் காதல் கொண்டது தாரிணிக்குத் தெரியாது. இளங்கோ நேரடியாய் மாசிலாமணியிடம் போய் பெண் கேட்டு விட்டான்.

"யாருடா நீ என் தங்கையைப் பெண் கேட்க? ஜாதி விட்டு ஜாதி என்ன தைரியமிருந்தால் பெண் கேட்டு வருவாய்... இந்த மாசிலாமணி மானஸ்தன்டா. என் தங்கையை வேலை பார்க்கத்தான் அனுப்பினேன். கண்ட கழிசடையும் பெண் கேட்டு வர்றதுக்காக அனுப்பலை."

மாசிலாமணி ரோட்டில் நின்று கத்தினான். இளங்கோவின் சட்டையைப் பிடித்து வேண்டுமென்றே வம்பிழுத்து புழுதியில் புரண்டு எழுந்தான். அந்த ஏரியா மக்களே கூடிவிட வந்தவர் போனவரிடமெல்லாம் நியாயம் பேசி இளங்கோவை அசிங்கப்படுத்தினான்.

நல்ல விசயம்கூட சொல்லும் முறையில் மாறித் தெரியும். கூடப் பணிபுரிந்த பெண்ணின் பண்பில், எழிலில் மயங்கி முறைப்படி பெண் கேட்டு வந்தவனை மாசிலாமணி நடத்திய விதத்தில் அக்கம் பக்கத்தார் கண்டபடி பேசிக் கொண்டனர்.

"காதலாம்... பொண்ணு கேட்டு வந்தானாம்... மாசிலா மணிக்கு பிடிக்கவில்லை..." என்ற செய்தி கை கால் முளைத்து பரவி,

"தாரிணி வீட்டை விட்டு ஓடிப் போகப் பார்த்தாளாம்.. கடைசி நிமிசத்தில் மாசிலாமணி கண்டுபிடித்து வீட்டில் அடைத்து விட்டானாம்... காதலிச்சவன் வீட்டுக்கே வந்து கூப்பிட்டானாம்... மாசிலாமணி தெருவில் போட்டு புரட்டி எடுத்து விட்டானாம்..." என்று மாறிவிட்டது.

இதைவிடக் கொடுமை என்னவென்றால் ரோட்டில் மாசிலாமணி இளங்கோவின் சட்டையைப் பிடித்து இழுத்து புழுதியில் புரள... கோபம் கொண்ட இளங்கோ மாசிலாமணியை மொத்து மொத்தென்று மொத்தி விட்டான். அந்தக் கோபத்தில் மாசிலாமணி அடியாள் களை வைத்து இளங்கோவை அடிஅடியென்று அடித்து ரோட்டில் போட்டு விட்டான். யாரோ தெரிந்தவர்கள் பார்த்து மருத்துவமனையில் சேர்த்தனர். அதனால் மனம் திருப்தி அடையாத மாசிலாமணி காஞ்சிபுரத்திற்கு இளங் கோவின் வீட்டைத் தேடிப் போய் ஆடிவிட்டு வந்தான்.

"உங்க மகன் ஒழுங்காய் மரியாதையாய் வேற பொண் ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கலே... அவன் உயிருக்கு கேரண்டி கிடையாது."

பெற்றவர்கள் அரண்டு போனார்கள். விளைவு...? தாரிணி கல்லூரியில் வகுப்பு எடுத்துக் கொண்டிருக்



கும்போது அவளைப் பார்க்க யாரோ வந்திருப்பதாய் பியூன் சொல்ல,

'யாராயிருக்கும்...?' என்ற யோசனையோடு பார்க்கப் போனாள் தாரிணி. இளங்கோவின் பெற்றவர்களும் அவனது அத்தை மகளும் வந்து காத்திருந்தனர்.

"இங்கே பாரும்மா... நீ யாரோ எவரோ எங்களுக்குத் தெரியாது. எங்க பையன் உன் மேல் ஆசைப்பட்டு உயிருக்கு போராடிக்கிட்டு ஆஸ்பத்திரியில் கிடக்கிறான்... இந்தப் பொண்ணு சின்ன வயசிலிருந்து அவனுக்கென்று வளர்ந்த பொண்ணு. அவன் கிடக்கலைன்னா மருந்தைக் குடிச்சி செத்துடுவேன்னு அழுகுது... இப்போ ரெண்டு உயிரும் உன் கையில்தான் இருக்குது... காப்பாற்றும்மா..." இளங்கோவைப் பெற்றவர் கையெடுத்துக் கும்பிட்டார்.

அவனது அத்தை மகளோ தாரிணியின் கால்களில் விழுந்தாள் "என் மாமாவை எனக்கு விட்டுக் கொடுத் திடுங்க..."

காதலில் சிக்காத தாரிணி அதன் அல்லல்கள் அனைத் திலும் சிக்கினாள். அவளுக்கு சம்பந்தமேயில்லாத இளங்கோ அவள் மேல் ஆசைப்பட்ட ஒரே காரணத்திற் காக அவளது நற்பெயர் கேள்விக்குள்ளானது... இப்போது வயதில் பெரியவர் ஒருவர் அவளைக் கையெடுத்துக் கும்பிடுகிறார். அவளது வயதையொத்த இளம் பெண் ணொருத்தி வாழ்க்கைப் பிச்சை கேட்டு அவள் கால் பிடித்துக் கதறுகிறாள். தாரிணி ஏன் இப்படி ஒரு பிறவி யெடுத்தோமுன்னு அன்றுதான் முதன் முதலாய் மனம் தளர்ந்தாள்.

உடம்பெல்லாம் கட்டோடு மருத்துவமனையில் கிடந்த இளங்கோ, அவனைப் பார்க்க தாரிணி வந்தவுடன் முகம் மலர்ந்தான்.

''ஐ ஆம் ஸாரி இளங்கோ. என் அண்ணன் இப்படி மிருகத்தனமாய் நடந்து கொண்டதற்கு நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்...''

''நீயேன் மன்னிப்புக் கேட்கிற தாரிணி.. உனக்காக என் உயிரையும் கொடுப்பேன்...''

''அது வேஸ்ட் இளங்கோ... எனக்கு உங்கள் மேல் விருப்பமில்லை.''

''வெறுப்புமில்லையே...''

''நீங்கள் என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள நினைத்தால் கட்டாயமாய் அது வரும் இளங்கோ.''

''ஏன் தாரிணி? நான் என்ன தவறு செய்தேன்?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு கனவு காண்கிறீர்களே... அது தவறு இல்லையா?''

இளங்கோவின் திகைப்பு அவன் முகத்தில் வெளிப் படையாய் தெரிந்தது. இந்த நல்ல மனிதனின் உடல் புண்படத் தான் காரணமாக இருந்ததோடு மட்டுமல் லாமல் மனத்தையும் புண்படுத்த வேண்டியதிருக்கிறதே என்ற துக்கம் தாரிணியின் தொண்டையை அடைக்க அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முகம் திருப்பிக் கொண்டாள்.

''என்னைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லையா...? ஏன் தாரிணி? எனக்கு என்ன குறை? உனக்கு ஈக்குவலான படிப்பு, வேலை, சம்பளம்... எதில் குறைந்து போனேன்? உன் மேல் ஆசைப்பட்டாலும் உன்னிடம் நேரடியாய் காதல் சொல்லாமல் உன் அண்ணனிடம் முறையாக வந்து பெண் கேட்டேனே... அதில் என்ன குறை கண் டாய்? வரதட்சணை கேட்டேனா... சீர்வரிசை கேட்



டேனா... உன்னைத்தானே கேட்டேன்... அதற்கு உன் அண்ணன் ஆள் வைத்து அடித்தான். நீ நேரில் வந்து நெஞ்சைப் பிளக்கிறாய். உன்னைக் கல்யாணம் பண் ணிக்க நினைப்பது கனவா? ஏன்...?''

தாரிணி தன்னைத் திடப்படுத்திக் கொண்டு பேசினாள்.

''சும்மா என்ன குறை கண்டாய்.. என்ன குறை கண்டாய்ன்னு பேசாதீங்க இளங்கோ... நீங்க என்ன பெரிய லார்டு லபக்குதாஸா? என்னைக் கல்யாணம் பண்ணிக் கிறவரை பற்றி எனக்கும் கனவு இருக்கிறது... என்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்பவர் உங்களை மாதிரி மாதச் சம்பளம் வாங்குகிறவராய் இருக்கக் கூடாது... கார், பங்களான்னு பணத்தில் புரள்கிறவராய் இருக்கணும். மாதா மாதம் சம்பளம் வாங்கி.. அதில் குருவி சேர்ப்பது போல் சேர்த்து சின்னதாய் ஒரு வீடு லோன் போட்டுக் கட்டி... இப்படிப் பார்த்துப் பார்த்து செலவளிப்பது எனக்குப் பிடிக்காது... ஐ நீட் ஹை கிளாஸ் லைப்.. உங்களால் எனக்கு ஆர்டினரி மிடில் கிளாஸ் லைப் தான் கொடுக்க முடியும்... வேண்டுமானால் அது அப்பர் மிடில் கிளாஸ் லைபாய் உயரலாம்... ஐ டோன்ட் வான்ட் இட்... ப்ளீஸ்... என்னைக் கல்யாணம் பண்ணுகிற கனவையெல்லாம் இனிமேல் காணாதீர்கள்... என் கனவே வேறு...''

அதற்கு மேல் பேச முடியாமல் தாரிணி மருத்துவ மனையை விட்டு வெளியே விரைந்தாள். கால் போன போக்கில் பித்துப் பிடித்தாற் போல் நடந்தபோது எதிரே தெரிந்தது அக்கோவில். மெயின் ரோட்டில் வளைவு அமைத்து.

'அருள்மிகு விஷ்ணு துர்க்கை ஆலயம்' என்ற பெயர் பொறிக்கப்பட்டிருக்க அமைதி தேடி அக்கோவிலின்

உள்ளே நுழைந்தாள். சலவைக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த அமைதி நிறைந்த கோவிலின் உள்ளே நுழைந்தவள் கண் மூடி அம்மனின் முன்னே கைகூப்பி நின்றாள். கண்களில் இருந்து கண்ணீர் மட்டுமே பெருக்கெடுத்து ஓடினது. பெற்றவளாய் அம்மனை நினைத்து மனதிற்குள் கதறித் தீர்த்தாள் தாரிணி. கண் விழித்தபோது எதிரே தீபாராதனை தட்டுடன் குருக்கள் நின்றிருந்தார்.

கண்களின் கண்ணீருக்காக அவளும் சங்கடம் கொள்ளவில்லை. கண்ணீரைக் கண்டு கொண்டதாய் அவரும் காட்டிக் கொள்ளவில்லை. ஏழை மக்களின் உள்ளங்களை அழுத்தும் பாரங்களை எங்கு வந்து இறக்கி வைக்க முடியும்? சுமைகளை தாங்கும் சக்தியுள்ளவள் அந்த பராசக்தி மட்டும் தானே.. பணத்தால் மட்டும் ஏழையாய் இல்லாமல்... தாரிணி போல் சுற்றமிருந்தும் சுற்றமில்லாத நிம்மதி தேடும் மனிதர்களும் ஏழைகள்தானே...

தீபாராதனை தட்டின் ஒளியை கண்ணில் ஒற்றிக் கொண்டு விபூதி குங்குமப் பிரசாதம் பெற்றுக் கொண்டு நவகிரகங்களை சுற்றி விட்டு கோவிலின் ஒரு மூலையில் சுவரில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

விழிகள் விஷ்ணு துர்க்கையின் திருவுருவத்தையே தரிசித்துக் கொண்டிருந்தன. மனம் உருகி கேள்வி கேட்டுக் கொண்டிருந்தாள் அவள்.

'இதுதான் என் அண்ணனின் சுயரூபமென்று தெரிந்து விட்டது. இனி நான் என்ன செய்வேன்? அவனை எதிர்த்து வீட்டை விட்டு வெளியே வந்தால் அவர்கள் கட்டிய கதைகள் உண்மையென்றாகி விடும்... அப்படி உண்மையிலேயே ஒருவனை நேசித்து வெளியே வரலாமென்றால்... இளங்கோவின் கதியை கேள்விப்பட்ட எவரும் உயிருக்குத் துணிந்து இனி என்னை நேசிக்கப் போவ



தில்லை. அநியாயங்களின் மொத்த உருவமான என் அண்ணனிடமிருந்து என்னைக் காப்பாற்றி என்னை ரட்சிக்கத் துணிந்த வீரன் எவன்? என்னைத் தேடி அவன் வருவானா? என் அண்ணனின் சாம, தான, பேத, தண்டங்கள் அனைத்தையும் முறியடித்து என்னை ஆட்கொள்ளுவானா? பதில் சொல் தாயே.. வழிகாட்டு...'

அவளது மனக் குமுறல்களுக்குப் பதிலாக கோவிலின் வாசல் புறமிருந்து ஒரு கனத்த ஆண் குரல் ஒலித்தது.

''ஏண்டா அக்கிரமக்காரா? உன்னைத் தட்டிக் கேட்க யாருமில்லைன்னு நினைத்தாயா? உன்னுடைய திமிரையெல்லாம் மற்றவங்க கிட்ட வைத்துக் கொள்.. என்னிடம் வாலாட்டினால் வாலை ஒட்ட நறுக்கி விடுவேன் ஜாக்கிரதை...''

அவசரமாய் எழுந்து கோவில் வாசலுக்கு ஓடினாள். வேன் ஒன்று நின்று கொண்டிருந்தது. ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் கருப்பாய்... ஆனால் அழகாய் இருந்த ஒருவன் இன்னொரு ஆளைப் போட்டு புரட்டி எடுத்துக் கொண்டிருந்தான். ஜி.சி.டி. குவார்ட்டர்ஸே கூடி விட அவன் யாரையும் சட்டை பண்ணாமல் அந்த ஆளை வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தான்.

தாரிணி விழி விரிய அவனைப் பார்த்தாள்.

# 7



என்ன தவம் நான் செய்தேன்?

எழுத்தினிலே உன் புகழ் வடிக்க...

யாரோ ஒருவர் இருவரையும் விலக்கி நிறுத்தி விசாரித்தார். அவன் அப்பகுதிக்கு அறிமுகமானவன் போலத் தெரிந்தான்.

''என்ன விக்னேஷ்... என்ன விசயம்? ஏன் இவனைப் போட்டு இப்படிப் புரட்டி எடுக்கிறீங்க?''

''நீங்களே சொல்லுங்க சார். என் வேனில் வரும் குழந்தைகளை என்னை நம்பி அனுப்புகிறார்கள். இந்த ராஸ்கல் என்ன வேலை செய்தான் தெரியுமா?''

''என்ன செய்தான்?''

''பெட்ரோல் பங்கில் டீசல் போட்டுக் கொண்டிருக் கிறேன். இவன் என்னடாவென்றால் இந்தக் குழந்தை யிடம் பேச்சுக் கொடுத்து, சாக்லெட்டைக் கொடுத்துக் கொண்டிருக்கிறான். நான் பார்த்து விட்டேன். என்ன டான்னு கேட்டால் இது அவனுடைய சொந்தக்காரக் குழந்தைன்னு என்னிடமே கதையளந்து விட்டு நழுவப் பார்த்தான். நான் விடவில்லை. வேனில் அள்ளிப் போட்டுக் கொண்டு வந்து இந்தக் குழந்தையின் வீட்டில் விசாரித்தால் 'ஐயோ அப்பா'ன்னு அலறுகிறாங்க. இவனை யாருன்னு தெரியாதுன்னு பதறுகிறாங்க. இவனையெல் லாம் சும்மாவிடக் கூடாது சார்...''

''போதும் விக்னேஷ். பேசாமல் போலீஸில் இவனை ஹேன்ட் ஓவர் பண்ணி விடலாம். ஏற்கனவே நீங்க அடித்த அடியில் ஆள் குத்துயிரும் குலையுயிருமாக் கிடக்கிறான். இனி வேறு இவனை அடித்து நீங்க சிரமப்பட்டுக்க வேணாம். நாங்க பார்த்துக்கிறோம். எங்க குவார்ட்டர்ஸ் குழந்தைகள் மேல் உங்களுக்கு இருக்கும் அக்கறை எங்களுக்கும் இருக்கு. தேங்க்ஸ் ஃபார் திஸ்.''



''இதுக்கு எதுக்கு சார் தேங்க்ஸ் சொல்றீங்க. இது என் கடமை...''

''உங்களை மாதிரி எல்லோரும் இருந்து விட்டால் பிள்ளையைப் பெற்றவர்கள் நிம்மதியாக இருப்பார்கள்.''

அவன் வேனில் ஏறிக் கிளம்பும் முன் தற்செயலாய் கோவில் வாசலில் நின்று கொண்டு விழியகல அவ னையே பார்த்துக் கொண்டிருந்த தாரிணியைப் பார்த்தான். புருவம் உயர்த்தினான்.

'யாரிந்தப் பெண்... ஏனிப்படி என்னையே பார்க்கிறாள்?'

தோளைக் குலுக்கிக் கொண்டு வேனில் ஏறி அவன் சென்று விட்டான். தாரிணி அவனது வேன் சென்ற திசையைப் பார்த்துக் கொண்டே நின்றாள். அவள் தோளில் ஒரு கரம் படிந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

''மேனகா நீயா?''

''நான் கேட்க வேண்டிய கேள்வியை நீ கேட்கிறாய். சரி வா வீட்டுக்குப் போகலாம். என்ன திடீரென்று இந்தப் பக்கம் வந்திருக்கிறாய்?''

''நான் கோவிலுக்கு வந்தேன். ஆமாம்.. உன் வீடு இங்கேயா இருக்கிறது?''

''யெஸ்... இந்த குவார்ட்டர்ஸில் தான் குடியிருக்கிறோம். பிள்ளைகளை வேனில் ஸ்கூலுக்கு அனுப்புவோம். கூப்பிட்டுப் போக வந்தேன். வந்து பார்த்தால் நீ நின்று கொண்டிருக்கிறாய். இன்றைக்கு நான்தான் லீவ் போட் டிருக்கிறேன். நீ வேலைக்குப் போகவில்லையா?''

''ஈவினிங் இரண்டு பீரியட் ப்ரீ மேனகா. மனசு சரியில்லை. கோவிலுக்கு வரலாமென்று வந்தேன்.''

"உனக்கும் தெரிந்து விட்டதா...?"

"எதைச் சொல்கிறாய்...?"

"இந்தக் கோவிலைப் பற்றித்தான்... அவள் விகடனில் 'லாவண்யா' என்கிற ரிப்போர்ட்டர் இந்தக் கோவிலைப் பற்றி எழுதியிருக்காங்க. அதைப் படித்துவிட்டு ஒரு குடும்பம் திருச்சியிலிருந்து காரை போட்டுக் கொண்டு இந்தக் கோவிலைத் தேடி வந்து வணங்கி விட்டுப் போனார்கள். இன்றைக்கு நீ..."

தாரிணி சிரித்தாள். மேனகா கேள்வியாய் பார்த்தாள்.

"ஏன் சிரிக்கிற?"

"எல்லோருக்கும் கடவுளின் அருள் எளிதில் கிடைத்து விடாது மேனகா... தேடுதல் இருக்க வேண்டும். தெய்வத் தின் மீது உண்மையான பக்தி இருக்க வேண்டும்... எங்கே நீ இருக்கிறாய்... அங்கே உன்னைத் தேடி சர ணடைய நான் வருவேன்னு கிளம்பி வருகிற தீவிரம் இருக்க வேண்டும். அது அந்த திருச்சி குடும்பத்திடம் இருந்திருக்கிறது... தேடி வரும் பக்தருக்கு துர்க்கை யம்மன் அருள் தான் என்றுமிருக்குமே..."

"சரி நீ எப்படி துர்க்கையைத் தேடி வந்தாய்..."

"நானாய் வரவில்லை. அம்மாதான் என்னையழைத் தாள்."

"புரியவில்லையே..."

"புரியாவிட்டால் பரவாயில்லை. யாருமில்லாத அநாதைகளுக்கு நானிருக்கிறேனென்று தாய் மடி



கொடுக்கும் இந்த அன்னைதான் என்னையும் அழைத் தாள். நான் தாயில்லாதவள்தானே. என் தாயைத் தேடி இங்கு வந்தேன். அவள் காலடியில் மனம் விட்டு அழு தேன். அவளும் என்னைப் பெற்ற தாயாக என் கண்ணீர் துடைத்து விட்டாள்."

"இன்னைக்கு ஒரே பக்திப் பிழம்பாய் இருக்கிற போ. எனக்கே ஜிம்மென்று இருக்கிறது. வீட்டுக்கு வா... உனக்கு குளிர்ச்சியாக ஜூஸ் போட்டுத் தருகிறேன்."

"இன்னொரு நாள் வருகிறேன் மேனகா."

"இப்போது விட்டால் எப்போதடி வருவாய்? இந்தக் கதையே வேண்டாம். வீட்டுக்கு வா... உன்னிடம் நிறையப் பேச வேண்டும்."

"இளங்கோவைப் பற்றித்தானே பேசப் போற?"

"ஆமாம்.. தாரிணி உனக்கு இளங்கோதான் பெட்டர் சாய்ஸ்..."

"பட்.. நான் அவருக்கு ஏற்றவள் இல்லையே."

"உளராதே. உன் அழகிற்கும், அடக்கதிற்கும் இளங்கோ உன்னைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள கொடுத்து வைத்திருக்கணும்."

"பட்.. அவரைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள அவ ருடைய அத்தை மகளுக்குத்தான் கொடுத்து வைத்திருக் கிறது."

"என்ன தாரிணி சொல்ற?"

"இளங்கோவுடைய பேரன்ட்ஸும் அவருடைய அத்தை மகளும் என்னைத் தேடி வந்திருந்தார்கள்."

"இது எப்போ...?"

"இன்றைக்கு மதியம்..."

"உன்னிடமென்ன பேசினார்கள்?"

"இளங்கோவின் அப்பா மகனின் உயிரை என் அண்ணனிடமிருந்து காப்பாற்றுன்னு என்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறார். இளங்கோவின் அத்தை மகள் வாழ்க்கைப் பிச்சை கொடுன்னு என் காலில் விழுகிறாள்."

"மை காட். நீ என்னடி செஞ்சே?"

"ஹாஸ்பிடலுக்குப் போய் இளங்கோவைப் பார்த்தேன்."

"வெரிகுட். நல்ல காரியம் செய்தாய். அவர்கள் வீட்டில் உன்னை மென்டல் டார்ச்சர் பண்ணுகிறார்கள்ன்னு சொல்லி விட்டாயில்ல...?"

"எனக்கு உங்கள் மேலேல்லாம் விருப்பமில்லைன்னு சொல்லிவிட்டேன்."

"ஏன் தாரிணி இப்படிச் செய்தாய்?"

"வேறு எப்படிச் செய்ய மேனகா? இளங்கோவை நான் நினைத்துக் கூடப் பார்த்ததில்லை. அவர் மனதிலென்ன இருக்கிறது என்பதை என்னிடம் தெரியப்படுத்தியிருந்தால் ஒரு வேளை நிலைமையை நான் சமாளித்திருப்பேன்.. இப்போது நிலைமை கைமீறிப் போய் விட்டது மேனகா. என் அண்ணனின் புத்திக்கு இளங்கோவை நிம்மதியாய் இருக்க விட மாட்டான். அவரைப் பெற்றவங்க கையெடுத்துக் கும்பிடறாங்க. அவரையே நினைத்துக் கொண்டிருக்கும் அப்பாவிப் பெண் வேறு. இது வரை என்னை மனதால் நினைத்த பாவத்திற்கு அவர் பட்ட கஷ்டங்கள் போதாதா? பெத்தவங்களுக்குப் பிள்ளை



யாகவும் அவளுடைய அத்தை பெண்ணிற்கு புருசனாகவும் நீண்ட காலம் அவர் வாழ வேண்டும்."

"அப்போ.. உன் வாழ்க்கை...?"

"இதுவரை என் அண்ணனின் ராட்சஸத்தனம் இந்த அளவுக்கு போகுமென்பது எனக்குத் தெரியாமலிருந்தது. இப்போது துரோகம் மட்டுமில்லை கொடூரத்தையும் அவன் தயங்காமல் செய்வானென்பது தெரிந்து விட்டது. பார்ப்போம். முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும்."

"என்னமோ... போ... நான் என்னென்னவோ ஆசைப் பட்டேன். கடைசியில் இது இப்படியா முடிய வேண்டும்? இளங்கோவைப் போல் தைரியமாக உன் அண்ணனை எதிர்த்து நின்று உன்னைப் பெண் கேட்க இனி யார் வருவார்கள்?"

'உன் திமிரையெல்லாம் வேறு யார் கிட்டயாவது வைத்துக்க...'

தாரிணியின் காதுகளில் அந்த வேன்காரனின் குரல் ஒலித்தது. அவள் மேனகாவை நிமிர்ந்து பார்த்துப் புன்னகைத்தாள்.

"ஆமாம் உன் குழந்தைகளை வேனிலா அனுப்புகிறாய்? மாத வாடகையா?"

"மாத வாடகைதான்... டிரைவர் நம்பிக்கையான ஆள். நம் பிள்ளைகளை பத்திரமாய் கொண்டு வந்து விட்டு விடுவார். இப்போது நீ கூட பார்த்தாயே. ஒரு ராஸ்கலைப் பிடித்து என்ன மாதிரி போடு போடுன்னு போட்டாருன்னு... ஆமாம் அவர் உன் ஏரியாதானாமே... உனக்கு அவரைத் தெரியாதா?"

"எனக்குத் தெரியாதே."

"உனக்கு எப்படித் தெரிந்திருக்கப் போகிறது... நீயே வீட்டுக்குப் போவது தூங்குவதற்காகத்தான் என்பது மாதிரி ஊரிலிருக்கிற கோவிலுக்கெல்லாம் ஒவ்வொரு நாளாய் போய் விட்டு இருட்டினதுக்குப் பிறகு வீடு போய் சேர்கிறாய். லீவு நாள்களில் லைப்ரரியில் போய் உட்கார்ந்து விடுகிறாய். அக்கம் பக்கம் இருப்பவர்களைப் பற்றி உனக்கெப்படித் தெரியும்?"

கடைசியில் பார்த்தால் அந்த ஆபத் பாந்தவன், அனாதை ரட்சகன் அவள் வீட்டிற்கு எதிர் வீட்டு மாடியிலேயே குடியிருந்தான். அவனைப் பற்றி யாரிடம் விசாரிக்கலாம் என்ற யோசனையோடு மாடி பால்கனிக்கு வந்த தாரிணியின் கண்களில் எதிர் வீட்டு மாடி பால்கனியில் நின்றிருந்த விக்னேஷ் தென்பட்டான். எதிர் வீட்டு காம்பவுண்டிற்குள் அவனது வேன் நின்றிருந்தது.

தாரிணிக்கு நடப்பவையெல்லாம் வியப்பை அளித்தன. அவனை அவள் சந்தித்தது தற்செயல் அல்ல. தெய்வச் செயல் என்று மனப்பூர்வமாய் அவள் நம்பினாள்.

ஏன் அவள் கண்களில் விஷ்ணு துர்க்கையின் கோவில் தென்பட வேண்டும்? ஏன் என்றுமில்லாமல் அன்று அவள் எனக்கென்று ஒருவனை என் கண் முன் காட்டு என அம்பிகையிடம் அழுது முறையிட வேண்டும்? ஏன் அவள் முன் அவள் கேட்டுக் கொண்டது போல் குணங்களைக் கொண்ட ஒருவன் தென்பட வேண்டும்? ஏன் அவன் அவளது அண்ணன் வீட்டிற்கு எதிர் வீட்டிலேயே குடியிருப்பவனாய் இருக்க வேண்டும்?

எல்லாம் அவள் செயல் என்று மனமார தாரிணி நம்பினாள்.



# 8



## கேட்டால் கேட்ட வரம்
## தரும் தாயே உன் சரணம்

மனதில் சூழ்ந்திருந்த அச்சமும் பயமும் விலகியது. மேக மூட்டத்தை விலக்கி அருணனின் உதயக் கதிர்கள் எங்கும் வெளிச்சத்தைப் பரப்புவது போல் தாரிணியின் முன் நின்று தடை செய்த அவநம்பிக்கை அவளை விட்டு அகன்று தன்னம்பிக்கை வழிகாட்டி நின்றது. புத்துணர்வுடன் அன்று புதிதாய் பிறந்தவள் போல் உணர்ந்தாள் தாரிணி.

மறுநாள் கல்லூரியில் மேனகாவைச் சந்தித்தபோது,

"மேனகா... எனக்கொரு ஹெல்ப் செய்வாயா?" என்று கேட்டாள்.

"என்னடி யாரிடமோ கேட்பது போல் இவ்வளவு பீடிகை போடுகிறாய். என்ன செய்யணும்னு சொல்லு... செய்கிறேன்."

"தினமும் இரண்டு பஸ் மாறி காலேஜ் வர சிரமமாய் இருக்கிறது."

"உன்னை ஸ்கூட்டி வாங்கச் சொன்னால் வேண்டாமென்கிறாய்."

"இரண்டு தடவை வாங்கியும் இரண்டு தடவையும் அது எனக்குச் சொந்தமில்லாமல் போய் விட்டது மேனகா."

"தெரியும்.. தெரியும்.. முதல் தடவை உங்க அக்காள் புருசனுக்கு வேண்டும்ன்னு உங்க அக்கா பார்சல்

பண்ணிக்கிட்டுப் போனாங்க. இரண்டாம் தடவை அக்காளுக்கு நான் சளைத்தவளான்னு உன் தங்கை அவ புருசனுக்கு வண்டியைத் தள்ளிக்கிட்டுப் போயிட்டாள்.''

''சும்மாவும் போகவில்லை... வீட்டை இரண்டு பண்ணி விட்டு இரண்டு பேரும் போனாங்க.''

அன்றைய நினைவில் தாரிணியின் முகம் சிணுங்கியது.

''ஏண்டா உனக்குத்தான் அவள் சொத்தை திங்க உரிமையிருக்கா எனக்கு இல்லையா? எனக்குன்னு அவள் என்ன செய்திருக்கிறாள்? ஒற்றை அக்காவாச்சே. அவளுக் கும் அவள் புருசன் பிள்ளைகளுக்கும் ஏதாச்சும் செய்ய ணுமின்னு அவளுக்கு எண்ணமிருக்கா?'' இது அக்கா வண் டியை எடுத்துக் கொண்டு போன போது போட்ட கூச்சல்.

''அண்ணா.. நானும் பொறுத்துப் பொறுத்துப் பார்த்து விட்டேன். தாரிணியக்காவின் சம்பளத்தை அனுபவிக்க நீயும் பெரியக்காவும் தான் பிறந்திருக்கீங்களா? நான் அந்தப் பிறப்பு பிறக்கவில்லையா? தங்கைங்கிற பாசம் இந்த தாரிணியக்காவிற்கு கொஞ்சமாவது இருக்கா? எல்லாம் சுயநலம் பிடிச்ச பிறவிகள்...'' வண்டியையும் எடுத்துக் கொண்டு வசவும் கொடுத்து விட்டுச் சென்று விட்டாள் அன்புத் தங்கை.

''மூன்றாவதாய் வாங்கி யாருக்கு தாரை வார்த்துக் கொடுக்கச் சொல்கிறாய் மேனகா? என் கையில் பணமு மில்லை. சேர்த்து வைத்திருந்த பணத்தையெல்லாம் இரண்டு வண்டியும் சாப்பிட்டு விட்டன.''

''சரி விடு. இப்போது நானென்ன செய்ய வேண்டும்?''

''உன் குழந்தைகளை ஸ்கூலுக்கு ஏற்றிப் போகும் வேன்காரர் எங்கள் ஏரியாவில்தான் குடியிருக்கிறார்.''



''ஆமாம். அதற்கென்ன?''

''என்னையும் மாத வாடகைக்கு வேனில் கொண்டு வந்து காலேஜில் விட்டு விட்டுக் கூட்டிப் போவாரா?''

''இவ்வளவுதானே இன்றைக்கு சாயந்திரமே கேட்டுச் சொல்கிறேன். நாளைக்கு உனக்குப் பதில் சொன்னால் போதுமா?''

''நாளைக்கு எதற்கு? இன்றைக்குச் சாயந்திரம் உன் னுடன் தான் நான் வரப்போகிறேன்.''

''என் வீட்டிற்கா?''

''இல்லை.. விஷ்ணு துர்க்கையின் கோவிலிற்கு...''

தினமும் மாலை வேளைகளில் வீட்டிற்கு நடந்து போவது மேனகாவின் வழக்கம். அது உடற்பயிற்சியென்று சொல்வாள். காலை வேளைகளில் அவள் கணவர் வந்து கல்லூரியில் இறக்கி விட்டு விட்டுச் செல்வார். அன்று மாலை மேனகாவுடன் பேசிக் கொண்டே தாரிணியும் சென்றாள்.

தாரிணி கோவிலில் வணங்கி விட்டு வருவதற்குள் மேனகா அவனுடன் பேசி முடித்திருந்தாள். தாரிணி வரும்போது அவனுடன் காத்திருந்த மேனகா.

''விக்னேஷ்.. இவள்தான் தாரிணி.. என் பிரண்ட். என்னுடன் அக்ரிகல்ச்சர் காலேஜில் லெக்சரராய் வேலை பார்க்கிறாள். உங்க ஏரியாவில் தான் வீடு இருக்கிறது...'' என்று அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அவன் 'அப்படியா' என்று கூடக் கேட்கவில்லை. தாரிணி அங்கு இல்லாததைப் போல் பாவித்து மேனகாவிடம் பேசினான்.

"இவங்க காலையில் எத்தனை மணிக்குக் கிளம்பு வாங்க...?"

மேனகா தாரிணியைப் பார்க்க தாரிணியும் மேனகா விடமே பதில் கூறினாள்.

"நைன் பிப்டீனுக்குக் கிளம்பினால் போதும் மேனகா..."

"பசங்களை எட்டரை மணிக்கு ஸ்கூலில் விட்டு விட்டுக் குளித்து சாப்பிட வீட்டுக்கு வருவேன். ஒன்பது இருபதுக்கு கிளம்பிடலாமான்னு கேட்டுச் சொல்லுங்க."

பக்கத்திலிருப்பவளிடம் என்னத்தைக் கேட்டு சொல் வது? மேனகா விழி திருப்பி தாரிணியைப் பார்க்க,

"ஓகே மேனகா... எனக்கு பிராப்ளமில்லை."

"ஈவினிங் பசங்களை இறக்கி விட்டுவிட்டுத்தான் அவங் களை பிக்அப் பண்ணிக்க முடியும். அவங்க காத்திருப் பாங்களா...?"

"காத்திருப்பேன் மேனகா... அவருக்காக நான் காத் திருப்பேன்."

இப்போது விக்னேஷ் அவளைப் பார்த்தான். அவன் விழிகளில் புரியாத ஓர் பார்வை இருந்தது. பார்வையை விலக்கிக் கொண்டு மேனகாவைப் பார்த்துக் கூறினான்.

"அப்போ சரி மேடம்.. இங்கே குவார்ட்டர்ஸில் பசங் களை இறக்கி விட்டு விட்டு காலேஜிற்குப் போய் அவங் களை பிக்அப் பண்ணிக் கொள்கிறேன்."

"தேவையில்லை மேனகா. நான் சாயந்திரம் கோவிலுக்கு வருவேன். இங்கேயே வந்து வெயிட் பண்ணுகிறேன். அவர் குழந்தைகளை இறக்கி விட்டு விட்டு என்னைக் கூட்டிப் போகட்டும்..."



"ஹை... அப்போ தினமும் என்னுடன் ஈவினிங் வாக்கிங் கிற்கு கம்பெனி குடுப்பாய் இல்லையா? விக்னேஷ் இதற்காகவே உங்களுக்கு தேங்க்ஸ் சொல்ல வேண்டும்."

அவன் எந்தவித உணர்ச்சியையும் பிரதிபலிக்காத முகத்துடன் வேனில் ஏறப் போனான். தாரிணி அவசரமாய் மேனகாவிடம் கூறினாள்.

"வாடகை எவ்வளவுன்னு கேட்டுச் சொல்லு மேனகா..."

"நான் அவர்களுக்கென்று தனியாக டிரிப் அடிக்கப் போவதில்லை. காலையில் குளித்துச் சாப்பிட வீட் டுக்கு போய் விட்டு திரும்ப வேண்டும். சாயந்திரம் வீட்டுக்குப் போய் இன்னொரு குளியல் போட்டு சாப்பிட்டு விட்டு வர வேண்டும். சும்மா வரப் போகும் வேனில் அவர்களும் வந்து போகப் போகிறார்கள். இதற்கு போய் வாடகைன்னு ஒன்று வாங்குவதே அதிகம். பசங்க கொடுக்கும் வாடகையை இவர்களும் கொடுத்தால் போதும்."

"ஸாரி மேனகா... இது ரொம்பக் குறைவுன்னு தோண றது. என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது."

"அதிகமாய் வாங்கிக் கொள்ள என்னாலும் முடியாது மேடம்.." மேனகா அதிசயமாய் இருவரையும் பார்த் தாள்.

"என்னடி இது... வாடகை குறைவாயிருக்குன்னு அவர் சொல்லனும். அதிகம் தர முடியாதுன்னு நீ வழக்கடிக் கனும்... இங்கே கதையே தலை கீழாய் இருக்குது.. இங்கே பாருங்க விக்னேஷ். அவள் நியாயம்ன்னு அவள் மனசுக்குப் படுகிற தொகையைத் தரட்டும். நீங்க வாங் கிக்கங்க..."

விக்னேஷ் பதில் சொல்லாமல் தோளைக் குலுக்கி விட்டு மீண்டும் வேனில் ஏறப் போனான். இப்போது மேனகா அவசரமாய் தாரிணியிடம் கூறினாள்.

"நாளைக்கு எங்கே வந்து உன்னை பிக்கப் பண்ணிக் கனும்னு உன் வீட்டு அட்ரஸை அவர்கிட்ட சொல்லி விடு."

"நான் குடியிருக்கும் வீட்டிற்கு எதிர் வீட்டில் தான் அவங்க இருக்காங்க. ஸோ... எனக்குப் பிரச்னையில்லை... எதிர் வீடுதானே."

அவன் சாதாரணமாய் கூறவும் தாரிணி ஆச்சரியமாய் அவனைப் பார்த்தாள். இவளை அவனுக்கு ஏற்கனவே தெரியுமா? விக்னேஷ் மேனகாவின் பக்கம் திரும்பிக் கூறினான்.

"மேடம் நான் இப்போது வீட்டுக்குத்தான் போகிறேன். அவங்களையும் ஏறச் சொல்லுங்க. இப்போதிருந்தே வாடகை டிரிப்பை ஆரம்பிக்கிறேன்."

தாரிணி சந்தோஷமாய் மேனகாவிடம் விடைபெற்றுக் கொண்டு வேனில் ஏறக் கால் வைத்தாள். கோவில் மணி ஒலிக்க ஆரம்பித்தது. தாரிணியின் மனதிலும் பாடல் ஒலிக்க ஆரம்பித்தது.

'ஆலய மணியின் ஓசையை நான் கேட்டேன்...

அருள்மொழி கூறும் பறவைகள் ஒலி கேட்டேன்.

உன் இறைவன் அவனே அவனே எனப் பாடும் ஒலி கேட்டேன்

உன் தலைவன் அவனே அவனே எனும் தாயின் மொழி கேட்டேன்.'



தாரிணி கண் கலங்க விஷ்ணு துர்க்கையை மனதில் வேண்டிக் கொண்டு வேனில் ஏறி அமர்ந்தாள். வேன் ஓட ஆரம்பித்தது. தாரிணிக்கு அது வேன் போலத் தெரிய வில்லை. தேர் போலத் தெரிந்தது. விக்னேஷ் ராஜ குமாரன் போல் தோன்றினான். தாரிணி திக்குத் தெரியாமல் காட்டினில் மாட்டித் தவிக்கிறாள். எங்கு பார்த்தாலும் இருள்.

'தாயே! காப்பாற்று...' என்று கதறுகிறாள்.

இருட்டைக் கிழித்துக் கொண்டு ஒரு வெளிச்சக் கோடு தெரிகின்றது. சுற்றிலும் ஒளியைப் பரப்பிக் கொண்டு ஆறு குதிரைகள் பூட்டிய தேரில் ஆயுத பாணியாய் அவன் வருகின்றான். அவள் அருகே வந்து தேர் நிற்கிறது. தாரிணியை நோக்கி கை நீட்டி அழைக்கிறான். தாரிணி அவன் கரம் பற்றுகிறாள். உடலினில் புது ரத்தம் பாய் கிறது... அவன் தேருக்குள் அவளை அமர வைத்து தேரை ஓட்டுகிறான்... தேர் பறக்கிறது....

'இளகும் மாலைப் பொழுதினிலே - என்

இறைவன் வந்தான் தேரினிலே

ஏழையென் இல்லம் இது என்றான்.

இரு விழியாலே மாலையிட்டான்...'

தேர் குலுங்கி நிற்கின்றது... ஏன்...? தாரிணி விழி திறந்து பார்த்தாள். அவள் வீட்டின் முன் வேன் வந்து நின்று கொண்டிருந்தது. விக்னேஷ் திரும்பிப் பார்க்காம லேயே கூறினான்.

"வீடு வந்து விட்டது.. இறங்கலாம்..."

தாரிணி அன்று புதிதாய் பிறந்தவளாய் வீடு நோக்கி நடந்தாள்.

# 9



எல்லாக் கதவுகளும் அடைபட்ட நிலையில்
எனக்கென ஓர் கதவை நீ திறந்து விட்டாய்...

அன்று மாசிலாமணி சந்தேப்பட்டு மனைவியிடம் காதைக் கடித்தான்.

"ஏண்டி எதிர் வீட்டில் ரெண்டு தடியனுங்க இருக்கிறானுங்களே... அவனுக குணம் எப்படி?"

"ஊம்... ஒன்று படிச்சுட்டு ஏதோ கவர்ன்மென்ட வேலை பார்க்குது. வெறும் பிள்ளைப் பூச்சி. இன்னொருவன் கரிமேட்டுக் கருவாயன்.. பார்த்தால் சண்டியர் மாதிரி இருப்பான். ஆனால் பனிரெண்டாம் கிளாஸைத் தாண்டலை. வேனை ஓட்டிப் பிழைக்கிறான். ஏன் கேட்கறீங்கன்னு புரியுது. உங்க தங்கச்சிக்கு தோதானவன் படிச்ச கவர்ன்மென்ட் வேலை பார்க்கிறவன்தான். அவன் தான் பிள்ளைப் பூச்சின்னு சொல்லிட்டேனே. வேனை ஓட்டறவன் கிட்டயெல்லாம் உங்க தங்கச்சி சகவாசம் வைச்சுக்க மாட்டாள். அவள் படிப்புக்கும் பதவிக்கும் அவன் கிட்டக்கூட வர முடியாது. வேலையைப் பாருங்க. ஒரு வகையில் இவள் அந்த எதிர் வீட்டுக்காரன் வேனில் போய் வருவது நல்லதுதானுங்கோ."

"என்னடி சொல்றே..."

"ஆமாங்கோ. இவள் பஸ் பிடிச்சுப் போறேன் பேர்வழின்னு ரெண்டு பஸ் மாறிப் போனால் எத்தனை பேரின் கண்ணில் பட்டு வைப்பாள்? பஸ் ஸ்டாண்டில் பஸ் ஏறிப்



போற வர ஜனங்களில் யாராவது நம்ம ஜாதி ஜனமா இருந்து பெரிய படிப்பும் படிச்சு பெரிய வேலையிலும் இருக்கிறவங்களா இருந்து வைத்தால் நமக்குத்தான் கஷ்டம். வேனில் போய் வந்தால் பாதுகாப்பாய் போய் வருவாள் பாருங்க... நாமும் நிம்மதியாய் இருக்கலாம்."

"அப்படியா சொல்றே..."

"ஆமாங்கோ... எதிர் வீட்டு அபிராமியம்மா கிட்ட எல்லா விவரமும் கேட்டுட்டேன்... கவர்ன்மென்ட் வேலை பார்க்கிறவன் பெத்தவங்க கீறின கோட்டைத் தாண்ட மாட்டான். அவனைப் பெத்தவங்க கதை என்ன தெரியுமா?"

"என்ன...?"

"அவனோட அப்பன் ஆபீஸுக்குப் போறது கூட சகுனம் பார்த்துத்தான் போவான். சகுனம் சரியில்லைன்னா ஆபீஸுக்கே லீவு போட்டுறுவான். அம்மாகாரி எப்பப் பார்த்தாலும் மஞ்சள் பையில் ஜாதக நோட்டை வைத்துகிட்டு ஜோஸியம் பார்த்துக்கிட்டே இருக்குமாம். ஜாதகத்தில் அன்னைக்கு சிரிக்கக் கூடாதுன்னு போட்டிருந்தால் சிரிக்கவே சிரிக்காதாம்."

"இப்ப அவங்க கதை நமக்கெதுக்குடி..."

"தெரிஞ்சுக்கணுங்கோ... ஏன்னா அந்தப் பையன் நம்ம ஜாதி. எதிர் வீட்டில வேற குடியிருக்கான். பொண்ணு கிண்ணு கேட்டு வந்திட்டால் என்ன செய்வது."

"ஆமாம்... அப்படி ஒன்னு வேற இருக்கா?"

"ஆனால்... அந்தக் கவலையே நமக்கு வேணாம். உங்க தங்கச்சி ஜாதகக் கதையைக் கேட்டால் அவங்க தலைதெறிக்க ஓடி விடுவாங்க."

"உன் புத்தியே புத்திடி..."

"உங்க பொண்டாட்டியாச்சே. குறைச்சா புத்தி இருக்கும்? அந்த வேன் ஓட்டுறவன் அப்பா, அம்மா இல்லாத அநாதை. உட்கார ஒரு ஓலைக் குடிசைகூட சொந்தமாய் இல்லாதவன். அவனையெல்லாம் நாம் கணக்கிலேயே வைத்துக் கொள்ள வேணாம்."

ஆனால் தாரிணியின் மனக்கணக்கில் அவன் தான் இருந்தான் என்பதை அறிந்திருந்தால் அவளது அண்ண னும், அண்ணன் மனைவியும் அவ்வளவு சந்தோசமாய் பேசிக் கொண்டிருந்திருப்பார்களா?

தாரிணியின் அறை மாடியில் இருந்தது. அவள் அதை விட்டுக் கீழே இறங்கி வரவே மாட்டாள். அதில் மாசிலா மணிக்கும், கலையரசிக்கும் பரம சந்தோசம். காரணம்.. மாடியிலிருந்தது அந்த ஓர் அறைதான். பால்கனியுடன் கூடிய நீண்ட ஹாலும் அதன் முடிவில் ஓர் அறை மட்டும் தான். கீழே மார்பிள்ஸ் போட்டிருந்த வீட்டில் மாடியில் வெறும் சிமெண்ட் தரைதான். கீழே விருந்தாளிகள், வெளி மனிதர்கள் வந்து போய் கொண்டு இருப்பார்கள். அவர்கள் கண்ணில் படாமல் தாரிணி இருப்பாளே...! அதோடு கலையரசியும் அவள் பெற்ற பிள்ளைகளும் சாப்பாட்டுப் பிரியர்கள்... வேண்டியதை வறுத்தும் பொறித் தும் சாப்பிட்டுக் கொண்டே இருப்பார்கள். தாரிணிக்கு பங்கு கொடுக்க வேண்டாமே... இத்தனைக்கும் மேலாக நாத்தனார் பற்றி மனதில் தோன்றியதையெல்லாம் பேச லாமே... அவள் கேட்டு விடுவாளென்று அஞ்ச வேண் டியதில்லையே

விதியேயென்று அந்த மாடியில் சிறைபடும் தாரி ணிக்கு இப்போது மாடி பூங்காவனமாய் தோன்றியது. எதிர்



வீடு பிருந்தாவனமாயும் விக்னேஷ் குழலூதும் கண்ண னாகவும் தோன்றினார்கள். அவள் மாடி பால்கனியில் நின்று பல் தேய்த்தாள். புத்தகம் படித்தாள். பால்கனியில் உட்கார்ந்து எப்.எம். கேட்டாள். பால்கனியில் நடந்து கொண்டே செல்போனில் பேசினாள். எதுவும் இல்லாத போது பால்கனி கைப்பிடியில் சாய்ந்து கொண்டு தெருவை வேடிக்கைப் பார்ப்பது போல் எதிர் வீட்டைப் பார்த்தாள்.

"என்னடா பாப்பா இந்தப் பக்கமே பார்வையிடுது..." குமரன் விக்னேஷை வம்புக்கு இழுப்பான்.

"பாப்பாவா... யாரு..." விக்னேஷ் திரும்பிப் பார்த்து விட்டுக் குமரனை முறைப்பான்.

"பாப்பாவா... அது...?"

"சும்மா ஒரு பாசத்தில் சொன்னேன்டா."

"நீ அப்படிச் சொன்னது மாதிரி தெரியல்லையே..."

"வேறு எப்படிச் சொன்னது மாதிரித் தெரியுது?"

"வில்லங்கமாய் பேசுவது மாதிரித் தெரியுது."

"என்னமோ புது வீடு வாங்குகிற மாதிரி வில்லங்கம் பார்க்கிறான். புதிதாய் வேன் சவாரி சேர்ந்திருக்கே. விசாரிக்கக் கூடாதா?"

"என்னத்தை விசாரிக்கப் போற?"

"வேனில் வருகிறேன்னு அந்தப் பொண்ணு கேட்டுச்சா... இல்லை வேனில் வர்றீங்களான்னு நீ கேட்டாயா?"

"என்னைப் பார்த்தால் அப்படியா தெரியுது?"

"நல்ல பையனாத்தான் தெரியுது. ஆனால் மச்சான் இந்தப் பெண்கள் விஷயத்தில் பார்வைக்கு தெரிகிறதை வைத்து ஒரு முடிவுக்கு வந்து விட முடியாதே..."

"நீ என்ன முடிவுக்கும் வா... இப்ப ஆளை விடு நான் தூங்கணும்."

விக்னேஷின் மூடிய விழிகளுக்குள் தாரிணி வருவாள். தலை குலுக்கி அவள் நினைவை துரத்தி விட்டுத் தூங்கி விடுவான்.

"என்னம்மா சாப்பிடவில்லையா..." கல்லூரியில் தோட்ட வேலை பார்க்கும் சின்னம்மாளின் குரல் கேட்டு நினைவுகளில் இருந்து விடுபட்டுத் திரும்பினாள் தாரிணி.

"சாப்பிட வேண்டும் சின்னம்மா. இந்தா என்னுடைய சாப்பாடு நீ சாப்பிடு" தன் கேரியரைத் தூக்கிக் கொடுத்தாள் தாரிணி.

"உன் சாப்பாட்டை எனக்குக் கொடுத்துட்டா நீ என்னாத்தை சாப்பிடுவ?"

"மேனகா எனக்காக சாப்பாடு கொண்டு வந்திருக்கிறாள்."

"அப்புறம் அதைச் சாப்பிடாமல் ஜன்னல் கம்பியைப் பிடிச்சுக்கிட்டு பித்துப் பிடிச்சாப்புல ஏன் நின்ன?"

"ஒன்றுமில்லை சின்னம்மா. முதுகெலும்பு இல்லாத பிராணிகள் எவையெவைன்னு யோசிச்சுகிட்டு இருந்தேன்."

வயதான சின்னம்மாளுக்கு எதுவோ பிடிபட்டது போல் இருந்தது. பெண்கள் அறிவார்ந்தவர்கள். வாழ்க்கைப் போராட்டத்தின் அத்தனை நிலைகளையும் கத்தியின்றி, ரத்தமின்றி போராடி ஜெயிப்பவர்கள். வாழ்க்கைப் பல் கலைக் கழகம் கற்றுக் கொடுக்காதது எது? அதில் படித்துப் பண்பட்ட வயதான அப்பெண்மணி புரிந்து கொள்ளலுடன் கூறினாள்.



"பொம்பளைங்க படி தாண்டாம இருக்கிறதுக்கு ஆயிரம் காரணங்கள் இருக்கும்மா. சொல்றவங்களுக்கு என்ன வாய் வலிக்காம ஒரு வார்த்தையச் சொல்லிப் புடுவாங்க. வாழறவங்களுக்குத்தான தெரியும் வலியும், வேதனையும். நீ எதனையும் மனசில வச்சிக்காதம்மா. பதுங்கிற காலத்தில் பதுங்கி பாயுற காலத்தில் பாஞ்சாத் தான் அதுக்குப் பேரு புலி... பொம்பளைங்க புலிம்மா. எப்போ அடங்கணும். எப்போ வேலியை உடைக்கணும்னு பொம்பளைக்குத் தெரியும். நீ மனசைப் போட்டு ஒழட்டிக்காம சாப்பிடு ராசாத்தி. பெத்தவ மாதிரி நான் சொல்றேன். ஒன் நல்ல மனசுக்கு ஒரு குறைவும் வராது தாயி. அழுகிறவங்க எல்லாம் எப்பவுமே அழுகப் பிறந்தவங்க இல்ல... நீயும் ஒரு நாள் சிரிப்ப தாயி..."

சின்னம்மாள் தாரிணியின் சாப்பாட்டுக் கேரியரை எடுத்துக் கொண்டு வெளியே சென்று விட்டாள். தாரிணி மேனகா கொடுத்து விட்டுச் சென்றிருந்த செலோடப்பாவைப் பிரித்தாள். மேலாக சிறு தட்டில் இனிப்பான கேசரி இருந்தது. ஒரு விள்ளலை எடுத்து வாயில் போட்டுக் கொண்டாள்.

'பதுங்குகிற காலத்தில் பதுங்கி பாயுற காலத்தில் பாஞ்சாத்தான் அதுக்குப் பேரு புலி...'

சின்னம்மாள்! எழுதப் படிக்கத் தெரியாத பாமரப் பெண்மணி. அவருக்கு எப்படித் தெரியும். புலி பதுங்குவது பாய்வதற்காக' என்னும் தத்துவம்? அறிவுக்கும் பட்டத்திற்கும் சம்பந்தமில்லையென்பதை அழகாக மெய்ப்பித்து விட்டுச் சென்று விட்டாள். ஏட்டறிவுக்கு பட்டறிவு எவ்விதத்திலும் குறைவில்லையென்பதை நிரூபித்து விட்டுச் சென்று விட்டாள்.

தாரிணியின் மனதிலிருந்த கலக்கம் மறைந்தது. மனதில் தெம்பும் தைரியமும் மீண்டது. மற்றவர்களுக் காக வாழ்வதா வாழ்க்கை? மனம் நிறைந்து நமக்காக நாம் வாழ்வதுதான் வாழ்க்கை.

அன்று மாலை மேனகாவுடன் கோவிலுக்குச் சென்று விஷ்ணு துர்க்கையை வழிபட்டபோது மனம் தெளி வடைந்து இருந்தது.

'தாயே... நீயே எனக்கு தெம்பூட்டியதைப் போல் உணர்கிறேன்...' கோவிலை விட்டு வெளி வந்தபோது வேன் வந்து நின்றது. குழந்தைகள் இறங்கி அவரவர் வீடு களுக்கு ஓட மேனகாவிடம் விடை பெற்றுக் கொண்டு தாரிணி வேனில் ஏறினாள். வேனை ஓட்ட ஆரம்பித்த விக்னேஷுக்கு தன்னையறியாமல் முன் பக்கக் கண்ணாடி வழியே தாரிணியைப் பார்த்தான்.

## 10



சுற்றமெல்லாம் சுற்றமல்ல
கொற்றவையே! நீதான் என் சுற்றம்.

'நான் தனியென்ற எண்ணம் இனி எனக்கில்லைங்க.'

தாரிணி கூறிச் சென்ற வார்த்தைகள் அன்று முழுவதும் விக்னேஷின் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

'இன்றைக்கு நாள் நல்ல முறையில் விடிஞ்சிருக்குங்க.'

இந்த வார்த்தைகளை இன்று அவள் கூறுகிறாள். ஆனால் அவள் அறியாள் அவனை முதன் முதலாய் பார்த்த



பின்பு அவன் மனதில் நினைத்துக் கொண்ட வார்த்தைகள் தான் இவை என்பதை.

முதன் முதலாய் விஷ்ணு துர்க்கை கோவிலில் தான் அவனை அவள் சந்தித்தாள். அதற்கு இரண்டு வருடம் முன்பே மருதமலை முருகன் சந்நிதியில் அவன் அவளைச் சந்தித்து விட்டது அவளுக்குத் தெரியாது.

விக்னேஷ் தன் ஆட்டோவை விற்று விட்டுச் சொந்தமாக ஓர் வேன் வாங்கும் யோசனையில் இருந்தான். அவனது ஆட்டோவில் மாத வாடகைக்குப் பள்ளி சென்று வரும் சிறுவர், சிறுமிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டிருந்தது. குறிப்பாக ஜி.சி.டி. ஹவுசிங் யூனிட் குவார்ட்டர்ஸில் குடியிருந்தவர்கள் விக்னேஷைப் பெரிதும் நம்பி ஆதிரித்தார்கள். இரண்டு மூன்று தடவை டிரிப் அடித்தாலும் நாளுக்கு நாள் அவனது வாடிக்கை யாளர்களின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வர விக்னேஷ் யோசித்தான்.

'புளி மூட்டைகள் போல் பிள்ளைகளை ஒரே ஆட்டோ வில் திணிப்பதா?'

நியாயமான வாடகை, நேரம் தவறாமை, தன் வண்டி யில் ஏறும் குழந்தைகளின் உடமைகளிலிருந்து அவர் களின் அனைத்து பாதுகாப்பிற்கும் பொறுப்பேற்றுக் கொள்ளல் என்ற நற்குணங்கள் பலவற்றால் அவன் அந்த குவார்ட்டர்ஸில் வாழும் அரசாங்க ஊழியர்களின் குடும் பங்களின் நன்மதிப்பிற்கு பாத்திரமானவன் ஆனான்.

அப்போதுதான் அந்தக் குவார்ட்டர்ஸில் குடியிருந்த மோகன்தாஸ் கூறினார்.

''ஏன் விக்னேஷ்? நீங்கள் ஏன் ஒரு வேன் வாங்கி ஓட்டக் கூடாது. எங்கள் குவார்ட்டர்ஸ் பிள்ளைகளுக்கே

தனி வேன் வேண்டுமே. ஆட்டோவை வைத்துக் கொண்டு ஏன் திணறுகிறீர்கள்?''

''அதற்கெல்லாம் பணம் வேண்டாமா சார்?''

''பணத்திற்குத் தான் கவலைப்படுகிறீர்களா? ம்ம்... சரி போயிட்டு வாங்க.''

மோகன்தாஸ் போய் விட்டார். 'கிட்டாதாயின் வெட் டென மற' என்னும் இயல்புடைய விக்னேஷ் அவர் சொன்னதை மறந்துவிட்டு தன் கடமையே கண்ணாக ஆட்டோவை ஓட்டிக் கொண்டிருந்தான். ஓர் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று மருதமலைக்கு ஓர் சவாரி வர விக்னேஷ் ஓட்டிக் கொண்டு சென்றிருந்தான். காலை நேரத்தில் கோவிலில் இருந்த ஒலிபெருக்கியில் ஒலித்துக் கொண்டிருந்த முருகனின் மீதான பக்திப் பாடல் அவனை ஈர்த்தது.

'மருதமலைக்கு நீங்க வந்து பாருங்க முருகன்
மனதோடு மனம் விட்டுப் பேசிப் பாருங்க
தீராத வினைகளெல்லாம் தீர்ந்து போகுங்க - அது
தீராவிட்டால் வந்து என்னைக் கேளுங்க.'

விக்னேஷ் ஆட்டோவை விட்டு இறங்கி முருகனை தரிசிக்க கோவிலுக்குள் சென்றான். கண் மூடி முருகனை வேண்டிவிட்டு நிமிர்ந்தபோது அர்ச்சகர் அவனைத் தாண்டிச் சென்றிருந்தார். 'விபூதிப் பிரசாதம் வாங்கவில் லையே' என்று அவன் யோசனையாய் பார்க்க அவன் அருகிலிருந்த அப்பெண் தன் கையிலிருந்த விபூதியை இயல்பாய் அவன் கையில் கொட்டினாள்.

''இந்தாங்க... விபூதி இட்டுக்கங்க.''



சொல்லிவிட்டு அந்தப் பெண் திரும்பிப் பார்க்காமல் போய்விட விக்னேஷ் நெற்றியில் விபூதியை இட்டு கிட்டு கோவிலை வலம் வந்துவிட்டு ஆட்டோவிற்குத் திரும்பினான். மனதில் ஓவியமாய் அந்தப் பெண்ணின் உருவம்.

''ஆட்டோ வருமா?'' என்ற குரல் கேட்டு நிமிர்ந்தவன் உடலில் மின்சாரம் பாய்ந்தது.

மீண்டும் அவள். ஆனால் அவனை அவளுக்குத் தெரிய வில்லை. ஆட்டோவில் ஏறுவதற்காக நின்று கொண் டிருந்தாள். அவ்வளவு அழகான பெண்ணை விக்னேஷ் அதற்கு முன்னால் பார்த்ததே இல்லை.

உயரமாய் ஒடிசலாய் இருந்தாள். சிவந்த நிறமென்று சொல்ல முடியாது. மாநிறத்திற்கும் கொஞ்சம் அதிகமான நிறம் அவ்வளவுதான். ஆனால் அவளது வட்ட முகத்தில் இருந்த பெரிய விழிகளின் அழகு அவனை வெகுவாய் வசீகரித்தது. அகன்று விரிந்த பெரிய கண்கள். அதில் குடை போல் கவியும் இமைகள். சீரான நாசி. அவளின் அழகில் சொக்கிப் போனான் அவன் என்று சொன்னால் அது மிகையாகாது. அவளோ அவசரத்தில் இருந்தாள்.

''ஆட்டோ வருமா, வராதா?'' அப்பெண் அவசரத்தில் இருந்தாள்.

விக்னேஷ் தவித்துப் போனான். அவனது ஆட்டோ ஏற்றி வந்தவர்களின் வருகைக்காக காத்திருப்பில் இருக்கிறது. இவன் அதைச் சொன்னால் அவள் போய் விடுவாள். அவளை ஏற்றிக் கொண்டு போனால் அவன் தொழில் தர்மம் தவறி விடுவான். செய்வதறியாது அவன் திகைக்கையில் 'தெய்வத்தின் காலடியில் நீ திகைப்பதா?' என்று முருகன் அருள் புரிந்தான்.

விக்னேஷின் ஆட்டோவில் ஏறி வந்தவர்கள் வேறொரு குடும்பத்துடன் சிரித்துப் பேசிக் கொண்டே வந்தனர்.

''எத்தனை நாளாச்சு உங்களையெல்லாம் பார்த்து, அவசியம் வீட்டுக்கு வந்து விட்டுத்தான் போகணும்...'' கோவிலில் சந்தித்த உறவுக்காரர்கள் அவர்கள் காரில் ஏறுமாறு வற்புறுத்த விக்னேஷின் ஆட்டோவில் வந்த வர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

''சரிங்க சார்... எங்க உறவுக்காரங்க கூப்பிடறாங்க... நாங்க அவங்க காரிலேயே போய்க்கிறோம். இப்ப உங்க சார்ஜ் எவ்வளவுன்னு சொன்னால் தேவலை.''

விக்னேஷ் நியாயமான வாடகையைச் சொன்னதும் அவர்களுக்கு ஆச்சர்யம். அதை வாய்விட்டேக் கூறி னார்கள்.

''வெயிட்டிங் வேற இருந்தீங்க... குறைவா கேட்கறீங் களே...''

''பரவாயில்லை சார். இது கரெக்டான ரேட்தான் கொடுங்க.''

அவர்கள் போனதும் அப்பெண் ஆட்டோவில் ஏறி அமர்ந்து கொண்டாள். ஆட்டோவின் முன்புறக் கண்ணாடி வழி அவளை அவ்வப்போது பார்த்துக் கொண்டே ஆட்டோவைச் செலுத்தினான் விக்னேஷ். அவளது வீட் டுக்கு முன் இறங்கிக் கொண்டு ஆட்டோவிற்கான பணத்தை எடுத்துக் கொண்டிருக்கும்போது எதிர் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த அம்மாள் அப்பெண்ணைப் பார்த்துக் கேட்டாள்.

''என்னம்மா தாரிணி... இன்னைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே...''



''அதிலென்ன சந்தேகம் அத்தை... இன்று சன்டேதான்.''

''இல்லை.. இன்றைக்கும் காலேஜ் இருந்துச்சோன்னு கேட்டேன்.''

''காலேஜ் எப்பவும் அங்கேயேதான் இருக்கும் அத்தை. பட் சன்டேயில் காலேஜில் கிளாஸ் இருக்காது. லீவ் விட்டிருப்பாங்க.''

''அப்போ காலேஜ் நடக்கலையா?''

''அதுக்கென்ன காலா இருக்கு நடக்க?''

விக்னேஷிற்கு சிரிப்பு வந்தது. கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டு கருட பார்வை பார்த்துக் கொண்டு தாரிணியின் வாயைப் பிடுங்கும் அப்பெண்மணியைப் பார்த்தால் வம்புக்கு அலைகிற ரகமாய் தோன்றியது. பேசாமல் நேரடியாய் 'நீ எங்கே போய் விட்டு வருகிறாய்?' என்று கேட்பதுதானே. சுற்றி வளைத்து இவள் மூக்கைத் தொட முயல அப்பெண்ணோ பிடிகொடுக்காமல் நழுவு கிறாளே... எது எப்படியோ அந்த அம்மாளின் புண்ணியத் தால் அவள் பெயர் 'தாரிணி' என்பது தெரிந்து விட்டது. அந்த அம்மாள் விடாக்கண்டியாய்,

''ஞாயிற்றுக்கிழமை ஸ்பெஷல் கிளாஸ் எடுக்கப் போயிருந்தாயா?'' என்று விசாரணையைத் தொடர்ந்தாள்.

''இல்லை அத்தை...'' அந்தப் பெண் பட்டுக் கத்தரித் தாள்.

''வேற வேலை ஏதாச்சும் இருந்ததா...?''

''அவரவர்க்கு ஆயிரம் வேலை அத்தை... எல்லோரும் உங்களைப் போல் வேலையில்லாமல் அடுத்தவர் வீட்டு நலனைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்களா என்ன?''

தாரிணி ஆட்டோவிற்கான பணத்தைக் கொடுத்து விட்டுச் சென்று விட ஆட்டோவை அரை வட்டமடித்து திருப்பிக் கொண்டிருந்தான் விக்னேஷ். அந்த அம்மாள் கொதிப்புடன் நின்று கொண்டிருந்தாள். அவள் வீட்டின் கேட்டில் 'வீடு வாடகைக்கு விடப்படும்' என்று போர்டு கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது.

''என்ன அபிராமியம்மா.. அந்தத் தாரிணி பொண்ணு கிட்ட ரொம்ப நேரமாய் பேசிக்கிட்டிருந்தபோல... என்ன விசயம்?'' தெருவில் போன இன்னொரு பெண் இவள் வாயைக் கிளற முனைந்தாள்.

'இங்கே பாருடா.. திருநெல்வேலிக்கே அல்வாவா? திண்டுக்கல்லுக்கே பூட்டா? இந்த அம்மாளின் வாயைப் பிடுங்கவும் இன்னொரு அம்மாள் முனைகிறாளா?'

''அவள்கிட்டப் போய் பேசினாலும் அப்படியே கொட்டிக் கவிழ்த்து விடுவா பாரு. ஒரு பானைத் தண்ணியைக் குடித்து விட்டு ஒரு மணி நேரம் பேசினாலும் ஒத்த வார்த்தை உள்ளதைப் பேசுவாளா மகராசி.. நாம தடுக்கில் போனால் கோலத்தில் நுழைந்து போய் விடுவாளே... இவள் சாமர்த்தியம் யாருக்கு வரும்?''

''அவள் கதைதான் நமக்குத் தெரியுமே.. இவள் அமுக்குளியாய் இருந்தாலும் இவள் அண்ணிகாரி அம்புட்டுச் சங்கதியையும் கக்கி விடுவாளே... உன் வீட்டிற்கு ஆள் குடி வந்து விட்டாங்களா...''

''இல்லை... இன்னும் காலியாய்த்தான் இருக்கிறது.''

'தாரிணி...' மனதிற்குள் அவள் பெயரை உச்சரித்துப் பார்த்துக் கொண்டு ஆட்டோவைத் திருப்பிக் கொண்டு போன விக்னேஷ் சற்று நேரத்தில் அவள் பெயரை மறந்து விட்டான்.



# 11



நின்நிழல் தேடும் என்நெஞ்சம்

நின் பாதம் நான் தஞ்சம்

மதிய உணவு உண்டுவிட்டு சற்றுத் தூங்கலாம் என்று எண்ணிய விக்னேஷ் வீட்டிற்கு வந்து பாயைப் போட்டுப் படுத்தபோது அவனது செல்போனின் மணி ஒலித்தது. எடுத்துப் பேசினான்.

''விக்னேஷ் சாயந்திரமா குவார்ட்டர்ஸ் வாங்க'' என்றார் மோகன்தாஸ்.

''என்ன சார் விஷயம்? முக்கியமானதுன்னா உடனே கிளம்பி வருகிறேன் சார்'' விக்னேஷ் அவசரமாய் எழுந்து அமர்ந்தான்.

''நோ.. நோ.. உடனே வரணும்ன்னு ஒன்றும் கட்டாயமில்லை. வெயில் நேரம். சாயந்திரமா வாங்க.. பேசிக் கொள்ளலாம்.''

'என்ன பேச அழைக்கிறார்?' புரியாதவனாய் படுத்து உறங்கிப் போனான். மாலையில் கண் விழித்ததும் இரண்டு குவளைத் தண்ணீர் விட்டுக் குளித்துக் கொண்டு அவசரமாய் ஆட்டோவை கிளப்பிக் கொண்டு ஆர்.எஸ். புரம் நோக்கிப் பறந்தான்.

கௌலி பிரவுன் ரோட்டில் திரும்பி ஜி.சி.டி. ஹவுசிங் யூனிட் குவார்ட்டர்ஸிற்குள் ஆட்டோவைச் செலுத்தினான்.

விஷ்ணு துர்க்கையம்மன் கோவில் வாசலில் மோகன் தாஸ் கலைநேசன், புஷ்பராஜ், தண்டபாணி, முத்தையா,

சுப்பிரமணியம், பாலு முதலியவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அருகே பாலன் குருக்கள் நின்று கொண் டிருந்தார்.

ஆட்டோவை நிறுத்திய விக்னேஷ் இறங்கி மோகன் தாஸிடம் சென்று அனைவருக்கும் பொதுவாய்,

"வணக்கம்..." என்றான்.

"வாங்க விக்னேஷ்... உங்க விஷ்யமாய்த்தான் பேசிக் கிட்டு இருக்கோம்" என்றார் கலைநேசன்.

மோகன்தாஸ் சொன்னார். "அது விசயமா என்ன உதவி செய்யறதுன்னு யோசித்துக் கொண்டிருந்தோம்" என்றார் புஷ்பராஜ்.

"நாங்க பேசி ஓர் முடிவுக்கு வந்திருக்கிறோம் விக் னேஷ்" என்றார் தண்டபாணி.

"எதைப் பத்திச் சொல்றீங்க சார்..." புரியாமல் வினவி னான் விக்னேஷ்.

"நீங்க வேன் வாங்குவதைப் பற்றித்தான்..." சிரித்தார் முத்தையா.

"அதற்குத்தான் என்னிடம் பணமில்லையே."

"அதற்குத்தான் நாங்கள் வழி கண்டுபிடித்து விட் டோமே..." பாலு கூறினார்.

விக்னேஷ் புரியாமல் விழிக்க,

"பிள்ளையாண்டானுக்கு ஒன்னும் புரியலை... தேங் காய் உடைப்பது போல் விசயத்தைப் போட்டு உடைங்கோ..." என்றார் பாலன் குருக்கள்.

"குருக்களய்யாவிற்கு எந்நேரமும் சாமி நினைவுதான் விசயத்தைச் சொல்லச் சொல்றதுக்குக் கூடத் தேங்காயை உடைப்பதைப் போலன்னு சொல்றார்." கோவிலில் தன்



வேண்டுதலுக்காய் சுத்தம் செய்யும் பணியைச் செய்து கொண்டிருந்த நிர்மலா அருகிலிருந்த சகுந்தலாவிடம் கூறினாள்.

"யார் யாருக்கு எது கடமையாய் தோணுமோ... அது தானே நினைவு வரும். அர்ச்சகரய்யாவிற்கு அபிஷேகம் தான் நினைவு... நம்ம முத்துலட்சுமியம்மாவிற்கு அம் மனைப் பற்றித்தான் நினைவு.. பாரு விளக்கைத் துடைச் சுக்கிட்டே அம்மன்கிட்ட வேண்டிக் கிட்டு இருக்கிறதை..." நஞ்சம்மாள் தன் வேலையைச் செய்து கொண்டே கூறினாள்.

விக்னேஷிற்கு அந்தக் கோவில் தந்த மன அமைதியும் அவர்களின் ஒருங்கிணைப்பும் அழகான ஓர் அமைதியை உணர்த்தியது. அரசாங்க ஊழியர்களுக்கான ஜி.சி.டி. ஹவுசிங் யூனிட் குவார்ட்டர்ஸில் கட்டப்பட்டுள்ள விஷ்ணு துர்க்கையம்மன் கோவிலுடன் அந்த குவார்ட் டர்ஸ் வாசிகள் அனைவரும் ஒன்றிப் போனவர்கள். அந்தக் கோவிலுக்காய் ஓர் கமிட்டி அமைத்து மோகன்தாஸ் தலைவராகவும், கலைநேசன் செயலாளராகவும், புஷ்ப ராஜ் பொருளாளராகவும், தண்டபாணி துணைத் தலைவ ராகவும், முத்தையா துணைச் செயலாளராகவும் செயல் படுகிறார்கள். அந்தக் கோவிலின் நற்பணிகளுக்காக முழு மனதாய் அவர்களுடன் துணை நின்று செயல்படுபவர்கள் சுப்பிரமணியமும், பாலுவும்.

தெய்வத்திற்கு அது செய்கிறோம், இது செய்கிறோம் என்பது ஒரு வேண்டுதல்... எங்கள் உடல் உழைப்பைத் தருகிறோம் என்பது மற்றொரு வகையான சமர்ப்பணம்.

அவ்வாறு கோவிலின் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட பெண்மணிகள்தான் சகுந்தலா. முத்துலட்சுமி, நிர்மலா, நஞ்சம்மாள் முதலியவர்கள்.

ஒன்றாகச் சேர்ந்து வாழும் அக்குவார்ட்டர்ஸ் மக்களின் உணர்வுகள் ஒருமைப்பாட்டை உணர்த்துபவை. எல்லோருக்கும் இந்த ஒற்றுமை உணர்வு இருந்தால் இந்தியாவில் ஏன் வேறுபாடு தலை தூக்கப் போகிறது?

விக்னேஷ் அவர்களிடம் மரியாதையுடன் பேசினான். ''குருக்களய்யா சொன்னது போல் விளக்கமாய் சொன்னால் தேவலை...''

''விக்னேஷ்.. நாங்க எல்லோரும் ஓர் முடிவுக்கு வந்திருக்கிறோம்.. எங்க பசங்களுக்கான ஒரு வருட மாத வாடகையை நாங்கள் ஒவ்வொருவரும் முன் பணமாய் கொடுத்து விடுகிறோம். நீங்கள் உங்கள் ஆட்டோவை விற்று அந்தப் பணத்தையும் சேர்த்துப் போட்டு ஒரு வேனை வாங்கி விடுங்க...'' மோகன்தாஸ் கூறியபோது அவனுக்கு தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

கடன் வாங்கக் கூடாது என்ற கொள்கையுடையவன் அவன். கடனில்லாமல் ஓர் வேனிற்கு அவன் உரிமையாளன் ஆகிறானா? எப்படி...? நினைத்ததை வாய் விட்டு அவன் கூற,

''நல்லவாளுக்கு மனுச ரூபத்தில் இந்த அம்மன் உதவி செய்வாள். நீங்க இப்பத்தானே இந்தக் கோவிலில் அடியெடுத்து வைத்திருக்கீங்க. இனிப் போகப்போக... பாருங்க... இன்னும் உயரத்திற்குப் போவீங்க...''

விஷ்ணு துர்க்கையம்மனுக்கு ஆராதனை செய்யப் போனார் பாலன். கற்பூர ஒளியில் கருணை வடிவம் கொண்ட அந்தத் தாயை ஏறிட்டு நோக்கியபோது அவன் கண்களில் கண்ணீர் பெருகியது.



பெற்றவர்கள் இல்லாதவன். பெற்றவளாய் நீ வந்தாயா? உன் துணை தந்தாயா? என்ன தவம் நான் செய்தேன்? உன் கருணைப் பார்வை என் மீது படிய...?''

''தீபாராதனையை ஒற்றிக் கண்ணில் வைச்சுக்கங்க... கண்ணீர் எதற்கு? இனியெல்லாம் நல்லதுதான் நடக்கும்...'' தீபாராதனைத் தட்டுடன் நின்றிருந்த பாலன் குருக்கள் கூறினார்.

அன்று இரவு அவன் தூங்கவே இல்லை. விடிந்த பொழுது இவ்வளவு நல்ல பொழுதாய் விடிந்திருக்கிறதே... அவன் மனக்கண்ணில் மருதமலை முருகன் சந்நிதியில் விபூதியை அவன் கரங்களில் கொட்டிய தாரிணி தோன்றினாள்.

'வரமளித்த தேவதையா நீ?'

ஒரு சிலரின் முகம் பார்த்தால் அன்றைய நாள் முழுவதும் நல்ல நாள்தான். தாரிணியை அவனால் மறக்க முடியவில்லை. அடுத்த ஒரு வாரத்தில் ஆட்டோ ஓட்டியவன் வேனை ஓட்ட ஆரம்பித்தான். அப்பொழுதுதான் தற்செயலாய் குமரனைச் சந்தித்தான்.

''விக்னேஷ்... நீயாடா... எப்படிடா இருக்க? ப்ளஸ் டூ பரீட்சை எழுதினப்போ பார்த்தது... எத்தனை வருசம் கழித்துத் திரும்பப் பார்க்கிறோம்...''

''நீதான் உன் அம்மாவிற்கு டிரான்ஸ்பர் ஆகிடுச்சுன்னு தர்மபுரிக்குப் போய் விட்டாயே...''

''இப்போ அவர் எங்கெங்கோ மாறுதலாகி கும்பகோணத்தில் மையம் கொண்டிருக்கிறார்.''

''அம்மா, ஷோபாவெல்லாம் சௌக்கியமா?''

"சௌக்கியம்தான். ஷோபா பி.எஸ்ஸி முடிச்சிட்டாள். அப்பா அவளுக்கு மாப்பிள்ளை தேடிக் கொண்டிருக் கிறார்... விக்னேஷ்... என் பேரண்ட்ஸ், தங்கை பற்றி நீ நலம் விசாரிக்கிற.. உன் பேரண்ட்ஸ் நல்லா இருக்காங் களான்ன நான் கேட்க முடியாமல் நீ தனி மரமாய் ஆகிட்டேயேடா..." கண் கலங்கினான் குமரன்.

உதடு கடித்துத் தன் துயரத்தை அடக்கிக் கொண்டான் விக்னேஷ். நண்பனின் தோளை ஆதரவாய் தட்டிய குமரன்,

"விடுடா... நானிருக்கேன் உனக்கு. இப்ப எங்க தங்கி யிருக்கிற? என்று கேட்டான். விக்னேஷ் பதில் கூறினான்.

"நீ எங்கேடா தங்கியிருக்கிறே..." விக்னேஷ் கேட்டான்.

"எங்கேடா... திடீர்ன்னு இங்கே வேலை கிடைத்தது. வந்தவுடன் லாட்ஜில் தான் இடம் கிடைக்கும். ஹோட்ட லில்தான் சாப்பாடு. சகிக்கலைடா... ஒரு நல்ல வீடு கிடைத்தால் நன்றாக இருக்கும். ஒரு ஸ்டவ்வை வாங்கி வைத்துக் கொண்டு ஊரிலிருந்து நாலைந்து பாத்திரங் களை கொண்டு வந்து செல்ப் குக்கிங் பண்ணிக் கொண் டால் பிழைத்தேன்... இல்லை கஷ்டம்தான்..."

அப்போதுதான் விக்னேஷின் மனதில் மின்னல் அடித்தது. தாரிணியின் வீட்டிற்கு எதிர் வீட்டில் 'வீடு வாடகைக்கு விடப்படும்' போர்டைப் பார்த்தோமே...

"எனக்கும் நான் குடியிருக்கும் வீடு வசதியாய் இல்லை. வேறு வீடு பார்க்கலாமேன்னு ஓர் எண்ணமிருக் கிறது. அதிக வாடகையில் பெரிய வீடு பார்த்தால் என் ஒருவனுக்கு அளவும் அதிகம்... வாடகையும் அதிகம்ன்னு தான் பேசாமல் இருக்கிறேன்..."



"ஏண்டா... இப்படிச் செய்தால் என்ன? பெரிய வசதி யான வீட்டைப் பார்த்து நீயும், நானும் வாடகையை ஷேர் பண்ணிக் கொண்டாலென்ன? எனக்கும் நல்லது... உனக்கும் நல்லது என்ன சொல்கிறாய்?"

விக்னேஷின் மனதில் இருந்த எதிர்பார்ப்பை குமரன் எதிரொலிக்க விக்னேஷிற்கு விசிலடிக்க வேண்டும் போல் இருந்தது. நண்பனிடம் தன் மனதை மறைத்துக் கொண்டு,

"அப்படியா சொல்கிறாய்... ம்ம்... ஒன்று செய்... வேனில் ஏறு. நமக்குத் தோதாய் ஒரு வீடு காலியாயிருக்குன்னு நினைக்கிறேன். வேறு யாருக்கும் விடவில்லைன்னா கேட்டுப் பார்க்கலாம்..." குமரனைச் சுமந்து கொண்டு விக்னேஷின் வேன் அபிராமியம்மாளின் வீடு நோக்கிப் பறந்தது.

## 12



ஏட்டினிலே நான் எழுதும்

எழுத்தெல்லாம் நீயே...

சில நேரங்களில் நாம் மனதில் நினைக்கும் ஆசைகள் தானாய் நிறைவேறும் மாயம் நமக்கு ஆச்சரியத்தை அளிக்கும். விக்னேஷிற்கும் அப்படித்தான்... அபிராமியம் மாளின் வீடு அது வரை ஆள் வராமல் காலியாகவே இருக்குமென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை.

மனதில் ஓர் ஆசை. போய் பார்த்தால் போர்டு அப் படியே தொங்கிக் கொண்டிருந்தது. ஆனந்தமாய் இருவரும் அபிராமியம்மாளிடம் வீடு கேட்டனர்.

மூக்குக் கண்ணாடியை சரி செய்து கொண்டு இரு வரையும் ஏற இறங்கப் பார்த்தாள் அபிராமியம்மாள்.

''என்னடா இந்தப் பார்வை பார்க்கிறாங்க. வீடு கொடுக்கப் போறாங்களா... இல்லை பொண்ணு கொடுக் கப் போறாங்களா...'' ரகசியமாய் பேசுகிறோமென்று நினைத்துக் கொண்டு விக்னேஷின் காதைக் கடித்தான் குமரன்.

''ரெண்டும் ஒன்னுதான் தம்பி. பொண்ணு கொடுத் தாலும் யாரு எவருன்னு ஆராய்ஞ்சு விசாரிச்சுக்கிட்டுத் தான் குடுக்கணும். வீட்டை வாடகைக்கு கொடுத்தாலும் ஆள் எப்படின்னு தெரிஞ்சுக்கிட்டுத்தான் குடுக்கணும். பிறகு வருத்தப்பட்டு கன்னத்திலே கை வைச்சுக்கிட்டு உட்காரக் கூடாது பாரு...''

''ஹி... ஹி... நான் சும்மா தமாஷுக்கு சொன்னேன்ம்மா.''

''எனக்கும் தமாஷுன்னா பிடிக்கும். தம்பிக்கு எந்த ஊரு..? என்ன பேரு? தொழில் என்ன...?''

குமரன் இஜட் வடிவத்தில் உடலை வளைத்துக் கொண்டு பதில் கூறினான். விட்டால் அபிராமியம் மாளின் காலிலேயே விழுந்து விடுவான் போல இருந்தது. அவனது பணிவைக் கண்ட விக்னேஷ் அசந்து போனான்.

''எனக்கு கவர்மெண்ட் வேலைங்கம்மா. அப்பா, அம்மாவெல்லாம் கும்பகோணத்தில் இருக்காங்க. ஒரே தங்கைம்மா. படிப்பை முடிச்சிருச்சு. கல்யாணத்திற்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருக்கிறோம். என் பேரு குமரன்ம்மா... இவன் என் நண்பன் பெயர் விக்னேஷ்ம்மா.''

இவன் என்ன வீடு கேட்கிறானா... இல்லை பெண்ணே கேட்கிறானா? விக்னேஷிற்கு சந்தேகமே தட்டி விட்டது.



''இந்த தம்பியைப் பத்தி ஒன்னுமே சொல்லவில் லையே...''

''இந்த நல்லவனைப் பற்றியாம்மா கேட்கறீங்க...?'' குமரன் வினவ 'யாரந்த நல்லவன்' என்று விக்னேஷ் சுற்று முற்றும் பார்த்தான். யாரையும் காணாமல் தன்னைப் பற்றித்தான் சொல்கிறானென்று புரிந்து மகா நன்றியுடன் தோழனைப் பார்த்தான்.

''உங்களை மாதிரியே தான் இவனைப் பெற்ற தாயும் இருப்பாங்கம்மா... பாவம் அம்மா, அப்பா இரண்டு பேரும் இப்ப இல்லைம்மா... இவன் தாய், தகப்பனில்லாதவன். உங்களைப் பார்த்தவுடனே என்னிடம் என்ன சொன்னான் தெரியுமாம்மா?''

'என்ன சொன்னோம்..?' என்று யோசித்த விக்னே ஷிற்கு தூக்கி வாரிப் போட்டது.

'டேய் குமரா.. இந்த வீட்டுக்காரம்மா வம்புக்கு அலைகிற ரகம்... நீ சும்மா இருந்தாலும் இழுத்து வைத்து வாயைப் பிடுங்கும். ஜாக்கிரதை...'

அடக்கடவுளே இவன் அப்படியே அந்த அம்மாளிடம் சொல்லி வைத்தால் வீடு எப்படித் தருவாள்? விக்னேஷ் குழம்பித் தவித்தபோது குமரன் அளந்து தள்ளினான்.

''உங்களைப் பார்க்கும்போது அவனைப் பெற்ற தாயைப் பார்ப்பது போலவே இருக்கிறதாம். அச்சு அசல் நீங்க அவனுடைய அம்மா ஜாடையாய் வேறு இருக்கீங்களா. கண்ணால தண்ணி விட்டுட்டான்ம்மா. இந்தப் பாசக்கார பயபுள்ள உங்க வீட்டில் குடியிருந்தால் அவனைப் பெற்ற தாயுடன் இருப்பது போல இருக்குமாம்...'' குமரன் வராத கண்ணீரைத் துடைத்துக் கொண்டு எதற்கும் இருக்

கட்டுமென்று பின்னணி இசை போல் மூக்கை வேறு உறிஞ்சிக் கொண்டான்.

அவன் போட்ட பில்டப்பை தாங்க முடியாத அபிராமியம்மாள் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி கண்களைத் துடைத்துக் கொண்டாள். வெகு பாசமாய் விக்னேஷை தாய்மைப் பெருக்கோடு பார்ப்பதாய் பாவனை பண்ணி ஓர் பார்வை வேறு பார்த்து வைத்தாள்.

அந்தப் போலியான சூழலைத் தாங்க முடியாத விக்னேஷ் பார்வையைத் திருப்பிக் கொண்டான். அதை பணிவென்று தப்பர்த்தம் பண்ணிக் கொண்ட அபிராமியம்மாள்,

"கவலைப்படாதேப்பா.. நீயும் என் பிள்ளை மாதிரி தான்..." என்று பாச மழை பொழிந்து விட்டு.

"உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் ஆகிடுச்சா" என்று ஓர் கேள்வியைத் தூக்கிப் போட்டாள்.

'போச்சுடா... பிரம்மச்சாரி பயல்களுக்கு வீடு கொடுக்க மாட்டேன்னு இந்தம்மா துரத்தி விடுமே... பேச்சலர்ஸ்ன்னு இந்த பேச்சு மன்னன் எப்படிச் சொல்லப் போகிறான்...?'

ஆனால் குமரன் எம்டனாயிற்றே...

"கல்யாணமெல்லாம் உங்களை மாதிரி நாலும் தெரிந்த பெரியவங்க நல்ல பெண்ணாய் பார்த்து இனிமேல் தான்ம்மா... எங்க இரண்டு பேருக்கும் நடத்தி வைக்கணும்..." என்று ஐஸ் கட்டியைத் தூக்கி அபிராமியின் தலை மேல் வைத்தான்.

ஜில்லிட்டுப் போனாள் அபிராமி. அவள் பெண் பார்க்க வேண்டுமா? அவசரமாய் அந்தத் தெருவிலிருந்த கல்யாணமாகாத பெண்களை மனக்கணக்குப் போட்டுப்



பார்த்து வேண்டாதவர்களின் பெண்களை அந்தப் பட்டியலில் இருந்து நீக்கினாள். ஜாதி வாரியாக பெயர்களை வரிசைப்படுத்திக் கொண்டு,

"நீ என்ன ஜாதி... உன் நண்பன் என்ன ஜாதிப்பா?" என்று விசாரித்தாள்.

விக்னேஷ் குமரனை வெளிப்படையாகவே முறைத்தான். ஜாதி பற்றிய அநாகரிகமான பேச்சு இப்போது எதற்கு? ஆனால் நண்பனின் குணம் அறிந்த குமரன் விக்னேஷ் பக்கம் திரும்பவே இல்லை. அபிராமியம்மாளின் கேள்விக்கு வெகு பவ்யமாய் பதில் சொன்னான்.

"சரி... அட்வான்ஸை நாளைக்கே கொடுத்து விட்டு குடி வந்திடுங்க..."

விக்னேஷ் அசந்து போனான். வெளியில் வந்ததும் குமரனிடம் "எப்படிடா...?" என்று பரவசத்துடன் கேட்டான்.

"இது எல்லாம் ஜுஜிபி... இன்னும் போகப் போக ஐயாவோட திருவிளையாடல்களைப் பாரு..." காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான் குமரன்.

மறுநாளே முன் பணத்தை ஆளுக்குப் பாதி போட்டு அபிராமியம்மாளிடம் கொடுத்து விட்டு வீட்டுச் சாவியை வாங்கிக் கொண்டு குடி போனார்கள்.

"குமரா.. நாம பிரண்ட்ஸ்ன்னாலும் பிரைவசி ரொம்ப அவசியம். இங்கே அட்டாச்சுடு பாத்ரூமுடன் இரண்டு பெட்ரூம் இருக்கு.. ஆளுக்கு ஒன்றை எடுத்துக் கொள்வோம். உன் ரூம் சாவிகள் உன்கிட்ட... என் ரூம் சாவிகள் என்கிட்ட... வீட்டுச் சாவிகளை மட்டும் ஆளுக்கு ஒன்றை வைத்துக் கொள்வோம்."

இரண்டு செட் சாவிகளையும் அவர்கள் இருவருக்கும் ஆளுக்கு ஒன்று வேண்டுமென்று மொத்தமாய் அபிராமியம்மாள் கொடுத்து விட்டவுடன் விக்னேஷ் குமரனிடம் கூறியது இது.

குமரனும் அதை ஆமோதித்து ஏற்றுக் கொண்டான் விக்னேஷின் வீட்டிலிருந்த டி.வி., கேஸ், பாத்திரங்கள், சுவாமி படங்கள் அனைத்தும் வீட்டிற்குள் வர குமரன் உற்சாகமாகி விட்டான்.

''ஹோம் சிக்கே எனக்கு வராதுடா விக்னேஷ்... அருமையாய் ஆரம்பிச்சிருக்கு நம்ம தனிக்குடித்தனம்...''

விக்னேஷ் சிரித்தபடி தன் பெட்ரூமிற்குள் சென்றான். தெருவைப் பார்த்த அறையை இயல்பாய் தேர்ந்தெடுப்பது போல் தனக்கு எடுத்துக் கொண்டிருந்தான் அவன்.

அறையின் ஜன்னல் கதவுகளை லேசாய் திறந்து எதிர் வீட்டைப் பார்த்தான். தாரிணி வீட்டிற்குள் போய் கொண்டிருந்தாள். அவள் கண் பார்வையிலிருந்து மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு அறையை விட்டு வெளியே வந்தான்.

அதன் பின் இயல்பாய் அந்த வீட்டில் இருவரும் பொருந்தி விட்டார்கள். தனியே சமைத்துச் சாப்பிட்டுப் பழக்கப்பட்ட விக்னேஷ் காலையில் ஆறு மணிக்கு எழுந்து காபி கலந்து குமரனுக்கு பிளாஸ்கில் எடுத்து வைத்து விட்டு காலை டிபன், மதிய உணவை தயாரித்து பாத்திரங்களில் எடுத்துச் சாப்பிடும் மேஜையில் வைத்து விட்டு குளித்துத் தயாராகி எட்டு மணிக்கெல்லாம் ஜி.சி.டி. குவார்ட்டர்ஸ் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்துச் செல்லக் கிளம்பிச் சென்று விடுவான். சரியாக எட்டே முக்காலுக்கெல்லாம் வீட்டுக்கு வந்து தன் அறைக்குள் புகுந்து கொள்வான். ஏனென்றால் அந்த நேரத்தில் தான் தாரிணி கல்லூரிக்கு கிளம்பிச் செல்வாள். மதிய நேரங்களில் மருத மலைக்கோ... இல்லை அருகிலிருக்கும் ஊர்களுக்கோ வாடகைக்குச் சென்று விடுவான்... மாலையில் குழந்தைகளை இறக்கி விட்டு விட்டு வாயு வேகம்... மனோ வேகமாய்... வீட்டுக்கு வேனை ஓட்டிக் கொண்டு வருவான். வந்த வேகத்தில் அறைக்குள் போய் கல்லூரியிலிருந்து திரும்பி வரும் தாரிணியை தரிசிப்பான்.



வாழ்க்கை இப்படியே ஓடிக் கொண்டிருந்தால் போதுமென்பதுதான் அவனுக்கு. 'எட்டாத பழத்திற்கு கொட்டாவி விடக்கூடாது..' தாரிணி அழகானவள், பண்பானபவள். என்பதோடு நின்றிருந்தால் விக்னேஷ் என்றோ அவளிடம் தன் மனதைத் திறந்து காட்டியிருப்பான்.

ஆனால் அவள் மிக அதிகம் படித்திருந்தாள். தமிழகத்திலேயே பிரசித்தி பெற்ற கோவை வேளாண்மை கல்லூரியில் விரிவுரையாளராக இருந்தாள். மலை மீது மடு எப்படிக் காதல் கொள்ள முடியும்?

மனதை அடக்கத் தெரிந்தவன் விக்னேஷ். மறந்தும் தன் மனதை உடனிருந்த குமரனிடம் கூட வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்தவனின் வேனிலேயே மாத வாடகைக்கு வந்து போக ஓர் நாள் அவளது சிநேகிதி மூலம் தூது விட்டாள் அவள்.

முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாது தான்... கொம்புத் தேனே முடவனின் வாய்க்கு நேராக வந்து விழுந்தால்...? அவன் வாயை மூடிக் கொள்வானா?

# 13



## பாட்டெடுத்து நான் பாடும் பாசுரமும் நீயே

எட்ட நின்று பார்த்தால் போதுமென்ற அவன் வாழ்க்கையில் கொஞ்சம் கிட்டே அவள் நெருங்கி வந்தால் வேண்டாமென்று அவன் எப்படிச் சொல்வான்? தினமும் காலையில் உயிர்த்தெழுந்து இரவினில் உறக்கத்தில் ஆழ்ந்தான். வாரா வாரம் அவளைப் பெண் பார்க்க வரும் செய்தி வரும். அந்த இரவுகளில் மௌனமாக அவனது அறையின் விளக்குகளை அணைத்து விட்டு எதிர் வீட்டைப் பார்த்துக் கொண்டிருப்பான். மறுநாள் அது தோல்வியுற்ற செய்தி வரும். மனதின் ஓர் மூலையில் சந்தோஷம் எழும்ப முயன்று பார்க்கும். அதன் கழுத்தைத் திருகி மனதோடு புதைத்து விடுவான் அவன்.

காதல் என்பது என்ன...? மனதில் ஒருவர் மேல் உருவாகும் அதிக அளவு நேசம்? நேசித்தவரைத் துன்புறுத்துவது காதல் ஆகுமா? கல்யாணத்தில் முடிந்தால் தான் காதல் வெற்றி பெற்றதாகுமா? நேசித்தவரைக் காயப்படுத்தாமல் அவர்கள் நன்றாக வாழ்வதை தூர நின்று பார்த்தாலும் காதல் வெற்றி பெற்றதாகத்தான் ஆகும். விக்னேஷ் அதைத்தான் செய்தான்.

தாரிணிக்கு இணையான மாப்பிள்ளை அமைய வேண்டுமென்று மனமார நினைத்தான் விக்னேஷ். அவளது திருமணம் அமோகமாக நடைபெற வேண்டும். ஊரில் உள்ள மற்ற பெண்களைப் போல் அவளும்



குழந்தை, கணவனென்று குடும்ப வாழ்க்கை வாழ வேண்டும். இதுதான் அவனது பிரார்த்தனையாக இருந்தது.

மனதை எவ்வளவுதான் கட்டுப்படுத்தி வைத்தாலும் அது சில நேரங்களில் அடங்க மறுத்து அலை பாயும். அந்த நேரங்களில் இரவு தூக்கத்தை விட்டு இரவு வாடகைக்குக் கிளம்பி விடுவான். இடைவிடாத உழைப்பினால் அவனிடம் பணம் சேர ஆரம்பித்தது. 'இன்டிகா' கார் ஒன்றை வாங்கினான். கல்லூரிக்குச் செல்லும் இளைஞன் ஒருவன் பகுதி நேரப் பணிக்காக விக்னேஷை அணுக அவனிடம் இரவு வாடகைக்கு காரை ஒப்படைத்தான். விடுமுறை தினங்களில் இருவருமே வாடகையை ஏற்றுக் கொண்டு வெளியூர் போனார்கள். திருமணம்.. குடும்பத்துடன் வெளியூர்களுக்கு குடும்ப விழாக்களில் கலந்து கொள்ளச் செல்கிறவர்கள்.. வேனை நாடினார்கள். சிறிய குடும்பத்தினர் காரைத் தேடினார்கள். விக்னேஷ் வளர்ந்து கொண்டிருந்தான்.

எப்போதேனும் பால்கனியில் நிற்கும்போது எதிர் வீட்டு பால்கனியில் தாரிணி தென்படுவாள். பட்டென்று வீட்டுக்குள் வந்து விடுவான் அவன். வேனில் அவள் வந்து செல்லும்போது மறந்தும்கூட அவளிடம் ஓர் வார்த்தை பேச மாட்டான். இறுகின முகத்துடன் எப்போதும் காணப்படுபவனின் மனதில் அவள் மட்டுமே நிறைந்திருக்கிறாள் என்பதை அறியாதவளாய் அவள் துயரம் படிந்த முகத்துடன் வந்து செல்வாள்.

இன்று ஒரு சிறு ஆறுதல் வார்த்தையில், மனம் உருகி 'இன்றைய பொழுது நல்ல பொழுதாக விடிந்திருக்கிறது...' என்கிறாளே... அவள் கையில் விபூதி வாங்கிய அன்றைய பொழுது தான் அவனுக்கு நல்ல பொழுதாக விடிந்தது என்பதை அறிவாளா அவள்?

அன்று இரவு தூங்கும் முன்னர் பால்கனியில் சற்று காற்று வாங்க நின்றான். எதிர் வீட்டுப் பால்கனியில் சுவரோடு சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருப்பது யார்...? தாரிணியா...?

இருள் சூழ்ந்த இரவில் உறவுகளிருந்தும் அநாதை போல் மாடியில் அவள் தன்னந்தனியாக உட்கார்ந் திருந்தது அவன் நெஞ்சை உலுக்கியது.

'உன் கண்ணில் நீர் வடிந்தால் - என் நெஞ்சில்

உதிரம் கொட்டுதடி...

என் கண்ணில் பாவையன்றோ - கண்ணம்மா

என்னுயிர் நின்னதன்றோ...'

அவன் நெஞ்சம் பாடியது... அவள் விழிநீர் துடைக்க வழி தேடித் தவித்தது... துடித்தது.

விக்னேஷ் உள்ளே சென்றான். பழைய பாடல்களி லிருந்த சி.டி.யை எடுத்தான்... பிளேயரில் போட்டு ஓட விட்டான். அவனுக்கு வேண்டிய பாடல் வந்ததும் நிறுத்தி ஒலிக்க விட்டான்.

'எண்ணப் பறவை சிறகடித்து

விண்ணில் பறக்கின்றதா

உன் இமைகளிலே உறக்கம்வர,

கண்கள் மறுக்கின்றதா...'

பால்கனிக்கு வந்து நின்று எதிர் வீட்டைப் பார்த்தான். தாரிணி இவனையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. பாடல் தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

'தென்றல் பாடும் தாலாட்டில் - நீ



இன்பம் பெறவில்லையா...

இரவு தீர்ந்திடும் வரையில் விழித்திருந்தாலே

துன்பம் தரவில்லையா...

உன் துயர் கண்டால் என்னுயிர் இங்கு

தவிப்பது தெரியலையா...

உண்மை அறிந்தும் உள்ளம் வருந்த

நடப்பது தவறில்லையா...'

எதிர் வீட்டுப் பால்கனியிலிருந்து எழுந்து தாரிணி உள்ளே போவது தெரிந்தது. அவள் அறை விளக்கு அணைக்கப்பட்டது. விக்னேஷ் உள்ளே வந்து பிளேயரை அணைத்தான். கேசட்டை வெளியே எடுத்து வைத்து விட்டு அறைக்குப் போக திரும்பியபோது தூக்கி வாரிப் போட அப்படியே நின்றான். குமரன் அவனது அறைக் கதவின் நிலையில் கை வைத்தபடி இவன் செயல்களைக் கண்காணித்துக் கொண்டிருந்தான். விக்னேஷ் உதடுகளைக் கடித்துக் கொண்டு சங்கடத் துடன்.

''என்னடா...?'' என்றான்.

''நான் கேட்க வேண்டியதை நீ கேட்கிறாயே...''

''புரியவில்லை.''

''புரியவில்லையா...? யாருக்கு உனக்கா? குட் ஜோக்...''

''நான் தூங்கப் போக வேண்டும்...''

''அதுதான் தாலாட்டுப் பாடி தூங்க வைத்து விட் டாயே... இனி நிம்மதியாய் தூங்கப் போக வேண்டியது தானே...''

"சும்மா வம்பிழுக்காதே..."

"இனி அதுதானே எனக்கு வேலை... ஆமாம்... இது எத்தனை நாளாய் நடக்கிறது?"

"எது...?"

"இந்தப் பாட்டுப் பாடி தூங்க வைப்பதுதான்."

"குமரா... பாவம் அந்தப் பெண். சோர்வாய் இருந்துச் சுடா... ஒரு ஆறுதலுக்காக..."

"நீ பாட்டு போட்டு சமாதானப்படுத்தினாய்... ம்ம்..."

"அந்தப் பெண்ணுக்கும் தாய் தகப்பனில்லை. எனக்கும் யாருமில்லை..."

"உன்னைப் போல் ஒருத்தி...!"

"கிண்டல் பண்ணாதேடா..."

"கிண்டலுமில்லை. சுண்டலுமில்லை. உனக்கு யாருமில்லைங்கிறது சரி. அவளுக்கு ஒரு அண்ணன் காரன் இருக்கானேடா... ஏற்கனவே இளங்கோன்னு ஒருத்தன் பெண் கேட்டு வந்தான்னு அவளோட அண்ணன் சாவடிக்கப் போயிட்டான்."

"என்னடா இது. அவன் பேச்சை இப்போ எதுக்கு இழுக்கறே..."

"நீ பண்ற கூத்தை அவளோட அண்ணன் பார்த்தான்னா உன்னை ரோட்டுக்கே இழுப்பான். ஜாக்கிரதை."

"இப்ப என்னங்கிற. நீ நினைப்பது போலெல்லாம் எதுவுமில்லை... அந்தப் பெண் மேல் எனக்கிருப்பது கருணைதான்."

"இதை என்னை நம்பச் சொல்கிறாயா? என்னை என்ன விரல் சூப்பும் குழந்தையென்று நினைத்து விட்டாயா?"



"இங்கே பார்.. அவளுக்கு பெரிய இடத்தில் கல்யாணம் நடந்தால் என்னைவிடச் சந்தோசப்படுபவர்கள் யாருமில்லை."

"உன்னை விட துக்கப்படுபவர்களும் யாருமிருக்க மாட்டார்கள்."

விக்னேஷ் உதட்டைக் கடித்துக் கொண்டு முகத்தைத் திருப்பிக் கொண்டான். குமரன் அவனருகே வந்து ஆறுதலாய் அவன் தோள் மேல் கை வைத்தான். அவனது கரம் விக்னேஷின் தோளை அழுத்தியது.

"ஏண்டா மனதுக்குள் போட்டு குமைந்து கொண்டிருக்கிற... அவளிடம் சொல்லிவிட வேண்டியதுதானே...?"

"எப்படிச் சொல்வது? நானென்ன உன்னைப் போல் டிகிரி ஹோல்டரா? கவர்ன்மென்ட் சர்வண்டா? பிளஸ் டூவைத் தாண்டாதவன். வேன் ஓட்டிப் பிழைக்கிறேன். எனக்கு அவள் எட்டாக் கனிடா."

"தைரியமான ஆண் பிள்ளை பேசும் பேச்சாடா இது?"

"எதற்கு தைரியமிருக்க வேண்டும் என்பது இருக்கிறதே. 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை'ன்னு கேள்விப் பட்டதில்லையா?"

"ஏண்டா... எதற்குத்தான் அஞ்சுவதுன்னு விவஸ்தை இல்லையா? உன்னை வீரன்னு நினைச்சேன். கடைசியில் நீயும் மாசிலாமணிக்குப் பயந்தவனாய் இருக்கிறாயே..."

"அடச்சே... அவனுக்கு யார்டா பயந்தா? தாரிணியைப் போட்டு அவன் இந்தப் பாடு படுத்தறதுக்கு அவனை வெட்டி பொலி போட்டால்தான் என் ஆத்திரம் அடங்கும்... நான் அவனுக்குப் போய் பயப்படுகிறேனா? ஒரு

நாள் இல்லைன்னா ஒரு நாள் அவன் என்கையில் வசமாய் சிக்காமல் போக மாட்டான்... அப்போதிருக்கு அவனுக்கு... சும்மா திருவிழா கொண்டாடி விட மாட்டேன். மச்சான் வகையாய் மாட்டட்டுமேன்னுதான் நானும் காத்திருக்கிறேன்..."

"அப்படிப் போடுடா அருவாளை.... விக்னேஷா கொக்கா? எனக்கும் உன் கையால் அவன் மாத்து வாங்குவதைப் பார்க்கணும்னு கொள்ளை ஆசைடா... அவனுக்கே பயப்படலைன்னா... வேறு யாருக்குப் பயப்படறேன்னுதான் பிடிபட மாட்டேங்குது..."

விக்னேஷ் சொன்னான்.

## 14



புகலுமின்றி புகழுமின்றி

புவியினில் இருந்தேன் தனித்தீவாய்...

எதற்கு அஞ்ச வேண்டும்? யாரிடம் அஞ்ச வேண்டும்?

மற்றவர்க்கு அநீதி செய்ய அஞ்ச வேண்டும்... தெய்வத்திடம் அஞ்ச வேண்டும்... எல்லாவற்றிற்கும் மேலாக நம் மனச்சாட்சிக்குப் பயப்பட வேண்டும்.

"ஆனால் நீயென்ன அநீதி செய்யப் போகிறாய்? உன் மனச்சாட்சி கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல நீயேன் அஞ்ச வேண்டும்?" என்று கேட்டான் குமரன்.

"எம்.எஸ்ஸி. அக்ரி படித்துவிட்டு அதற்கும் மேலும் படித்து முடித்து அக்ரி காலேஜில் லெக்சரராக வேலை



பார்க்கும் பெண்ணிற்கு அவளது படிப்பிற்கும் வேலைக்கும் தகுதியானவன்தான் கணவனாக வரவேண்டும். எனக்கு அந்தத் தகுதியில்லை... அது தெரிந்தும் அவள் மேல் நான் ஆசை கொள்வது அவளுக்கு செய்யும் அநீதி. இதைக் கேள்வி கேட்கும் என் மனச்சாட்சிக்குப் பயப்பட வேண்டாமா?"

"போடா முட்டாள்... காதல் தகுதி வித்தியாசம் பார்க்காது."

"எனக்குத்தானே அவள் மேல் காதலிருக்கிறது. அவளுக்கு என் மேலிருப்பது ஓர் தோழமைதானே... காதல் இல்லையே..."

"இது வேறா... ம்ம்... இதை நான் யோசிக்கவே இல்லையே... ஏண்டா விக்னேஷ். உன் மனதிலிருப்பதை வாய் திறந்து அவளிடம் சொல்லிப் பாரேன்..."

"அந்தப் பாவத்தை வேறு செய்யச் சொல்கிறாயா? கல்யாணம் தட்டிப் போவதால்... கடைசியில் ஒரு வேன் ஓட்டுகிறவன் வந்து நம்மிடம் காதல் சொல்லி விட்டானேன்னு அவள் மனம் உடைந்து விட்டால்...? அவளது அண்ணன் அவளைச் செய்யும் கொடுமை போதாதா? நான் வேறு கொடுமை செய்ய வேண்டுமா?"

"காதலைச் சொல்வது கொடுமையாடா?"

"தகுதியற்றவர்கள் காதலைச் சொல்வது கொடுமைதான்."

"அப்போது என்னதான் செய்யப் போகிறாய்...?"

"அவளது நல்வாழ்விற்காக பாடுபடப் போகிறேன்."

"எப்படி?"

''எனக்கும் தெரிந்தவர்கள் வட்டாரம் உண்டு... அவர்களிடம் சொல்லி தாரிணிக்குத் தகுந்த மாப்பிள்ளையைப் பார்க்கப் போகிறேன்.''

''பார்த்து...?''

''அவளது ஜாதகம் தோச ஜாதகமில்லைன்னு நிரூபிப்பேன்.''

''அது எப்படிடா?''

''அவளது பெர்த் செர்டிபிகேட்டில் பிறந்த தேதியிருக்கும். நேரமும் தெரிந்தால் புதிதாய் ஜாதகம் எழுதுவேன்.''

''சரி.. ஜோசியக்காரரின் வேலையையும் பார்க்கப் போகிறாய்.. அதற்குப் பின்னால்.. அவள் அண்ணன் கடப்பாரையைத் தூக்கிக்கிட்டு வருவானே...''

''அதை அவன் கையிலிருந்து பிடுங்கி அவன் மேலேயே செருகி விடுவேன்.''

''ஸோ.. தியாகி பட்டத்திற்கு என்ன என்ன வேலை செய்ய வேண்டுமோ அத்தனை வேலைகளையும் செய்யப் போகிறேன்னு சொல்லு. உன் பொதுச் சேவையில் எனக்கும் பங்கிருக்கா?''

''நீயே தொடை நடுங்கி. நீயென்ன சேவை செய்யப் போகிற...? வேண்டுமானால் சமையலறையில் காரச் சேவை செய். அதற்குத்தான் நீ லாயக்கு.''

''நான் அப்படியே இருந்து விட்டுப் போகிறேன். காதலிக்கிற பெண்ணிற்கு மாப்பிள்ளை தேடுவதைவிட காரச் சேவை செய்வது உத்தமமான செயல்.''

''டேய்... நீ மட்டும் சரின்னு சொல்லி துணிஞ்சு நில்லு...''



''எதற்கு...?''

''தாரிணியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளத்தான். அவளது அண்ணன் என்ன.. இந்த உலகமே எதிர்த்தாலும் நான் அவளைத் தூக்கி வந்து உன்னிடம் ஒப்படைக்கிறேன்.''

''என்னிடம் ஏண்டா ஒப்படைக்கிறாய்.''

''அவள் கழுத்தில் நீ தாலி கட்டத்தான்...''

''என்னை தொடை நடுங்கின்னு சொன்னாய்.. சரி.. பாத்ரூமில் கரப்பான் பூச்சியைப் பார்த்தால் தொடை நடுங்கும் ரகம் தானேன்னு கேட்டுக் கொண்டேன். நீ தூக்கி வந்து ஒப்படைக்கும் பெண்ணிற்கு என்னைத் தாலிகட்டச் சொல்கிறாய் பார்... ச்சீ... புல்லரிச்சுப் போச்சுடா எனக்கு... எத்தனை உயர்வான அபிப்ராயம் என்மேல் நீ வைத்திருக்கிறாய்? இப்படி ஒரு மட்டக் கேவலமான மதிப்பீட்டை உன்னிடமிருந்து பெற என்ன தவம் செய்தேன்டா நான்?

''ஏண்டா...? நீதானே அவளைக் கல்யாணம் செய்து கொள்ளும் எண்ணம் உனக்கிருந்ததுன்னு சொன்னாய்...?''

''அடிச்சுப் பல்லைப் பேத்துருவேண்டா ராஸ்கல். அன்றைக்கு சொன்னேன். இன்றைக்கு சொன்னேனா? பிரண்ட் காதலிக்கும் பெண் எனக்குத் தங்கைடா. இதுக்கும் மேல் நான் அவளைக் காதலிக்கவில்லை. பெற்றவர்களுக்கு அடங்கின பிள்ளையாய்... என் தங்கைக்கு அண்ணனாய்... எனக்கும், என் குடும்பத்திற்கும் ஏற்ற பெண்ணாய் தேடினேன். என் ஜாதியிலிருந்த தாரிணி என் கண்ணில் தென்பட்டாள். அவள் அதிகப் படிப்பு படித்து, பெரிய வேலையிலிருந்து, என் ஜாதியுமாய்

இருந்ததால் மட்டுமே அவளை நான் பெண் கேட்டு விட்டேன். அவள் படிக்காமல், என் ஜாதிப் பெண்ணாய் இல்லாமலிருந்தால் நான் நிச்சயம் பெண் கேட்டு விட்டிருக்க மாட்டேன். காதல்தான் தகுதி வித்தியாசம் பார்க்காது. கல்யாணம் எல்லாவற்றையும் பார்க்கும்..."

"இப்போது என் காதல் உனக்குத் தெரியவில்லைன்னு வைத்துக்கொள். உன் அப்பா அம்மாவிடம் பேசி நான் சம்மதிக்க வைத்தால் இதை நீ ஏற்றுக் கொள்வாய் தானே...?"

"என் அம்மா அப்பாவிடம் நீ காதலிக்கும் பெண்ணைத் தான் எனக்குப் பெண் பார்க்கிறாய்ன்னு சொல்லிவிடு வேன்."

"உனக்குத் தெரியாதுன்னு நினைத்துக் கொள்டா."

"எனக்குத் தெரியுமே... என்னால் மாற்றி நினைக்க முடியாதே."

"ஏய்ய.. தாரிணிக்கு என்னடா குறை? அழகில்லையா...? படிப்பில்லையா? வேலையில்லையா?"

"இது எல்லாவற்றோடு உன் காதலியாகவும் வேறு இருக்கிறாளே..."

"அதனால் என்னையும், அவளையும் தப்பாக நினைக் கிறியா? நான் அவள் முகத்தைப் பார்த்துக்கூட ஓர் வார்த்தை பேசியதில்லைடா. அவளும் குனிந்த தலை நிமிர்ந்ததில்லை."

"எத்தனை முறைதான் உன்னை அடித்துப் பல்லைப் பேர்ப்பது...? படவா ராஸ்கல்! நானென்ன உன்னையும் அவளையும் சேர்த்து வைத்து சந்தேகப்பட்டா வேண் டாம்ன்னு சொல்கிறேன்? இவ்வளவு பேசுகிறாயே.. நான்



மனதாரக் காதலித்த பெண்ணை உன்னைக் கல்யாணம் பண்ணிக்கோன்னு சொன்னால் நீ பண்ணிக் கொள் வாயா?"

"அது... அது.. எப்படிடா குமரா?"

"புரியுதில்லை.. எப்ப உன் மனசு பூராவும் அவளிருக் கான்னு எனக்குத் தெரிந்ததோ. அந்த நொடியிலிருந்து அவள் எனக்குத் தங்கை ஆகி விட்டாள். இனிமேல் இதுபோல் பேத்தாதே..."

விக்னேஷ் மௌனமாய் அங்கிருந்த சேரில் அமர்ந்து யோசிக்கலானான். அவன் எதிரே ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்த குமரன்,

"எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு யோசனை யோசிக்கிறாய்?" என்று வினவினான்.

"இல்லை... என் ஸ்டாண்டில் இருக்கும் ஒருவனின் அண்ணன் புரபொஸர்ன்னு சொன்னான். அவன் என்ன இனம்ன்னு யோசித்துக் கொண்டு இருக்கிறேன்."

"ஏண்டா.. தெரியாமல் தான் கேட்கிறேன். நீயென்ன கல்யாண புரோக்கரா?"

"நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொள். தாரிணிக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக் காமல் நான் ஓய மாட்டேன்."

"விக்னேஷ் நான் ஒரு விசயம் கேட்கவா?"

"கேளேன்டா. இதற்கு என் பெர்மிசன் எதற்கு?"

"இல்லை... முதன் முதலாய் அவளை எப்போது நீ பார்த்தாய்...?"

விக்னேஷ் நிமிர்ந்து குமரனைப் பார்த்தான்... இவன் மட்டும்தான் விக்னேஷிற்கு நண்பனென்று இருக்

கிறான்... சொந்த, பந்தம் எதுவுமில்லாத அநாதையான விக்னேஷிற்கு மனம் விட்டுப் பேச இருக்கும் ஒரே துணை குமரன் மட்டும்தான். இவனிடம் மனதைத் திறந்து காட்டாமல் வேறு யாரிடம் காட்டப் போகிறான்?

விக்னேஷ் கூற ஆரம்பித்தான். கண்களை மூடி அவளைச் சந்தித்த முதல் நாளில் இருந்து ஆரம்பித்து அனைத்தையும் கொட்டிக் கவிழ்த்தான்.

''ஒரு பூ மாதிரி என் முன் நின்னாள்டா... ஒரே நொடியில் என் இருண்ட வாழ்வை வெளிச்சமாக்கி விட்டுப் போய் விட்டாள். அவளைப் பார்த்த பின்னால் நடந்தது எல்லாமே நன்மைதான். தீமையே என் வாழ்வி லிருந்து ஓடிப்போய் விட்டது. அவளைப் பார்த்த பின் னால்... அவள் கையால் பிரசாதம் வாங்கிய பின்னால்தான் நான் சொந்தமாய் வேன் வாங்கினேன்... சொந்தமென சொல்லிக் கொள்ளும் நண்பனான உன்னைத் திரும்பவும் சந்தித்தேன்... சொல்லிக் கொள்கிற மாதிரி ஓர் வீட்டிற்கு மாறினேன்... சொந்த வேனே கன்வென்று பயந்தவன் இன்னுமொரு காருக்கும் சொந்தக்காரன் ஆனேன்.. இப் போது கணிசமாய் பேங்கில் பணம் வைத்திருப்பவ னாகவும் ஆயிருக்கிறேன்... இது எல்லாம் அவளை நான் பார்த்த பின்னால் என் வாழ்வில் நடந்தது...''

அப்போதுதான் குமரன் அந்தக் கேள்வியைக் கேட்டான்.

## 15



புகலிடம் கொடுத்தாய் புகழும் கொடுத்தாய்
புவியினில் என்றும் நீயே என்தாய்



விக்னேஷ் மனம் விட்டுப் பேசும் அத்தருணத்தில் ஆழ்ந்திருந்தான். பால்கனிக் கதவு திறந்திருந்தது. சிலுசிலுவென்று சுகமான காற்று தவழ்ந்து வந்து இருவர் உடலையும் வருடிக் கொடுத்தது. இரவின் இனிமையான நிசப்தமான சூழ்நிலை. மனதில் இருப்பதை ஒருவருக் கொருவர் பகிர்ந்து கொள்ளும் தோழமை.

''எல்லாம் சரிதாண்டா விக்னேஷ்... அவளைப் பார்த் தேன்... நன்மையாய் நடந்ததுன்னு சொல்கிறாயே.. அவளைப் பார்த்த உடனே உனக்கு அவளைப் பிடிச்சுப் போச்சா?''

''பார்த்த உடனே அழகான ஓவியமாய் என் மனதில் ஆழமாய் பதிந்து விட்டாள்...''

''அப்போதே அவள் மேல் உனக்குக் காதல் வந்து விட்டதா?''

''ஆமான்டா.''

''அப்போ... அவள் படிப்பு, வேலை எதுவும் உனக்குத் தெரியாது?''

''தெரியாது.''

''தெரிந்த பின்னால் என்ன நினைத்தாய்?''

''அவளை மறந்துவிட வேண்டும்ன்னு.''

''முடிந்ததா?''

''முடியவில்லை... தொலைவிலிருந்தாவது அவளைப் பார்த்துக் கொண்டு இருக்க வேண்டும்ன்னு தோணியது.''

''அவளுக்காகத்தான் இந்த வீட்டிற்கு குடி வரணும்னு நினைத்தாயா?''

''ஒரு வகையில் அப்படித்தான்.''

''ஏண்டா முட்டாள்.. அவளுடைய படிப்பையும், வேலையையும் தெரியாமல் தானே காதல் கொண்டாய்? அவளை அவளுக்காக நேசித்து விட்டு இப்போது ஏன் நழுவப் பார்க்கிறாய்?''

''நழுவுகிறேன் என்று மட்டும் சொல்லாதே... அவள் மட்டும் என்னை விடக் குறைவாகப் படித்து வேலையில் லாதவளாக இருந்திருந்தால் அவள் ஜாதியைப் பற்றிக் கவலைப்படாமல் அவளைத் தூக்கிப் போய் தாலி கட்டியிருப்பேன்.''

''எனக்கென்னவோ உனக்கு தாழ்வு மனப்பான்மை யென்று தோன்றுகிறது.''

''தாழ்வு மனப்பான்மையா...? எனக்கா...? ஹா...!''

''சும்மா அலட்டிக்காதேடா. அப்படியேன் இருக்கக் கூடாது...?''

''இப்போதுதானே வம்பிழுப்பதுதான் இனி உன் வேலைன்னாய்.. இப்போது ஆரம்பித்து விட்டாயா? குமரா...! விடிய விடிய உட்கார்ந்து நீயும் நானும் கதை பேசினாலும்... என்னுடைய முடிவு இதுதான்.. இதை யாராலும் மாற்ற முடியாது... நான் தாரிணிக்கு அவளுக்கு பொருத்தமான மாப்பிள்ளையாய் பார்த்து கல்யாணம் பண்ணி வைக்கத்தான் போகிறேன்... நீ பார்க்கத்தான் போகிறாய்...''

''நீ கல்யாணம் பண்ணி வைப்பேன்னு சொல்லு.. நான் பார்ப்பேன்னு சொல்லாதே... அந்தக் கன்றாவியையெல் லாம் என்னால் பார்க்க முடியாது.''

''கண்றாவியா? கல்யாணம் என்பது உனக்குக் கண்றா வியா?''



''காதலிக்கிறவளுக்கு மாப்பிள்ளை பார்த்துக் கல்யாணம் பண்ணி வைத்தால் அது கண்றாவிதான். சரி.. தூங்கப் போகலாமா..? ஹாவ்வ்வ்...'' கொட்டாவி விட்டபடி எழுந்து கொண்டான் குமரன்.

தன் அறைக்குப் போன விக்னேஷ் தூக்கம் வராமல் தவித்தான். கண்களை மூடினால் தாரிணியே தோன்றினாள். விபூதி கொடுக்கும் தாரிணி... அபிராமியம்மாளின் வம்பிலிருந்து லாவகமாய் நழுவி வீட்டுக்குள் செல்லும் தாரிணி... 'இன்றைக்குப் பொழுது நல்ல பொழுதாக விடிந்திருக்கிறது' என்று கண் கலங்கும் தாரிணி... இருளில் வரி வடிவாய் பால்கனியில் அமர்ந்திருக்கும் தாரிணி...

தாரிணி!... தாரிணி...! தாரிணி...!

அவன் மனதில் சதிராடிச் சிரித்தாள் அவள். இதயம் முழுவதும் அவளது நினைவு அவன் இதயத்தைப் பார்க்க அவன் எழுந்து வேன் சாவியை எடுத்துக் கொண்டான். அறையைக் கடந்து வாசல் கதவைத் திறக்கும்போது விளக்கு எரிந்தது. குமரன் நின்று கொண்டிருந்தான்.

''எங்கேடா கிளம்பிட்டே...?''

''நைட் வாடகைக்கு.''

''ஏன்டா பைத்தியக்காரா... இப்படிப் பித்துப் பிடித்து அலைகிற? சுவரிருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்... உன் உடல்நிலை நன்றாக இருந்தால்தான் உழைக்க முடியும். தூக்கம் கெட்டால் உடம்பு என்ன கதிக்கு ஆளாகும் தெரியுமா? ஒரு மனுசன் ஒரு நாளைக்கு ஆறு மணி நேரமாவது நிம்மதியாய் உறங்கி எழுந்திருக்க வேண்டும். இப்படி ராத்தூக்கம் முழிச்சுட்டு பகலிலும்

வண்டியை ஓட்டினால் அது உனக்கும் நல்லதில்லை... உன் வண்டி போகும் ரோட்டில் ஓடப்போகும் மற்ற வண்டிகளுக்கும் நல்லதில்லை. இப்படித் தூங்காமல் கொள்ளாமல் யாருக்காக சம்மதிக்கிறாய்.''

நண்பனிடம் கையும் களவுமாய் மாட்டிக் கொண்ட எரிச்சலுடன் ''எனக்கு யாருமில்லைன்னு சொல்லிக் காண்பிக்கிறாயா?'' என்று சண்டைக்கு போனான் விக்னேஷ்.

''யாருமில்லாமல் ஏன் இருக்க வேண்டும்? நாளைக்கே நல்ல பெண்ணாய் பார்க்கிறேன். கல்யாணம் பண்ணிக் கொள். உனக்குன்னு பெண்டாட்டி வந்து விட்டால் இப்படி ராத்தங்காமல் வெளியே பனியிலும், மழையிலும் விழித்துக் கொண்டு கிடக்க மாட்டோம்...''

சிவந்த விழிகளால் நண்பனை முறைத்தான் விக்னேஷ்.

''ஏண்டா முறைக்கிற? நீதான் தாரிணியைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போவதில்லையே... அப்புறமென்ன?''

''வேண்டாம் குமரா... நான் நல்ல மனநிலையில் இல்லை...''

''அதுதான் எனக்குத் தெரியுமே... பேசாமல் போய் தூங்கு.''

''டேய்... நானாடா தூங்க மாட்டேன் என்கிறேன். தூங்க முடியலைடா.''

''ஏன்...? கண்ணை மூடினால் தாரிணி வருகிறாளா?''

விக்னேஷ் மௌனமாய் சுவரை வெறிக்க அதிலிருந்த பல்லி அவனைப் பார்த்து ''ச்ச்ச்ச்'' என்றது.

''பார்... பல்லியெல்லாம் உன்னைப் பார்த்து 'பாவம்' என்கிறது...''



''என் நிலைமையைப் பார்த்தால் உனக்குச் சிரிப்பாக இருக்கிறதா?''

''சிரித்துத்தான் துக்கத்தை மறக்க வேண்டும்.. புரிகிறதா?''

''உனக்கு என்னடா துக்கம்..?''

''உன் நிலைமையைப் பார்த்தால் துக்கம் வராமல் சந்தோசமா வரும்?''

''இப்போது என்னை என்னதான் செய்யச் சொல்கிறாய்?''

''தாரிணியை மறக்க ஏன் முயற்சி செய்கிறாய்? காதலித்தால் அது குற்றமா? அவளுக்கு கல்யாணம் ஆன பின்னால் அவளை நினைத்தால்தானே தப்பு. இப்போது கண்களை மூடினால் அவள் வருகிறாளா? வந்து விட்டுப் போகட்டும்.. கனவிலாவது பேச முயற்சி பண்ணிக் கொண்டு தூங்கு... போ... குட்நைட்...''

விக்னேஷை அவன் அறையில் தள்ளிவிட்டு குமரன் படுக்கப் போனான். விக்னேஷ் கண்களை மூடினான். தாரிணி வந்தாள். இப்போது பதட்டப்படாமல் புன்னகையுடன் அவளை ரசித்தவாறு தூங்கிவிட்டான். தூக்கத்தில் அவன் இதழ்கள் முணுமுணுத்தன.

''தாரிணி...''

குமரன் யோசனையுடன் தன் அறையில் குறுக்கும் நெடுக்கும் நடந்தான். யோசித்து யோசித்து தலை குழம்பியது. பேசாமல் படுத்து உறங்கி விட்டான்.

காலையில் அவசரத்துடன் படியிறங்கிக் கொண்டிருந்தான் விக்னேஷ். கண்கள் எதிர்வீட்டு பால்கனியைப் பார்த்தன. அவன் எதிர்பார்த்தது போல் தாரிணி நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்தபடியே கீழே இறங்

கினான். காலை அடுத்த படியில் வைக்க மறந்து மூன்றாம் படியில் வைத்துவிட கால் தடுமாறியது. சமாளித்து நிமிர்ந்தபோது தாரிணியை பால்கனியில் காணவில்லை.

''படியைப் பார்த்து இறங்குப்பா...'' என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்க்காமலே அது அபிராமியம் மாளின் குரலென்று தெரிந்துவிட அவன் பல்லைக் கடித்துக் கொண்டு திரும்பாமலே நடந்தான்.

''அடி... கிடி பட்டுருச்சாப்பா...'' அபிராமியம்மாள் எதிரேயே வந்து நின்று கொண்டாள்.

கையில் வாளி நிறைய தண்ணீர்... செடிகளுக்கு தண் ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள் போல.. இவளது கழுகுக் கண்களில் மாட்டிக் கொண்டோமேயென்று தன்னையே நொந்து கொண்டவன்,

''இல்லைம்மா...'' என்றான்.

''வயசுப் பிள்ளை... பார்வை பல பக்கம் தான் போகும். ஆனால் படியிலிறங்குகிறோம்ங்கிறதை மனசில் வைச் சுக்க வேணாமோ...''

'என்ன சொன்னால் இவள் வாயை மூடுவாள்?' யோசனை யுடன் வேனைத் திறந்து ஏறி உட்கார்ந்து வண்டியைக் கிளப்பினான்.

''தாரிணி கிளம்பியாச்சா...?'' அபிராமியம்மாள் வேண்டு மென்றே வினவினாள். அவள் இதழ்களில் விஷமப் புன் னகை குடிகொண்டிருந்தது.

''இப்போதே எப்படிக் கிளம்புவார்கள்... ஒன்பது இருப தாகி விடுமே...'' வேனைக் கிளப்பினால் அவள் மேல் மோதி விடுவோமே என்ற கவலையுடன் அவன் கூறி னான்.



ஏனென்றால் அபிராமியம்மாள் வேண்டுமென்றே அவனது வேனின் முன்னால் நின்றிருந்தாள்.

''அப்படியா...? இப்போதே கிளம்பி விட்டாளோன்னு நினைச்சேன்.''

''நினைக்காதீங்க... இப்ப வழியை விடுங்க.''

''அடடா... உன் வழியை மறிச்சுக்கிட்டா நின்னுக் கிட்டு இருக்கேன்?''

''ஏங்கம்மா.. உங்களுக்கு வீட்டில் வேலையேதும் இல்லையா?'' அவன் கடுப்புடன் விசாரித்தான்.

அபிராமியா அசருவாள்? அவள் அயராமல் பதிலளித் தாள்.

''வேலைக்கு என்னப்பா... அது நிறைய இருக்கு... உனக்கு 'டாடா' சொல்லலாமேன்னு நினைத்தேன்...'' அவ ளது கண்கள் எதிர் வீட்டு மாடி பால்கனியைப் பார்த்தன.

அவள் எதிர்பார்த்தபடியே தாரிணி எதிர்வீட்டு பால்கனி யில் வந்து நின்று கைப்பிடியில் சாய்ந்து கொண்டு வேனைப் பார்த்தாள்.

# 16



என்னுயிரில் குடியிருந்து

எழுத வைக்கும் என் தாயே!

''என்னது டாட்டா சொல்ல நிற்கறீங்களா? இது என்ன புதுப்பழக்கம்?'' விக்னேஷ் முகம் மாறினான்.

"புதுப் பழக்கம்தானா... இல்லை பழைய பழக்கமான்னு தான் தெரியலையே."

"ஏன்ம்மா. நான் ஒன்று கேட்டால் நீங்க வேறு எதையோ சம்பந்தமில்லாமல் பதில் சொல்கிறீர்களே."

'சம்பந்தமில்லைன்னுதான் இதுவரைக்கும் நினைச் சேன். ஆனால் சம்பந்தமிருக்கும் போல் தெரிகிறதே...'' அபிராமியம்மாள் விக்னேஷைப் பார்க்காமல் பால்கனி யில் நின்ற தாரிணியைப் பார்த்துக் கொண்டே கூறினாள்.

அவள் பார்வை போகும் திக்கைப் பார்த்த விக்னே ஷிற்கு தூக்கி வாரிப் போட்டது. தாரிணி நிற்கிறாளா?

'அடக்கடவுளே... வெறும் வாயை மெல்லுகிறவளுக்கு அவலை அள்ளிக் கொடுத்து விட்டாளே... இருந்திருந்து இந்நேரம் பார்த்துத்தானா அவள் வெளியில் வந்து நிற்க வேண்டும்? அபிராமியம்மாளின் வாய் ஆல் இன்டியா ரேடியோவாய் இருந்தால் கூடப் பரவாயில்லை. பி.பி.ஸி. ஆயிற்றே. ஒரு நொடியில் உலகம் முழுவதும் பரவி விடுமே. இப்போது எப்படி இவளைச் சமாளிப்பது?'

குமரனின் வழியைப் பின்பற்ற முடிவு செய்தான் அவன்.

"என்னமோம்மா... நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்றை நினைக்கும்பாங்க... ஆனால் பாருங்க என் விஷ யத்தில் நான் என்ன நினைத்தேனோ. அதை தெய்வம் அப்படியே நிறைவேற்றிருச்சு."

"அப்படி என்னப்பா மனதில் நினைத்தாய்? எதிர் வீட்டு பால்கனியில் யாராவது வந்து நிற்க வேண்டும்ன்னு நினைத்தாயா என்ன?" இடக்காக கேட்டாள் அபிராமியம் மாள்.



இந்த ஒரு வருடமாய் இவன் வேனில் அவள் போய் வருகிறாள். எவ்வளவுதான் வாயைக் கிளறினாலும் இந்தக் கல்லுளி மங்கன் அசைந்தே கொடுத்ததில்லையே... என்னவோ அவளுக்கும் இவனுக்கும் சம்பந்தமே இல் லாதது போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு நின்று கூட பதில் சொல்லாமல் போய் விடுவானே...

இன்று என்னடாவென்றால் அவளை அண்ணாந்து பார்த்துக் கொண்டு இவன் கால் தடுக்கி விழுகிறான்... இவன் வேனைக் கிளப்பினால் அவள் ஓடி வந்து தரிசனம் தருகிறாள். இந்த பால்கனி பேபியும் காபி குடிக்குமா என்பது போல் இத்தனை நாளாய் இரண்டும் ஊமைக் கோட்டான் வேஷம் போட்டு விட்டு இன்றைக்கு வகை யாய் அவள் பார்வையில் சிக்கிக் கொண்டு விட்டதுகளே.

"அம்மா.. போன வாரம் நான் வேனைக் கிளப்பும்போது நீங்கள் முன்னால்... இன்று போல் அன்றும் வந்தீர்களா?" அன்றைய நினைவில் பல்லைக் கடித்துக் கொண்டு கூறினான் விக்னேஷ்.

"ஆமாம்...?" இவன் என்ன சொல்ல வருகிறானென்ற யோசனையுடன் கேட்டாள் அபிராமியம்மாள்.

"அன்றைக்கு என்ன நடந்தது தெரியுமா?" விதியை நொந்து கொண்டு கேள்விக் கணையைத் தொடுத்தான் விக்னேஷ்.

"என்னப்பா நடந்தது...?" ஆவலாய் வினவினாள் அபிராமியம்மாள்.

ஏதாவது நல்லதுதான் நடந்திருக்கும் என்பது அவளது அனுமானம்.

ஆனால் அன்று விக்னேஷின் வேன் டயர் பஞ்சராகி பிள்ளைகளை அவன் செலவில் நான்கு ஆட்டோக்களில்

ஏற்றிக் கொண்டு போய் பாதுகாப்பாய் விட்டு விட்டு வந்து பஞ்சரான நான்கு டயர்களையும் சரி பண்ணி மாலையில் பிள்ளைகளைக் கூப்பிட ஓடுவதற்குள் போதும் போது மென்றாகி விட்டது.

ரிப்பேர் பண்ணிய மெக்கானிக் வாய்விட்டே கேட்டு விட்டான்.

"ஏன் சார்... ஒரு டயர் பஞ்சராகும். இல்லை இரண்டு டயர் பஞ்சராகும். ஒன்று சொன்னது போல் நாலு டயரும் சேர்ந்து எப்படி பஞ்சராச்சு? காலையில் யார் முகத்தில் முழிச்சீங்க சார்?"

அந்த அழகுத் திருமுகத்தைக் கொண்ட அபிராமியம் மாள் தான் 'என்ன நடந்தது?'ன்னு கேட்கிறாள். ஒரு நிமிடம் இதுதான் நடந்ததுன்னு சொல்லி விடலாமா வென்று யோசித்தவன் தாரிணியின் நினைவு வந்ததும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

"ஒன்றா.. இரண்டா.. காலையில் போனதிலிருந்து சாயந்திரம் திரும்பி வரும் வரை அவ்வளவு தூரம் ஆனந்தப்பட்டுப் போனேன். தெரிந்தவர் ஒருத்தர் கூடக் கேட்டார்... காலையில் யார் முகத்தில் முழிச்சீங்கன்னு.. அப் போதே உங்களுக்கு கோவில் கட்டிக் கும்பிட வேண் டும்ன்னு நினைத்துக் கொண்டேன்..."

மானசீகமாய் அபிராமியம்மாளின் படத்திற்கு மலர் மாலை சூட்டியபடி அவன் தொடர்ந்து சொன்னான்.

"இன்றைக்கும் உங்களைப் பார்த்துவிட்டுப் போகி றேன் என்னவெல்லாம் நடக்கப் போகுதோ..?" பயந்தபடி இவன்கூற அபிராமியம்மாள் வாயெல்லாம் பல்லானாள்.

ஒரு பொய்க்கு இவ்வளவு சந்தோசமா?



'பொய்மையும் வாய்மையிடத்து'ன்னு எழுதி வைத்து விட்டுச் சென்ற வள்ளுவர் வாழ்க.

"உனக்கும் தெரிந்து போச்சா...?"

'எதைச் சொல்கிறாள்? இந்தம்மா வம்பு மடத்தின் தலைவியென்பது ஊருக்கே தெரியுமே.. அதைச் சொல் கிறாளா?'

"என் முகராசியைப் பற்றி உனக்கும் தெரிந்து போச்சா? என் புருசன் சொல்வார்.. அபிராமி உன் முகத்தில் முழிச் சுட்டுப் போனால் வராத கடன் கூட வந்து விடும்ன்னு சொல்லுவார்."

'பாவம் சோமசுந்தரத்தால் வேறு எப்படிச் சொல்ல முடியும்?' மனதிற்குள் அந்த வாயில்லா பூச்சிக்கு பரி தாபப்பட்டுக் கொண்டே விக்னேஷ் வேனைக் கிளப்பி னான்.

அபிராமியம்மாள் அவன் சொன்ன பொய்யில் தாரி ணியை மறந்தவளாய் பூரிப்புடன் வீட்டிற்குள் போனாள்.

பூச்செடிகளுக்கு தண்ணீர் ஊற்றப் போன மனைவி புன்னகையுடன் வரவும் சோமசுந்தரம் ஆச்சர்யப்பட்டுப் போனார்.

'என்ன இப்படி சிரித்துக் கொண்டே வருகிறாள்? யார் வாயையும் கிளறாமல் வம்பு கிடைத்து விட்டதா?'

"என்னடி அபிராமி... வாய் நிறைய சிரிப்போடு வருகிற? எதுவும் லாட்டரி சீட்டு விழுந்து விட்டதா?"

"அதைத்தான் ஒழித்து ஒரு மாமாங்கம் ஆச்சே."

"அப்புறம் வேறு எதுக்கு இந்தச் சிரிப்பு?"

"மாடி வீட்டுப் பிள்ளை இருக்கே..."

''ஏண்டி.. மாடியில் ரெண்டு தடியன்கள்தான் இருக்கிறாங்க. அவங்க இனிமேல்தான் யார் வீட்டுக்காவது மாப்பிள்ளை ஆகி அதற்கு பின்னால்தான் பிள்ளை வரவேண்டும்.''

''ஒழுங்காய் பேசக்கூடாதுன்னு விரதம் வைச்சிருக்கீங்களா.''

''உன்னைக் கல்யாணம் பண்ணி முடிச்சாச்சு.. இனி விரதமிருந்து என்ன பயன்?''

''ஏன் இருந்துதான் பார்க்கிறது... அறுபத்தி ஐந்து வயதில் புத்தி போகிற போக்கைப் பார். பேரன் பேத்தி எடுத்தாச்சு. விரதமிருக்கிறதைப் பத்திப் பேசறார். டில்லியிலிருக்கும் பிள்ளைக்கு எழுதிப் போடறேன் பாருங்க.''

''ஏண்டி இப்ப நான் என்ன கேட்டேன்? ஏன் சிரிக்கிறன்னு கேட்டேன். நீ என்னை அழுக வைக்கப் பார்க்கிற... மாடியில் ரெண்டு கைப்பிள்ளைகள் குடியிருக்கு... அதில் எந்த கைப்பிள்ளை உன் கிட்ட என்ன சொல்லிச்சு?''

''நம்ம விக்னேஷ் இருக்கானில்ல... அவன் தான்.''

''நம்ம விக்னேஷா? நேற்றுத்தான் அவனை 'கட்டையில் போறவன்'னு திட்டினே...''

''அது நேற்று... இது இன்றைக்கு.''

''நேற்று என்ன சொன்னான்? இன்றைக்கு என்ன சொன்னான்?''

''நேற்று அவன் இறங்கி வந்தபோது காய்கறி விற்கிற பொன்னம்மாள் வந்து எதையோ கேட்டுக்கிட்டு இருந்தாள். நான் வரவும் போயிட்டாள். அவ என்னப்பா சொன்னாள்ன்னு யதார்த்தமாய்த்தான் கேட்டேன்.''



''யதார்த்தமாய் கேட்டாய்...? அதுவும் நீ..? சொல்லு.. சொல்லு.''

''அதுக்கு 'உங்களுக்குத் தேவையானது எதையும் சொல்லவில்லை'ன்னு பட்டுன்னு சொல்லி விட்டுப் போயிட்டான்.''

''பரவாயில்லையே... அப்படியா சொன்னான்.. ஹா.. ஹா.''

''இதுக்கு சிரிப்பாணி பொத்துக்கிட்டு வருமே...''

''சரி சரி. இன்றைக்கு என்ன சொன்னான்?''

''என் முகத்தில் முழிச்சுட்டுப் போனால் அன்றைக்கு பூராவும் அவனுக்கு நல்லதாகவே நடக்குதாம்.''

''அட...? ஒரு வீட்டில் வாடகைக்கு குடியிருந்தால் ஒரு மனுசன் எத்தனை பொய் சொல்ல வேண்டியிருக்கு பார்... சரி விடு. அவன் கஷ்டம் அவனுக்கு. நீ வந்து வழக்கமாய் எனக்கு கொடுக்கும் காலைக் கஷ்டத்தைக் கொடு.''

''எதை...?''

''காலை டிபனைத் தாண்டி சொல்கிறேன்.''

''ஒரு நாள் பட்டினி போட்டால் தெரியும். மூன்று வேளையும் நான் கொடுப்பது கஷ்டமா... கொடுக்கா விட்டால் நஷ்டமான்னு...''

அபிராமியம்மாள் விக்னேஷை மறந்து காலைப் போர்க்களத்தில் கணவனைச் சந்திக்க ஆயத்தமானாள்.

# 17



உன் புகழை என் நாவால்

சொல்லச் சொல்ல மனம் இனிக்கும்

தாரிணி சந்தோசமாக இருந்தாளென்பதை அவள் வேனில் ஒலித்த பாடலுடன் சேர்த்து ஹம் செய்து கொண்டிருந்ததிலேயே தெரிந்தது. காற்றில் முடி பறக்க இடது கையால் ஒதுக்கி விட்டுக் கொண்டாள். வலது கையால் முன்புறச் சீட்டின் மேல் தாளம் போட்டுக் கொண்டிருந்தாள்.

வெகு நாட்களுக்குப் பின் அவளை மலர்ச்சியான முகத்துடன் பார்க்கும்போது மனம் நிறைந்தது விக்னேஷிற்கு.

"என்னங்க.. இன்றைக்கு ஜாலி மூடில் இருக்கீங்க போல..."

"அப்படியா...? சந்தோசமாக தெரிகிறேனா?"

"உங்களுக்கே அது தெரியவில்லையா? சரியாப் போச்சு போங்க."

வாய்விட்டு கலகலவென்று தாரிணி சிரிப்பதைப் பார்க்க வெகு அழகாய் இருந்தது. அவளின் அந்த உல்லாசம் அவனையும் தொற்றிக் கொண்டது. டேப்பில் ஒலித்த பாடலுடன் அவனும் கூடப் பாடினான்.

'ஒரு பெண்ணைப் பார்த்து நிலவைப் பார்த்தேன்
நிலவில் ஒளியில்லை
அவள் கண்ணைப் பார்த்து மலரைப் பார்த்தேன்.'



அவள் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தாள். இவனுக்கு பாடக்கூடத் தெரியுமா? நினைத்ததை வாய்விட்டுக் கேட்டாள்.

"நான் பாத்ரூம் பாடகன்ங்க."

"எல்லோரும் அப்படித்தான்."

"இல்லையே.. நீங்கள் ஹம் பண்ணியதே கேட்க எவ்வளவு இனிமையானதாக இருந்தது தெரியுமா?"

"ஈஸிட்... இப்போது நீங்கள் பாடியதை விடவா?"

விக்னேஷ் அவளைத் திரும்பிப் பார்த்து வரிசைப் பற்கள் தெரிய சிரித்தான். கடுமையான அவன் முகத்தில் வெள்ளைப் பறகள் பளிச்சிட அவன் சிரித்தது அவ்வளவு அழகாய் அவள் மனதை கொள்ளை கொள்ளுவதாய் இருந்தது. அந்தச் சிரிப்பில் மனதைப் பறிகொடுத்தவள்.

"உங்களுக்கு சிரிக்கக் கூடத் தெரியுமா?" என்று கிண்டலாகக் கேட்டாள். அவள் கிண்டலை அவனும் ரசித்தான்.

"என்னங்க இது இப்படிக் கேட்டுட்டிங்க. மனுசப் பிறவிகளாப் பிறந்தவங்களுக்கு சிரிக்கத் தெரிய வேண்டும். மற்ற ஜீவராசிகளையும் நம்மையும் வித்தியாசப்படுத்துவது சிரிப்புத்தானே."

"ம்ம்... கலைவாணருக்கு அடுத்து சிரிப்பிற்கு இவ்வளவு விளக்கம் சொன்னது நீங்கள்தான்..."

"இந்தக் காலத்துப் பெண் நீங்க... வைகைப் புயல் வடிவேலுவைத்தான் தெரிஞ்சிருக்கணும். நீங்க கலைவாணர் பற்றியெல்லாம் பேசறீங்க."

''நான் அக்ரிகல்ச்சரல் யுனிவர்சிட்டியில் வேலை பார்க்கிறவள். யுனிவர்ஸிட்டியின் மதிப்பு எனக்குத் தெரியும்.''

''ஏங்க... காமெடி பற்றித்தானே இப்போது பேசிக் கொண்டிருந்தோம். நீங்க அதற்குள் பல்கலைக் கழகத்திற்கு தாவறிங்க.''

''கலைவாணர் ஒரு நகைச்சுவைப் பல்கலைக் கழகம். எல்லா காமெடியன்களும் அந்தப் பல்கலைக் கழகத்தில் படித்தவர்கள்தானே...''

''பின்னிட்டீங்க போங்க... நான் உங்களை என்னமோன்னு நினைத்தேன்.''

''நான் கூடத்தான்.. உங்களை என்னமோன்னு நினைத்தேன்.''

'என்னமோ'விற்கு அர்த்தம் தெரிந்தவர்களாய் இருவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டனர்.

வேன் அகன்ற சாலையில் ஓடி அவளது கல்லூரிக்கு முன் போய் நின்றது. விக்னேஷ் இன்ஜினை அணைத்துவிட்டுத் திரும்பிப் பார்த்தான். அவள் இறங்காமல் உட்கார்ந்திருந்தாள்.

''காலேஜ் வந்து விட்டதே இறங்கவில்லையா?''

''இறங்கவே மனசில்லைங்க.''

விக்னேஷின் மனக்கதவை தட்டியது அவள் வார்த்தைகள்.

''ஏன்...?'' மனம் பரபரக்க கேட்டான்.

''தெரியவில்லைங்க. இப்ப உங்க கூட பேசிக்கிட்டு இருக்கிறபோது இருக்கிற கான்பிடன்ஸ்... நீங்கள் போனதும் உங்கள் கூடவே வந்து விடுகிறது. எனக்கு பயமாய் இருக்கிறது...''



ஒரு கல்லூரியின் விரிவுரையாளர் முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் மூன்று வயதுக் குழந்தை போல் அடம் பிடித்தாள். அவனுக்கு மனதை என்னவோ செய்தது. அவள் பக்கம் திரும்பி அமர்ந்து கொண்டான்.

''பயமாய் இருக்குன்னு உங்க ஸ்டூடன்ட்தான் சொல்லனும். நீங்க சொல்லலாமா? இப்ப என்ன.. என் கூட பேசிக் கொண்டிருந்தால் பயம் போகுது.. அவ்வளவு தானே.. சாயந்திரம் நிறைய நேரம் பேசலாம்...''

''பிராமிஸ்...?''

''பிராமிஸ்.''

தாரிணி உற்சாகமாய் அவனைப் பார்த்துக் கொண்டே கீழே இறங்கினாள். திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டேயிருந்துவிட்டு கண் பார்வையிலிருந்து அவள் மறைந்ததும் கிளம்பினான்.

வகுப்பறைக்குள் அவள் நுழைந்ததும் ''ஏய்... கடுவன் பூனை வந்திடுச்சுடி...'' மாணவிகள் தங்களுக்குள் பேசிக் கொள்ள மாணவர்களோ,

''லேடி ஹிட்லர் இன்றைக்கு என்ன விளாசப் போகுதோ..'' என்று ஒருவர் காதை ஒருவர் கடித்துக் கொண்டனர்.

''குட்மார்னிங் எவரிபடி...'' உற்சாகமாய் தாரிணி வகுப்புக்குள் வர அனைவரும் 'ஆ'வென்று வாய் பிளந்து அவளையே பார்த்தனர்.

சுறுசுறுப்பாய் பாடம் எடுத்த தாரிணி இடை இடையே ஜோக் சொன்னாள். மாணவர்கள் பேசிய ஹாஸ்ய பேச்சுக்களை ரசித்துச் சிரித்தாள். என்றைக்குமில்லாமல் அன்று சகஜமாய் தங்களுடன் கலந்துரையாடியதைக் கண்டவர்கள் தங்கள் கண்களைத் தாங்களே நம்ப முடியாமல் ஆனந்தத் திகைப்பில் ஆழ்ந்தனர்.

''என்ன உங்களுக்குள் ரகசியம் பேசிக்கறீங்க. என்னை யும் உங்கள் கூட்டணியில் சேர்த்துக் கொள்ள மாட்டீர் களா?'' அவள் மாணவ, மாணவிகளைப் பார்த்துச் சிரித் தாள்.

''நத்திங் மேம்... யு ஆர் ஸோ பியூட்டி டுடே.. அதைத் தான் பேசிக் கொண்டிருந்தோம்.'' ஒரு மாணவி கூறினாள்.

''ஏன்னு தெரியுமா?''

''வி டோன்ட் நோ மேடம்.''

''பிகாஸ்.. ஐ ஆம் ஸோ ஹேப்பி டுடே. சந்தோசமிருந் தால் அழகு கூடித்தான் தெரியும்.''

மதிய உணவு இடைவேளையில் தனக்குள் நினைத்துச் சிரித்துக் கொண்டவளிடம் மேனகா கண் சிமிட்டினாள்.

''என்னடி.. நீயாய் பேசிக்கறே. தனக்குத்தானே சிரிச்சுக் கறே.. என்ன விஷயம்? யாரந்த ரோமியோ...?'

''ஒரு சேமியாவும் இல்லை...''

''நம்பச் சொல்கிறாயா?''

''நம்பாவிட்டால் போ.. எனக்கென்ன வந்தது..'' என்றவள் மீண்டும் 'களுக்'கென சிரித்தாள்.

உள்ளே ஏதோ வேலையாக வந்த சின்னம்மாள் மனம் விட்டு சிரித்த தாரிணியைக் கண்டு நெகிழ்ந்தாள்.



''சிரி தாயி... நல்லாச் சிரி.. இப்பத்தான் உன் முகத்தில் சிரிப்பையே பார்க்கிறேன்...''

மேனகாவின் மனதிலும் அதே எண்ணம்தான். சிநேகி தியின் சிரிப்பை ரசித்தபடி குறுக்கிடாமல் இருந்தாள்.

''மேனகா.. 'என்னமோ'ன்னா என்ன அர்த்தம்?''

மேனகா யோசித்தாள். அவளுக்கு ஒன்றும் தோன்ற வில்லை. கடைசியில் ''என்னமோ'ங்கிறதுக்கு என்னென் னவோ அர்த்தங்கள் உண்டு. அது இடத்தைப் பொறுத்து மாறுபடும்...'' என்றாள்.

''எப்படி...''

''மறை கழண்டவனைப் பார்த்து 'என்னமோ'ன்னால் லூசுன்னு அர்த்தம்.''

''கிழஞ்சது போ....'' தாரிணி விழுந்து விழுந்து சிரித் தாள்.

''அப்புறம்?''

''அப்புறம்... மனசு கஷ்டமாக இருந்தால் 'என்னமோ' போலிருக்குன்னு சொல்வாங்க.''

''ஓஹோ..! அப்புறம்?''

''அப்புறம் ஒருத்தர் கிட்ட ஒருத்தர் ஜொள்ளு விட்டுக் கொண்டால் 'என்னமோ' போல் ஆகி விடுவார்கள். அதாவது உன்னை மாதிரி..''

''ஜொள்ளு..? ஹாஹா...''

அவள் சிரித்து முடிக்கும் வரை காத்திருந்த மேனகா கனிவாய் கேட்டாள்.

''யாருடி...?''

தாரிணி மேனகாவின் கரம் பிடித்து விரலோடு விரல் கோர்த்துக் கொண்டாள். அவள் முகம் சிவந்தது.

''மேனகா... இப்போதுதான் வாயைத் திறந்து ஓர் வார்த்தை பேசியிருக்கிறார். இன்னும் நன்றாகப் பேசிப் பழகி.. என் மனதிலிருப்பதை அவரிடம் சொல்லிவிட்டு உன்னிடம் சொல்கிறேனே.''

''இன்னும் அவரிடம் சொல்லவேயில்லையா?''

''இல்லைடி.''

''அவர் மனதில் என்ன இருக்குன்னு தெரிந்து கொண்டாயா?''

''நான்தான் அவர் மனதில் இருக்க வேண்டும் மேனகா.''

''இருப்பாய்டி... இருப்பாய்... நான் சும்மா கேட்டேன்.''

''சும்மாகூட இனி அப்படிக் கேட்காதே...''

''சரி. கேட்கவில்லை.. போதுமா?''

''ம்ம்..''

தோழியின் தோள் மேல் தலை சாய்த்து கண்களை மூடிக் கொண்டாள் தாரிணி. வார்த்தைகள் தேவைப்படாத மௌனம் அவர்களைச் சூழ்ந்தது. பேச வேண்டிய அவசியமேயில்லாத இது போன்ற தருணங்களில் சாய்ந்து கொள்ள தோள் கொடுக்கும் தோழமை இப்போதும் தாரிணிக்கு தோள் கொடுத்தது. பெற்றவர்களைப் பிரித்து சோதித்த இறைவன் அவர்களுக்கு பதிலாகத்தான் தோழமையை பரிசளித்தானோ?

தாரிணி விட்ட மௌனக் கண்ணீர் மேனகாவின் தோள் நனைத்தது.



# 18



உனதருளை என் எழுத்தில்

நான்வடிக்க உயிர் கொடுத்தாய்

'**கணகண**'வென்று மணியொலிக்க விஷ்ணு துர்க்கையம்மனுக்கு ஆராதனை நிகழ்ந்து கொண்டிருந்தது. கற்பூர ஜோதியின் ஒளியினில் மூக்குத்தி ஜொலி ஜொலிக்க, முகத்தினிலே கருணை வழிய, கண்களிலே அருள் பார்வையோடு,

'காத்தருள நானிருக்கும்போது, கவலை உனக்கெதற்கு' என்று புன்னகைத்தபடி காட்சி தந்தாள் அம்மன். பச்சைப் பட்டாடையணிந்து பாரினில் வாழும் மக்களின் வாழ்வில் பசுமையை கொடுக்கும் அம்மனிடம் கண்ணீர் மல்க வேண்டிக் கொண்டிருந்தாள் தாரிணி.

''அம்மா! விஷ்ணு துர்க்கையே! எனக்கொரு வழிகாட்டுன்னு நான் உன் காலடியில் வீழ்ந்தபோது எனையெழுப்பி கண்ணீர் துடைத்து விக்னேஷை என் கண்ணில் காட்டினாய். பெற்றவளாய் நீ தேடித் தந்த துணையின் பின்னால் என் மனம் சென்று விட்டது. அவர் பண்பிலே இமயம். பார்வைக்கு அந்த விஷ்ணுவைப் போல் கார்மேக நிற அழகன். வீரத்திலே உன் திருமகன் தான். ஏட்டறிவு அவருக்கில்லை. பட்டறிவு ஏராளம். அவர் கரம் பிடித்தால் என் வாழ்வு மேம்படும். என் உள்ளரணம் ஆறும். அவரிடம் இன்று என் மனதை திறந்து சொல்லப் போகிறேன். அவர் என்னை... என் காதலை ஏற்றுக் கொள்ள நீதான் அருள் புரிய வேண்டும். கை

விட்டு விடாதே கனக துர்க்காதேவியே!... காத்தருள்வாய் விஷ்ணு துர்க்கா தேவியே!...'

மனமார வேண்டிவிட்டு அம்மனையும், நவக்கிரகங்களையும் வணங்கி வலம் வந்து கோவிலில் அமர்ந்து காத்திருந்தாள் தாரிணி. அதே நேரம் வண்டியை ஓட்டிக் கொண்டு குவார்ட்டர்ஸுக்கு வந்து கொண்டிருந்த விக்னேஷின் மனதிலும் ஒரு திட்டம் இருந்ததை அவள் அறியவில்லை.

அது காதலர்களின் இடையேயிருந்த காதலை இருவருக்கும் உணர்த்த விஷ்ணு துர்க்கை ஆடிய சிறு விளையாட்டு.

தாரிணியை கல்லூரியில் இறக்கி விட்டுவிட்டு விக்னேஷ் வழக்கமான தன் ஸ்டாண்டிற்கு பகல் நேர வாடகைக்குப் போக வேனைக் கொண்டு போய் நிறுத்திய போது அங்கே நின்று கொண்டிருந்த மற்றொரு வேனின் உரிமையாளரான ரகு விக்னேஷிடம் வந்தான்.

''ஏண்டா... இரண்டு நாளாய் ஸ்டாண்டில் என்னைப் பற்றியே விசாரிக்கிறாயாமே... என்ன விஷயம்?''

''எல்லாம் நல்ல விஷயம்தான். நீயெங்கே போய் விட்டாய்?''

''கிராமத்து கல்யாணம் ஒன்றிற்கு இரண்டு நாட்கள் வேன் வேண்டுமென்று மொத்த வாடகைக்குப் பேசினார்கள். போய் பெண்ணழைத்து வந்து... மாப்பிள்ளை ஊர்வலம் போய்... அப்புறம் பொண்ணு, மாப்பிள்ளை இரண்டு பேரையும் ஊர்வலமாகக் கூட்டிக்கிட்டுப் போய் அவர்கள் குல தெய்வம் கோவிலில் கல்யாணமும் பண்ணி வைத்துவிட்டு, பெண் வீட்டு கிராமத்திற்கு போய்



அங்கேயும் கோவில் கோவிலாய் போய் தேங்காய் உடைத்து அர்ச்சனை பண்ணிவிட்டு ஒரு வழியாய் மாப்பிள்ளை வீட்டில் ரெண்டு பேரையும் முதலிரவிற்கும் அனுப்பி விட்டு நேற்று ராத்திரித்தான் வந்தேன். அலுப்புக் காய்ச்சல் வந்து விட்டது... மாத்திரையைப் போட்டு தூங்கி விட்டு காலையில்தான் ஸ்டாண்டுக்கு வந்தேன்.''

''இப்படி மூச்சு விடாமல் பேசினால் அலுப்புக் காய்ச்சல் வராமல் என்ன பண்ணும்? கொஞ்சம் மூச்சு விடுடா.''

''மூச்சு விட முடியாத வேலைன்னு அப்போத்தானே உனக்குப் புரியும். ஆனால் பாருடா விக்னேஷ். கிராமத்துக்காரங்க அன்பே தனி. தனியாய் எனக்கு ஒரு வீடு கொடுத்து... நேரா நேரத்திற்கு காபி, பலகாரம், கல்யாணச் சாப்பாடுன்னு தூக்கு வாளி, டிபன் கேரியர், சட்டின்னு பாத்திரங்களில் அடைத்து அனுப்பி எனக்கு ராஜ உபசாரம் பண்ணிட்டாங்கடா. கல்யாண மாப்பிள்ளையைக் கூட இப்படிக் கவனித்திருக்க மாட்டார்கள். நல்ல டிபன், சாப்பாடு, கள்ளிச் சொட்டு போல் பாலில் கலந்த காபின்னு ரெண்டு நாள் செம வெட்டு வெட்டினேன்...''

''கல்யாணத்தை முடித்து வைத்துவிட்டு வந்திருக்கிறாய்... இந்த நேரத்தில் இன்னொரு கல்யாணத்தையும் நீ முடித்து வைக்கணுமே... அதற்குத்தான் உன்னைத் தேடினேன்.''

''என்னடா விஷயம்...? புதிர் போடாமல் நேரடியாய் சொல்லு.''

''ரகு உன் அண்ணனுக்கு இன்னும் கல்யாணம் ஆகவில்லை தானே...''

"ஆமாண்டா. அது ஒரு கதை. எங்கள் ஜாதியில் பெரிய படிப்பு படித்து பெரிய வேலை பார்க்கும் பெண்கள் ரொம்பக் கம்மி இவன் என்னவென்றால் இவனை மாதிரியே பெண்ணை எதிர்பார்க்கிறான். எதையோ கண்டால் எதையோ காணோம்கிறது மாதிரி... பெண்ணுக்கு அழகிருந்தால் படிப்பில்லை... படிப்பிருந்தால் வேலையில்லை. எல்லாமிருந்தால் எங்கள் ஜாதிப் பெண்ணாக இல்லை. அதையும் தாண்டிப் பார்த்தால் அந்தப் பெண் கல்யாணமாகி ரெண்டு புள்ளை பெத்த பெண்ணாக இருக்கிறது... இவன் கொடுமை பெருங் கொடுமைடா. இவனுக்கு ஒரு கல்யாணம் ஆனால்தானே எனக்கு வழி பிறக்கும்? இவனை மாதிரி 'லொட்டு, லொசுக்கு' கண்டிசனெல்லாம் எனக்கு இல்லை. எனக்கு இப்போதே ரம்பா, ஊர்வசி மாதிரி பெண்களைத் தரேன்னு சொல்லி ஆள் மேல் ஆள் தூது விடுறாங்க..." ரகு அங்கலாய்த்துக் கொண்டிருந்தபோது அருகில் நின்று அவர்களின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்த இன்னொருவன் கேட்டான்.

"எந்த ரம்பா, ஊர்வசிடா... சினிமா நடிகைகள் தானே... ரம்பா இன்னும் அழகா அம்சமா இருக்கு... ஆனால் ஊர்வசியை ஏன் சொல்றே? அவங்க அம்மா கேரக்டருக்கு வந்து விட்டாங்களே..."

"அடேய்... அடேய்... நான் தேவலோக ரம்பா, ஊர்வசியைச் சொன்னேன்டா.." ரகு பல்லைக் கடித்தான்.

"அவங்களை எப்போது நீ பார்த்தாய். தேவலோகத்திற்குப் போனாயா?"

"அதை வேறு செய்யச் சொல்கிறாயா? எல்லாம் கேள்வி ஞானம்தான்."



"இப்படியே கதை விடுங்கடா..." அவன் அசுவாரஸ்யமாய் பேப்பர் படிக்க ஆரம்பிக்க விக்னேஷ் சிரித்துக் கொண்டே ரகுவின் தோளைத் தட்டினான்.

"சரி விடு. அவனுக்கு உன்கூட வம்பு இழுக்கணும்னு ஓர் ஆசை. ரெண்டு நாள் கழித்து வந்திருக்கிறாயில்ல.. அதுதான். நம்ம விஷயத்தைப் பத்திக் கொஞ்சம் பேசலாமா?"

"நம்ம விசயமா? என்ன விசயம்?"

"உன் அண்ணனுக்கு ஏற்ற பொண்ணாய் இங்கே கோயம்புத்தூரிலேயே ஒரு பெண்ணிருக்கு. உங்க ஜாதி தான். எம்.எஸ்ஸி. அக்ரி படிச்சுட்டு அதுக்கும் மேலேயும் படிச்சுட்டு அக்ரிகல்ச்சரல் காலேஜிலேயே லெக்சரரா இருக்கு. பெண்ணும் அழகாயிருக்கும்... என்ன சொல்றே?"

"அக்ரிகல்ச்சர் காலேஜ் லெக்சரரா? யாரு அந்த மாசிலாமணியின் தங்கையா? பெயர் கூட தாரிணியாச்சே..."

விக்னேஷிற்கு சர்வாங்கமும் ஆடியது. அவனது தாரிணியின் பெயர் உள்ளூர் மாப்பிள்ளை வட்டாரத்தில் அவ்வளவு பிரசித்தி பெற்ற பெயர் ஆகிவிட்டதா? இதற்கே அந்த மாசிலாமணியை ஓட ஓட விரட்டி அடிக்க வேண்டும்.

மனக்கண்ணில் மாசிலாமணியை அழைத்து மானசீகமாய் நாலு அறை கன்னத்தில் விட்டான்.

"ஏண்டா...? அந்தப் பெண்ணை உனக்கு முன்பே தெரியுமா?"

"இந்த ஊருக்கே தெரியுமே.."

"ஏண்டா.. கல்யாணத்திற்கு என்று ஒரு பெண்ணிருந்தால் அந்த விவரம் மாப்பிள்ளையை வைத்திருப்பவருக்கு தெரியாமல் போகுமா?"

''அதுவேதான் வேறு என்ன? அந்தப் பெண் பாவம்.. ஆள் அழகுதான்.. குணமும் தங்கம்.. அடக்கத்தில் அந்தப் பெண்ணிற்கு இணை யாருமில்லை.. அவ்வளவு பெரிய படிப்பை படித்திருந்தும்.. அவ்வளவு பெரிய வேலை பார்த்தும் அடக்கமாய் இருக்கும்.. ஆனால்..''

''என்னடா 'ஆனால்'? நகை... சீர்வரிசைன்னு பிராப் ளமா?''

''ஏண்டா.. அவ்வளவு சம்பளம் வாங்குகிற பெண் ணிற்கு எதுக்குடா நகையும், சீர்வரிசையும்..? அதைப் பற்றிப் பேச்சே இல்லை.''

''வேறு என்னடா பிரச்சனை?''

''அந்தப் பெண்ணிற்கு ஜாதகம் சரியில்லைடா. அதுதான் பிரச்சனை..''

''அது அவளுடைய அண்ணன்காரன் கட்டிவிட்ட கதை..''

''எங்களுக்கும் அந்த சந்தேகமுண்டு.. ஆனால் அதை எப்படி நிரூபிப்பது.. புதிதாய் ஜாதகம் எழுதினால்தான் உண்டு..''

''அதை நான் செய்கிறேன்.. அந்தப் பெண்ணின் பெர்த் செர்டிபிகேட்டை வாங்குவோம். நீயும் கூடவா. அந்தப் பெண் பிறந்த ஆஸ்பத்திரியைத் தேடுவோம். அந்தத் தேதியில் அவள் பிறந்த நேரம் ஆஸ்பத்திரி ரெஜிஸ்டரில் பதிவாகியிருக்கும் இல்லையா.. அதை வைத்து உண்மையான ஜாகத்தை எழுதுவோம்..''

''இது எனக்குத் தோன்றாமல் போச்சே.. நல்ல காரியத் திற்கு உதவ நான் என்றுமே ரெடி தாண்டா விக்னேஷ்... நீ பெர்த் சர்டிபிகேட்டை அந்தப் பெண்ணிடம் கேட்டு



வாங்கிக் கொண்டு அவங்க எந்த ஆஸ்பத்திரியில் பிறந்தாங்க என்கிற விவரத்தையும் தெரிந்து கொண்டு வா... நாம் இரண்டு பேருமே போய் உண்மையைக் கண்டுபிடிப்போம்.. ஆமாம் இவ்வளவு மெனக்கெடு கிறாயே... அந்தப் பெண்ணை உனக்குத் தெரியுமா?''

விக்னேஷின் தொண்டை அடைத்தது. வார்த்தைகள் வெளிவராமல் அவன் தவித்தான்.

'ஆமாம்.. அவளை நான் உயிருக்குயிராய் காதலிக் கிறேன்' என்று எப்படித் தன் நண்பனிடம் சொல்லுவது?

## 19



வண்ணத்திரை ஓவியமாய்

வரம் கொடுத்தாள் விஷ்ணு துர்க்கை!

ஒரு வினாடிக்குள் சுதாரித்துக் கொண்டான் விக் னேஷ். தன் முகத்தில் கஷ்டப்பட்டு ஒரு அசட்டையைக் கொண்டு வந்து,

''ரொம்பத் தெரியாதுடா.. என் வேனில் மாத வாடகை யில் வருகிறவங்க. அவங்க வீட்டிற்கு எதிர் வீட்டில் தான் நான் குடியிருக்கிறேன். அவங்க அண்ணன் பொய் ஜாதகம் எழுதி அந்தப் பெண்ணின் கல்யாணத்தை கலைத்து விடுகிறதாய் தெரு பூராவும் பேசிக்கிறாங்க. மனசு தாங்கலை. நீ வேற உன் அண்ணன் கல்யாணம் தள்ளிப் போவதால் உன் ரூட் கிளியராகலைன்னு ரொம்ப பீலிங்கில் இருந்தயா... பாவம்.. உன்னைக் கல்யாணம்

பண்ணிக்க காத்திருக்கும் ரம்பையும், ஊர்வசியும் ஏங்கி இளைத்துப் போய் குச்சி குச்சி காலும், கையுமாய் ஆகி விட்டால் என்ன செய்வதுன்னு ஒரு கரிசனத்தில் வழி சொன்னேன். இஷ்டம்ன்னா செய்.. இல்லைன்னா.. விட்டுவிடு..'' பேப்பரை எடுத்துப் படிக்க ஆரம்பித்த வாறு கூறினான் விக்னேஷ்.

''விட்டு விடுவதா.. ஏண்டா சும்மா இருந்தவனைக் கூப்பிட்டு கல்யாண ஆசையைத் தூண்டிவிட்டுவிட்டு இப்ப கழட்டிக்கவா பார்க்கிற? படவா..!''

''ஏண்டா உங்க அண்ணனுக்குத்தானே கல்யாணம் பேசினேன்? உனக்குப் பேசியது போல் இந்தக் குதி குதிக்கறாயே?''

''அண்ணனுக்குத்தான் கல்யாணத்துக்குப் பெண் தேட வேண்டும். எனக்கு ஆல்ரெடி பொண்ணு ரெடி...''

''அப்போ.. ரம்பை, ஊர்வசியின் கதி..''

''இந்திரலோகத்தில் யாரையாவது பிடித்து செட்டில் ஆகிக்க வேண்டியதுதான்... என்னை நம்பியிருக்கிற பெண் ரம்பையில் கொஞ்சம், ஊர்வசியில் கொஞ்சம்ன்னு சேர்த்து செய்த கலவைடா..''

''அப்படிப்பட்டவள் உன்னை எப்படிடா நம்பினாள்?''

''ஏண்டா எனக்கென்னடா குறை? சும்மா ஹீரோ மாதிரி இருக்கேன்.''

''ஹீரோவாவே இரு. எனக்குத் துணை வருகிறேன்னு சொல்லிட்ட இல்ல. நீ ரியல் ஹீரோதண்டா...''

உற்சாகமாய் அவனிடம் பேசிவிட்டு மதிய உணவிற் காக வீட்டிற்கு போய் உணவை தட்டில் போட்டுக் கொண்டு



உட்கார்ந்தபோது ஒரு பிடி சோறு கூட அவன் தொண் டையில் இறங்கவில்லை. அப்படியே உணவை வைத்துவிட்டு கை கழுவி விட்டு ஹாலுக்கு வந்தவனின் பார்வை எதிர்வீட்டின் மேல் நிலைத்தது.

முதல் நாளிரவு தாரிணி அமர்ந்திருந்த பால்கனியில் அவன் பார்வை பதிந்தது. தனியே அவள் அமர்ந்திருந்தது போல் இப்போதும் தெரிய அவசரமாய் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்துக் கொண்டான்.

'எல்லாம் அவளுக்காக.. அவளது நன்மைக்காக' மனதிற்குள் திரும்பத் திரும்ப சொல்லி உருவேற்றிக் கொண்டான்.

'நீங்கள் கூட இருக்கிற போது தைரியமாய் இருக்குங்க.. வேனை விட்டு இறங்கிப் போய் விட்டால் நான் தனியாய் ஆகிவிட்டது மாதிரி இருக்குங்க.'

காலையில் கவலையுடன் கூறினாளே.. மாலையில் சந்திப்போமென்றதும் சந்தோசமாய் இறங்கிப்போனாளே.. அவள் முகத்தில் சிரிப்பை வரவழைக்க தன் சிரிப்பை தொலைத்தாலென்ன?

அவனை விட்டால் அவளுக்காக கவலைப்பட யாரிருக் கிறார்கள்? அவளைவிட்டால் அவன் வாழ்வில் பற்றுக் கோடென்று எது இருக்கிறது? தனிமையை அவள் வாய் விட்டுக் கூறுகிறாள். அவன் கூறவில்லை. அவ்வளவு தானே வித்தியாசம்? வாழ்கின்ற வாழ்வே அவளுக்காக என்று ஆகிவிட்ட பின்பு அவளுக்காக அவளைத் தியாகம் செய்ய அவன் ஏன் கலங்க வேண்டும்?

காதலுக்காக காதலைத் தியாகம்செய்துதான் ஆக வேண்டும். அவளுக்காக உலகையே எதிர்க்கத் தயாராக

இருக்கும்போது தனக்குள் எழும் போராட்டத்தையும் எதிர்த்து அழிக்கத்தான் வேண்டும். தாரிணி நன்றாக இருக்க வேண்டும். அதுதான்.. அவளது எதிர்காலம் தான்.. முக்கியம்.

தனக்குள் திரும்பத் திரும்ப உருப்போட்டு தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கிளம்பினான். குவார்ட்டஸ் பிள்ளைகளை வேனில் ஏற்றி அமரவைத்து விட்டு அவர்கள் கூறும்,

''அண்ணா! என் ஜியாமெட்ரி பாக்ஸ் தொலைந்து விட்டது...''

''அண்ணா! செந்தில் எனக்கு ஜன்னலோர சீட்டை கொடுக்க மாட்டேன்கிறான்.. அவனை எழுந்திருக்க சொல்லுங்க..''

''அண்ணா! இன்னைக்கு மேத்ஸ் டெஸ்ட்டில் நான் தான் பர்ஸ்ட் மார்க்''

''அண்ணா! பிரியாவுக்கு ஜுரம்..''

''அண்ணா! பேஸ்கட் பால டீமில் நான் செலக்ட் ஆகியிருக்கேன்.''.

என்பது போன்ற உரையாடல்களுக்கு பதில் சொல்லிக் கொண்டே சாலையிலும் கவனமாய் வேனை ஓட்டிக் கொண்டிருந்தான் விக்னேஷ். அவன் மனதில் அவனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் தாரிணி இருந்தாள்.

ஆர்.எஸ். புரத்தில் வண்டி நுழைந்து கௌலி பிரவுன் சாலையில் ஓடி குவாட்டர்ஸ் போகும் பாதையில் திரும்பியது. பாதையின் முடிவில் விஷ்ணு துர்க்கை குடி கொண்டிருக்கும் கோவிலிருக்க கோவில் வாசலில் வழக்கம்



போல் வேன் நின்றது. வேனைக் கண்டதும் காத்திருந்த தாரிணி ஆவலுடன் எழுந்தாள்.

அவளின் முக மலர்ச்சியைக் கண்ட விக்னேஷின் நெஞ்சம் நெகிழ்ந்தது. ஓர் ஆறுதல் வார்த்தைக்காக மழைக்காக ஏங்கும் சாதகப்பட்சி போல் ஏங்கியிருந்திருக்கிறாள் பாவம். ஆறுதலாய் பேசும் ஓர் ஜீவன் கிடைத்ததும் அவள் முகம் எப்படி மலர்கிறது? இந்த மலர்ச்சி என்றும் நிலைக்க அவன் அவனது காதலை மனதில் புதைத்துவிட்டு அவள் நல்வாழ்விற்காக பாடு பட்டால் என்ன?

விக்னேஷ் தாரிணியைப் பார்த்துப் புன்னகைத்தான். தாரிணியின் மனம் மகிழ்ந்துவிட்டது. எண்ணங்கள் சிறகடிக்க வேனில் ஏறி அமர்ந்தாள். விக்னேஷ் வேனைக் கிளப்பினான்.

''ரொம்ப நேரமாய் காத்திருக்கீங்களா?''

''காத்திருந்தால் என்ன? எதுவுமே இல்லையென்னும்போது எல்லாம் கிடைத்தால் எப்படியிருக்கும்? காத்திருக்க யாருமில்லை... எதுவுமில்லையென்று இத்தனை நாள் வாழ்ந்திருந்தேன். யாருக்காக காத்திருக்க வென்று எனக்குள் நானே நொந்து கொண்டிருந்தேன். 'எனக்காக காத்திரு'ன்னு சொல்ல நீங்கள் என் வாழ்வில் வந்தீர்கள். நீங்கள் வந்த பின் வசந்தம் மட்டும்தான்... வெம்மையே இல்லை.. காத்திருந்தால் என்ன? சில நேரம் காத்திருப்பது கூட ஓர் சுகம்தான்..''

கவிதையாய் பதில் சொன்னாள் தாரிணி. அவள் இதயம் புரிந்திருந்தால் இந்த வார்த்தைகளின் வர்ணஜாலத்தில் இறக்கையில்லாமே வானில் பறந்திருப்பான். விக்னேஷ்

அவன்தான் அவளைப்போல் படித்தவனாய் பெரிய வேலை பார்ப்பவனாய் பார்த்துத்தான் அவளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும். அப்போதுதான் அவளது எதிர்காலம் வளமாக இருக்குமென்ற ஒரே நம்பிக்கையில் இருக்கிறானே.. அவனுக்கு எப்படி அவள் மனம் புரியும் வெறுமையாய் சிரித்தான் அவன்.

"இப்போ எங்கே போறீங்க?"

"வேறெங்கே..? வீட்டிற்குத்தான்.."

"எனக்கு வாக்குக் கொடுத்திருக்கீங்களே மறந்து விட்டதா?"

"அது எப்படி மறப்பேன்? பாரதியார்,

'வார்த்தை தவறி விட்டாய் கண்ணம்மா'ன்னு தான் பாடியிருக்கிறார்.

'வார்த்தை தவறிவிட்டாய் கண்ணப்பா...'ன்னு பாட வில்லை.. இந்த விக்னேஷ் வார்த்தை தவறவே மாட்டான். சாயந்திரம் நிறைய நேரம் பேசிக்கிட்டிருக்கலாம்ன்னு நான் சொன்னது சொன்னதுதான்.. அதில் மாற்றமில்லை. நம்ம வீடு எங்கேயிருக்கு?"

'நம்ம வீடா?' அவன் வார்த்தைகளில் அவள் புதுப்புது அர்த்தங்களைத் தேடிக் கண்டுப்பிடித்தாள். 'அந்த நாள்' என்று வரும்?

"என்னங்க பதிலையே காணோம். நம்ம வீடு எங்கே யிருக்கு?"

'எங்கேயிருக்கிறது?' என்று மனம் தேட,

"ஏன்.. சூலூரில் இருக்கிறது.." என்றாள் தாரிணி.

"அதே ரோட்டில்தானே பேரூர் ஆறுபடை முருகன் கோவில் இருக்கிறது?" அவன் கேட்டான்.



"ஆமாம்...?"

"அங்கே போய் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் உட்கார்ந்து பேசலாம்.. எனக்கும் உங்களிடம் பேச ஒரு விசயமிருக்கு.."

"ஈஸிட்?"

என்ன பேசப்போகிறான்? ஒருவேளை அவள் மனதில் முகிழ்ந்த காதல் அவன் மனதிலும் துளிர் விட்டிருக் கிறதோ..? அதைச் சொல்லத்தான் அவன் அவளை கோவிலுக்கு அழைத்துச் செல்கிறானோ.. 'முருகா..' நான் நினைப்பது உண்மையாக இருக்க வேண்டும்' அவள் மனம் தவித்தது.

"நிறையப் பேசனும்னு சொல்லிட்டு பேசாமலே வர் றீங்க?"

"நீங்கள்தான் பேச ஒரு இடம் பிக்ஸ் பண்ணிட்டிங் களே.."

"ஓ.. அதனால்தான் மௌனமா? நான் 'என்னவோ'ன்னு நினைத்தேன்.."

"அதுசரி.. காலையில் 'என்னமோ'ன்னு நினைத்தீங்க.. இப்ப 'என்னவோ..'ன்னு நினைத்தீங்களா? வாட் இஸ் தி மீனிங் ஆப் 'என்னமோ..' அன்ட் 'என்னவோ..'?"

"எனக்குத் தெரியவில்லைங்க... உங்களுக்குத் தெரிந் தால் நீங்கள் சொல்லுங்களேன்..."

"எனக்கும் தெரியவில்லை... மேனகாகிட்டக் கேட்டேன். அவள் நிறைய டெபனிசன்ஸ் சொன்னாள்.."

"என்ன சொன்னாங்க.."

"கோவிலுக்குள் போனதும் சொல்கிறேனே.."

தூரத்தில் கோவில் தெரிந்தது.

# 20



பாமாலை சூடவா?

பைந்தமிழில் பாடவா?

ஓர் எதிர்பார்ப்புடன் மனம் படபடக்க காற்றில் பறந்த தன் முடிக்கற்றைகளை ஒதுக்கி விட்டுக் கொண்டே தூரத்தில் தெரிந்த கோவில் வாசலைப் பார்த்தாள் தாரிணி. இதமாக வீசிய மாலை நேரக்காற்று குளுமையாய் இருந்தது. காலை நேரம் பரபரப்பு இல்லாமல் பகல் நேர வெம்மை மறைந்து இரவை வரவேற்கும் இதமான மாலை நேரம் அவளையும் வரவேற்றது.

கோவில் வாசலில் வேன் போய் நின்றது. விக்னேஷ் திரும்பி அவளைப் பார்த்தான்.

"இறங்கலாமா?"

அவள் தலையசைத்தாள். இறங்கினார்கள். கோவில் வாசலில் தண்ணீர் தெளித்து 'பூக்கோலம்' போட்டிருந்தார்கள். கோவிலுக்கே உரிய ஓர் மணம் காற்றில் தவழ்ந்து வந்தது. உள்ளிருந்து ஒலித்த கோவில் மணியோசை... அவள் குறை தீர்க்க அழைப்பதைப் போலிருந்தது. கோவில் ஒலிப் பெருக்கியில்,

'திருப்பரங்குன்றத்திலே நீ சிரித்தால் - முருகா!
திருத்தணி மலைமீது எதிரொலிக்கும்
திருச்செந்தூரிலே வேலாடும் - உன்
திருப்புகழ் பாடியே கடலாடும்...' என்று



பி. சுசிலா பாடிக் கொண்டிருந்தார். கோவில் வாசல் படியைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு இருவரும் கோவிலுக்குள் பிரவேசித்தார்கள். தாரிணியின் மனம் பாடலில் லயித்திருந்தது.

'பழனியிலே சிரிக்கும் கந்தப்பழம் - நீ
பார்வையிலே சிரிக்கும் அன்புப்பழம்
பழமுதிர் சோலையிலே முதிர்ந்த பழம்
பக்திப் பசியோடு வருவோர்க்கு ஞானப்பழம்...'

ஒலிபெருக்கியில் ஒலித்துக் கொண்டிருந்த பாடலோடு தன்னை மறந்து மனம் லேசாக இணைந்து அவள் பாடினாள்.

'சிறப்புடனே கந்த கோட்டமுண்டு
உன் சிங்கார மயிலாட தோட்டமுண்டு
உனக்கான மனக்கோவில் கொஞ்சமில்லை - அங்கு
உருவாகும் அன்புக்கோர் பஞ்சமில்லை...'

கோவிலின் முன்புறம் செயற்கை குளமொன்று அமைக்கப்பட்டிருந்தது. அதன் வடிவமைப்பு சரவண பொய்கையை போலிருந்தது. குளத்தினுள்ளே ஆறு தாமரை மலர்கள். அதில் குழந்தை வடிவில் முருகபெருமான். குளத்தின் படிக்கட்டில் ஆறு கார்த்திகைப் பெண்கள். எங்கும் பதிக்கப்பட்ட வெள்ளை சலவைக் கற்கள். கோவிலின் முன்னாலேயே அமைந்த நவகிரகங்களுக்கான சந்நிதி... விநாயகரை வணங்கி உள்ளே போனால் முருகபெருமானின் ஆறுபடை வீடுகளும் தனித்தனி சந்நிதிகளாய்..

கோவிலின் அழகில் மனதைப் பறிகொடுத்த தாரிணி.. விக்னேஷுடன் இணைந்து நின்று முருகனை வணங்கினாள்.

'முருகா.. காதலுக்காக குறமகள் வள்ளியிடம் பல வேசங்கள் போட்டு பழமுதிர் சோலையில் கோவில் கொண்டவன் நீ. வள்ளியை நீ காதல் மனம் செய்து கொண்டது போல் என் மனதில் குடியிருக்கும் விக்னேஷும் என் காதலைப் புரிந்து கொண்டு என்னைக் காதல் மணம் செய்து கொள்ள அருள் புரி..'

விக்னேஷின் வேண்டுதல் வேறாக இருந்ததை பாவம் அவள் அறியாள்...

'ஆறுபடை முருகா.. என் மனதிற்கு ஆறுதலைத்தா.. எனக்கென்று யாருமில்லாத உலகில்.. இலக்கே இல்லாமல் நான் வாழ்ந்து கொண்டிருக்கையில் என் வாழ்க்கையாக என் முன் வந்து நின்றாள் இவள்.. உன் சந்நிதியில் தான் இவளைக் கண்டேன்.. பின் தொடர்ந்தேன் இன்று உன் சந்நிதியிலேயே இவளை வேறொருவன் மனைவியாக்கும் என் முடிவையும். முயற்சியையும் சொல்லப் போகிறேன்... இது வெற்றி பெற்றுவிட்டால்.... அதற்குப் பின் இவள் யாரோ..? நான் யாரோ...அதற்கு பின் என் வாழ்வே வர்ணங்கள் இழந்து வெறுமையாகிவிடும். என் இதயம் ஒளியிழந்து இருண்டு விடும்.. ஆனால் என் தாரிணியின் வாழ்க்கை வண்ணமயமாகி விடும்.. அவள் இதயம் ஒளி பெற்றுவிடும்.. நேற்றுப்போல் அவள் தனிமையில் வானத்தை வெறித்துக் கொண்டு பால்கனியில் உட்கார்ந்திருக்க மாட்டாள். பேச ஆளில்லையேயென்று தனியாய் உணரமாட்டாள். எனவே அவளிடம் பேசும் போது உள்ளம் உடைந்து என் காதலை நான் சொல்லி விடாமலிருக்க அருள் புரி முருகா..'



வேண்டுதல்கள் பலவிதம்தான். ஆனால் நேசிக்கும் ஒருவன் தன் நேசம் நிறைவேறக் கூடாது என்று இறைவனிடம் வேண்டிக் கொண்டான். இருவரும் கோவிலின் முன்புறம் வந்து சரவணப் பொய்கை குளக்கரையின் அருகே அமர்ந்தார்கள்.

தாரிணி மனம் நிறைவாக உணர்ந்தாள். தாய், தந்தையருடன் கோவிலுக்கு வந்திருக்கும்போது கிடைத்த குதூகலம் மீண்டும் இன்றுதான் அவளுக்கு கிடைத்திருந்தது.

எனில் தாய், தந்தையின் இடத்தை விக்னேஷ் நிரப்பிக் கொண்டிருக்கிறானா?

ஹேண்ட் பேக்கை மடியில் வைத்துக் கொண்டு வாகாய் அமர்ந்து கொண்டவள் விக்னேஷை ஏறிட்டுப் பார்த்தாள். அவன் முகம் ஏனோ இருண்டிருந்தது.

'சொல்லி விடலாமா..? அவன் முதலில் சொல்லட்டுமே.. என்னவோ விசயம் சொல்ல வேண்டுமென்றானே.. இந்த விசயமாகத்தான் இருக்கும். முதலில் அவன் சொல்லட்டும்.'

'தாரிணி உன்னைக் காதலிக்கிறேன்..'

அந்த வார்த்தையை அவன் சொன்ன பின்னால் நாம் வாய் திறக்கலாம்.

'நானும் உங்களைத்தானே காதலிக்கிறேன்..'

அதைக் கேட்டதும் என்ன சொல்வான்? எதிர்பார்ப்பில் மனம் படபடக்க அவள் பேச்சை ஆரம்பித்தாள்.

''நிறையப் பேசுகிறேன்னு சொல்லி கூட்டி வந்து விட்டு மௌனச் சாமியார் மாதிரி உட்கார்ந்து விட்டீர்களே...''

மௌனம் கலைந்தவனாய் அவளைப் பார்த்துச் சிரித்தான் விக்னேஷ்.

''கடைசியில் என்னை சாமியார் ஆக்கி விட்டீர்களா..?''

''ஆமாம்... முதலில் எல்லாம் உங்களைப் பார்த்தால் வேறு ஒன்றுதான் எனக்குத் தோன்றும்..''

''என்னவென்று..''

''இரும்பு மனிதன்னு..''

விக்னேஷ் இப்போது பலமாக சிரித்தான். அவனுடன் இணைந்து தாரிணியும் மனம் விட்டுச் சிரித்தாள்.

குழந்தை போல் தன் முகம் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தவளைப் பார்க்கும்போது விக்னேஷ் தனக்குள் ஆச்சர்யத்தை உணர்ந்தான்.

என்ன சொந்தம் இது? இவள் யார்.. தான் யார்.. குழந்தையொன்று விரல் பிடித்துக் கொண்டு தளர் நடைபோட்டு அருகில் வந்து அமர்வது போல் என்னமாய் ஒட்டிக்கொள்கிறாள் இவள்.. இவனிடம் ஏன் இவ்வளவு ஒட்டுதல்?

''சின்ன வயதில் காமிக்ஸ் புக் நிறைய படிப்பேன்..'' அவன் புன்முறுவலுடன் கூறினான்.

''நானும்தான்..'' சிறு குழந்தைபோல் விழிகள் மின்ன ஓர் துள்ளலுடன் அவள் கூறினாள்.

''அதில் 'இரும்புக்கை மாயாவி'ன்னு ஓர் ஹீரோ...''

''ஐய்யோ.. நானும் அவர் கதை நிறைய படிச்சிருக்கேங்க..''

''அசப்பில் நம்ம பிலிம் ஹீரோ மாதவன் மாதிரியே இருப்பார்...''



''ஆமாமில்ல.. இதை நானும் நினைத்துக்குவேன்..''

''நீங்கள் அவரைச் சொல்கிற மாதிரி என்னை 'இரும்பு மனிதன்'ன்னு சொல்கிறீர்களே.. இது நியாயமா? நான் ரத்தமும் சதையுமுள்ள சாதாரண மனிதன்ங்க...''

''ம்ம்..? அதுசரி.. என்னவோ சொல்லணும்னு சொன்னீங்களே என்ன அது?''

கடைசியில் கேட்டு விட்டாள்.. மனதில் சற்று முன்னிருந்த உற்சாகம் மறைந்து சஞ்சலம் தலைதூக்கியது.. எப்படிச் சொல்வது? ஆனால் சொல்லிதானே ஆக வேண்டும்.

மனதை திட்டபடுத்திக் கொண்டவன் அவளை நிமிர்ந்து பார்த்து சிரிக்க முயன்றான்.

''நான் உங்கள் மேல் அளவுக்கு அதிகமாய் உரிமை எடுத்துக்கிறேன்னு நீங்க என்னைத் தப்பா நினைக்க மாட்டிங்களே..''

தாரிணி இதழ்கடித்துக் கொண்டாள். அவள் கன்னம் சூடானது. அதேதான்... அவள் நினைத்ததைத்தான் அவன் கேட்கப்போகிறான். அவள் எண்ணத்தில் நிறைந்தவன்.. அவள் இதயத்தில் இடம் கேட்கத்தான் உரிமையைக் கேட்கிறான்.. அவனுக்கில்லாத உரிமை யாருக்காம்..?

## 21



நானாக நானில்லை

நானாக மாற்றினாய் தாயே

விக்னேஷ் சரவணப் பொய்கையிலிருந்த தாமரை மலர்களை வெறித்துக் கொண்டு அடுத்த கேள்வியை வீசினான்.

"உங்கள் மேல் எனக்கிருக்கிற அதிக அக்கறையினால்தான் இந்த உரிமையை எடுத்துக் கொண்டேன்.."

"என்னிடம் விளக்கம் சொல்ல வேண்டுமா? உங்களை நான் அந்நியராக நினைத்ததே இல்லை..."

"நன்றி.. தாரிணி.. மிகவும் நன்றி.."

முதல் முதலாய் பெயர் சொல்லி அழைக்கிறான்.. குளத்தில் மிதந்த மலர்கள் போல் தாரிணியின் மனமும் அவன் வார்த்தைகளில் மிதந்தது. ஆகாயத்தை அண்ணாந்து பார்க்கும் அல்லி மலர்போல் அவன் முகத்தை அண்ணாந்து அவள் பார்த்தாள். நிலவின் ஒளியை அவன் வார்த்தைகளில் அவள் மனம் உணர்ந்தது.

"நன்றி நான்தானே உங்களுக்கு சொல்ல வேண்டும்.. யாருமேயில்லாத அநாதையாய் இருந்தேன்.. நானிருக்கிறேன் உனக்கு என்று நீங்கள் வந்திருக்கிறீர்கள்.."

"இந்த வார்த்தைகள் போதும் தாரிணி.. எது வந்த போதும் நான் தாங்கிக் கொள்வேன்.." அவன் குரல் உடைந்தது.

அவள் அவன் குரலின் வித்தியாசம் உணர்ந்து அவனைப் பார்த்தாள்.

'ஏன் உடைந்த குரலில் பேசுகிறான்..?' புரியாமல் யோசித்தாள்.

"தாரிணி.. நீங்கள் நன்றாக வாழ வேண்டும்ன்னு ஆசைப்படுகிறேன் கணவர்.. குழந்தைகள்ன்னு.."



கதை வேறு மாதிரி போவது போல் இருக்கிறதே..

"என் வேனில் நீங்கள் வந்து போவது போல.. உங்கள் குழந்தைகளையும் ஸ்கூலுக்கு நான் கூட்டிப்போக வேண்டும்.."

'என் குழந்தைகளையா..? நம் குழந்தைகள் இல்லையா?'

"உங்களைப் போல் அதிகம் படித்து பெரிய வேலையில் இருக்கும்.. கண் நிறைந்த தோற்றமுடைய கணவன் உங்களுக்கு கிடைக்க வேண்டும்.. அதுதான் நான் வேண்டுவது.."

தாரிணி இப்போது பேச்சிழந்தாள். அவளது முக மாறுதலைக் கவனிக்காமல் விக்னேஷ் மேலே சொல்லிக் கொண்டிருந்தான்.

"என் நண்பனின் அண்ணன் ஒருவர்.. காலேஜ் புரபொஸர்... பி.எச்டி பண்ணியிருக்கிறார். உங்கள் ஜாதிதான்.."

"என் ஜாதின்னா..? மனித ஜாதியைச் சொல்கிறீர்களா?" தாரிணியின் குரலில் கோபமிருந்தது. அதை உணராத விக்னேஷ் அவள் ஹாஸ்யம் பேசுகிறாளென்று நினைத்துக் கொண்டான்.

"ஜோக்காக பேசுகிறீர்கள்.. ஆனால் நான் சொல்வது நிஜம்தான். அவர் உங்கள் ஜாதிதான்... அவருக்கு அவரை மாதிரியே காலேஜில் வொர்க் பண்ணும் லெக்சரர்தான் தேவையாம்.. உங்களை ஏற்கனவே பெண் கேட்டிருக்கிறார்கள்.."

"என் அண்ணன் தோச ஜாதகம்ன்னு சொல்லியிருப்பான்.." வெறுப்புடன் கூறினாள் தாரிணி.

''அதே தான்.. அப்புறம் நான் விளக்கமாய் என் நண் பனிடம் எடுத்துச் சொன்னேன்..''

''என்ன விளக்க்க்....கினீர்கள்?'' எரிச்சலுடன் அவள் கேட்டாள்.

''இப்படி.. இப்படி.. இப்படிடா..''

''எப்படி.. எப்படி..எப்படி..?'' அவள் பல்லைக் கடித்தாள்.

''அதுதாங்க.. உங்க அண்ணன் ஓர் பொய்கோளி..''

''ஊஹூம்...? அப்புறம்..?''

''பேராசை பிடித்தவர்.. அவர்தான் இப்படி ஓர் வதந் தியைப் பரப்பி வைத்திருக்கிறார்...''

''பேஷ்.. பேஷ்.. அப்புறம்?''

''உங்கள் பெர்த் சர்டிபிகேட்டை வாங்கி... நீங்கள் பிறந்த ஹாஸ்பிடலுக்கு போய்.. நீங்கள் பிறந்த சரியான நேரத்தைக் கண்டுபிடித்து உண்மையான ஜாதகத்தை எழுதப்போகிறோம்..''

''போகிறோமா? வேறு யார் யார்.. இந்த ஜேம்ஸ்பாண்ட் வேலையில் இறங்க இருக்கிறார்கள்?''

''மாப்பிள்ளையின் தம்பியும், நானும்தான்..''

''ஏன் மாப்பிள்ளை கூட வரவில்லையா...?''

''நீங்கள் சொல்வது சரிதான். அவரும் கூட வந்தால் உங்கள் அண்ணன் கட்டி விட்டிருக்கிற பொய் கதைகளை அவரும் தெரிந்து கொள்வாரே... இது நல்ல ஐடியா..''

''ஆமாம்... தெரியாமல்தான் கேட்கிறேன்.. நீங்கள் வேனும், காரும் ஓட்டுவதைத் தானே தொழிலாய் வைத் திருந்தீர்கள்.''



''வைத்திருந்தேனா..? என்னங்க நீங்க..? இப்போதும் எனக்கு அதே தொழில்தான்..''

''இல்லையே.. தொழிலை மாற்றிவிட்டது போலில்லையா தெரிகிறது...''

''அப்படியா.. என்ன தொழில் பண்ணுகிறேன்..?''

''கல்யாண புரோக்கர் தொழில்...'' அவள் எழுந்திருக்க முயன்றாள். அவன் அவனையறியாமல் அவள் கரம் பற்றித் தடுத்தான்.அவள் கோபத்துடன் அவன் கரத்தை உதறினாள்.

''விடுங்கள்.. என் கையைப் பிடிக்க நீங்கள் யார்?''

அவன் பதறிவிட்டான். அவனைத் தவறாக எண்ணி விட்டாளே.. தன் அவசர புத்திக்கு நொந்து கொண்டான்.

''ஸாரிங்க.. பேச்சை பாதியில் விட்டுவிட்டு நீங்கள் எழுந்து போகவும் அவசரத்தில்...''

''அவசரம்..! எல்லாவற்றிலும் உங்களுக்கு அவசரம்..''

''நான்தான் ஸாரி சொல்லிவிட்டேனே.. உண்மையாய் சொல்கிறேங்க.. என் அம்மாவிற்கு அடுத்து நான் உரிமையுடன் பேசும் முதல் பெண் நீங்கள் தான்..''

அவள் கண்கலங்க மீண்டும் இதழ் கடித்தாள்.

''மிஸ்டர் விக்னேஷ்.. நீங்கள் என் மேல் எடுத்துக் கொண்ட அக்கறைக்கு மெத்த வந்தனம்... என் மனமார்ந்த நன்றி.. போதுமா? இந்த வேலையை விட்டுவிட்டு உங்கள் வேலையை மட்டும் பாருங்கள்.''

''ஏங்க.. இப்போதுதானே என்னை அந்நியனாய் நினைக்கவில்லைன்னு சொன்னீங்க.. இப்போது பிரித்துப் பேசறீங்களே..''

''நானா பிரித்துப் பேசுகிறேன்.. நீங்கள் தான்.. நீங்கள்தான்..''

அவள் அதற்கு மேல் தாங்க மாட்டாதவளாய் உடைந்து அழுதாள். முழங்கால்களில் முகம் புதைத்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதாள். ஆற்றுவாரின்றி... தேற்றுவாரின்றி.. அநாதையாய் அழுதாள்.

கோவிலுக்குள் வரும்போது உற்சாகத்துடன் வந்தவள்.. இப்போது ஏன் குமுறி அழுகிறாள்? காரணம் புரியாமல் திகைத்தான் விக்னேஷ். திருமணப் பேச்சை எடுத்தவுடன் தான் கோபப்படுகிறாள்.. ஏன்..?

''ஏங்க.. இவன் வேன் ஒட்டுகிறவன்தானே.. இவன் நமக்கு ஏற்ற மாதிரி மாப்பிள்ளை பார்ப்பானான்னு கோபப்படுகிறீர்களா.. எனக்குத் தெரியாதாங்க? நீங்க எவ்வளவு அதிகம் படிச்சவங்க.. எவ்வளவு பெரிய வேலையில் இருக்கீங்க.. உங்களுக்கு கம்மியான மாப்பிள்ளை பார்ப்பேனா? அவரும் பெரிய புரபொஸர். உங்களுக்கு இணையானவர்தாங்க..''

''யாருக்கு யார் இணை? எதை வைத்து இணையென்று நீங்கள் முடிவு செய்தீர்கள்? முதலில் இதற்கு பதில் சொல்லுங்கள்... நீங்கள் யார் எனக்கு மாப்பிள்ளை பார்க்க?''

தாரிணியின் உடல் உணர்ச்சி மிகுதியில் நடுங்கிக் கொண்டிருந்தது. விக்னேஷ் மலையுச்சிலிருந்து உருண்டு விழுவதைப்போல் உணர்ந்தான். அவன் யாரா? அவளுக்கு அவன் யாருமில்லையா?

''என்ன சொன்னீங்க? இன்னொருமுறை சொல்லுங்க..''

''பேஷாய் சொல்கிறேன். நீங்கள் யார் எனக்கு மாப்பிள்ளை பார்க்க?''



''நான் யாரோவா? எனக்கும் உங்களுக்கும் ஒன்றுமேயில்லையா?''

''இல்லையென்றுதானே நீங்கள் சொல்கிறீர்கள்..''

''நானா சொன்னேன்?''

''பின்னே வேறு யார் சொன்னது?''

''நான் எப்போது அப்படிச் சொன்னேன்..''

''எனக்கு வேறு மாப்பிள்ளை பார்த்திருப்பதாய் சொன்னது யார்? நீங்கள்தானே? அதற்கு என்ன அர்த்தம்?''

விக்னேஷனின் மனதில் மின்னலடித்தது.

'அப்படியும் இருக்குமோ.. அவள் மனதில் தானா? முருகா..'

அவன் அவள் விழிகளை ஊடுருவிப் பார்த்தான். அவள் முகம் சிவந்தது. கலங்கிய கண்களில் கோபம் மறைந்து காதல் தெரிந்தது. அவள் வெட்கத்துடன் தலை கவிழ்ந்தாள்.

## 22



காற்றும் நீயே! கதிரும் நீயே!

வானும் நீயே! விஷ்ணு துர்க்கைதாயே!

ஓர் பார்வையில் முகம் சிவந்து தலைகவிழ்ந்த அவள் தோற்றம், உண்மையைத் தெள்ளத் தெளிவாக உணர்த்த தன் கண்களையே தான் நம்ப முடியாதவனாகி பிரமித்தான் விக்னேஷ்.

'முருகா! இது உண்மைதானா?'

உண்மைதான் என்பது போல் கோவில் மணியோசை ஒலித்தது. காற்றில் கலந்து வந்த மணியோசை அவனை எங்கோ அழைத்துச் செல்ல அவன் கண்களை இறுக மூடிக்கொண்டான்.

நிறையப் பேச வேண்டுமென்று வந்த இருவரையும் மௌனம் அரவணைத்துக் கொண்டது. தாரிணி தன் மடியிலிருந்த கைப்பையின் வாரைத் திருகிக் கொண் டிருந்தாள். அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாமல் வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது.

விக்னேஷ் கண் திறந்து அவளைப் பார்த்தான். அலை யடித்த மனது அலை ஓய்ந்து அமைதியாய் இருந்தது. வெட்கிச் சிவந்திருந்தவளை மென்குரலில் அழைத்தான்.

''தாரிணி..''

''ம்ம்ம்..'' அவள் நிமிரவில்லை.

''நிமிர்ந்து என்னைப் பார்..'' இயல்பாய் ஒருமையில் அவளை விளித்தான் விக்னேஷ்.

''ஊஹூம்... மாட்டேன்..'' அவள் தலையை இடமும் வலதுமாய் அசைத்தபோது அவள் காதிலிருந்த தொங் கட்டான்களும் அசைந்தன.

விக்னேஷ் அதை ரசனையுடன் பார்த்தான். இனி அவள் அவனுடையவள்... அவள் அழகு அவன் பார் வைக்காக... உரிமையுடன் அவளைப் பார்த்தவன் சற்று நகர்ந்து அவளை ஒட்டி அமர்ந்தான். அவள் மேனி சிலிர்த்தது. நகர்ந்து கொண்டாள்.

''ஏன்..?'' அவன் வினவினான்.



''இது கோவில்...'' அவள் விளக்கம் கொடுத்தாள்.

''ஆமாம்.. அதற்கென்ன?'' அவன் அறியாதவன் போல் கேட்டான்.

திருடன்! இந்தப் பூனையும் ஹார்லிக்ஸ் குடிக்குமா என்பது போல் இருந்து கொண்டு எப்படி வம்பிழுக் கிறான்...??

''ஆமாம்... நீங்கள் அமுல் பேபி.. ஒன்றுமே புரியாது..''

''புரியாமல்தானே கேட்கிறேன்..'' அவன் உதடுகளில் விசமப் புன்னகை அரும்பியது. கண்கள் அவளைத் துளைத்தன.

''விக்னேஷ்.. ப்ளீஸ்..''

''ப்ளீஸெல்லாம் எதற்கு தாரிணி? உத்தரவு போடு..''

அவன் உடலை போலியாய் வளைத்து பணிவுடன் கேட்க அவள் நகைத்தாள். அவளது கண்ணீரும் கோபமும் இருந்த இடம் தெரியாமல் பறந்து போய் விட்டிருந்தது.

''இங்கே யாரோ.. யாருக்கோ.. மாப்பிள்ளை பார்த்தார் களாம்..''

''ம்ம்...? இங்கே யாரோ... சின்னக்குழந்தை போல் அழுதார்களே... அதைச் சொல்லாமல் விட்டுவிட்டாய்...''

''அழ வைத்தது நீங்கள்தானே..''

''சொன்னால்தானே தெரியும்..''

''இப்போது மட்டும் வாய்விட்டு நான் என்ன சொன்னே னாம்..''

''வாய்விட்டுச் சொன்னால்தானா..?''

''வேறு எப்படி..?''

அவன் அவளைப் பார்த்துக் கண்சிமிட்டினான். அவள் உடல் சூடேறியது. அவன் மென்மையாய் அவளுக்கு மட்டும் கேட்கும்படி பாடினான்.

''பார்வை ஒன்றே போதுமே..

பல்லாயிரம் சொல் வேண்டுமா?''

''விக்னேஷ்..''

''சொல் தாரிணி.. நீ வாய்விட்டுச் சொல்ல வேண்டுமா? உன் கண்கள்தான் கதை பேசுகிறதே..''

''என்ன கதை சொன்னதாம்..?''

''அட தடிமாட்டுத் தாண்டவராயா..''

''நான் அப்படியா சொன்னேன்..''

''உன் பார்வை சொல்லியது.. உன் மனதில் நானிருப் பதைப் போல என் மனதிலும் நீதாண்டா மடையா இருக்கிறேன்னு சொல்லியது.''

''உங்கள் மனதிலும் நானா? அப்படியிருந்தும் வேறோர் மாப்பிள்ளை பார்த்தீர்களா? இது கொடுமை விக்னேஷ்..''

''உனக்கு மட்டுமா? எனக்கும்தான்.. ஆனால் நான் என்ன நினைத்தேன்னு சொல்லிட்டேனே.. உனக்குச் சமமான படிப்பும், வேலையும் இருக்கிற மாப்பிள் ளையைத்தான் நீ விரும்புவாய்ன்னு தப்புக் கணக்கு போட்டு விட்டேன்... உன் நலனை பெரிதாக நினைத் தேன்.. என் காதலை சொல்லாமல் மறைத்துக் கொண் டேன்..''

''நான் நேசிக்கும் மனிதரை விட்டுவிட்டு இன்னொரு வரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டால் நான் எப்படி நன்றாக இருப்பேன்..?''



''எனக்குத்தான் உன் காதல் தெரியாதுன்னு சொல்கிறே னில்ல.. அப்புறமும் வதைத்தால் எப்படி? நான் வேண்டு மானால் தோப்புக்கரணம் போடவா?''

''அதை அந்த பிள்ளையார் சந்நிதியில் போடுங்கள். புண்ணியமாவது கிடைக்கும். என் முன் போட்டால் என்ன லாபம்?''

''உன் கடைக் கண் பார்வை கிடைக்குமில்லையா?''

''போதுமே... பேச்சில் நீங்கள் இத்தனை கில்லாடின்னு எனக்கு இன்றைக்குதானே தெரிகிறது. இத்தனை நாள் மௌனச் சாமியார் மாதிரி இருந்துவிட்டு.. இன்றைக்கு வாயடிப்பதைப் பார்..''

''என்னை என்ன வேண்டுமானாலும் திட்டு.. ஆனால் சாமியார்ன்னு மட்டும் சொல்லாதே.. உன் கண்ணில் காதலைக் கண்ட பின் சாமியாராய் போகச் சொன்னால் எப்படிப் போவது?''

''ச்ச்.. இந்தப் பேச்சுக்கொன்றும் குறைவில்லை. என் காதல்தான் உங்களுக்குத் தெரியாது.. உங்கள் மனதில் காதலை வைத்துக் கொண்டு எனக்கு மாப்பிள்ளை பார்த்த 'தியாகச் செம்மல்' தானே நீங்கள்..?''

''அது தியாகம் என்பதை புரிந்து கொண்டால் சரி..''

''எனக்கு தியாகியெல்லாம் வேண்டாம்.. முதன் முதலாய் உங்களைப் பார்த்தபோது அநியாயத்தைத் தட்டிக் கேட்டுக் கொண்டிருந்தீர்களே.. அந்த வீரமான விக்னேஷ்தான் வேண்டும்..''

வைத்த கண் வாங்காமல் தாரிணியையே பார்த்தான் விக்னேஷ். அவள் முகச்சிவப்புடன் பார்வையை விலக் கிக் கொண்டபோது ஓர் திருப்தி அவனுள் உதயமானது.

தான் நேசிக்கும் பெண்ணால் தான் நேசிக்கப்படுகிறோம் என்று ஆண்மை கொண்ட திருப்தி அது.

'தாரிணி.."

" ம்ம்ம்.."

"நான் பிளஸ் டூ வரைதான் படித்தேன். அதற்கு மேல் படிக்க முடியவில்லை. குடும்பச் சூழ்நிலை.. அப்பாம்மா இறந்துட்டாங்க.. என் வாழ்க்கையை நடத்த நான் உழைக்க வேண்டிய சூழ்நிலை.. தாரிணி.. திரும்பவும் சொல்கிறேன்.. நான் உன்னளவு படிக்காதவன்.."

"எத்தனை முறைதான் சொல்வீர்கள்.. நான் உங்களை உங்களுக்காகத்தான் விரும்புகிறேன்.. விக்னேஷ்.. உங்களை கல்யாணம் பண்ணிக் கொண்டால் நான் சந்தோஷமாக இருப்பேன்... இதில் உங்களுக்கு சந்தேகமே வேண்டாம்.. ஒருவேளை நீங்கள் என்னை மறுத்துவிட்டால் நான் கல்யாணம் பண்ணிக் கொள்ளாமல் இப்படியே இருந்துவிடுவேன்.."

"பைத்தியம் மாதிரிப் பேசாதே.. எப்போது உன் மனதில் நான் இருக்கிறேனென்று தெரிந்துவிட்டதோ.. அதன் பின்னால் உன்னை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுக்க மாட்டேன்.."

"எனக்கு இது போதும் விக்னேஷ்.."

"சொல்.. இப்போது நான் என்ன செய்யட்டும்.. இப்போதே ஒரு தாலி வாங்கி வந்து இந்த சந்நிதியிலேயே உன் கழுத்தில் கட்டி என் மனைவியாக உன்னை என் வீட்டிற்கே கூட்டிப்போய் விடவா?"

"வேண்டாம்... எதையும் முதலில் முறையாய் செய்ய முயற்சி செய்வோம்.."



"நம் காதல் முறையில்லாததா..?"

"கல்யாணத்திற்கு சில முறைகள் உண்டு.."

"அதற்கு முதல்படி.. உன் அண்ணனிடம் நான் பெண் கேட்க வேண்டுமென்பாய்.."

"ஏன் கேட்டாலென்ன?"

"அவனெல்லாம் ஓர் மனிதன்? அவனிடம் நான் வந்து உன்னைப் பெண் கேட்க வேண்டும்.. ஏதாவது என்னிடம் எக்குத்தப்பாய் அவன் பேசினால் பல்லை உடைத்துவிடுவேன்.."

தாரிணி கோபத்துடன் பேசிய விக்னேஷை ஏறிட்டுப் பார்த்தாள். அவனது கோபத்தை அடக்க வழி தெரியாதவளாய் அவன் கரத்தை எடுத்து தன் கரத்தோடு பிணைத்துக் கொண்டாள்.

விக்னேஷின் மனம் பூவாய் மலர்ந்தது.

## 23



உன்னிடத்தில் சரண் புகுந்தேன்

உள்ளரணம் ஆறக் கண்டேன்

'பெண்ணோடு வாழும் வாழ்வு பேரின்பம்' எப்போதோ படித்ததாய் நினைவு... அதன் அர்த்தம் தெள்ளத் தெளிவாய் தெரிந்தது விக்னேஷிற்கு.

இவன் கோபம் கொண்டிருக்கிறானாம்... அவள் சமாதானப்படுத்துகிறாளாம். இப்படி சமாதானப்படுத்

தினால் கோபம் வராவிட்டாலும் கோபம் வந்தது போல் நடிக்கலாமே.. அவன் முகம் மிருதுவானது..

"ம்ம்.. உன்னை என் கையைப் பிடிக்க வைக்க இப்படி ஓர் வழி இருக்கிறதா.. வெரிகுட்.." என்றான் விக்னேஷ்.

"ஹை.. ஆளைப்பார்.. போனால் போகுது.. நம் கையைப் பிடிக்கப் போகிறவரின் கையாயிற்றேன்னு பிடித்தேன்.. தெரியுமா?"

"ஓஹோ... எப்படியோ.. உன் அண்ணனின் அழகுத் திருமுகத்தில் என்னை விழிக்க வைக்கணும்னு முடிவு பண்ணிவிட்டாய்.."

"ஏன்.. நீங்கள் மாட்டேன்னு சொல்வீர்களா?"

"இப்படிக் கையைப் பிடித்து விரலைச் சொடுக்கிக் கொண்டே கேட்டால் எப்படி மாட்டேன்னு சொல்லுவது? உன் அண்ணனிடம் வந்து பெண் கேட்கிறேன். போதுமா?"

"அட.. கோபக்கார ஆண்பிள்ளையை வழிக்கு கொண்டு வர இப்படியும் ஓர் வழி இருக்கிறதா?"

"தெரிந்து வைத்துக் கொள்.. பின்னாளில் நாம் குடும்பம் நடத்தும் போது இந்த டெக்னிக்கெல்லாம் உதவும்.."

"ஆக.. நான்தான் தாஜா பண்ணவேண்டும்.. நீங்கள் பண்ண மாட்டீர்கள்."

"அதை இப்போதே எப்படிச் சொல்ல முடியும்? சரி தாரிணி.. நான் பெண் கேட்டதும் உன் அண்ணன் உடனே தாவிக்கிட்டு உன்னைப் பெண் கொடுக்கப் போகிறானா.. என்ன?"

"பெண் கேட்டதும் தாவித்தாவி வேணுமானால் சண்டை போடுவார்.."



"தெரியுதில்ல... தெரிந்து கொண்டே ஏன் கேட்கச் சொல்லுகிறாய்.."

"நாம்.. நாமாக இருப்போம்.. நாம் கல்யாணம் பண்ணிக்கப் போகிறோமென்பதை சொல்லிவிடுவோம்.."

"அப்புறம்...?"

"சம்மதித்தால் அவர் முன்னிலையில் கல்யாணம் பண்ணிக் கொள்வோம்."

"அவன் நிச்சயம் சம்மதிக்கமாட்டான்."

"சம்மதிக்காவிட்டால் என் தாய் விஷ்ணு துர்க்கையம்மனை சாட்சியாய் வைத்து அவள் முன்னிலையில் கல்யாணம் பண்ணிக் கொள்வோம்."

விக்னேஷ் அமைதியடைந்தான். தாரிணியின் கரத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு கேட்டான்.

"வார்த்தை மாற மாட்டாயே.."

"இது என்ன அர்த்தமில்லாத கேள்வி..?"

"நீ காதல் சொல்லு முன் இருந்த விக்னேஷ் வேறு.. இப்போதிருக்கும் விக்னேஷ் வேறு.. நீ கிடைக்கவில்லையானால்.. நான் நானாக இருக்க மாட்டேன்.."

"நான் எங்கேயும் போய் விட மாட்டேன்.. உங்கள் பின்னால் தொடர்ந்து வருவேன். நம்புங்கள்."

"சரி... வா போகலாம்.."

இருவரும் எழுந்து கோவிலை விட்டு வெளியே வந்து வேனில் ஏறிக் கொண்டனர்.. வேன் பறந்தது.

அதுவரை அவர்கள் பேசியதை ஏறக்குறைய ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்த அபிராமியம்மாள்.. தூண் மறைவிலிருந்து வெளிப்பட்டாள்.

'இந்தக் கதை எவ்வளவு நாளாய் நடக்குது? நான் சந்தேகப்பட்டது சரியாய் போயிற்று... இந்த அபிராமி கணக்குப் போட்டால் அது தப்பாது..'

வம்பு கிடைத்துவிட்ட சந்தோசத்தில் வீட்டை நோக்கி அவள் எட்டு வைத்தாள்.

வேனிலிருந்து இறங்கிய தாரிணி தன் வீட்டிற்குள் நுழைந்தாள்.

''விளக்கு வைத்து இவ்வளவு நேரமான பின்னால் ஒரு வயதுக்கு வந்த பொண்ணு வீட்டுக்கு வந்தால் என்ன அர்த்தம்?'' கலையரசி கேட்டாள்.

''ம்ம்.. வேலையிருந்ததுன்னு அர்த்தம்..'' பதிலடி கொடுத்தவாறு மாடியேறிவிட்டாள் தாரிணி.

சன்னமாய் விசிலடித்தபடி வீட்டுக்குள் நுழைந்த விக்னேஷைக் கண்டதும் ஆச்சரியமாய் புருவம் உயர்த்தினான் குமரன்.

நண்பனின் முகமலர்ச்சி எதையோ உணர்த்த,

''என்ன ஆயிற்று? காதல் நிறைவேறி விட்டதா?'' என்று கிண்டலாய் வினவினான்.

''எப்படிடா கண்டுபிடித்தாய்?''

''அட.. அப்படியானால் நான் கேட்டது நடந்துவிட்டதா? இதைப் பார்றா.. தியாகி பட்டம் வாங்க டிரை பண்ணியதெல்லாம் என்ன ஆனது?''

''காற்றோடு போனது.. இப்போது இருப்பது தாரிணியின் விக்னேஷ்.''

''எப்படிடா இந்த மேஜிக் நடந்தது?''

''கடவுளின் அருளால்..''



''நீ எப்படி அவளிடம் காதல் சொன்னாய்?''

''அவள்தான் என்னிடம் காதல் சொன்னாள்.''

''ஈஸிட்.. இது எப்படி உனக்குத் தெரியாமல் போனது?''

''முட்டாள் மாதிரி இருந்திருக்கிறேன்..''

''இனியும் இருக்கமாட்டாய்ன்னு நிச்சயமாய் நம்புகிறாயா?''

''இனி எப்படிடா அப்படி இருப்பேன்? என் தாரிணி தான் என்றும் என்னோடு இருப்பாளே..''

''உன் தாரிணி..! ம்ம்.. இப்போதாவது புத்தி வந்ததே..''

''அவள் என்னிடம் காதல் சொன்ன போதே வந்து விட்டது...''

''வேறு என்ன சொன்னாள்?''

''நன்றாய் திட்டினாள்..''

''எதற்காக திட்டினாள்?''

''நீ எப்படிடா மடையா எனக்கு வேறு மாப்பிள்ளை பார்க்கலாம்னுதான்''

''அடப்பாவி.. அதையும் உளறிவிட்டாயா?''

''அதைத்தானே முதலில் சொன்னேன்..''

''அப்புறம் திட்டாமல் என்ன செய்வாள்? நல்லவேளை.. உன்னை அடிக்காமல் விட்டாளே..''

''கொஞ்ச நேரம் போயிருந்தால் அதையும் செய்திருப்பாள்...''

''அந்த அளவுக்கு உன்மேல் காதல்..''

''ஆமாம்டா.. என்னைப் பார்த்தாளே ஓர் பார்வை. நான் இந்த உலகத்திலேயே இல்லை. வானத்தில் மிதந்தேன்..''

''பாராசூட் கட்டாமலா... காதலித்தால் எப்படியெல் லாம் பிதற்றுகிறீர்கள்.''

''நீ காதலித்துப் பார்.. உனக்குத் தெரியும்..''

''எதற்கு? அந்த மாசிலாமணியுடன் ரோட்டுப் புழுதி யில் புரண்டு சண்டை போடவா? அதற்கெல்லாம் நீதான் லாயக்கு..''

''அது வேறு இருக்குடா.. நான் அவள் அண்ணனிடம் அவளைப் பெண் கேட்க வேண்டுமாம்..''

''மகராசி.. அவள் அண்ணன் குணம் தெரிந்தும்.. உன்னை மாட்டி விடுகிறாள் பார்.. புண்ணியவதிடா உன் காதலி..''

''அவளைத் திட்டாதேடா..''

''நீதான் அவளைக் கொண்டாட வேண்டும்..''

''இப்போது என்ன செய்யலாம் அதைச் சொல்லு..''

''போய் பெண் கேட்டு விட்டால் போயிற்று..''

''எப்படிக் கேட்பது?''

''வாயால்தான் கேட்க வேண்டும்.''

''அடித்து மண்டையைப் பிளந்து விடுவேண்டா ராஸ்கல்''

''உன் மச்சினன் கூட சண்டை போட ரிகர்சல் பார்க்க நான்தான் கிடைத்தேனாடா? உன் கூட ஹவுஸ் மேட்டாக இருப்பதற்கு இன்னும் என்னவெல்லாம் செய்யக் காத்திருக்கிறாயோ..''

''உன்னை என் கல்யாணத்தில் மாப்பிள்ளை தோழ னாக நிறுத்தக் காத்திருக்கிறேன்..''



''மாசிலாமணியிடம் தர்ம அடிவாங்கிக் கொடுக்க முடிவே செய்துவிட்டாய்...''

''ஆமாம்..''

மாடியில் நடந்த உரையாடல்களையும் ஒட்டுக் கேட்டு முடித்த அபிராமியம்மாள் வீட்டுக்குள் அவசரமாய் நுழைந்து பூஜை கூடையை அலமாரியில் வைத்தாள். அவள் தலைக்குள் எதுவோ குடைவது போலிருந்தது.

கேள்விப்பட்டதை யாரிடமாவது சொல்லாவிட்டால் தலை வெடித்து விடும்போல் வேதனைக் குள்ளாவாள் அபிராமி.

அன்றும் அப்படித்தான் ஆகிப்போனது.

## 24



தேடி வரும் பக்தருக்கு

விஷ்ணு துர்க்கை அருளிருக்கு

அவசரமாய் வெளியேறப்போன அபிராமியை சோமசுந் தரத்தின் குரல் தடுத்து நிறுத்தியது.

''கோவிலில் இருந்து வந்ததும் வராததுமாய் எங்கேடி கிளம்பி ஓடுகிறாய்...''

''அட.. நீங்கள் இங்கேதான் இருக்கிறீர்களா?''

''உன் முன்னால்தான் குத்துக்கல்போல் உட்கார்ந்து கொண்டு இருக்கிறேன். என்னைக் கவனிக்காமல் நீ பாட்டுக்கு இப்படி நடக்கிற... அப்படி நடக்கிற.. உடனே

வெளியே ஓடுற.. என்னடி அப்படி தலைபோகிற அவசரம்..?''

அவள்தலை படும்பாடு தெரியாமல் சோமசுந்தரம் வினவினார்.

''உங்களுக்கு கதை தெரியுமா?''

''நீ வந்தவுடனே வீட்டுக்குள் நுழையாமல் மாடிப்படி ஏறி ஒட்டுக் கேட்டுவிட்டு வரும்போதே நினைத்தேன். எதையாவது வம்பு வளர்க்க வருகிறாய்ன்னு.. இப்படி உட்கார்.. வெளியே ஒளிபரப்புவதற்கு முன்னால் என்னிடம் என்ன விசயம்ன்னு சொல்லு..''

''எதுக்கு... உனக்கெதுக்கு ஊர் விசயம்ன்னு என் வாயை அடைக்கவா?''

''இது என்னவோ ஊர் விசயம் போல் எனக்குத் தோணலையே..''

''வேறு என்ன.. நம் வீட்டு விசயமா?''

''அப்படித்தான் தோன்றுகிறது..''

''என்னது? இந்த வீட்டில் நீங்களும், நானும்தான் இருக்கிறோம் நமக்குள் என்ன விவ்காரம் இருக்கு?''

''கீழ்வீட்டு விவகாரமாய் இருக்காது.. மாடி வீட்டு விவகாரமாய் இருக்கும்.. விசயத்தை கக்கு..''

''இங்கே பாருடா.. இது மாடி வீட்டு விவகாரம்ன்னு எப்படி கரெக்டாய் கண்டுபிடித்தீங்க?''

''வந்தவுடனே நீ மாடிப்படியேறிதானே ஒட்டுக் கேட்டே... அதை வைத்துத்தான் கண்டுபிடித்தேன்.''

''பெரிய துப்பறியும் சங்கர்லால்ன்னு மனசுக்குள் நினைப்பு..''



''நீ விசயத்தைச் சொல்லு..''

''மாடி வீட்டுக்காரன் இருக்கானே...''

''மாடிவீடும் என்னுடைய வீடுதாண்டி..''

''அடக்கடவுளே.. இந்த மாதிரி விதண்டாவாதம் செய்வீங்கன்னுதானே உங்களிடம் எதுவும் வாயைத் திறப்பதில்லை. இழுத்து வைத்து வாயைப் பிடுங்கி விட்டு வியாக்கியானம் பேசுறீங்களா?''

''நீ ஒழுங்காய் தகவல் சொன்னியானால் நான் ஏன் வியாக்கியானம் பண்ணப் போகிறேன்?''

''சரி சாமி.. உங்கள் வழிக்கே வருகிறேன். மாடியில் குடியிருக்கிறவன் இருக்கானே..''

''மாடியில் இரண்டு பேர் குடியிருக்காங்க... நீ சொல்லும் 'இவன்'.. 'எவன்'?''

''உங்கள்கிட்ட கதை பேச நான் வந்தேனே? எல்லாம் என் நேரம்.. அவன்தான் அந்த விக்னேஷ்..''

''அடப்பாவமே.. அவன்தான் உன் வாயில் சிக்கியிருக்கிறானா? அவன் மேல் உனக்கிருந்த காண்டிற்கு எப்போது மாட்டப்போகிறானோன்னு நினைச்சேன். இவ்வளவு சீக்கிரம் மாட்டி விட்டானா? ஐயோ.. பாவம்..''

''ரொம்ப பரிதாபப்படாதீங்க...அவன் செய்திருக்கிற வேலையைக் கேட்டால் இப்படி ஐயோ பாவம்ன்னு சொல்ல மாட்டீங்க..''

''வேன் ஓட்டுகிற வேலை தானே பார்க்கிறான்?''

''அதை மட்டும் செய்தால் பரவாயில்லையே.. வேனில் வருகிற பெண்ணை காதலிக்கிற வேலையையும் சேர்த்தில்ல பார்க்கிறான்..''

"என்னடி உளருகிறாய்? விக்னேஷ் நல்ல பையன்..."

"நீங்கள்தான் மெச்சிக்கணும்... இரண்டு பேரும் இவ்வளவு நேரமாய் கொஞ்சிக் குழாவி.. குடும்பம் நடத்த நாளும் குறித்துவிட்டு வந்தார்கள்.."

"யாரும்.. யாரும்..?"

"இவனும்.. எதிர்வீட்டு தாரிணியும்.."

"என்னடி சொல்ற.. தாரிணியா?"

சோமசுந்தரம் அவசரமாய் எழுந்து வாசல் கதவை அடைத்து விட்டு வந்தார். அவரது மூஸ்தீபைக் கண்ட அபிராமியம்மாள்,

"நீங்கள் ஏன் வீணாய் பதட்டப்படுகிறீர்கள்? பதட்டப் பட வேண்டியவன் மாசிலாமணிதானே.." என்றாள்.

"பேசாமல் இருடி கூறு கெட்டவளே.. விசயம் பெரிசா இருக்கும்போல இருக்கு. அந்த மாசிலாமணி பொல்லாதவன். அவன் வம்பு நமக்கு எதற்கு? நீ கொஞ்சம் வாயை அடக்கிவை.."

"நல்லா இருக்கே உங்க நியாயம்? நான் ஏன் என் வாயை அடக்கணும்? அவனில்ல அவன் தங்கச்சியை அடக்கணும்.."

"அடக்கி வைத்து..? சொல்லு.. அடக்கி வைத்து.. என்ன செய்யணும்? காலம் பூராவும் அவனுக்கு சம்பாதித்துப் போடச் சொல்லணுமா? ஏண்டி... நீயும் ஒரு பொண்ணு தானே. கண்ணுக்கு முன்னால் அநியாயம் நடக்குது.. நாம் அதை தட்டிக் கேட்கத்தான் வேண்டாம்.. நாமும் சேர்ந்து அநியாயம் பண்ணாமலாவது இருக்கலாமே.."

"இப்ப நான் என்ன அநியாயம் பண்ணிட்டேன்..?"



"நீ செய்யப் பார்ப்பது நியாயமா?"

"அந்தத் தாரிணி கிட்ட பேச்சுக் கொடுத்தாள் ஒரு வார்த்தை அவ அண்ணிகாரியைப் பத்தியும் அண்ணன் காரனைப் பற்றியும் குறைவா பேசமாட்டாள். நாம ஒன்னு கேட்டால் அவ ஒன்னு பதில் சொல்வா. இந்த விக்னேஷ் பய.. 'நீயென்ன கேட்கிறது.. நானென்ன சொல்றது'ன்னு விறைப்பாய் பார்த்துக்கிட்டே போய்கிட்டு இருப்பான். 'ரெண்டும் ரெண்டு அகப்பை.. ரெண்டும் கழண்ட அகப்பை' இன்றைக்கு வசமாய் ரெண்டுஅழுத்தக்கார பிறவிகளும் என்கிட்ட மாட்டிக்கிச்சுங்க.. நான் சும்மா விடமாட்டேன்.."

"ஏண்டி... உனக்கே இது நல்லா இருக்கா? பெரிய மனுஷி பேசுகிறது மாதிரியா பேச்சுப் பேசுகிறாய்? அந்தப் பெண்ணுக்கு இப்படியாவது விடியட்டும். நீ வாயை மூடிக் கொண்டிரு.."

"இதோ பாருங்கள்.. நீங்கள் இதில் தலையிடாதீர்கள்."

வாக்குவாதம் வலுத்தபோது வாசல் மணி ஒலித்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

அபிராமியம்மாள் உற்சாகமாய் வாசல் பக்கம் விரைய.. சோமசுந்தரம் அவள் கையைப் பிடித்து தடுத்து விட்டு அவர் போகப் பார்த்தார்.

அபிராமியம்மாள் அவரைக் கையைப் பிடித்து நிறுத்தி விட்டு அவள் போகப் பார்த்தாள்.

வயோதிகர்கள் இருவரும் 'சடுகுடு' விளையாடிக் கொண்டிருந்த போது மீண்டும் அழைப்பு மணி நிற்காமல் ஒலித்தது.

மூச்சு வாங்க மனைவியின் கைகளை விட்ட சோம சுந்தரம்,

''போய் தொலைடி..'' என்றவாறு அங்கிருந்த சோபா வில் விழுந்தார்.

கணவருடன் விளையாடிய கபடி ஆட்டத்தில் ஜெயித்த அபிராமியம்மாள் வெற்றிக் கோட்டைத் தொடுவது போல் துள்ளிக் குதித்து கதவைத் தொட்டுத் திறந்து

''தெரியுமா சேதி...?'' என்றாள். உடனே முகம் மாறி னாள்.

''என்ன சேதிங்கம்ம்மா..?'' என்றான் குமரன். அருகில் விக்னேஷ்.

''நீங்களா..! என்னப்பா விசயம்? ரெண்டு பேரும் ஜோடி போட்டுக்கிட்டு வந்திருக்கீங்க..?'' விக்னேஷை முறைத்த படி கேட்டாள் அபிராமி.

''அட.. கரெக்டா கண்டுபிடிச்சுட்டீங்களே.. ஜோடி போடுகிற விசயமாத்தான் அம்மாவை பார்த்து விட்டுப் போக வந்தோம்,'' குமரன் விக்னேஷைப் பார்த்து கண்சிமிட்டியபடி கூறினான்.

''ஏம்பா.. இளந்தாரி பசங்களோட இளவட்டப் பேச்செல் லாம் கிழவிக்கு எங்கே புரியப் போகுது? விளக்கமா பேசுங்கப்பா..''

குமரன் பதில் சொல்லாமல் சுற்றும் முற்றும் எதையோ தேடுவது போல் பார்க்க அபிராமியம்மாள் குழப்பத்துடன்,

''என்னதப்பா.. தேடுற?'' என்றாள்.

''இல்லை... கிழவின்னு சொன்னீங்களே.. யார் அது?''

விக்னேஷ் பல்லைக் கடித்தபடி குமரனைப் பார்த்தான்.



'மகனே! மாடிக்கு வா உன்னைப் பேசிக்கிறேன்.. இந்தம்மா கிழவியில்லாமல் குமரியா?' என்று அவன் பார்வை கேட்டது. அதைக் கவனியாதவன் போல் குமரன்,

''ஏம்மா.. பதினாறு வயசுப் பெண் மாதிரி சுறுசுறுப்பாய் துள்ளிக் குதித்து ஓடிவந்து நீங்க கதவைத் திறந்து சேதி சொன்ன வேகத்தைப் பார்த்த பின்னால் உங்களை 'கிழவி'ன்னு எந்த முட்டாளாவது சொல்வானா?'' என்றபடி விக்னேஷை பார்த்தான்.

'இதுவும் சரிதான்' என்று முட்டாளான விக்னேஷ் நினைத்துக் கொண்டான்.

அபிராமியம்மாளின் முகமெல்லாம் மலர்ந்துவிட்டது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சோபாவில் கிடந்த கண வனைப் பார்த்தபடி பெருமையுடன் அவர்களை வீட்டிற் குள் அழைத்தாள்.

## 25



பாற்கடலில் பள்ளி கொண்ட

பரந்தாமனின் சகோதரியே!

இந்த குமரன் இருக்கிறானே.. அவனுக்கு உடம்பெல் லாம் கண்கள். அபிராமியம்மாள் ஒட்டுக் கேட்டுவிட்டு இறங்கியதை கவனித்து விட்டான்.

''விக்னேஷ்... நாளைக்கு மாசிலாமணி உன்னை அடிக்கிறானோ இல்லையோ.. கீழ்வீட்டு அபிராமியம் மாள்.. உனக்கும் தாரிணிக்குமான காதலை ஊர் பூராவும் தம்பட்டம் அடிக்கப் போகிறாங்க..''

"அந்தம்மாவிற்கு எப்படித் தெரியும்?"

"நம் வீட்டுக் கதவோடு.. கதவாய் பல்லி போல் ஒட்டி நின்று ஒட்டுக் கேட்டால் தெரியாமல் போகுமா?"

"அப்படியா சேதி.. இப்போதே கீழே போய் அந்தம்மாளை என்ன செய்கிறேன் பார்.." ரௌத்ரமானான் விக்னேஷ்.

"கீழே போகலாம்.. ஆனால் அந்த அம்மாளிடம் நான் பேசிக் கொள்கிறேன். நீ நடப்பதை மட்டும் வேடிக்கை பார்.."

"அந்த அம்மாளிடம் என்னடா பேச்சு வார்த்தை வேண்டிக் கிடக்கு?"

"வேண்டித்தானிருக்கு.. நீ பேசாமல் வாயேன்.."

இருவரும் வீட்டைப் பூட்டிவிட்டு கீழே இறங்கி வந்தார்கள். அபிராமியம்மாளின் வீட்டு அழைப்பு மணியை அழுத்தினார்கள்.

உள்ளேயிருந்து விநோத சப்தங்கள் வந்தன. இருவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னடா இது..?" என்றான் விக்னேஷ்.

"என்னைக் கேட்டால் எனக்கென்னடா தெரியும்?"

"சரி வா நாம் போய்விடலாம்."

"போவதிலேயே குறியாய் இரு.."

"அவங்களை ஏண்டா டிஸ்டர்ப் பண்ணனும்?"

"இங்கே பார்... கண்ணதாசன் 'ஐம்பதிலும் ஆசை வரும்'ன்னு தான் பாடியிருக்கிறார். அறுபத்தைந்தில் வரும்ன்னு பாடலை.."

"இதை ஏண்டா என்கிட்ட சொல்லுகிறாய்..?"



"இல்லை... இவங்களை டிஸ்டர்ப் பண்ண வேணாம்ன்னு நீதானே சொன்னே."

"உன் புத்தி போகிற போக்கைப் பார்.."

விக்னேஷ் எரிச்சலுடன் அழைப்பு மணியை விடாமல் அழுத்தினான். கதவைத் திறந்த வேகத்தில் அபிராமியம்மாள் சேதி சொல்லக் கிளம்ப குமரன் அவள் மேல் ஐஸ் கூடையைக் கவிழ்த்தான்.

குளிர்ந்துபோன அபிராமியம்மாள் அவர்களை உள்ளேயே அழைத்து அடைக்கலம் கொடுத்தாள்.

"என்னடா.. வீட்டுக்குள்ளேயே கூப்பிட்டுட்டாங்க.. எப்படிடா..?"

"குமரன் திருவிளையாடல்தான்... உள்ளே வா.."

அவர்கள் உள்ளே சென்றார்கள். சோமசுந்தரம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவர் இவர்களைக் கண்டதும்,

"வாங்கப்பா.. நல்லவேளை.. நீங்கள்தானா?" என்றார்.

"என்ன சார்.. உடம்புக்கு..?" வினவினான் குமரன்.

"எல்லாம் நான் தாலிகட்டின வேளைப்பா.. நீ உட்காரு.." அவரை அனுதாபப் பார்வை பார்த்தபடி அருகே அமர்ந்த குமரன்,

"ச்ச்ச்..." என்றான்.

"என்னப்பா..?" என்றாள் அபிராமியம்மாள்.

"உங்களுக்குத்தான் எத்தனை வேலைம்மா? ஒரு வேலையாள் கூட வைத்துக் கொள்ளாமல் தனியாய் சமாளிக்கிறீர்கள்.. நினைத்துப் பார்க்கவே பாவமாய் இருக்கும்மா.."

''காபி சாப்பிடுங்கப்பா..'' நெகிழ்ச்சியுடன் அபி ராமியம்மாள் உள்ளே போனாள். விக்னேஷ் குமரனை முறைத்தான்.

''நாம் வந்த வேலையென்ன? நீ செய்யும் வேலை யென்ன?''

''அதற்காக.. காபிக்கு வழிசெய்யாமல் உட்கார்ந்து பேச முடியுமா? நீ வந்ததும் காபி போட்டுக் கொடுக்கும் மூடிலா வந்தாய்? காதல் சொல்லும் மூடில் வந்தாய்.. இந்தம்மா வம்பு பேசுவதுதான் நன்றாக இருக்காது.. ஆனால் இது போடும் காபி.. ரொம்ப நன்றாக இருக்கும்..''

இருவரும் ஒருவர் காதில் ஒருவர் கிசுகிசுத்துக் கொண் டிருக்க,

''என்னப்பா ரகசியம் பேசுகிறீர்கள்?''என்று வினவினார் சோமசுந்தரம்.

''எல்லாம் வேலைக்கு ஆள் இல்லாத மேட்டர்தான் சார்?''

''எப்படியிருக்கும்..? தினம் தினம் புதுப்புது வம்பா வந்து சொல்லணும்னா வேலைக்காரி தான் என்ன பண்ணுவாள்? ஒருத்தரும் தங்குவதில்லை..''

''ஐயோ பாவம்...''

''யாரைப்பா சொல்கிறாய்? என்னையா.. வேலைக்காரி யையா?''

அந்த நேரம் பார்த்து அபிராமியம்மாள் காபியுடன் வர,

''வேறு யார்ம்மா.. நீங்கள்தான்...'' என்று கட்சி மாறி னான் குமரன்.

''டார்வின் தியரியை புரூவ் பண்ணுவதில் நீ கில் லாடிப்பா..''என்றார் சோமசுந்தரம் மெச்சுதலாய்.



அதைக் கவனிக்காமல் அபிராமி கொடுத்த காபியை வாங்கி வாசனை பிடித்த குமரன்.

''ஹா.. உங்க கைமணமே தனிம்மா..'' என்றான்.

''உனக்காவது என்னை பாராட்டத் தோணுதே. இந்த மனுசனுக்கு காலம் பூராவும் சமைச்சுப் போடறேன். வாயைத் திறந்து ஓர் வார்த்தை சொன்னதில்லை...''

''ஏன் சார்.. அவங்க சொல்வது நியாயம்தானே..''

''குமரா.. நான் பாராட்டணும்தான் நினைப்பேன்.. ஆனால் வாயைத் திறந்தால் வம்பை மட்டும்தானே பேசுகிறாள்.. அதனால் நான் வாயைத் திறந்தால் அட் வைஸ்தான் வருது.. பாராட்டே வர மாட்டேங்குதப்பா...''

''வாட் எ பிட்டி.. வாட் எ பிட்டி...''

''ஆமாம்.. இந்த ராத்திரி நேரத்தில் என்னைப் பார்த்து இரக்கப்படவா நீங்க இரண்டு பேரும் மாடியிலிருந்து வேலைமெனக்கெட்டு இறங்கி வந்திருக்கீங்க?'' சந்தேகமாய் பார்த்தார் சோமசுந்தரம்.

''வேலையில்லாமல் வருவோமா சார்?'' குமரன் காபியை ரசனையாய் உறிஞ்சிக் கொண்டிருந்தான்.

''என்ன வேலை.. காபி குடிக்கும் வேலையா?'' சோமசுந்தரம் இடக்காக வினவ,

''ஹா.. ஹா..'' என்று சிரித்தான் விக்னேஷ்.

இதையெல்லாம் கண்டு கொள்ளாமல் காபியை ஒரு சொட்டு விடாமல் குடித்து முடித்த குமரன்,

''பேஷ்.. பேஷ்.. ரொம்ப நல்லாயிருக்கு..'' என்றான் அபிராமியிடம்.

''இது புரு காப்பிப்பா...'' என்றாள் அபிராமியம்மாள் உற்சாகத்துடன்.

பொறுக்க முடியாமல் விக்னேஷ் எழுந்தே விட்டான்.

''அடடா.. நீ ஏண்டா எழுந்திருக்கிற.. வந்த வேலையை பார்க்க வேண்டாமா?'' குமரன் விக்னேஷின் கையைப் பிடித்து அமர வைத்தான்.

''இந்த லட்சணத்தில் நீ வேலையை பார்ப்பதானால் என்னை விடு.. நான் மாடிக்குப் போகிறேன்..''

''யாருடா இவன்.. மாமியோட காபியில் மயங்கிட்டா.. உன் வேலையை மறந்து விடுவேனா?''

''என்ன விசயம்பா..?'' சோமசுந்தரம் அவர்கள் அடித்துக் கொள்வதைக் கண்டு வினவினார்.

''அது.. அம்மாகிட்டத்தான் அந்த விசயத்தை சொல்ல ணும்..'' குமரன் கூறவும் அபிராமியம்மாள் இன்னும் உற்சாகமானாள்.

''யார் வீட்டு விசயம்பா? என்ன நடந்தது?''

''பார்த்தாயா..?'' சோமசுந்தரம் தலையில் அடித்துக் கொண்டார்.

''விடுங்க சார். எல்லாம் எதிர்வீட்டு விசயம்தாம்மா..''

''எதிர்வீட்டிலா...அங்கு என்ன நடந்தது?''

''அந்த வீட்டுப் பெண் தாரிணியை நம்ம விக்னேஷ் லவ் பண்றான்ம்மா..''

சோமசுந்தரமும், அபிராமியும் ஒருவரையொரவர் பார்த்துக் கொண்டனர். அபிராமியின் முகத்தில் வியப்புத் தெரிந்தது.



விக்னேஷ் புரியாமல் குமரனைப் பார்த்தான். அவன் விழிகள்

'என்னடா இது?' என்று வினவின. குமரனின் கண் களின் இமைகள்,

'பொறு' என்ற பாவனையில் மூடித் திறந்தன.

''எவ்வளவு நாளாப்பா இது நடக்குது..?'' கதை கேட்கும் ஆவலில் அபிராமியம்மாள் வினவினாள்.

''ரொம்ப நாளாவே நடக்குதும்மா. இப்ப இவங்க ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அதற்குத்தான் உங்களைத் தேடி வந்திருக்கிறோம்..''

''என்னையா? எதுக்குப்பா என்னைத் தேடி வந்திருக் கீங்க?'' அபிராமியம்மாள் வினவினாள்.

குமரன் பதில் சொன்னான். அவன் சொல்லச் சொல்ல விக்னேஷின் முகத்தில் ஆச்சர்யம் பரவியது. முள்ளை.. முள்ளால் எடுக்கும் நண்பனின் சாதுர்யம் அவன் முகத்தில் புன்னகையையும் வரவழைத்தது.

# 26



அலைகடல் மனதை அமைதிபடுத்தும்

அலைமகளும் நீயே...!

அபிராமியம்மாள் அடிப்படையில் தாய் மனம் கொண் டவள். பிள்ளைகள் இருவரும் டெல்லி, பம்பாய் என்று தனிக்குடித்தனம் போய்விட பொழுது போகாமல்

மற்றவர்களின் வீட்டுக் கதைகளைப் பேசுவதில் நாளைக் கழிப்பவள். அவளின் அந்த குணாதிசயத்தை சரியாய் நாடி பிடித்து வைத்திருந்த குமரன்,

''அம்மா.. நாங்க குடி வந்தபோதே என்ன சொன்னேன்?'' என்றான்.

''என்னப்பா சொன்னாய்?''

''இவன் தாய், தகப்பனில்லதாவன்னு சொன்னேனா இல்லையா?''

''ஆமாம் சொன்னாய்..''

''உங்களைப் பார்த்தால் அசப்பில் அவன் அம்மா மாதிரியே இருக்குன்னு உங்களிடம் சொன்னேனா இல்லையா?''

''ஆமாம்பா.. சொன்னாய்..'' அபிராமியம்மாள் முந்தானையில் மூக்கைத் துடைத்துக் கொண்டாள்.

''இப்ப கல்யாணம்ன்னு ஒன்னு இவன் பண்ணனும்னா பெண் கேட்க நீங்கதானே போகணும்?'' குமரன் கொக்கியைப் போட,

''என்னது?'' என்று அரண்டு போய் எழுந்தார் சோமசுந்தரம்.

''அப்பா குமரா.. போகாத ஊருக்கு வழி சொல்லாதேப்பா. சும்மாவே வீட்டு வாசலில் குப்பை போடும் தகராறில் அந்த மாசிலாமணி என்னை வெட்டுவேன்னு கத்தினான். இப்ப உன் பிரண்ட் விசயத்தில் நாங்க தலையைக் கொடுத்தோம்ன்னு வை.. அவன் சொன்னதைச் செய்யாமல் விடமாட்டான். என் தலையைக் காப்பாற்றுப்பா..'' சோமசுந்தரம் ஏறக்குறைய குமரனிடம் கெஞ்ச,



''சும்மாயிருங்க.. அவனெல்லாம் ஒரு மனுசன்.. அவன் கிட்டப் போய் நாம பயப்படணுமா?'' என்று அவரிடம் ஓர் அதட்டால் போட்ட அபிராமியம்மாள் குமரனைப் பார்த்து,

''நீ அந்தக் காலண்டரை எடுப்பா..''என்றாள்.

''எதுக்குடி.. தேதியைப் பார்க்கிற?'' என்றார் சோமசுந்தரம் கலவரத்துடன்.

''அவர் கிடக்கிறார்ப்பா.. நீ காலண்டரை எடு..''

''இந்தாங்க அம்மா..''

காலண்டரை எடுத்து ஏதோ விரல் மடக்கி ஆராய்ந்தவள் குமரனை நோக்கி,

''அடுத்த வாரம் பூரா நாள் நல்லா இல்லைப்பா... நாளைக்கே நாள் நல்லாத்தான் இருக்கு. நாளைக்கு சாயந்திரமே போய் பெண் கேட்டுவிடுவோம்..'' என்று கூறினாள்.

''நாளே.. குறிச்சிட்டியாடி..'' சோமசுந்தரம் நெஞ்சைப் பிடித்துக் கொண்டார்.

''இவர் ஒருத்தர் ஆ ஊன்னா நெஞ்சைப் பிடிச்சுக்குவார். எதுக்கும் இந்த மாத்திரையைப் போட்டு உடம்பைத் தேற்றிக்கோங்க... நாளைக்கு சாயந்திரம் நீங்க இப்படியே வந்து நின்னால் சரிவராது..''

''நான் எங்கேடி வரணும்?''

''எதிர்வீட்டிற்கு பெண் கேட்கத்தான். மாப்பிள்ளைக்கு நான் அம்மான்னா.. நீங்கதானே அப்பா..''

''எப்போப்பட்ட கண்டுபிடிப்பு.. ஏண்டி எனக்கு ஒரு முடிவு கட்டணும்ன்னு எத்தனை நாளாய் காத்திருந்த?''

''உளராமல் போய் மாத்திரையைப் போட்டுட்டு தூங்குங்க.. நீங்க ரெண்டு பேரும் உட்காருங்கப்பா.. வெங்காய தோசை ஊத்தறேன்..''

''எதற்கும்மா அதெல்லாம்..'' என்று விக்னேஷ் எழுந்திருக்க முயல,

''சும்மாயிருடா.. தொட்டுக்க என்ன சட்னிம்மா..?'' என்றான் குமரன்.

''தக்காளி சட்னிப்பா..''

''ஆஹா.. என்ன காம்பினேஷன்.. என்ன காம்பினேஷன்..''

''உன் நாக்கு இருக்கிறதே..'' விக்னேஷ் தலையில் அடித்துக் கொண்டான்.

''அதற்கென்னடா..''

''இவ்வளவு வளர்த்து வைத்திருக்கக் கூடாது..''

''டேய் விக்னேஷ்.. நான் திங்கப் படிச்ச குடும்பத்தில் பிறந்தவண்டா... ஆயகலை அறுபத்தி நான்கில் சமையல் கலையும் ஒன்று. உனக்கெங்கே அதெல்லாம் தெரியப் போகுது. என்னம்மா.. அதுக்குள்ளே தோசை ஊற்றிட்டிங்களா.. தோ.. நான் வந்திட்டேன்..'' குமரன் சாப்பாட்டு மேஜைக்கு தாவ,

''உன்னைத் திருத்தவே முடியாதுடா..'' என்றவாறு விக்னேஷ் அருகே சென்று அமர்ந்து கொண்டான்.

''ஏம்பா விக்னேஷ்.. சேலை என்ன கலர்ல எடுத்திருக்க..'' குமரனின் தட்டில் தோசையைப் போட்டபடி வினவினாள் அபிராமி.



''சேலையா? யாருக்கு எடுக்க? எதுக்கு எடுக்க?'' திருதிருவென்று விழித்தபடி குமரனைப் பார்த்தான் விக்னேஷ்.

அவன் தக்காளிச் சட்னியில் தோசையை தோய்த்துக் கொண்டிருந்தான். விக்னேஷின் கேள்விக்கு அபிராமியே பதில் சொன்னாள்.

''என்னப்பா இது புரியாத பிள்ளையாய் இருக்க... அதுசரி.. தாயில்லாத பிள்ளையாச்சே.. உனக்கெங்கே இது தெரியப்போகுது.. சேலை தாரிணிக்குத்தான்.. எதுக்குன்னா.. நாளைக்கு அவளைப் பெண் கேட்கப் போகிறோமே அதுக்குத்தான்..''

''அதுக்கு சேலையெல்லாம் எடுக்கணுமாம்மா?'' அப்பாவியாய் வினவினான் விக்னேஷ்.

''சாதாரணமாய் போய் கேட்க பூ.. பழமே போதும்.. ஆனால் நிச்சயம் பண்ணிவிட்டு வருவதாய் இருக்கிறோமில்லையா.. அதற்கு சேலை எடுத்துத்தான் ஆகணும்'' என்றாள் அபிராமி.

''ஆமாம்... போங்க. போங்க.. மாசிலமாமணி நிச்சயதார்த்த விருந்தே போடுவான்..'' என்றார் குளிர் ஜூரம் வந்தவர் போல் நடுங்கிக் கொண்டிருந்த சோமசுந்தரம்.

''அவன் விருந்து ஆக்கிப்போடறான்... இல்ல.. போடாமல் போகிறான்.. அதுவா நமக்கு முக்கியம். நாம் பெண் கேட்டு நிச்சயம் பண்ணப் போறோம். அதுதான் முக்கியம். என்னப்பா இரண்டு பேரும் சாப்பிட்டு முடிச்சிட்டிங்களா.. சரி கையை கழுவிட்டு வாங்க.. லிஸ்ட் போடலாம்,'' அபிராமி அடுப்பை அணைக்கச் சென்றாள். சோமசுந்தரம் அவசரமாய் எழுந்து உட்கார்ந்து,

"ஏண்டி.. நான் சாப்பிட வேண்டாமா?" என்று கேட்டார்.

"உங்களுக்குத்தான் நெஞ்சு வலி போலிருக்கிறதே.. வெங்காய தோசையும், தக்காளி சட்னியும் ஒத்துக்குமா?"

"அதனால்.."

"பால் ஒரு கிளாஸ் தர்றேன். குடிச்சுட்டு படுங்க.. நீங்க வாங்கப்பா லிஸ்ட் போடலாம்.."

அபிராமியம்மாள் யோசித்து யோசித்துக் கூறலானாள்.

"பூ பத்து முழம்.."

"பத்து முழம் எதுக்கும்மா.. ஒரு முழம் பத்தாதா? ஏண்டா.. தாரிணி எவ்வளவு பூ வைத்துக் கொள்வாள்," குமரன் விக்னேஷிடம் வினவ அவன் விழித்தான்.

'அவள் எவ்வளவு பூ வைத்துக் கொள்வாள்..'

"அட நீ வேற புரியாத ஆளாய் இருக்கப்பா.. விசேஷ வீட்டுக்குப் பூ வாங்கிக் கொண்டு போனால் நிறைய வாங்கிக் கொண்டு போகணும்பா.. அக்கம் பக்கத்து பெண்கள் வீடு நிறையக் கூடுவார்கள். அவர்களுக்கு ஆளுக்கு ஒரு கண்ணி கட் பண்ணிக் கொடுக்கணும்.. இதெல்லாம் உலக வழக்கம்பா.."

விக்னேஷிற்கு இப்போது அபிராமியம்மாள் மேல் பக்தியே வந்துவிட்டது.

"அப்புறம்மா..?" என்று பவ்யமாய் வினவினான்.

"ஆப்பிள் ஒரு டஜன்.. ஆரஞ்சு ஒரு டஜன்.. வாழை பழம் ஆறு சீப்பு.." அபிராமி அடுக்கிக் கொண்டு போக குமரன் சந்தேகம் கேட்டான்.



"இதெல்லாம் எதற்கும்மா...? தாரிணியை கல்யாணம் பண்ணிக் கொடுத்துவிட்டால் மாசிலாமணி பழக்கடை வைத்தாவது பிழைத்துக் கொள்ளட்டும் என்ற நல்லெண்ணத்தில் சொல்கிறீர்களா?"

விக்னேஷ் சிரிப்பை அடக்கிக் கொண்டான். அபிராமி மூக்குக் கண்ணாடியின் மேலாக மேல் பார்வை பார்த்து முறைத்தாள்.

"நிச்சயம் பண்ணப் போனால் ஆறு தட்டாவது வைக்க வேண்டும். ஒவ்வொரு தட்டிலும்.. பழம்.. பூ.. சேலைன்னு அடுக்கியிருக்கனும்.." அவள் சொல்லிக் கொண்டிருக்கும்போது சோமசுந்தரம்,

"எதற்குடி மாசிலாமணி தட்டைத் தூக்கி நம் மேல் எறிவதற்கு தோதாக தட்டுகளை கொண்டு போய் அடுக்கப் பார்க்கிறாய்" என்று ஊடே சொல்லி வைத்தார்.

அது உண்மைதான் என்று அறிந்திருந்த போதும் குமரனோ, விக்னேஷோ, அபிராமியோ.. அதைப்பற்றி கவலைப்படவேயில்லை.

## 27



அன்பைத் தேடி சரணடைந்தேன்

விஷ்ணு துர்க்கை தாயே!

"அப்புறம்.. வேறு என்ன என்ன வாங்கச் சொன்னாங்க.." என்று கேட்டாள் தாரிணி.

"கல்கண்டு.. தேங்காய்.. இன்னும் நிறைய.."

"நீங்களும் வாங்கப் போறீங்களா..?"

"யெஸ்.."

"எனக்கென்னவோ.. சோமசுந்தரம் அங்கிள் சொல்வதுதான் சரியென்று தோன்றுகிறது..."

"எதைச் சொல்கிறாய்..?"

"எப்படியும் என் அண்ணன் சம்மதிக்கப் போவதில்லை. தெருவில் நின்று கத்தத்தான் போகிறார்.. அதற்கு எதற்கு இந்த வீண் செலவு..?"

"வீண் செலவென்று சொல்லாதே தாரிணி. நிச்சயம் பண்ண வந்தால் இதையெல்லாம் வாங்கிக் கொண்டு வரவேண்டுமாமே.."

"விக்னேஷ்.. என் அண்ணன்..."

"அவன் எப்படியோ போகட்டும் தாரிணி.. நான் உன்னைப் பெண் கேட்டு நிச்சயம் பண்ண வரும்போது எதையும் குறைவில்லாமல் கொண்டு வரணும்னு நினைக்கிறேன்.. உனக்கு என்ன கலர் பிடிக்கும்?"

"எதற்கு கேட்கறீங்க?"

"சேலை வாங்கத்தான்.. உனக்காக முதல் முதலாய் சேலை வாங்கித் தரப்போகிறேன்.. சொல் தாரிணி.. உனக்கு என்ன கலர் பிடிக்கும்?"

தாரிணி கண்களை மூடிக் கொண்டாள். அவளுக்கு வேண்டியதை வாங்கித் தர அவனிருக்கிறான்.. அவளுடையவன்.

"என்ன தாரிணி.. கேட்கக் கேட்க பதில் சொல்ல மாட்டேங்கிற?"



"உங்களுக்கு என்ன கலர்.. என்ன டிசைன் பிடிக்குதோ அதை வாங்கிக் குடுங்க."

"இருந்தாலும் உடுத்தப் போவது நீதானே."

"பார்த்து ரசிக்கப் போவது நீங்கள்தானே.."

அந்தப் பதிலை உள் வாங்கின விக்னேஷ் அவளைத் திரும்பி ஓர் பார்வை பார்த்தான்.

'இது தான் காதல் என்பதா?'

உதட்டை மடித்துக் கடித்தவன் லேசாக சிரித்துக் கொண்டே வேனைச் செலுத்தினான். தாரிணியின் கல்லூரி வந்துவிட்டது.

"சாயந்திரம் பார்க்கலாமா?"

"ம்ம்.." என்றவள் அவனுக்கு கை அசைத்துவிட்டு கல்லூரிச் சாலையில் நடந்தாள்.

"அப்போ.. விக்னேஷ் இன்றைக்கு சாயந்திரம் பெண் கேட்க வருகிறாரா?" என்று கேட்டாள் மேனகா.

அவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

"ஆமாம்..."

"தாரிணி.. நன்றாக யோசித்துத்தான் இந்த முடிவுக்கு வந்தாயா?"

"ஆமாம்.."

"எதற்கும்.. இன்னொரு முறை யோசிக்கலாமே..."

"எதற்காக மேனகா? அவர் அதிகம் படிக்கவில்லை என்பதற்காகவா.. இல்லை... என் வேலைக்கு சமமான வேலையில் இல்லை என்பதற்காகவா?"

"கோபப்படாதே, தாரிணி... பிராக்டிகலாயும் யோசனை பண்ணு.."

''காதல் யதார்த்தமான விசயங்களைப் பார்ப்பதில்லை.. அது ஓர் கனவு..''

''கனவென்று நீயே சொல்லிவிட்டாய் பார்த்தாயா?''

''கனவை வாழ்ந்து பார்க்க எத்தனை பேருக்கு கொடுத்து வைத்திருக்கிறது? எனக்கு அந்தக் கொடுப்பினை வாய்த்திருக்கிறது மேனகா. நான் ரொம்ப சந்தோசமாக இருக்கிறேன்.''

''இந்த சந்தோசம் உன் வாழ்நாள் பூராவும் தொடர வேண்டாமா?''

''தொடராமல் எங்கே போய்விடும் மேனகா?''

''நாளடைவில் காணாமல் போய்விடும்.''

''எப்படிச் சொல்கிறாய்?''

''காதலிக்கும்போது பெரிதாகத் தெரியாத குறைகள் கல்யாணம் ஆன பின்னால் விஸ்வரூபம் எடுக்கும். இன்றைக்கு விக்னேஷ் பிளஸ் டூ வரை படித்திருப்பது உனக்கு பெரிதாய் தெரியாமல் இருக்கலாம். நாளைக்கு அதுவே ஓர் பிரச்சனையாகி உங்களுக்குள் இடைவெளி உருவாகலாம். நீ பேசாமலிருந்தாலும் உன்னையறிந்த நான்கு பேர் மாப்பிள்ளை உன்னை விட இவ்வளவு கம்மியாய் படித்திருக்கிறாரேன்னு கேட்பாங்க. அதனால் விக்னேஷிற்கு இன்பீரியாரிட்டி காம்ப்ளெக்ஸ் வரலாம்.. உன்னை டார்ச்சர் பண்ணலாம்... யோசித்துச் செய் தாரிணி.. இதுதான் உலக நடப்பு..''

''மேனகா.. நான் சம்பாதிப்பது போல் இரு மடங்கு அவர் சம்பாதிக்கிறார்.. அது உனக்குத் தெரியுமா?''

''ஆனாலும்.. தாரிணி..''



''இல்லை மேனகா.. நான் தெளிவாக இருக்கிறேன். இந்த வேலையை விட்டுவிட்டு நான் வீட்டிலிருக்க முடிவு பண்ணினேன்னு வை.. அவர் சந்தோசமாய் அதை ஏற்றுக் கொள்வார்.. என்னை மகாராணி போல் வாழ வைப்பார்... என் படிப்பிற்காகவும்.. சம்பளத்திற்காகவும் வரும் மாப்பிள்ளை அதைச் செய்வார்ன்னு உன்னால் நிச்சயமாய் சொல்ல முடியுமா?''

மேனகா வாயடைத்துப் போனாள். திருமணச் சந்தையில் ஒரு பெண்ணிற்கு எவ்வளவு வரதட்சணை கொடுப்பார்கள். எவ்வளவு நகை போடுவார்களென்று கேட்டது அந்தக் காலம். இப்போதெல்லாம் ஒரு பெண் எவ்வளவு படித்திருக்கிறாள். எவ்வளவு சம்பளம் வாங்குகிறாளென்று தான் பார்க்கிறார்கள். காலம் பூராவும் வீட்டுச் சுமையையும் தாங்கி பொருளாதாரச் சுமையையும் தாங்க வேண்டிய நிர்பந்தம் பெண்ணிற்கு வந்திருக்கிறது.

வேலைக்குப் போவது பெண் சுதந்திரமாகுமா.. என்றால் அது கேள்விக்குறிதான்.. வீட்டிலும் நான்கு சுவர்கள்.. அலுவலகத்திலும் நான்கு சுவர்கள்.. வீட்டிலும் ஆணுக்கு அடுத்தபடிதான் பெண்.. அலுவலகத்திலும் அப்படித்தான். வேலைக்குப் போகும் பெண்கள் வீட்டையும் கவனித்து விட்டு வேலைக்கு ஓட வேண்டும். சம்பாதிக்காத பெண்களுக்குக் கூட பேச்சுரிமை உண்டு. சம்பாதிக்கும் பெண்கள் வாய் திறந்து ஓர் கருத்தை சொல்லி விட முடியாது.

'சம்பாதிக்கும் திமிரா?' என்ற கேள்வியை எதிர் நோக்க வேண்டும்.

மேனகா மௌனமாய் யோசித்தாள். தாரிணி எடுத்த முடிவு சரிதான் என்று தோன்றியது.

விக்னேஷ் நல்லவன். தாரிணியை அவளுக்காக நேசிப்பவன். தாரிணி எழுதப்படிக்கத் தெரியாதவளாய் இருந்திருந்தாலும் அவன் அவளைக் காதலித்துத்தான் இருந்திருப்பான். அவளைக் கண்ணுக்குள் வைத்துப் போற்றியிருப்பான். இதில் சந்தேகமில்லையெனும் போது வேறு சந்தேகங்களை ஏன் வீணாய் எழுப்ப வேண்டும்.

மேனகா சில வேலைகளைச் செய்தாள். மாலையில் தாரிணி வீட்டிற்குக் கிளம்பும்போது அவளும் பிள்ளைகளை கணவனின் வசம் ஒப்படைத்து விட்டுக் கூட வந்தாள். கோவிலில் விஷ்ணு துர்கையிடமும், நவகிரகங்களிடமும் மனமார வேண்டி விட்டு தாரிணி விக்னேஷின் வேனிற்காக காத்து நின்றபோது மேனகா பாலன் குருக்களிடம் பேசிக் கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் மோகன் தாஸும், கலைநேசனும் அங்கு வரவும் அவர்களுடனும் தீவிரமாய் கலந்து ஆலோசித்தாள்.

விக்னேஷின் வேன் வரவும் தாரிணியும் மேனகாவும் ஏறிக் கொண்டார்கள். மேனகாவின் கணவன் தினகரன் தாரிணியிடம் வந்து,

"எதற்கும் பயப்பட வேண்டாம் தாரிணி. நீங்கள் என் தங்கை போல.. தைரியமாய் இருங்கள். எது வந்த போதும் நாங்கள் உங்கள் பக்கம் துணையாக நிற்போம்.." என்றான்.

தாரிணி நெகிழ்ச்சியுடன் தலையை ஆட்டினாள். தினகரன் விக்னேஷிடம் வந்து கை குலுக்கினான்.

"வாழ்த்துக்கள்.. விக்னேஷ்."

"தேங்க்யு சார்.."



"மேனகா வருகிறாள்... எதுவாக இருந்தாலும் ஒரு கை பார்த்து விடுவோம். கவலைப்படாதீர்கள்.." என்று தினகரன் கூற,

"அவரா கவலைப்படுகிறவர்..? இன்றைக்கு தாரிணியின் அண்ணன் கதி என்னாகுமோன்னு நானில்ல கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்," என்று மேனகா கூறிச் சிரித்தாள்.

வேன் கிளம்பியதும் தாரிணி மேனகாவின் கையை இறுகப் பிடித்துக் கொண்டாள். அவள் கைவிரல்கள் நடுங்குவதை உணர்ந்த மேனகா,

"அதுதான் நானும் உன்கூட வருகிறேனில்ல..? அப்புறமும் என்ன பயம்?" என்று கடிந்து கொண்டாள்.

விக்னேஷ் தலை திருப்பி தாரிணியைப் பார்த்து புருவம் உயர்த்தினான்.

"எதற்கு பயம்?"

அவன் விழிகளோடு விழி கலந்த தாரிணி மனபயம் ஓடக் கண்டாள். அவன் அருகிலிருக்கும் போது எதற்கு பயம்? அவனைக் கணவனாகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன் என்று கூற என்ன பயம்? அவள் தைரியம் வரப் பெற்றவளாய் நிமிர்ந்து அமர்ந்தாள்.

## 28



ஊர்விட்டு ஊர் வந்து

உனதருளை நான் உணர்ந்தேன்

வீட்டிற்குள் தாரிணியுடன் நுழைந்த மேனகாவைக் கண்டதும் கலையரசி யோசனையாய் பார்த்தாள்.

''அண்ணி.. இவள் என் பிரண்ட் மேனகா.. என்னோடு காலேஜில் லெக்சரராய் இருக்கிறாள்...''

''ஓஹோ... என்ன விசயமாம்.. உன் கூட வீடு வரைக்கும் வந்திருக்காங்க?''

''ஏங்க வரக்கூடாதா?'' மேனகா நேரடியாய் கலையரசியிடம் கேட்டாள்.

''எங்க வீட்டிலெல்லாம்.. பொம்பளை அடுத்த வீட்டிற்குக் கூடப் போய் பேச மாட்டோம்மா.. நீ ஏரியா விட்டு ஏரியா.. அதுவும் இருட்டும் சமயத்தில் வந்திருக்கிறாயே.. உன் வீட்டில் எதுவும் சொல்ல மாட்டாங்களா?''

என்னமாய் தாரிணியை தனிமைப்படுத்துகிறார்கள் இவர்கள்... கூட வேலை பார்க்கும் தோழியின் ஆதரவு கூட அவளுக்குக் கிடைத்து விடக் கூடாதென்ற கவனம்.. மேனகா பல்லைக் கடித்துக் கொண்டாள். வாசல் புறமிருந்து ஒரு பெண்மணி வந்தாள்.

''என்ன கலையரசி... நேற்று வீட்டில் ஆளையே காணோம். எங்கே போயிருந்தே?''

''யாரு.. வேதா அக்காவா? ஒன்றுமில்லைக்கா.. நம்ப பக்கத்து வீட்டு காயத்ரியோட அக்கா மகளுக்கு காது குத்தாம்.. அது தான் தாராபுரம் வரைக்கும் போயிருந்தேன்..''

''ஒரு கரண்டி காபிப்பொடி கிடைக்குமான்னு கேட்க வந்தேன்..''

''அடடா.. இப்பத்தான் தீர்ந்து போச்சு.. நான் உங்க வீட்டில் வந்து கேட்கலாமுன்னுல்ல நினைச்சேன்..''



வந்த பெண்மணி போனதும் மேனகா தாரிணியின் பக்கம் திரும்பிச் சொன்னாள்.

''லேகா நேற்று ஒரு விசயம் சொன்னாள் தாரிணி.. படித்து வேலைக்குப் போகும் நாம் ஏரியா விட்டு ஏரியா போனால் தப்பாம்... அவள் மட்டும் ஊர்விட்டு ஊர் போய் வருவாளாம் எந்த ஊர் நியாயம் இது..?''

அவள் பேசுவது தனது பேச்சிற்கான பதிலடியென்று புரிந்து கொண்ட கலையரசி கோபத்துடன் வீட்டுக்குள் போய் விட்டாள்.

''நீ வா மேனகா'' தோழியை அழைத்துக் கொண்டு மாடியேறினாள் தாரிணி.

மேனகா மாடியை சுற்று முற்றும் பார்த்தாள்.

''என்னடி இது அநியாயமாய் இருக்கு? கிரவுண்ட் ப்ளோர் முழுக்க மார்பிள்ஸ்.. மாடியில் பெயர்ந்து போன சிமிண்ட் தரையா?''

''இது என்னோட ஏரியாவாச்சே மேனகா.. அவங்க எப்படி உள்ளே வருவாங்க..?''

''உன் சம்பளத்தை மட்டும் உணக்கையாய் வாங்கிக் கொள்வாங்க..''

''எனக்கு இதெல்லாம் பெரிதாய் தோணலை மேனகா. மாடிக்கு அவங்க வரமாட்டாங்க. கீழே நான் போகமாட்டேன். ரூமில் அட்டாச்சுடு பாத்ரூம் இருக்கு.. எல்லாத்துக்கும் மேலாய் என் விக்னேஷைப் பார்க்க பால்கனி இருக்கு. எனக்கு வேறென்ன வேண்டும்?''

''ஏதாச்சும் போர்ட்டபிள் டிவி வாங்கி உன் ரூமில் வைத்துக் கொள்ளலாமில்ல?''

''செய்யலாம்.. ஆனால் ஜானகியும் மாதவியும் அதை யெடுத்துக்கிட்டுப் போக ஒருத்தருக்கொருத்தர் அடிச் சுக்குவாங்க.. எப்படியும் நான் பார்க்க ரூமில் விட்டுவைக்க மாட்டாங்க.. தேவையான்னு வாங்கவில்லை...''

''உன் புடவைகளை எப்படி விட்டு வைக்கிறார்கள்?''

''அவங்க ரெண்டு பேருக்கும் காட்டன் புடவை பிடிக் காதே.. என்னிடமிருந்த பட்டுப் புடவைகளை ஆல்ரெடி அள்ளிக் கொண்டு போயிட்டாங்க.. அதெல்லாம் அப்பாம்மா இருந்தபோது வாங்கினது. அவங்க குணம் தெரிந்த பின்னால் அதிக விலை போட்டு புடவை கூட எடுப்பதில்லை. காட்டன் கூட விலலை குறைவாய்தான் எடுப்பேன். அதற்கும் கேலி பேசினாங்க..''

''என்னவென்று?''

''அவர்கள் வீட்டில் உடுத்து மாத்து புடவையே ஐநூறு ரூபாய்க்கு குறைவாய் இருக்காதாம்..''

''கொடுத்து வைத்த பிறவிகள்.. இப்போது உன் கதைக்கு வா.. இன்று உடுத்திக் கொள்ள ஒரு பட்டுப்புடவை கூட உன்னிடம் இல்லையா?''

''ஒன்றே ஒன்று இருக்கிறது..''

தாரிணி பீரோவைத் திறந்து அந்தப் பட்டுப் புடவையை எடுத்தாள். பாசிப் பருப்பின் வண்ணத்தில் கரையோரம் மயில்கள் சரிகையில் நெய்யப்பட்டிருந்தன.

''அழகான புடவை.. இதை எப்படி விட்டு வைத்தார்கள்?''

''இது என் அம்மாவின் புடவை மேனகா.. அவர்கள் நினைவாக என்னிடமிருக்க வேண்டும்ன்னு கொடுக்க மாட்டேன்னு சொல்விட்டேன்..''



''நானும் எங்க அம்மாவிற்கு பெண்கள்தான்னு சொல்லி யிருப்பாங்களே.. எப்படி வாயை மூடிக்கிட்டாங்க?''

''நான் நகைகளில் அம்மாவுடைய நினைவுக்குன்னு எதையாவது எடுத்து வைத்துக் கொள்வேன்கிற பயம்தான்..''

''போகுது போ.. இப்போ.. முகம் கழுவிவிட்டு வா.. தலை பின்னி விடுகிறேன்.. அப்புறமாய் இந்தச் சேலையைக் கட்டிக்க...''

தாரிணி முகம் கழுவி தலைவாரிப் பின்னி அந்தப் பட்டுச் சேலையை உடுத்தி நின்றதும் மேனகா அவள் கன்னம் தொட்டு திருஷ்டி கழித்தாள். கழுத்தில் சின்னச் செயின்.. காதில் தோடும் ஜிமிக்கியும்.. கைகளில் மெல் லிய வளையல்கள் இரண்டு.. அதிக நகையில்லாமல் அற்புதமான அழகோடு நின்றாள் தாரிணி.

''வேறு நகையிருக்கிறதா தாரிணி?''

''இல்லை மேனகா.. நான் போட்டுக் கொண்டிருப்பது தான்.''

''வேறு சேவிங்க்ஸ் ஏதாவது..?''

''இருக்கு மேனகா...''

தாரிணி கைப்பையை திறந்து பேங்க் பாஸ் புக்கை எடுத்துக் கொடுத்தாள். மாதா மாதம் ஆறாயிரம் வீதம் தாரிணி கட்டி வந்த தொகை பெருகி மூன்று லட்சத்தை தொட்டுக் கொண்டிருந்தது.

''இதை நான் எதிர்பார்க்கவேயில்லை தாரிணி. எப்படி சாதித்தாய்?''

''கால்வாசி சம்பளத்தை எடுத்துக் கொண்டு முக்கால் வாசிதான் வீட்டில் கொடுப்பேன் தாரிணி..''

"எப்படி விட்டார்கள்..?"

"ரொம்பவும் இறுக்கிப் பிடித்தால் முதலுக்கே மோசம் வந்து விடும் என்ற பயம்தான்.. நான் லேடிஸ் ஹாஸ்டலை தேடிப்போய் விட்டால் என்ன செய்வதாம்.."

"அதுவும் சரிதான்.. எது எப்படியோ.. நான் நினைத்தது போல் நீ முழு ஏமாளியில்லை... கொஞ்சம்தான்.."

"நீ என்ன வேண்டுமானாலும் சொல்லிக்க. இந்த பாஸ்புக்கை என் ஹேன்ட் பேக் உள் ஜிப்பில்தான் எப்போதும் வைத்திருப்பேன். உள்ளே ஜிப் இருப்பதே வெளியே தெரியாது.. அதனால் என் அண்ணி, உடன் பிறப்புகளின் செக் அப்பிலிருந்து தப்பித்து விட்டது..."

"கெட்டிக்காரி.."

தோழியை பாராட்டியவாறு அவளது பீரோவை ஆராய்ந்தாள் மேனகா.

தாரிணி தோழியை புதிராய் பார்த்தாள்.

"என்னடி பார்க்கிற?"

"உன்னிடமிருக்கும் டிரஸ்ஸெல்லாம் இரண்டே பெட்டியில் அடங்கி விடும் போல... ஏதும் பெரிய பேக் வைத்திருக்கிறாயா?"

"இருக்கே.. எதற்கு கேட்கிறாய்?"

"சும்மாதான்.."

அவர்கள் பால்கனிக்கு வந்து எதிர்வீட்டை பார்க்க ஆரம்பித்தார்கள். விக்னேஷ் மாடிக்கும் கீழ் வீட்டிற்கும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தான். அபிராமியின் வீட்டில் அக்கம் பக்கம் பெண்கள் கூடியிருந்தனர்.

சோமசுந்தரத்துடன் அபிராமி மல்லுக்கு நின்று கொண்டிருந்தாள்.

"இப்போ கிளம்பப் போறீங்களா இல்லையா?"



"வேண்டாம்டி அபிராமி. சொன்னாக் கேளு. வயசான காலத்தில் நமக்கு இந்த வம்பெல்லாம் தேவையா?"

"இப்படியாவது அந்தத் தாரிணிப் பொண்ணுக்கு விடியட்டும்ன்னு சொல்லிட்டு இப்போ கிளம்புகிற நேரத்தில் மக்கர் பண்ணினால் என்ன அர்த்தம்? கிளம்புங்க.."

வேறு வழியின்றி வெள்ளை வேட்டி சட்டையுடன் சோமசுந்தரம் கிளம்பி நின்றார். அவரைப் பார்த்த குமரன் கூறினான்.

"ஆஹா.. சார் வெள்ளை வேட்டியும் சட்டையுமா அசத்தறீங்க."

"ஏம்பா சொல்லமாட்டே... சும்மா இருந்த என் பெண்டாட்டியை தூண்டி விட்டுவிட்டு என் அழகை ரசிக்கிறாயா? போகும்போது என் டிரஸ் புதுசா வெள்ளையாத்தான் இருக்கு. திரும்பி வரும்போது என்ன கலரில் என்ன கோலத்தில் இருக்குமோ? ஈஸ்வரா.."

"அவரையேன் சார் டிஸ்டர்ப் பண்றீங்க.. அவருக்கு ஆயிரத்தெட்டு வேலையிருக்கு. நான் எதற்கு இருக்கிறேன். நான் பார்த்துக் கொள்ள மாட்டேனா?"

குமரன் அபயமளிக்க சோமசுந்தரம் அவனை முறைத்தார்.

## 29



வருத்தங்கள் வந்தால்
உன் மடி தேடி வருவேன்
நீயின்றிப் போனால்
நான் எங்கே போவேன்...

சோமசுந்தரத்தின் கொதி நிலை உச்சத்தில் இருந்தது. விட்டால் குமரனை பார்வையிலேயே எரித்து விடுவார் போல இருந்தார்.

"என்னத்தப்பா பார்த்துக்குவாய்...? எங்கேயெங்கே அடிபட்டிருக்குன்னா?"

அபிராமி அதற்குள் அடுத்த வீட்டுப் பெண்களுடன் ஆலோசனை செய்து முடித்திருந்தாள். அவர்கள் எல்லோரும் மாசிலாமணிக்கு வேண்டாதவர்கள். அதனால் தாரிணிக்கு வேண்டியவர்கள் ஆக வந்திருந்தார்கள்.

"எதுக்கும்மா இத்தனை பேர்.." விக்னேஷ் கேட்டான்.

"நல்ல காரியம் பேசப் போறப்போ நாலு பேர் கூட இருக்கணும்பா. அத்தோடு தட்டுகளை தூக்கிக்கிட்டு சுமங்கலிப் பெண்கள் வர வேண்டும்பா."

"காவேரி.. நீ பழத்தட்டை எடு.. செண்பகம் நீ தேங்காய் தட்டை எடு. பவளம் நீ பூத்தட்டை எடு.. பார்வதி நீ கல்கண்டுத் தட்டை எடு.. சிந்தாமணி நீ வெற்றிலைத் தட்டை எடு.."

அபிராமியம்மாள் சேலையும் ரவிக்கையும் வைத்திருந்த தட்டை எடுத்துக் கொண்டாள்.

அவர்கள் அனைவரும் ஊர்வலமாய் எதிர்வீட்டிற்குச் செல்ல விக்னேஷ் எதிர்வீட்டுப் பால்கனியில் நின்று கொண்டிருந்த தாரிணியைப் பார்த்துக் கையசைத்தான். மேனகா செல்போனை எடுத்து பரபரப்புடன் பேச ஆரம்பித்தாள். தெருவில் இருந்தவர்கள் இந்த வரிசைத் தட்டுகளின் ஊர்வலத்தைக் கண்டு ஆவலுடன் வேடிக்கை பார்க்க அவர்களைப் பின் தொடர்ந்து மாசிலாமணியின் வீட்டிற்குள் சென்றனர்.

ஹாலில் அமர்ந்து மனைவியுடன் பேசிக் கொண்டிருந்த மாசிலாமணி திடீரென்று பிரவேசித்த கூட்டத்தைக் கண்டதும் திகைத்து எழுந்தான்.



தட்டுக்களை வரிசையாய் தரையில் பரப்பிவிட்டு அங்கேயிருந்த பாயை உதறிப்போட்டு அமர்ந்த அபிராமியம்மாள்.

"ஏன் நிற்கறீங்க.. காவேரி.. பார்வதி.. எல்லோரும் என் பக்கத்தில் வந்து உட்காருங்க.. குமரா.." என்று கூறிக் கொண்டிருக்கையில் குமரன் சோமசுந்தரத்தை சோபாவில் அமர வைத்துவிட்டு அருகே அமர்ந்து கொண்டான்.

விக்னேஷ் குமரனின் அருகே அமர்ந்து கொண்டு மாடிப் படியில் தாரிணி வருகிறாளா என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

கலையரசியின் மூளையில் மணியடித்தது. கணவனை விழிகளால் அருகே அழைத்தாள். அவன் மனைவியிடம் நகர்ந்தான்.

"என்னடி..?"

"சாய்ந்திரம் உங்க தங்கச்சி கூட ஜோடி போட்டுக்கிட்டு அவள் கூட வேலை பார்க்கிறவ வந்த போதே நினைச்சேன்.. என்னடா வழக்கமில்லாத வழக்கமா இருக்கேன்னு.. இப்பத்தானே தெரியுது.. அவ திட்டம் போட்டு கூட்டிக் கிட்டு வந்திருக்கான்னு.."

"என்னடி சொல்றே..?"

"ஏதோ வில்லங்கம் நடக்கப்போகுது... இவங்க வந்திருக்கிற சீரைப் பார்த்தால் சரியாய் தோணலே.. உங்க தங்கச்சியை பொண்ணு கேட்க வந்திருக்காப்புலதான் தோணுது.."

"அப்படி ஏதாவதாய் இருந்தால் இந்தப் பயலுகளை வெத்தலை பாக்கு போட வச்சிர மாட்டேன்?"

''எனக்கென்னவோ.. அவங்க வெத்தலை பாக்கு மாத்திட்டுப் போயிடுவாங்கன்னு தோணுது.''

''அதையும் பார்த்திரலாம்.''

மாசிலாமணி ஜல்லிக்கட்டுகாளை போல் விறைப்பாய் நின்று கொண்டு சோமசுந்தரத்தை முறைத்தான். அவருக்கு பாத்ரூம் போக வேண்டும் போல் தோன்றிவிட்டது. குமரனிடம் கிசுகிசுத்தார்.

''என்னப்பா.. இந்தப் பார்வை பார்க்கிறான்.''

''பார்வைதானே.. அவன் பாட்டுக்கு பார்த்துட்டுப் போறான்..''

''உனக்கென்னப்பா வந்தது..? எனக்குத்தானே வயிற்றைக் கலக்குது.''

''இதுவேறா.. டேய் விக்னேஷ் அவன் பார்வையை உன் பக்கம் திருப்புடா. சார்.. பாத்ரூம் போகும் ரேஞ்சிற்கு வந்துவிட்டார்..''

விக்னேஷ் நிமிர்ந்து மாசிலாமணியைப் பார்த்தான்.

''உடகாருங்க மாசிலாமணி சார்..'' என்றான்.

''இது என் வீடு..''

''யார் இல்லைன்னு சொன்னது?''

''திறந்த வீட்டில் எதுவோ நுழைவது போல் நுழைந்து சட்டமாய் என் வீட்டு ஹாலில் உட்கார்ந்து கொண்டு என்னையே 'உட்காரு'ன்னு வேற சொல்றயா? எழுந்திருடா முதல்லே..''

''எழுந்திருக்காதீங்க..'' என்றாள் மாடிப்படியில் இறங்கி வந்த தாரிணி. மேனகா பின்தொடர்ந்து வந்தாள். அவள் கையில் செல்போன்.



மாசிலாமணியும் கலையரசியும் தாரிணியைப் பார்த்தார்கள். பட்டுச் சேலையில் இருந்தவளைக் கண்டதும் பார்வையை பரிமாறிக் கொண்டார்கள்.

''ஏதோ திட்டத்தோட தான் இருக்கான்னு நான் சொல்லலை'' கலையரசி கணவனைத் தூண்டி விட தாரிணி அவளை முறைத்தாள்.

''அவள்.. இவள்ன்னு பேசுகிற வேலையெல்லாம் என்னிடம் வேண்டாம்..''

''மரியாதை கொடுக்கிற மாதிரி நீ நடந்துக்கணும்..''

அபிராமி தலையிட்டு கலையரசியை அழைத்தாள்.

''இங்கே பாரும்மா கலையரசி.. இந்த தம்பி விக்னேஷிற்கு உன் நாத்தனாரைப் பெண் கேட்டு வந்திருக்கோம். சும்மா ஒன்னும் வரலை. திறந்து கிடந்தா எதுவும் வந்திரும்கிற ஜாடைப் பேச்செல்லாம் வேண்டாம். கல்யாணமாகாத பொண்ணு இருக்கும் வீட்டில் பொண்ணு கேட்டு மாப்பிள்ளைகள் வரத்தான் செய்வாங்க..''

''எழுந்திரும்மா.. அட எழுந்திரும்மாங்கறேனில்லை.. உனக்கு இவ்வளவுதான் மரியாதை..'' மாசிலாமணி அதட்டினான்.

''அங்கே ஏன் அதட்டறீங்க? பொம்பளைங்க கிட்ட உங்க வீரத்தை காட்டணுமா? என்னிடம் பேசுங்கள். நான் தானே பொண்ணு கேட்டு வந்தேன்?'' விக்னேஷ் கால் மேல் கால் போட்டுக் கொண்டு சாய்ந்து அமர்ந்தான்.

''என்ன திமிர்டா உனக்கு? என் தங்கச்சியை பொண்ணு கேட்டு வர உனக்கென்னடா யோக்கியதை இருக்கு?'' மாசிலாமணி பாய்ந்து விக்னேஷின் சட்டைக் காலரைப் பிடித்தான்.

சோமசுந்தரத்தின் கை கால்கள் நடுங்கவே ஆரம்பித்து விட்டன. குமரனின் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டார். குமரன் அவரை சமாதானப்படுத்தினான்.

''எதுக்கு சார் பயப்படுகிறீங்க? நானும் உங்களைப் போல்தான். நீங்கள் பயத்தை வெளியே காண்பித்துக் கொள்கிறீர்கள். நான் காண்பிக்கவில்லை. அவ்வளவுதான் வித்தியாசம். உங்களுக்கும், எனக்கும் என்ன சார் கவலை? அவன்தான் ஹீரோ.. அவன் பார்த்துக் கொள்வான். நீங்கள் பயப்படாமல் உட்காருங்க.''

துணைக்கு ஆள் கிடைத்து விட்ட தைரியத்தில் சோமசுந்தரம் கொஞ்சம் தெம்பானார்.

தன் சட்டைக் காலரைப் பிடித்த மாசிலாமணியின் கைகளைத் தட்டி விட்ட விக்னேஷ் எழுந்த வேகத்தில் மாசிலாமணியை ஓர் தள்ளு தள்ளினான். அவன் தள்ளிய வேகத்தில் எதிரிலிருந்த சோபாவின் மேல் போய் விழுந் தான் மாசிலாமணி.

''ஒழுங்காய் சொன்னால் கேட்க மாட்ட? உன் தங் கையும் நானும் ஒருத்தரையொருத்தர் விரும்புகிறோம். அவளைக் கல்யாணம் பண்ணிக் கொள்ள பெண் கேட்டு வந்திருக்கிறேன். என்ன சொல்கிறாய்?''

சோமசுந்தரம் குமரனின் கையை விட்டுவிட்டு விக்னேஷை ஆச்சர்யத்துடன் பார்த்தார். அபிராமியம்மாள் பெருமையுடன் கூட வந்திருந்த பெண்களைப் பார்த்துக் கொண்டாள்.

கலையரசி வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள்.

''ஐயையோ... என் புருசனைக் கொல்ல வர்றானே. இதைக் கேட்க யாருமில்லையா. ஏங்க எழுந்திருச்சு இவனை வெட்டிக் கொல்லுங்க.''



மேனகா பல்லைக் கடித்துக் கொண்டு தாரிணியிடம் கூறினாள்.

''உங்க அண்ணனுக்கு வெறியேத்தறதெல்லாம் இந்த பொம்பளைதான். முதலில் இந்தப் பொம்பளையை நாலு போடு போடணும்.''

அதற்குள் மாசிலாமணி எழுந்து வந்து விக்னேஷை தள்ள முயன்றான்.

''நீ யாருடா என் தங்கையை பெண் கேட்க? ஜாதி விட்டு ஜாதி கல்யாணம் செய்து கொடுக்கிறவன் இந்த மாசிலாமணியில்லைடா.''

வெகு எளிதாய் மாசிலாமணியை தள்ளி நிறுத்திய விக்னேஷ்,

''சொன்னால் புரிஞ்சுக்க... எங்க கல்யாணத்தைப் பற்றி உன்னிடம் சொல்லத்தான் வந்திருக்கிறேன். நீ யாரு என் தாரிணியை எனக்குக் கட்டிக் கொடுக்க...?'' என்றான்.

''என் உயிர் இருக்கிற வரை அது நடக்காதுடா...''

''அது உன் இஷ்டம். உன் பெண்டாட்டி பூவோடும் பொட்டோடும் இருக்கணும்னு உனக்கு ஆசையிருக் கனும். நான் என்ன சொல்ல?''

''என்னை மீறி என்ன செய்வேடா. அதையும் பார்க் கிறேன்.''

''இந்தா பாரு... அம்மா அந்தப் பூவை எடுத்துக் கொடுங்க.''

அபிராமியம்மாள் அவசரமாய் பூவை எடுத்துத் தர விக்னேஷ் அதை வாங்கிக் கொண்டான்.

''தாரிணி இங்கே வா...''

அவள் அருகே வரவும்.. அவள் தலையில் எல்லோர் முன்னாலும் பூவை வைத்து விட்டான். மேனகா.. குமரன் இருவரும் முதலில் கைதட்ட எல்லோரும் சேர்ந்து கொண்டார்கள்.

கைதட்டல் ஒலிகளுக்கு இடையே தாரிணியை கட்டி அணைத்து அவள் நெற்றியில் முத்தமிட்டான் விக்னேஷ்.

''போதுமா...'' மாசிலாமணியைப் பார்த்து அவன் வினவ,

''டேய்...'' என்ற கூச்சலுடன் மாசிலாமணி விக்னேஷின் மேல் பாய்ந்தான். இருவரும் கட்டி உருண்டார்கள். சோமசுந்தரம் சோபாவின் மேல் ஏறி நின்று கொண்டார். தாரிணியின் மேல் பாய்ந்த கலையரசியை பெண்கள் மொத்து மொத்தென்று மொத்தினார்கள்.

# 30



**மனப் பாரம் போக்கி**
**வாழ்விக்க வந்தாய்**
**மலையோரம் தன்னில்**
**குடியிருக்கும் என்தாய்**

கொஞ்ச நேரம் அந்த இடம் அமளி துமளி பட்டது. மாசிலாமணியை அடித்து துவைத்து எடுத்து விட்டான் விக்னேஷ். அந்த நேரம் வாசல் புறமிருந்து ஜீப் வந்து நிற்கும் ஒலி கேட்டது. 'டக் டக்'கென்று பூட்ஸ் சத்தம் ஒலிக்க போலீஸார் உள்ளே நுழைந்தனர்.

''ஐயையோ... என்னங்க.. நம்ம வீட்டுக்குள்ள போலீஸ் காரங்க வந்திருக்காங்க..'' கலையரசி அலறினாள்.



''வாங்க சார் வாங்க. இந்த ரௌடிப் பயல் வீடு புகுந்து என்னை கொல்ல வருகிறான். என்னன்னு கேளுங்க...'' மாசிலாமணி விக்னேஷின் மேல் பழி போட்டான்.

''என்ன மிஸ்டர் என்ன விஷயம்...? ஏன் அவரைப் போட்டு அடிக்கறீங்க?'' எஸ்.ஐ. விசாரித்தார்.

''சார்.. நான் தனியாய் வரவில்லை. இவங்க எல்லோரோடும் இவருடைய தங்கையை பெண் கேட்க வந்தேன். நானும் இவர் தங்கையும் காதலிக்கிறோம். இவருக்கு அதில் விருப்பமில்லை. என்னை அடிக்கிறார்'' விக்னேஷ் கூறினான்.

எஸ்.ஐ. சுற்றிலும் பார்த்தார். பட்டுச் சேலையுடுத்திய கௌரவமான தோற்றத்துடனிருந்த பெண்கள் பழத் தட்டுகளை சுமந்து கொண்டிருந்தார்கள். தலை நிறைய பூவுடன் பட்டுச் சேலையுடன் தாரிணி நின்று கொண்டிருந்தாள்.

''என்ன மிஸ்டர் மாசிலாமணி. இவங்க பெண் கேட்டில்ல வந்திருக்காங்க. உங்க தங்கைக்கு இதில் சம்மதம் வேறு இருக்கு. நீங்கள்தான் அவரை அடித்தீங்கன்னு உங்க தங்கையே சாட்சி சொல்லுவாங்க போலிருக்கு. எனக்கு வேறு வழியில்லை. உங்களை அரெஸ்ட் பண்ணுகிறேன்.'

''சார்... இது அநியாயம்.. நான் என்ன தப்பு செய்தேன்?''

''அதை உங்கள் தங்கையிடம் கேட்டு விடலாம். என்ன மிஸ் தாரிணி. இங்கே என்ன நடந்தது?''

தாரிணி கோபத்தில் இருந்தாள். அண்ணனை மதித்து பெண் கேட்க வரச் சொன்னது அவள்தான். யாருக்கும் தெரியாமல் விக்னேஷை திருமணம் பண்ணிக் கொண்டு போக அவளுக்கு எவ்வளவு நேரமாகி இருக்கும். முறைப்படி செய்ய விரும்பியதற்கு இதுதானா பரிசு?

இத்தனை நாள் உழைத்துக் கொட்டியதற்கு முறைப்படி... அவள் விருப்பப்படி திருமணம் கூட இந்த அண்ணன் செய்து வைக்கக் கூடாதா?

அதை விட்டு விட்டு அவளது விக்னேஷ் என்ன தவறு செய்தானென்று அவனை அடிக்கப் போகிறான்? ஏன் அவனை அவமானப்படுத்துகிறான்?

"சார்.. என் பெயர் தாரிணி... அக்ரி காலேஜ் லெக்சரராக இருக்கிறேன்... இவர் பெயர் விக்னேஷ். இவரை நான் காதலிக்கிறேன். நாங்கள் கல்யாணம் பண்ணிக் கொள்ள முடிவு செய்திருக்கிறோம். முறைப்படி அண்ணனிடம் பெண் கேட்டு வர நான் தான் சொன்னேன். அவரும் வந்தார். பெண் கேட்டார். என் அண்ணன் கோபப்பட்டு அவரை அடிக்கிறார்."

"ஏன் சார்.. இவங்க எவ்வளவு படிச்சவங்க. இவங்க உங்களுக்குத் தெரியாமல் கல்யாணம் பண்ணிக்க நினைக்காமல் உங்களை மதித்து பெண் கேட்கச் சொன்னால் நீங்க ஆளைப் போட்டு அடிப்பீங்களா?"

"கொல்லப் போனார் சார்.. அவரோட வொய்ப் வெட்டுங்க.. கொல்லுங்கன்னு தூண்டி விட்டாங்க."

சமயம் கிடைத்ததும் மேனகா கூறினாள். அங்கிருந்த மற்ற பெண்கள் ஆமோதித்தனர்.

"கான்ஸ்டபிள் இவங்க இரண்டு பேரையும் வேனில் ஏற்றுங்க."

மாசிலாமணியின் முகத்தில் முதன் முதலாய் பயம் வந்தது. கலையரசியோ கெஞ்சவே ஆரம்பித்து விட்டாள்.



"சார் சார்... பிள்ளை குட்டிக்காரங்க சார். ஏதோ தெரியாமல் செய்து விட்டோம். இனிமேல் அப்படிச் செய்ய மாட்டோம்."

எஸ்.ஐ. தாரிணியைப் பார்த்தார்.

"என்னம்மா... என்ன செய்யலாம்?"

தாரிணியின் கையைப் பிடித்துக் கொண்ட மேனகா அவளுக்குப் பதில் தானே பேசினாள்.

"சார்.. இந்த வீட்டில் இவளுக்குப் பாதுகாப்பில்லை. இனி மேலும் இவளை இங்கே விட்டுப் போனால்.. இவர்கள் இவளை துன்புறுத்துவார்கள்."

"அதனால்.. என்ன செய்யலாம்னு சொல்றீங்க. இவங்களுக்கு பாதுகாப்பு கொடுக்கனுமா?"

"அதை நாங்களும்.. எங்க குவார்ட்டர்ஸ்காரங்களும் பார்த்துக் கொள்வோம் சார்.. இப்போது இந்த வீட்டை விட்டு இவளைக் கூட்டிப் போய் என் வீட்டில் வைத்துக் கொள்ளப் போகிறேன். இவளை எங்க குவார்ட்டர்ஸில் சேர்க்கிற வரை நீங்கள் துணைக்கு வந்தால் போதும்."

"ஓ.கே. மிஸ் தாரிணி. நீங்கள் எதுவும் கம்ப்ளெயின்ட் எழுதித் தருகிறீர்களா?"

"யெஸ் சார்.. எனக்கும், என் வருங்காலக் கணவர் விக்னேஷிற்கும்.. அவரது வெல் விஷர்ஸ் அபிராமியம்மாள், சோமசுந்தரம், குமரன் ஆகியவர்களுக்கும் இங்கே பெண் கேட்டு வந்திருக்கும் தெருக்காரங்க எல்லோருக்கும் என் பிரண்ட் மேனகாவிற்கும் அவள் குடும்பத்திற்கும் ஏதேனும் ஆபத்து என் அண்ணனால் ஏற்படுமோன்னு பயப்படுகிறேன். எங்கள் எல்லோருக்கும்

நீங்கள்தான் அவரிடமிருந்து ஆபத்து ஏற்படாமல் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இதை இதோ பேப்பரில் எழுதியே தருகிறேன் சார்...''

தாரிணி மடமடவென்று பாதுகாப்பு கேட்டு கடிதம் எழுதி போலீஸாரிடம் கொடுத்தாள். அதை வாங்கிக் கொண்ட எஸ்.ஐ. மாசிலாமணியைப் பார்த்து முறைத்தார்.

''மிஸ்டர் மாசிலாமணி. இனி இவங்களுக்கு தற்செயலாய் கால் தடுக்கி சிறு காயம் ஏற்பட்டாலும் உங்களால் தான் ஏற்பட்டதுன்னு உங்களை அரெஸ்ட் பண்ணிருவோம் ஜாக்கிரதை. மிஸ் தாரிணி நீங்கள் கிளம்புவதாய் இருந்தால் சீக்கிரம் கிளம்புங்கள்.''

''இதோ சார்...''

தாரிணி திரும்பும் போது மேனகா இரண்டு பெரிய ஏர் பேக்குகளைத் தூக்கி வந்தாள்.

''என்னடி மேனகா இது...?''

''கீழே நீ கம்ப்ளெயின்ட் பண்ணிக் கொண்டிருக்கும் போதே மாடியில் போய் டிரஸ்ஸைப் பேக் பண்ணி விட்டேன். பீரோவை துடைத்தது போல் எடுத்து வந்தாகி விட்டது. சார்... நீங்கள் இந்த பைகளை செக் பண்ணி விட்டால் நல்லது.

இல்லாவிட்டால் இந்த வீட்டிலிருந்து விலையுயர்ந்த நகைகள் பணம்ன்னு தாரிணி திருடிக் கொண்டு போய் விட்டாள்ன்னு இந்தம்மா பழி போட்டாலும் போட்டு விடுவாங்க.''

உண்மையில் கலையரசி அந்த ஐடியாவோடுதான் இருந்தாள். தாரிணியை எப்படி பழி வாங்குவது என்ற



வெறியுடன் அவள் மேல் திருட்டுப் பட்டம் சூட்டலாமென்று அவள் எண்ணிக் கொண்டிருந்தபோது அவள் மனதைப் படித்தது போல் மேனகா கூறவும் அவள் மனம் எரிந்தது.

'பாவி.. சண்டாளி.. எப்படிக் கரெக்டா நம்ம மனசிலிருப்பதைச் சொல்லுகிறாள்ன்னு பாரு.. காரியத்தை கெடுத்து விட்டாளே...'

சப் இன்ஸ்பெக்டர் அந்தப் பைகளை பார்த்துவிட்டு

''துணிகள் மட்டும்தான் இருக்கு...'' என்றார்.

''சார்... அவங்களையும் இதை செக் பண்ணிட்டு எழுத்தில் எழுதிக் கொடுத்து விடச் சொல்லுங்கள் சார்.''

வேறு வழியின்றி எழுத்தில் எழுதி கையொப்பம் போட்டுத் தந்தார்கள் மாசிலாமணியும், கலையரசியும்.

''சார்.. இது தாரிணியுடைய ஹேண்ட் பேக்.. இதையும் பார்த்து விடுங்கள்.''

வாசலில் கார் வந்து நின்றது. விக்னேஷின் ஸ்டான்டிலிருந்த வண்டிகளின் உரிமையாளர்கள் நான்கைந்து பேர் கோபமாய் உள்ளே வந்தார்கள்.

''என்னப்பா விக்னேஷ். எவன் உன்மேல் கை வைத்தவன்? யாருன்னு காட்டு...''

''வேண்டாம் ரமேஷ்... போலீஸ் வந்திருக்காங்க. எனக்கு ஒன்னும் இல்லை.''

விக்னேஷ் அவர்களை அமைதிப்படுத்திக் கொண்டிருக்க சோமசுந்தரம் குமரனின் காதில் முணுமுணுத்தார்..

''ஏம்பா குமரா... அடிவாங்கியவன் மாசிலாமணி... அவனோட எலும்பையெல்லாம் எண்ணி விட்டது விக்னேஷ்... இவன்கிட்டயிருந்து அவனைக் காப்பாற்ற பத்து ஆள் வேண்டும். எல்லோரும் அவன்கிட்டேயிருந்து இவனைக் காப்பாற்ற வந்தது போல் சீன் போடறாங்க.''

''எல்லாம் ஒரு பில்டப் தான் சார். நான்தான் இவங்களுக்கு போன் போட்டு வரவைத்தேன். விக்னேஷ் மேல் அடியாளை ஏவி விட்டால் என்ன ஆகும்ன்னு மாசிலாமணிக்கு தெரியணுமில்ல?''

சோமசுந்தரம் இப்போது மாசிலாமணியை தைரியமாய் பார்த்தார். நகரக்கூட முடியாமல் வலியை முகத்திலும் காட்ட முடியாமல் சுருண்டு போய் உட்கார்ந்திருந்தான் அவன்.

''பாவி... இவனெல்லாம் ஒரு மனிதனா? கூடப் பிறந்த தங்கையின் ஜாதகத்தையே மாற்றி எழுதி.. அவள் கல்யாணத்தை கலைத்து விட்டு.. கடைசியில் அநாதை போல் அவளை வீட்டை விட்டு வெளியேற வைத்து விட்டானே..'' சத்தமாய் கூறினார் சோமசுந்தரம்.

'நேரம்டா.. நீயெல்லாம் என் முன்னால் சத்தம் போட்டுப் பேசற' மாசிலாமணி அவரை முறைக்க,

''இன்ஸ்பெக்டர் சார்.. என் புருசன் ஹார்ட் பேசன்ட். அவரை கொன்னுடுவேன்னு ஒரு விரலைக் காட்டி மிரட்டுகிறான் சார் இந்த மாசிலாமணி...'' என்று குண்டைத் தூக்கிப் போட்டாள் அபிராமியம்மாள்.

மாசிலாமணி அரண்டு போய் எஸ்.ஐ.யைப் பார்க்க அவர் ''என்ன மிஸ்டர்... உதை வேணுமா?'' என்றார்.



''ஐயோ சார்... நான் பாத்ரூம் போகணும்னு ஒரு விரலைக் காட்டினேன். அம்மா தப்பாப் புரிந்துக்கிட்டாங்க. ஹி... ஹி...'' என்றான் மாசிலாமணி.

'அது.. அந்த பயம் இருக்கட்டும்...' என்று விழிகளால் அவனை எச்சரித்தபடி கணவனைப் பார்த்தாள் அபிராமி.

சோமசுந்தரமோ மனைவியின் சாதுர்யத்தைக் கண்டு பரவசப்பட்டவராய் ஒரு காதல் பார்வையை அவள் மேல் வீசினார்.

மகிழ்ந்து போய் கணவரைப் பார்த்தாள் அபிராமி. விட்டால் மனைவியுடன் டூயட் பாடிவிடுவார் போல் சோமசுந்தரம் தோற்றமளித்தார்.

''அப்போ கிளம்பலாமா... வா தாரிணி...'' என்று மேனகா கிளம்ப... அபிராமியம்மாளும் மற்ற பெண்களும் மறக்காமல் தாங்கள் கொண்டு வந்த தட்டுக்களை எடுத்துக் கொண்டு வெளியேறினர்.

விக்னேஷின் வேனில் ஏறிக்கொண்ட மேனகா தாரிணியிடம் பைகளை வாங்கி உள்ளே வைத்துக் கொண்டிருந்தபோது அபிராமியம்மாள் அவசரமாய் வீட்டிற்குள் விரைந்து இரண்டு பைகளைக் கொண்டு வந்து பழங்களை நிரப்பி வண்டிக்குள் வைத்தான்.

''இது எதற்கும்மா...''

''கொண்டு போ மேனகா. குழந்தைகளுக்கு கொடு. தாரிணி இந்தா. விக்னேஷ் உனக்காக எடுத்த பட்டுப் புடவை. கல்யாணத்திற்கு இன்னொரு புடவை எடுத்துக் கொடுப்பான். இது நிச்சயதார்த்தப் புடவை.''

''நிச்சயதார்த்தம் எங்கே மாமி நடந்தது?''

"இது என்ன மேனகா இப்படிச் சொல்றே. விக்னேஷ் தாரிணிக்கு பூ வைத்து விட்டு பசக்குன்னு ஒரு முத்தமும் கொடுத்து நிச்சயம் பண்ணி விட்டானே."

"அட ஆமாம்."

மேனகா தாரிணியைப் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்தாள். தாரிணியின் முகம் வெட்கத்தில் சிவந்தது.

விக்னேஷ் வேனைக் கிளப்பினான்.

"கவலைப்படாமல் போ தாரிணி. சீக்கிரத்தில் விக்னேஷ் உனக்குத் தாலி கட்டி நம்ம வீட்டுக்குக் கூட்டி வந்து விடுவான். நாளைக்கு நானும் இவரும் வந்து உன்னைப் பார்க்கிறோம். கல்யாணத்திற்கு முன்னால் பொண்ணு மாப்பிள்ளையுடைய வீட்டில் இருக்கக் கூடாது.. அதனால் தான் உன்னை அனுப்பி வைக்கிறேன்..."

அபிராமியம்மாள் கையாட்டினாள். தாரிணி தன் அண்ணன் வீட்டைப் பார்த்து விம்மி அழுதாள். மேனகா அவளைக் கடிந்து கொண்டாள்.

"போடி முட்டாள்.. பாசம் வைக்க இவர்கள் தகுதியில்லாதவர்கள் உன் கண்ணீரை வீணடிக்காதே..."

விக்னேஷின் வேனின் பின்னால் போலீஸ் ஜீப் தொடர்ந்தது. விஷ்ணு துர்க்கையம்மன் கோவில் வாசலில் வேன் போய் நிற்க கோவில் வாசலில் குவார்ட்டர்ஸ் வாசிகள் கூடியிருந்தார்கள். மோகன்தாஸும், புஷ்பராஜும் முன்னால் நின்று கொண்டிருந்தார்கள். மேனகா தாரிணியுடன் இறங்கினாள். விக்னேஷ் அவளது பைகளை எடுத்துக் கீழே வைத்தான். போலீஸ் எஸ்.ஐ.யின் கையைப் பற்றிக் குலுக்கிய கலைநேசன்,

"தேங்க் யூ.. சார்..." என்று கூறினார்.

தாரிணி ஆச்சர்யத்துடன் அவர்களைப் பார்த்தாள்.



## 31



அலைமகளும் நீயே
மலைமகளும் நீயே
அன்புடனே ஆதரிக்கும்
கலைமகளும் நீயே

"என்ன தாரிணி ஆச்சர்யமாய் பார்க்கிற? எஸ்.ஐ. சாரை உன் வீட்டிற்கு இவங்கதான் அனுப்பினாங்க."

மேனகா, மோகன்தாஸ் முதலியவர்களைக் காண்பித்துக் கூறினாள். விக்னேஷ் தண்டபாணியின் அருகே வந்து கைகூப்பினான்.

"தேங்க்ஸ் சார்... மாசிலாமணியும் நானும் மல்லுக்கு நிற்க வேண்டிய அவசியம் இல்லாமல் பண்ணிட்டீங்க."

"தேங்க்ஸெல்லாம் எதற்கு விக்னேஷ்? நீங்க எங்க ஆள். தாரிணி விஷ்ணு துர்க்கை அம்மனின் பக்தை. உங்கள் இரண்டு பேரின் கல்யாணத்தையும் முன்னே நின்று நடத்தி வைக்க வேண்டியது இந்த ஜி.சி.டி. ஹவுசிங் யூனிட் குவார்டர்ஸ்காரங்களின் கடமை. மேனகா வந்து விவரம் சொன்னதும் போலீஸின் ஹெல்ப்பைக் கேட்டோம். கல்யாணம்கிறது வாழ்க்கையில் ஒரு முறை தான் வந்து போகும் வசந்தம். அதைப் போராடி வெட்டு, குத்துன்னு ரகளை பண்ணிக்கிட்டா பண்ணிக்கணும். அதனால் தான் போலீஸ் மூலமா மாசிலாமணியை சைலன்ட் ஆக்கிட்டோம். இனி நல்ல நாள் பார்த்து விஷ்ணு துர்க்கை கோவிலிலேயே உங்கள் இரண்டு

பேருக்கும் நாங்க கல்யாணம் பண்ணி வைக்கிறோம்'' என்றார் தண்டபாணி.

மேனகாவின் பிளாட்டில் நுழைந்ததும் அவளின் குழந்தைகள் ஓடிவந்து.

''அம்மா...'' என்று அவளின் கழுத்தைக் கட்டிக் கொண்டார்கள்.

''வினித்.. ப்ரீதி.. ஆன்ட்டி இன்னும் கொஞ்ச நாள் நம்ம கூடத்தான் தங்கியிருப்பாங்க...'' என்றாள் மேனகா.

''கொஞ்ச நாளா... என்னங்க நீங்க குண்டைத் தூக்கிப் போடறீங்க.. குட்டீங்களா. இந்த ஆன்ட்டி.. அங்கிளோட ஆன்ட்டி. சும்மா இரண்டு நாள்தான் தங்கியிருப்பாங்க...''

''அப்புறமா எங்கே போவாங்க...'' ப்ரீதி மிக்க கவலையுடன் கேட்டது.

தாரிணிக்கு சிரிப்பு வந்துவிட்டது.

''அப்பா... இப்போதுதான் சிரித்திருக்கா.'' என்றாள் மேனகா

''அப்புறமா அங்கிள் ஆன்ட்டியைத் தூக்கிக் கொண்டு போய் விடுவேன்...'' என்றான் விக்னேஷ்.

''ம்ம்.. நான் விடமாட்டேன்'' என்று வினீத் தாரிணியின் கையைப் பிடித்துக் கொண்டான்.

''அச்சச்சோ... இப்படிச் சொன்னால் எப்படி? வினித் உனக்கு இந்த அங்கிளை ரொம்பப் பிடிக்கும் தானே.. ப்ளீஸ்... இந்த ஆன்ட்டியை எனக்குக் கொடுத்து விடுடா...'' என்று விக்னேஷ் வினீத்திடம் கெஞ்சினான்.

''என்ன விக்னேஷ். தாரிணியை மாசிலாமணியிடம் பெண் கேட்க வேண்டியதில்லைன்னு சந்தோசப்பட்



டிங்க.. இப்ப என் பசங்கள் உங்களைப் பெண் கேட்க வச்சிட்டாங்க பார்த்தீங்களா'' மேனகா கூற எல்லோரும் சிரித்தார்கள்.

''டீயைச் சாப்பிட்டு விட்டுச் சிரிங்க...'' தினகரன் டீக்கோப்பைகளுடன் வந்தான்.

''என்ன சார் நீங்க போய் டீ போட்டுக்கிட்டு வரீங்க.'' தாரிணி சங்கடத்துடன் கூற மேனகா எழுந்து டீ டிரேயை அவனிடம் இருந்து வாங்கி எல்லோருக்கும் கொடுத்தாள்.

''என் பெண்டாட்டி அவளோட பிரண்டைக் காப் பாத்திக் கூட்டிக்கிட்டு வர்றேன்னு வீர முழக்கம் செய்து விட்டுப் போய் விட்டாள். எனக்கும் என் பிள்ளைகளுக் கும் வயிற்றில் பசி முழக்கம் வந்து விட்டது. அதனால் அப்போதே தோசை வார்த்து அவங்களுக்கும் கொடுத்து விட்டு நானும் சாப்பிட்டு விட்டேன். இப்போ டீ சாப் பிடணும்னு சொல்லிட்டாங்கன்னு போட்டுக்கிட்டு இருந் தேன். நீங்களும் வந்துட்டீங்க...'' தினகரன் இயல்பாய் கூறிக் கொண்டே மனைவியின் அருகே அமர்ந்தான்.

மேனகாவிடம் தாழ்ந்த குரலில் தினகரன் விசாரிக்க அவளும் மெதுவான குரலில் நடந்த நிகழ்ச்சிகளை விளக்கிக் கொண்டிருந்தாள். அவர்களது அன்னியோன் யம் தாரிணியைக் கவர்ந்தது.

அவளும், விக்னேஷும் இதேபோல் கணவன் மனைவி யாய் அருகே அமர்ந்து குடும்ப விசயங்களைப் பேசுவது போல் அவள் மனக் கண்ணில் காட்சி விரிந்தது.

விக்னேஷைப் பார்த்தாள். அவனும் அவளையேதான் அப்போது பார்த்துக் கொண்டிருந்தான். அவன் இதழ்களில் தெரிந்த முறுவல் அவளது நினைவை அவன் அறிந்து

விட்டானென்று கூறியது அவளது பார்வையைச் சந்தித்ததும் மேனகா தினகரன் பக்கம் விழியைக் காட்டி புருவங்களை உயர்த்தினாள்.

தன்னை அவன் கண்டு கொண்டதை அறிந்ததும் அவளது கன்னம் சிவந்தது. மெல்ல அவளறியுமாறு சிணுங்கிய அவளது பார்வை தாழ்ந்தது.

அவர்களது பார்வை பரிமாற்றத்தைக் கவனித்த மேனகா கணவனுக்கு ஜாடை காட்டி விட்டு வேலையிருப்பது போல் பெட்ரூமிற்குள் நுழைந்தாள். தினகரன் ப்ரீதியை தூக்கிப் போட்டு விளையாடியபடி மனைவியைப் பின் தொடர்ந்தான். வினித்... தாய் தந்தையரைப் பின் தொடர்ந்து ஓடி விட்டான்.

''இங்கிதம் தெரிந்தவங்க...'' என்றான் விக்னேஷ்.

தாரிணி பதில் சொல்லாமல் எழுந்து பால்கனிக்குச் சென்றாள். விக்னேஷ் பின்னாலேயே போய் அவளருகில் நின்றான்.

வானத்தில் முழு நிலா தெரிந்தது. நட்சத்திரங்கள் அள்ளித் தெறித்தாற்போல் வானம் முழுவதும் பரந்து கிடந்து கண் சிமிட்டின. சிலுசிலுவென இரவு நேரக் காற்று அவர்கள் இருவரையும் தொட்டு விளையாடியது.

தாரிணி பேச்சின்றி நின்றாள்.

''என்னடா.. மனசுக்கு கஷ்டமா இருக்கா?'' என்று ஆதரவாய் வினவினான் விக்னேஷ்.

அந்த ஓர் ஆறுதல் வார்த்தையில் உடைந்து போய் விட்டாள் தாரிணி.

''ஏய்... தாரிணி... இங்கே வா...'' விக்னேஷ் தாரிணியை மார்போடு அணைத்துக் கொண்டான்.



அவன் மார்பில் முகம் புதைத்து மனம் விட்டு அழுதாள் தாரிணி. அழுகை ஓய்ந்ததும் அவள் விலகி நின்று கொண்டு அவசரமாய் வீட்டிற்குள் பார்த்தாள்.

''இன்னும் அவங்க வரவில்லை. ஏன் இப்படி அழுகிறாய்?''

''ச்ச்.. தெரியலை. வீட்டை விட்டு இதுவரை வெளியில் ஓர் நாள் கூடத் தங்கியதில்லை.''

''இத்தனை நாள் நீ இருந்ததற்கு பெயர் வீடா?''

''அங்கே எனக்கும் ஒட்டுதலில்லை. அவங்களும் என் மேல் பாசமாயில்லை. ஆனால்... அதை விட்டு வெளியில் வந்ததும் மனதிற்குள் கலக்கமாய் வெறிச் சென்று இருக்கிறது...''

''இரண்டு நாள் பொறுத்துக் கொள். நம் வீட்டிற்குப் போய் விடலாம்.''

''ம்ம்...'' தாரிணி வானத்தைப் பார்த்தாள்.

அவளது மனதை திசை திருப்ப பேச்சை மாற்ற விரும்பிய விக்னேஷ்.

''தாரிணி... வானத்தில் நட்சத்திரங்கள் இருப்பதைக் கண்டால் உனக்கு என்ன தோன்றுகிறது...'' என்று கேட்டான்.

''சொல்லவா?''

''சொல்லுன்னுதானே சொல்கிறேன்...''

''பாரதியார் கவிதையிலே சொன்னது நினைவுக்கு வருகிறது.''

''பட்டுக்கருநீலப் புடவை பதித்த நல் வயிரம் நட்ட நடு நிசியில் தெரியும் நட்சத்திரங்களடி...''

"ம்ம்... பாரதியார் கவிதைகள் எல்லாம் படித்திருக்கீங்க."

"ஏன்.. பாரதியார் உனக்கு மட்டும்தான் சொந்தமா? எனக்கு சொந்தமில்லையா?"

"எனக்கு நீங்கள்தான் சொந்தம்."

தாரிணி அவன் விரல் மீது சுண்டினாள். அவன் அவள் கைப்பற்ற முயல கையை விலக்கிக் கொண்டு மேனகாவின் அறையை கண் காட்டினாள்.

"சரி.. விடு.. தொடாமல் பேசலாமில்லையா?"

"பேசுங்க..."

"எல்.கே.ஜி. குழந்தைகள் பாடும் இங்கிலீஷ் ரைம்ஸ் ஒன்று இருக்கிறது... அது ஏறக்குறைய... பாரதியார் பாடிய இந்தக் கவிதைப் போலவே இருக்கும்."

"ஈஸிட்... என்ன ரைம்ஸ்?"

"டிவிங்கிள் டிவிங்கிள் லிட்டில் ஸ்டார்ன்னு ஒரு ரைம்ஸ்... அதில் கடைசியாய் ஓர் வரி வரும்.

'லைக் எ டைமன்ட் இன் தி ஸ்கை'ன்னு..."

"அட ஆமாம்... இத்தனை நாள் இது எனக்குத் தோணலையே.. அது எப்படி பாரதியார் நினைத்தது போலவே இந்தக் கவிஞரும் நினைத்திருக்கார்?"

"ஒரே எண்ண அலைவரிசை நிறையப் பேருக்கு உண்டு தெரியுமா? நாம் எதையாவது நினைப்போம். அதை அப்படியே இன்னொருத்தங்க சொல்லுவாங்க. நமக்கு ஆச்சர்யமாயிருக்கும்..."

தாரிணி விழி விரிய கேட்டுக் கொண்டிருந்தாள். இவனா ப்ளஸ் டூவுடன் படிப்பை நிறுத்திவிட்டவன்..



கடவுள் அவனுக்கு இன்னும் கொஞ்சம் கருணை காட்டியிருந்திருக்கலாமென்று தாரிணிக்கு அப்போது தோன்றியது.

## 32



வேதனையைக் கூற வந்தேன்

வேப்பிலைக்காரியே வாழவைத்தாள்.

வேனை நிறுத்திவிட்டு இறங்கி கேட்டைப் பூட்டிய விக்னேஷ் எல்லா விளக்குகளும் எரிந்து கொண்டிருந்த அபிராமியின் வீட்டு மாடிப் படியில் கால் வைத்தான்.

"டேய்... நான் இங்கேயிருக்கேன்.." குமரன் கீழ் வீட்டிலிருந்து குரல் கொடுத்தான்.

"என்னடா இங்கேயே உட்கார்ந்து விட்டாயா?"

"வேறு வழி.. அங்கே தனியாய் போய் உட்காரச் சொல்கிறாயா?"

"அப்புறம் ஏண்டா லைட்டை எரிய விட்டிருக்கிற?"

"இரண்டு காரணமிருக்கு. முதலாவது சேப்டி... நீ பாட்டுக்கு பொண்ணைக் கடத்திட்டுப் போயிட்டே. இருட்டுக்குள்ள எவனாவது வந்து அடிச்சு மாடிப்படியில் தள்ளிவிட்டுட்டு போயிட்டாங்கன்னா என்னடா செய்றது?"

"அதுதான் போலீஸில் கம்ப்ளெயின்ட் பண்ணியிருக்கே."

"மாடிப்படியில் தடுக்கி விழுந்துட்டேன்னு சொல்லிட்டால்...?"

"ஏண்டா.. நீயும் பயந்துகிட்டு இருக்கிறவங்களையும் பயமுறுத்தறே... வாடா பேசாமல்."

"வேறு யாரை பயமுறுத்தினேன்னு சொல்றே...?"

விக்னேஷ் ஜாடையாய் சோமசுந்தரத்தைப் பார்த்தான்.

"யாரை நம்ம ஹவுஸ் ஓனரையா சொல்ற? நீ வேற.. நீ போட்ட பைட்டையும் உன் பிரண்ட்ஸ் வந்து கொடுத்த சவுண்டையும் பார்த்து இவருக்கு குளிர் விட்டுப் போச்சுடா. இந்நேரம் வரைக்கும் வாசலில் நின்றுக்கிட்டு போறவன் வர்றவனையெல்லாம் கூப்பிட்டு மாசிலாமணியின் அக்கிரமத்தை பிட்டுப் பிட்டு வைத்துக் கொண்டிருந்தார். பேசிப் பேசி தொண்டை வறண்டு போச்சாம். உள்ளே அம்மா சுக்குக் காபி போட்டுக்கிட்டு இருக்காங்க. குடித்துவிட்டு திரும்பவும் வாசல் பக்கம் போகிறதா சொல்லிக்கிட்டு இப்பத்தான் உள்ளே வந்து உட்கார்ந்துகிட்டு இருக்கார். அம்மாவே அவரோட அலம்பலைப் பார்த்து திருஷ்டி சுத்திப் போட்டுட்டாங்கன்னா பாரேன்."

"இரண்டாவது காரணம் என்னடா?"

"எதிர் வீட்டைத் திரும்பிப் பார்..."

மந்திரம் ஓதுவது போல் கனத்த குரலில் குமரன் கூற விக்னேஷ் புரியாமல் திரும்பிப் பார்த்தான். இருட்டாய் இருந்தது.

"இருட்டாய் இருக்கே..."

"அதுவேதான். லைட்டே போடவில்லை. இருட்டுக்குள் பதுங்கிக் கொண்டிருக்கிறான் உன் மச்சினன்..."



"தூங்குவான்டா..."

"எப்போதிருந்து சாயந்திரம் ஆறு மணியிலிருந்தா...?"

"ஊருக்கு ஓடிப் போயிட்டானோ என்னவோ..."

"சமையல் கட்டில் மட்டும் லைட் எரியுது. நடமாட்டம் தெரியுது. அது எப்படி?"

"அப்படியா விசயம்? மச்சான் வீடு இருட்டில் இருப்பதற்கும் நம்ம வீட்டில் ஜெகஜோதியாய் லைட் எரியறதுக்கும் என்னடா சம்பந்தம்?"

"வெற்றி விழா கொண்டாடுகிறோம்டா..."

"நீ இருக்கிறாயே... வாடா... நம்ம வீட்டிற்குப் போகலாம்."

"சாப்பிடாமலா?"

"ஏண்டா. நீ இங்கேயே டேரா போட்டுவிடும் உத்தேசத்தில் இருக்கிறாயா? மானத்தை வாங்காமல் எழுந்திருடா..."

குமரனைக் கிளப்ப விக்னேஷ் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டிருந்தபோது சமையலறையிலிருந்து அபிராமியம்மாள் ஈரக்கையை முந்தானையில் துடைத்துக் கொண்டு வெளியே வந்தாள். விக்னேஷைக் கண்டதும் முகம் மலர்ந்தாள்.

"தாரிணி எப்படிப்பா இருக்காள்?"

"அழுதுக்கிட்டே இருக்காள்ம்மா."

"இருக்காதா பின்னே.. பெற்றவங்க உயிரோடு இல்லை. கூடப் பிறந்ததுகள் அதது குடும்பம்ன்னு ஆகிப் போச்சு... இந்தப் பொண்ணுக்கு ஒரு கல்யாணத்தை எடுத்துச்

செய்ய ஆளிருந்தும் அதுகளுக்கு மனசில்லாம போயி ருச்சே. அநாதை போல் அடுத்த வீட்டில் தங்க வேண்டி வந்தால் அதுக்கு துக்கம்தானே வரும்...''

''அதுதான்ம்மா... எனக்கும் மனசைப் போட்டு அறுக் குது.''

''எதுக்கு வேதனைப்படறே. எல்லாம் நல்லதுக்குத் தான்.. மனுசரோட துரோக குணம் புரிந்தால்தான் வாழ ணும்கிற வைராக்கியம் வரும். வாழ்க்கையில் ஜெயிக்க ணும்கிற வேகம் வரும். விடு.. எப்பக் கல்யாணத்தை நடத்தலாம்?''

''நீங்கதான்ம்மா நாள் பார்த்துச் சொல்லணும்.''

''குமரா...'' அபிராமி அழைத்து வாய் மூடுமுன்

''இந்தாங்கம்மா காலண்டர்...'' என்று கொடுத்தான் அவன்.

''எப்படிப்பா இதைத்தான் கேட்பேன்னு கண்டுபிடிச்ச?''

''அவன் தாய்க்கு தலைமகன் மாதிரி கண்ணீர் விட றான். நீங்கள் பெற்றால் தான் பிள்ளையான்னு பாசமழை பொழியறீங்க. கல்யாண நாள் தான் பார்க்கப் போறீங் கங்கிற யூகம்தான்...''

''பரவாயில்லை.. கெட்டிக்காரன்தான். ஏம்பா விக்னேஷ் அடுத்த வாரம் நாள் பார்க்கலாமா?''

''வேணாம்மா. அவள் அவளோட பிரண்ட் வீட்டில் தங்கியிருக்காள்.''

''ஒண்ணு செய்யேன்.''

''என்னம்மா?''



''விஷ்ணு துர்க்கை கோவில் குருக்கள் கிட்டயே நாள் குறித்து விடு. நாளைக்கு நானும் வரேன். போய் கேட்க லாம். கோவிலில்தான் கல்யாணம் நடத்தப் போகிற துன்னு முடிவாகிருச்சு. நல்ல நாளையும் அங்கேயே கேட்டு விடலாமே.''

''நீங்க சொன்னால் சரிதான்ம்மா... அம்மா...''

''என்னப்பா...''

''தாலி... கல்யாணப் புடவை... தாரிணிக்கு கொஞ்சம் நகை எல்லாம் வாங்க வேண்டும். எனக்கு ஒன்றும் தெரியாது. நீங்கதான் கூட வந்து வாங்கிக் கொடுக் கணும்.''

''இதை நீ கேட்டாப்பா நான் செய்யணும்? எப்ப நீ பெத்த தாயாய் என்னை நினைச்சு அடைக்கலம்ன்னு வந்துட்டயோ.. அப்போதிருந்து நீயும் என் பிள்ளை தான்ப்பா.. என் பிள்ளைக்கு நான் முன்னே நிற்காமல் யார் நிற்பார்கள்? நீ கவலையை விட்டுட்டு சாப்பிடவா.''

''எதுக்கும்மா உங்களுக்கு வீண் சிரமம்? எப்போதும் போல் நாங்க எங்க வீட்டில் போய் சாப்பிட்டுக் கொள் கிறோம்.''

''எங்கள் வீடு உன் வீடுன்னு பிரிச்சுப் பேசினால் அடிச்சிடுவேன். 'அம்மா'ன்னு என்னை சொல்லிட்டு நீங்களா சமைச்சுச் சாப்பிட்டால் என்ன அர்த்தம்? தாரிணி வந்து சமைச்சுப் போடுகிற வரை இங்கேதான் நீங்க இரண்டு பேரும் சாப்பிடணும்... வாயைத் திறக்கக் கூடாது. மூச்...''

''இவன் கிடக்கிறான்ம்மா.. நீங்க கீறின கோட்டை நான் என்றைக்காவது தாண்டியிருப்பேனா? நீங்கள் அன்ன

லட்சுமி. அன்னபூரணி... நீங்க பாட்டுக்கு மூன்று வேளை கணக்கில்லாமல் ஆறு வேளையும் சமைச்சுப் போடுங்க. இந்த குமரன் ஆட்சேபனையே சொல்லாமல் சாப்பிடு வான். அப்புறம் அம்மாகிட்ட ஒரு சிறு விண்ணப்பம்."

"என்னப்பா?"

"சாப்பிடும்போது மட்டும் வாயைத் திறக்க நீங்க பெர்மிஷன் கொடுக்கணும். மாட்டேன்னு சொல்லிடக் கூடாது."

அபிராமியம்மாள் சிரித்துக் கொண்டே சாப்பாட்டு மேஜைக்கு செல்ல விக்னேஷ் குமரனைப் பார்த்து சிரித் தான்.

"நீ அடிக்கிற லூட்டிக்கு அளவேயில்லைடா மச்சான்..."

சாப்பிட்ட பின் மாடிக்கு வந்து எதிர் வீட்டு பால் கனியைப் பார்த்தான் விக்னேஷ். இருண்டிருந்தது.

"என்னடா அங்கே பாக்கற?"

"என் தாரிணி இல்லாத வீடு எப்படி இருண்டு கிடக்கு பார். அவள் ஒருத்திதான் அந்த வீட்டில் மனதோடு மனுஷி யாக இருந்தாள். மனதில்லாத மனிதர்கள் இருந்தால் இப் படித்தான் வீடு இருட்டு கட்டிக் கிடக்கும்."

"கிடக்கிறான் விடு. அடிதடிக்கும் அஞ்சாத அண்ணன் காரன்தான் இப்போது அடங்கி விட்டானே."

"அவன் எங்கே அடங்கினான்? போலீஸ் அடக்கிட் டாங்க. அது சரிடா குமரா... எப்படி போலீஸை அங்கே வரவழைக்கும் யோசனை குவார்ட்டர்ஸ்காரங்களுக்கு தோணியது?"



"அதுதான் அவங்க செய்த பெஸ்ட் ஜாப். அதை விட மேனகா இம்மிடியட்டா தாரிணியை அவங்க வீட்டுக்கு அழைச்சுக்கிட்டுப் போனது இன்னும் பெஸ்ட். ஷி இஸ் எ ட்ரூ பிரெண்ட். தாரிணி உறவுக்காரங்க விஷயத்தில் எப்படியோ... பிரண்ட் விசயத்தில் கொடுத்து வைத்திருக் காப்புல போல இருக்கு."

தாரிணியும் அதே நினைவுடன்தான் அப்போது இருந் தாள்.

"பூரி இன்னும் இரண்டு போட்டுக்கடி."

"வேண்டாம் மேனகா... வயிறு புல்லாகி விட்டது."

"நான் ஆன்ட்டிகூடத்தான் இன்றைக்கு படுத்துப் பேன்."

வினித் தாரிணியிடம் முதலிலேயே சொல்லி வைக்க,

"ம்ம்.. நான்தான் ஆன்ட்டி கூட படுத்துப்பேன்." ப்ரீதி அழுகவே ஆரம்பித்தாள்.

கைகழுவிவிட்டு வந்த தாரிணி இருவரையும் இரண்டு கைகளில் தூக்கிக் கொண்டாள்.

"இரண்டு பேருமே ஆன்ட்டியுடைய செல்லங்கள் தான். இரண்டு பேருமே என்னோடு படுத்துக் கொள்ள லாம்."

தரையில் மெத்தை போட்டு விரித்துக் கொடுத்தாள் மேனகா. தண்ணீர் பாட்டிலை மெத்தையின் தலைப் பக்கம் வைத்தாள். கொசுக்களை விரட்ட குட் நைட் லிக்குயிட் பாட்டிலைக் கொண்டு வந்து மாட்டி வைத்தாள்.

"வேறு எதுவும் வேணுமுன்னா உடனே என்னைக் கூப்பிடுடி."

''நைட் தூக்கம் தானே வேணும். வேறு என்ன வேணும்?''

''இல்லை. தேவைப்பட்டால்.''

''எதுவும் தேவைப்படாது மேனகா... நீ போய் தூங்கு.''

''குட் நைட் தாரிணி. வினித்..! ப்ரீதி..! ஆன்ட்டியை தொந்தரவு பண்ணாமல் சமத்தா தூங்கனும்.''

''இவங்க என்னைத் தொந்தரவு பண்ணுவாங்களா? குட் ஜோக்...''

மேனகா தூங்கப் போய் விட்டாள். தாரிணியின் இரு பக்கமும் படுத்திருந்த பிள்ளைகள் இருவரும் அவள் மேல் கை போட்டுக் கொண்டனர்.

''ஆன்ட்டி கதை சொல்லுங்க...'' ப்ரீதி கொஞ்சினாள்.

''சூப்பர்மேன் கதை...!'' வினித் முடிவே பண்ணினான்.

தாரிணிக்கு கதை தெரியாது. யோசித்து தானே புனைந்து தன் இஷ்டத்திற்கு கதை சொல்ல ஆரம்பித் தாள். அதைக் கேட்டபடி தங்களது அறைக் கதவைச் சாத்திவிட்டு கட்டிலுக்குச் சென்றாள் மேனகா.

''என்ன.. உன் பிரண்டுக்கு தாலாட்டுப் பாடி தூங்க வைத்து விட்டு வந்து விட்டாயா...'' கேலியாய் வினவி னான் தினகரன்.

''அவள்தான் உங்க பிள்ளைகளை கதை சொல்லி தூங்க வைத்துக் கொண்டிருக்கிறாள். பாவம் டென்சனில் இருப்பாள். இதுக இரண்டும் தூங்க விடாமல் டிஸ்டர்ப் பண்ணிக்கிட்டு இருக்குதுக.''

''ஏய்... இப்போது நம்ம குட்டீஸ் தாரிணியை டிஸ்டர்ப் பண்ணவில்லை. அன்பையும், பாதுகாப்பையும்



அள்ளிக் கொடுத்துக்கிட்டு இருக்குதுக. தாரிணி லோன்லி யாய் பீல் பண்ண முடியாமல் குழந்தைகளோடு குழந்தை களாய் ஒன்றிப் போயிருப்பாள். அதுதான் அவளுடைய இப்போதைய மனநிலைக்கு நல்லது.''

தினகரன் மிகச் சரியாக தாரிணியின் மனநிலையைக் கணித்துக் கூறினான்.

தாரிணி அப்போது எல்லாவற்றையும் மறந்து குழந்தை களோடு கதை பேசிக் கொண்டிருந்தாள். அவள் மனம் எல்லையில்லாத பரவசத்திலும் அன்பிலும் திளைத் திருந்தது.

அவளது அண்ணனின் குழந்தைகள் அவளிடம் சாதாரணமாய் பேசக்கூட முயல மாட்டார்கள். அக்கா, தங்கைகளின் குழந்தைகளை அவளிடம் கிட்ட நெருங்கக் கூட அவர்கள் விட மாட்டார்கள்.

''அவளே கல்யாணம் காட்சியில்லாமல் தனி மரமாய் நிற்கிறாள்,.. அவள் கண்ணில் பிள்ளையைக் காட்டாதே மாதவி... பிள்ளைக்குச் சுத்திப் போடு.''

ஒரு முறை அக்கா ஜானகி தங்கை மாதவியிடம் கூறிக் கொண்டிருந்ததை காது குடுத்துக் கேட்ட பின்பு மறந் தும்கூட அவர்களின் குழந்தைகள் இருக்கும் திசைப் பக்கம் திரும்பிப் பார்த்ததில்லை தாரிணி.

இரவு ஒருமுறை மேனகா எழுந்து வந்து பார்த்தபோது இரண்டு குழந்தைகளையும் இறுக்கிப் பிடித்தபடி தாரிணி ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருந்தாள்.

# 33



**கோவையிலே கொழு கொண்ட**

**கொற்றவையே! விஷ்ணு துர்க்கை!**

தாரிணி வகுப்பு எடுத்துக் கொண்டிருந்தபோது கல்லூரி பியூன் வந்து அவளைப் பார்க்க இரு பெண்கள் வந்திருப்பதாகக் கூறினான்.

தாரிணி எதிர்பார்த்ததைப் போலவே அவளது அக்கா ஜானகியும் தங்கை மாதவியும் தான் மரத்தடியில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து இருந்தார்கள்.

யாரோ போல அறிமுகமற்ற பார்வை பார்த்துக் கொண்டே அவர்களின் அருகே சென்றாள் தாரிணி. அவர்கள் இருவரின் முகத்திலும் ஆத்திரம் நிறைந்திருந்தது.

''என்ன விசயமாய் என்னைப் பார்க்க வந்தீங்க?'' தாரிணி இறுக்கமான முக பாவத்துடன் கேட்டாள்.

''என்ன விசயமா? ஏண்டி குடியைக் கெடுக்கப் பிறந்தவளே! நல்ல குடும்பத்தில் பிறந்தவ இப்படி ஒரு காரியத்தை செய்திருப்பாளாடி? ஜாதி விட்டு ஜாதி காதல் பண்ணியதுமில்லாம அவனை வீட்டுக்கே பொண்ணு கேட்டு வர வைத்திருக்க.. வந்தவன் அண்ணனைப் போட்டு அடிக்கறதை வேடிக்கை பார்த்துக்கிட்டு நின்னிருக்க... போலீஸ்ல அண்ணன் மேலேயே புகார் எழுதிக் கொடுத்திருக்க... இத்தனையையும் செய்துட்டு வீட்டை விட்டு வேற வெளியேறி இருக்க.. தூ... உன்னை



என் தங்கைன்னு சொல்லிக்கவே எனக்கு வெட்கமாய் இருக்கு...'' ஜானகி காறித் துப்பினாள்.

''சொல்லாதே.. என்னை உன் தங்கைன்னு யார்கிட்டயும் சொல்லாதே. நான் உன்னைச் சொல்லச் சொன்னேனா... இல்லை நான் யார் கிட்டயாவது உன்னை என் அக்கான்னு சொல்லியிருக்கேனா? இங்கே எதுக்கு வந்தே...? ஜாதி விட்டு ஜாதி காதல் பண்ணுவது என் விருப்பம். சொல்லாமல் வீட்டை விட்டு வரவில்லையே... முறையாய் பெண் கேட்டுத்தான என் விக்னேஷ் வீட்டுப் படியை மிதித்தார். அவரா உன் அண்ணனைப் போட்டு அடித்தார்? உன் அண்ணன்தான் அவரை அடிக்க வந்தான். அவர் தடுத்தார். போலீஸிடம் நானா முதலில் கம்ப்ளெயின்ட் பண்ணினேன்? உன் அண்ணன்தான் முதலில் புகார் பண்ணினான். அதற்கப்புறம் நான் உன் அண்ணனிடமிருந்து பாதுகாப்புத்தான் கேட்டேன். நான் மட்டும் புகார் கொடுத்திருந்தேன்னு வை. அவனைத் தூக்கி உள்ளே போட்டிருப்பாங்க. வீட்டை விட்டு வெளியேறாமல் வேறு என்ன பண்ணச் சொல்றே? அது என் பிறந்த வீடில்லை. உன் அண்ணன் வீடு. அங்கே எனக்கு என்ன வேலை? இந்தக் காறித் துப்புகிற வேலையையெல்லாம் உன் அண்ணன் பெண்டாட்டி கிட்ட வைத்துக்க. இன்னொரு முறை இங்கே வந்து இப்படிப் பண்ணினால் கழுத்தைப் பிடித்து நெறித்தே கொன்று விடுவேன். இது என் இடம். ஜாக்கிரதை. போபோ. பிணம் தின்னிக் கழுகு போல அப்பா அம்மா இருக்கும்போதும் பணத்தை வாரிக் கொண்டாய்... அவர் போன பின்னால் அம்மாவின் நகைகளை அபேஸ்

பண்ணிக் கொண்டாய். போதாதுன்னு என் சம்பளப் பணத்தை உறிஞ்சினாய். ஒரு நாளாவது என்னை உன் வீட்டிற்கு வான்னு கூப்பிட்டிருப்பியா... ஒரு வாய் தண்ணீர் கொடுத்திருப்பியா? நீயெல்லாம் எனக்கு அக்கான்னு சொல்லிக்க எனக்குத்தான் வெட்கமாயிருக்கு. என் கல்யாணத்தைப் பற்றி இத்தனை நாள் கவலைப் படாத நீ இப்ப கேள்வி கேட்க வந்துட்ட... நீ யார் கேள்வி கேட்க?'' தாரிணி தீப்பிழம்பாய் இருந்தாள்.

''மனச்சாட்சி இல்லாமல் பேசாதே அக்கா. உன் ஜாதகம் சரியில்லை. அதனால் உன் கல்யாணம் தள்ளிப் போச்சு. அதுக்கு நாங்கள் தான் பிணையா? வயதுக்கு மூத்த வங்கிற மரியாதையை கெடுத்துக்கிற மாதிரி இப்படி ஓர் காரியத்தை பண்ணி விட்டு நிற்கிறயே... நாளைக்கு என் புருசன் வீட்டில் நானெப்படி குடும்பம் நடத்துவது? அவர்கள் உன் அக்கா 'ஓடிப் போனவள்'ன்னு சொல்லிக் காட்ட மாட்டிங்களா?''

மாநவி சும்மாவே பேசுவாள். கலையரசியையே 'வந்து பார்... வட்டப் பாறைக்கு' என்று சவாலுக்கு அழைத்தவள் அவள். தாரிணி அவள் முன் எம்மாத்திரம். அலட்சிய பார்வையோடு அவள் பேசவும் தாரிணிக்குக் கோபம் தலைக்கேறியது.

''பல்லைத் தட்டிக் கையில் கொடுத்து விடுவேன். யார் கிட்ட வந்து என்ன பேச்சுப் பேசற? மனச்சாட்சியைப் பற்றி உன்னை மாதிரி ஜென்மமெல்லாம் பேசக்கூடாது. மூத்தவள் இருக்கும்போது இளையவள் எனக்கெதற்கு கல்யாணம்னு மனச்சாட்சி இருக்கிறவளா இருந்தா நீ கேட்டிருப்பாயில்ல? அப்பா அம்மா போயிட்டாங்க. அண்ணன்காரன் புத்தி சரியில்லைன்னு அண்ணன் பெண்டாட்டிகிட்ட சரிக்கு சரி மல்லுக்கு நின்று எங்கே யாவது ஓட்டி விட்டால் போதும்ன்னு உனக்கு மாப் பிள்ளை பார்க்க வைத்த பலே கில்லாடியில்ல நீ? என் றைக்கு நீ வயதுக்கு மூத்தவங்கிற மரியாதையை எனக்குக் கொடுத்தாய்? இன்று கொடுப்பதற்கு? புருசன் வீட்டில் வாழ முடியா விட்டால் என் வீட்டிற்கு வா.. உன் கூடப் பிறந்த பாவத்திற்கு காலம் பூராவும் சாப்பாடு போடுகிறேன். அதை விட்டு விட்டு 'ஓடிப்போனவள்' அது இதுன்னு பட்டம் கட்டின. உன் அக்காவுக்குச் சொன் னதுதான் உனக்கும். மென்னியைத் திருகி விடுவேன். ஓடிப் போயிடு பேசாமல்..'' தாரிணியின் உடல் நடுங் கியது.



அப்போது மேனகா அங்கே வேகமாக வந்தாள்.

''யாரோ உன்னைப் பார்க்க வந்திருக்காங்கன்னு பியூன் சொன்னதும் வேகமா ஓடி வருகிறேன். உன்னை யார் இவங்களைப் பார்க்க தனியாய் வரச் சொன்னது?''

''நீ யாரும்மா அக்கா தங்கைகள் பேச்சுக்கு இடையில் வர?''

ஜானகியை முறைத்தாள் தாரிணி.

''முதலில் நீ யாரு என் அக்கான்னு சொல்லிக்க? இவ்வளவு நேரம் தங்கை மேல் பாசத்தைப் பொழிஞ் சுக்கிட்டு இருந்த... இவள் வந்து கெடுத்து விட்டாள். கடுப்பைக் கிளப்பாமல் போய்விடு இங்கிருந்து.''

''ஊரார் முன்னால் எங்களை அவமானப்படுத்து கிறாயா?''

"யார் ஊரார்? என் மேல் பாசம் வைத்திருக்கும் இவள் ஊரார்... நீங்கள் இரண்டு பேரும் உற்றாரா? நான் செத்தால் எனக்காக இரண்டு சொட்டு கண்ணீர் உங்களில் யார் கண்ணிலிருந்தாவது வருமா? எனக்கு எவ்வளவு பணம் வரும். அதை எப்படி பகிர்ந்து கொள்வது... இப்படித்தானே அடித்துக் கொள்வீர்கள்.. இங்கே பாருங்க... நான் வெறுத்துப் போய் வந்திருக்கிறேன். காலேஜுக்கு வந்து டிஸ்டர்ப் பண்ணினால் நான் உங்கள் மேலயும் புகார் கொடுத்திடுவேன். பேசாமல் போய் விடுங்க."

'புகார்' என்றதும் ஜானகி பம்மினாள். துள்ளிக் கொண்டிருந்த மாதவியின் கையைப் பிடித்து சங்கேதமாய் அழுத்தி எச்சரித்தாள்.

"அடக்கி வாசி மாதவி. இவள் பாட்டுக்கு புகார் கொடுத்து விட்டால் நம்ம வீட்டுக்காரங்க. நம்மை வீட்டுப் படியேற விட மாட்டாங்க... நாம நம்ம வழியைப் பார்த்துக் கிட்டுப் போகலாம். இவளாச்சு.. அண்ணனாச்சு.. நமக்கென்ன வந்தது..." தாழ்ந்த குரலில் மாதவியின் காதுகளில் கிசுகிசுத்தாள்.

"என்னக்கா இப்படிச் சொல்லிட்ட.. பிறந்த வீடுன்னு அண்ணன் வீட்டுக்குத்தானே வந்து போகணும். நாளைக்கு தாய் மாமன்னு சபையில் நிற்க வைக்கிறதுக்கு அவன் தயவு வேண்டாமா?" மாதவி பதிலுக்கு முணு முணுத்தாள்.

"எல்லாம் வருவான். அப்பா சொத்தில் பங்கு கேட்டு நோட்டிஸ் விடுவோம்ன்னு பயமுறுத்தினால் தன்னாலே வந்து நிற்பான். இப்ப நீ வா போகலாம். இவ வில்லங்கம் பிடித்தவளாய் இருக்கிறாள்."



"அப்பா சொத்தில் பங்கு கேட்டு நோட்டீஸ் விடுவதா? இது கூட நல்ல ஐடியாவாய் இருக்கே... தாய் மாமன்? உறவுன்னு அவன் வந்தால் வருகிறான்... வரா விட்டால் போகிறான். நாம் ஏன் பங்கு கேட்டு நோட்டீஸ் விடக்கூடாது?"

"அதை அப்புறம் யோசிக்கலாம். இப்ப நீ வாடி."

"யோசிக்கிறதுக்கு என்ன இருக்கு? போகும்போதே வக்கீலை பார்த்துவிட்டுத் தான் மறுவேலை. வா போகலாம்."

தாரிணி தலையைப் பிடித்துக் கொண்டு அங்கேயே அமர்ந்து விட்டாள். மேனகா தூர நின்ற பியூனை அழைத்து இரண்டு காபி கொண்டு வரச் சொன்னாள்.

"அவங்க புத்தி உனக்கு இப்போதுதான் தெரியுமா? புதிதாய் தெரிந்து கொண்டிருந்தால் நீ வேதனைப் படுவதில் அர்த்தமிருக்கிறது. ஏற்கனவே தெரிந்த விசயங்களுக்காக நீ வேதனைப்படலாமா?"

"என்ன மாதிரி பிஹேவ் பண்ணினாங்க தெரியுமா? இந்த மாதவி. நான் தூக்கி வளர்த்த தங்கை... என்னை 'ஓடிப் போனவள்'ன்னு சொல்கிறாள் மேனகா."

"எத்தனை நூற்றாண்டுகள் ஓடினாலும் காதல் கல்யாணத்திற்கு வரும் தடைகள் குறையவில்லை தாரிணி. உன் அண்ணன் விக்னேஷை அடித்து உடல் ரீதியாய் துன்புறுத்தப் பார்த்தான். இவர்கள் மனரீதியாக துன்புறுத்தப் பார்க்கிறார்கள். நீ மனம் தளர்ந்து விடாதே. தைரியமாய் எதிர்த்து நில்."

"கல்லால் அடித்தால் கூட இவ்வளவு வலி இருக்காது மேனகா. இவர்கள் சொல்லால் அடித்து விட்டுப் போகிறார்கள்... மனம் வலிக்கிறது."

பியூன் காபியுடன் வந்து விட்டான்.

"இந்தா காபி சாப்பிடு. தலைவலி போய்விடும்."

தாரிணி சோர்வாய் காபியை குடித்துக் கொண்டிருக்கும்போது மேனகா எழுந்து சற்று தூரமாய் சென்று செல்போனை எடுத்தாள். மறுமுனையில் விக்னேஷின் குரல் ஒலித்தது.

"விக்னேஷ்... மேனகா பேசுகிறேன்."

"சொல்லுங்கள் மேடம்."

"தாரிணி மன வேதனையுடன் இருக்கிறாள்."

"ஏன்? என்ன ஆனது?"

"அவளுடைய அக்காவும், தங்கையும் வந்திருந்தார்கள்?"

"ஓ...! வீட்டிற்கு வந்தார்களா?"

"வீட்டுக்குள் நான் விடுவேனா? காலேஜிற்கு வந்து விட்டார்கள். நான் வருவதற்குள் அதிகம் பேசி விட்டார்கள்."

"ம்ம்... நான் உடனே கிளம்பி வருகிறேன் மேடம்."

மேனகா செல்போனை அணைத்து விட்டு தாரிணியின் அருகே வந்து அமர்ந்தாள். இலக்கில்லாமல் வெறித்துக் கொண்டிருந்த தாரிணியிடம் மேனகா வினவினாள்.

"அடுத்த கிளாஸ் எப்போது எடுக்கணும்?"

"ஈவினிங் கடைசி பீரியட்தான்."

"அதுவரை என்ன செய்யப் போகிறாய்?"



"லன்ச் அவர்ஸ் வந்து விட்டதே... சாப்பிட்டு விட்டு கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுப்பேன். அவ்வளவுதான்."

"வேண்டாம். நீ கொஞ்சம் வெளியே போய் வா."

"எங்கே போகச் சொல்கிறாய்?"

"லன்ச் சாப்பிட்டு விட்டு பேசிக் கொண்டிருந்து விட்டுவா."

"யாருடன்...?"

புரியாமல் வினவினா தாரிணி.

"என்னுடன்..." என்ற பதில் வரவும் திரும்பிப் பார்த்தாள் விக்னேஷ் நின்று கொண்டிருந்தான். தாரிணியின் முகம் மலர்ந்து விட்டது.

"வா போகலாம்."

எழுந்து விக்னேஷுடன் நடந்தவள் சற்று நின்று அவனிடம் "ஒரு நிமிடம்..." என்று கூறிவிட்டு மேனகாவிடம் ஓடி வந்தாள்.

"என்னடி...?"

"தேங்க்ஸ் மேனகா..."

"வாட் பார்?"

"யு நோ இட்."

தாரிணி விக்னேஷை நோக்கி விரைந்தாள். தோழியைப் பார்த்துக் கொண்டிருந்த மேனகாவின் மனம் நெகிழ்ந்தது.

'நீ சிரிக்க வேண்டும்டி. எனக்கு அதுதான் வேண்டும்.'

மேனகா சாப்பாட்டு அறையை நோக்கி அமைதியாய் நடந்தாள்.

கல்லூரி வாசலில் 'இன்டிகா' கார் நின்று கொண் டிருந்தது.

தாரிணிக்காக காரின் முன் பக்கக் கதவைத் திறந்து விட்டான் விக்னேஷ்.

"கார் ஏது?"

"சரியாப் போச்சு போ... யாராவது கேட்டால் நான் யாருடைய காரையாவது தள்ளிக் கொண்டு வந்து விட்டேன்னு நினைத்து விடப் போறாங்க... உன்னுடைய கார் தான்?"

"என்னுடையதா...?"

"ஆமாம்... ஏறு சொல்கிறேன்."

தாரிணி அமரவும் விக்னேஷ் சுற்றி வந்து காரில் ஏறிக் காரைக் கிளப்பினான்.

"என்னிடம் வேன் போக இந்தக் காரும் இருக்கிறது.. இது உனக்கு இத்தனை நாளாய் தெரியாதா?"

"சொன்னால்தானே தெரியும்."

"அதுதான் இப்போது சொல்லிவிட்டேனே."

"இன்னும் என்னென்ன மறைதிருக்கிறீர்களோ..."

"அதுவா? தாராபுரம் ரோட்டில் ஒரு குடும்பம் இருக் கிறது... பொள்ளாச்சி பக்கம் இன்னொரு குடும்பம் இருக் கிறது.. அப்புறம்."

"உங்களை..."

தாரிணி திரும்பி அமர்ந்து 'சட்சட்'டென்று விக் னேஷை அடித்தாள். சிரித்துக் கொண்டே ஒரு கையால் காரை ஓட்டியவாறு இன்னொரு கையால் அதைத் தடுக்க அவள் கரத்தைப் பற்றினான் விக்னேஷ்.



## 34



முக்குத்தி ஜொலிஜொலிக்க

முக்தி தருவாள் விஷ்ணு துர்க்கை

'தங்கத் தாமரை மகளே.. வா அருகே..

தத்தித் தாவுது மனமே வா அழகே'

காரில் டேப் ரிகார்டர் பாடிக் கொண்டிருந்தது. மரங்கள் அடர்ந்த சாலையின் ஓரமாய் ஓர் மரத்தடியில் காரை நிறுத்தினான் விக்னேஷ். தாரிணியின் கையை விடாமல் அவள் புறம் திரும்பி அமர்ந்து கொண்டான். அவள் முகத்தையே இமைக்காமல் பார்த்தான்.

சற்று முன் கலக்கம் குடிகொண்டிருந்த தாரிணியின் விழிகளில் இப்போது காதல் குடிகொண்டிருந்தது. அவன் பார்வையின் வேகம் தாளாமல் தவிப்புடன் தலை கவிழ்ந்தாள். விக்னேஷ் ஓர் விரலால் அவள் முகவாயைத் தொட்டு நிமிர்த்தினான். அவனை நிமிர்ந்து பார்க்க இயலாமல் அவள் மீண்டும் தலை கவிழ்ந்து கொண்டாள்.

விக்னேஷின் மனம் சிறகடித்தது. அவளைப் பார்க்க பார்க்கத் தெவிட்டாத காதலுடன் வினவினான்.

"ஏய்ய்..."

"ம்ம்..."

"என்னைப் பார்."

"ஊஹூம்..."

"பார்க்க மாட்டாயா?"

அவள் 'மாட்டேன்' என்பது போல் இடம் வலமாய் தலையை அசைத்தாள். அவள் காதுகளின் ஜிமிக்கிகள் அவளது அசைவிற்கேற்ப ஆட விக்னேஷ் கிறங்கினான்.

"ஏண்டி...? என்னைப் பிடிக்கவில்லையா?"

தாரிணி அவசரமாய் அவன் வாய் பொத்தினாள். அவனது கரம் அவளைச் சுற்றி வளைத்தது. தாரிணி விக்னேஷின் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். மனம் லேசாகி விட்டிருந்தது. மதிய நேரத்தில் வெப்ப மான காற்றுகூட பூங்காற்றாய் மாறி அவர்களைத் தொட்டு விளையாடியது.

"தாரிணி..."

"ம்ம்..."

"ஐ லவ் யூ..."

"நானும்தான்."

"என்ன வேடிக்கை பார்த்தாயா? கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறோம். இதுவரை காதல் சொல்லிக் கொள்ளவில்லை."

"வார்த்தையில் சொன்னால்தானா?"

"அதைச் சொல்லு. உன் பின்னால் என் மனம் போன போது நீ அதிகம் படித்துப் பெரிய வேலையில் இருக் கிறாய்ன்னு எனக்குத் தெரியாது."

"ஆனால்... உங்களை நான் காதலிக்க ஆரம்பிக்கும் போது நீங்கள் யார்ன்னு எனக்குத் தெரியும்?"

"என்னை ஏண்டி காதலித்தாய்?"



"நீங்கள் ஏன் என்னைக் காதலித்தீங்க...?"

"அது ஒரு கதைடி.. முதன் முதலில் மருதமலை முருகன் கோவிலில்தான் உன்னைப் பார்த்தேன். அதற்குப் பிறகு நடந்ததெல்லாம் நன்மைதான் தாரிணி... எனக்கு உன்னைப் பிடித்துப் போய் விட்டது. எவ்வளவு பிடித்த துன்னு வாய் வார்த்தையில் சொல்லிவிட முடியாது தாரிணி. உன்னைப் பார்த்துக் கொண்டிருக்க வேண் டும்ன்னுதான் உன் வீட்டிற்கு எதிர் வீட்டிற்கு குடி வந் தேன்."

தாரிணி அவன் மார்பிலிருந்து முகம் உயர்த்தி அவன் முகத்தையே ஆச்சர்யத்துடன் விழியகல நோக்கினாள்.

அவளை இந்த அளவுக்கு நேசித்தானா? அவள் வேனில் வருவதற்கு முன்பே அவளை நேசித்து விட் டானா? தான் கேட்பது உண்மையா?

"என்னடி அப்படிப் பார்க்கிறாய்? என் முகத்தில் என்ன இருக்கிறது?"

"அழகு இருக்கிறது."

"பொய் சொல்லாதே.. உனக்கு என்னைப் பிடித்திருக் கிறதுன்னு சொல்லு... கேட்டுக் கொள்கிறேன். அழகு இருக்கிறதுன்னு கதை அளக்காதே..."

"கதை அளக்கிறேனா? ஆளைப்பார்."

"ஆளைப் பார்த்துத்தானே காதல் கொண்டாய்?"

"அப்பப்பா.. உங்களை பேச்சிலும் ஜெயிக்க முடி யாது."

"பேச்சிலும்ன்னா?"

அவன் விழிகள் சிரித்தன. அவள் வெட்கச் சிவப்புடன் உதடு கடித்தாள்.

''அது எப்படி ஒரு நொடியில் உன் முகம் இப்படிச் சிவந்து விடுகிறது?'' அவன் கரம் நீட்டி அவள் கன்னம் தொட்டான். அவள் உடல் சிலிர்த்தது.

''சாப்பிடப் போகலாம?''

என்னவோ.. 'வானில் பறக்கப் போகலாமா?' என்று அவன் வினவியதுபோல் அவள் மென்மையாய் தலை யசைத்தாள். அவன் காரைக் கிளப்பினான்.

முன்னால் செயற்கை நீரூற்றுடன் இருந்த அந்த ஹோட்டலுக்குள் காரை விட்டான் அவன். பார்க்கிங் ஏரியாவில் காரை நிறுத்தி விட்டு மின்னல் வேகத்தில் இறங்கி சுற்றி வந்தவன் அவளுக்காக கார் கதவைத் திறந்து விட்டான். தாரிணி பெருமிதமாய் உணர்ந்தாள்.

''வா...''

அவளோடு கரம் கோர்த்துக் கொண்டான். அவ்வளவு நிறைவுடன் பெருமையாய் தாரிணி என்றுமே உணர்ந்த தில்லை.

உள்ளே சென்று ஏ.ஸி. அறையில் அமர்ந்தார்கள். அவர்கள் அமர்ந்திருந்த டேபிளின் அருகே சுவரோடு பதித்து மிகப் பெரிய மீன் தொட்டி இருந்தது. அதில் மிகப் பெரிய தங்க மீன்கள் நீந்திக் கொண்டிருந்தன. மீன் தொட்டியிலிருந்த செயற்கை பூஞ்செடிகள், சிப்பிகள் கடற்கரையோர கூழாங்கற்கள் இவற்றினிடையே மீன்கள் நீந்துவதைப் பார்க்க ரம்யமாய் இருந்தது.

மெல்லிய வெளிச்சத்தில் தேவதை போல் எதிரே அமர்ந்திருந்தவளைப் பார்த்த விக்னேஷ்,



''என்னடா... இந்த சிச்சுவேஷன் பிடித்திருக்கிறதா?'' என்று மென்மையாய் வினவினான்.

அவள் 'ஆமா'மென்று காதிலிருந்த தொங்கட்டான்கள் ஆடத் தலையசைத்தாள்.

மெனு கார்டை அவள் பக்கமாய் தள்ளி விட்ட விக் னேஷ்,

''என்ன பிடிக்கும்ன்னு பார்த்துச் சொல்லு'' என்றான்.

அவள் விழிகள் நிறைந்தன. தாய் தந்தை போன பின் இந்தக் கேள்வியை அவளிடம் யாரும் கேட்டதில்லை. ஆயிரக் கணக்கில் மாதா மாதம் பணம் கொடுப்பாள். ஆனால் அவளுக்கு வயிறார வாய்க்கு ருசியாய் ஒரு வாய் உணவு கிடைத்ததில்லை. தனியாய் ஹோட்ட லுக்குப் போய் சாப்பிடும் வழக்கமும் அவளிடம் இருந்த தில்லை.

பேருக்கு வீட்டில் இருந்து கொண்டு ருசிக்காக சாப் பிடாமல் பசிக்காக சாப்பிட்டவளிடம் இவன் இவ்வளவு காதலையும்.. கருணையையும் காண்பிக்கிறான்.

இது ஒரு வித ஏக்கம். தேடல்.. எனக்காக யார் இருக் கிறார்கள் என்ற தவிப்பு.

விக்னேஷ் அவளைக் காரில் அழைத்து வந்தது... அவள் ஏறுவதற்காகவும்.. இறங்குவதற்காகவும் கார் கதவைத் திறந்து விட்டது... எல்லாமே அவனைப் பொறுத்தவரை இயல்பான செய்கை. அவளுக்கு ஓர் மகாராணிக்கு கிடைத்த கௌரவம் தனக்குக் கிடைத்த பெருமிதம்.. நிறைவு...

'உனக்கு என்ன பிடிக்கும்?' என்று அவன் கேட்டதும் இயல்பே... ஆனால் அவளை ஓர் ஜீவனாய் மதிக்காத

உறவினர் மத்தியில் வசித்து வந்தவளுக்கு அது மிகப் பெரிய அங்கீகாரம். அவள் உணர்வுகள் மதிக்கப்பட்ட சந்தோசம்.

இதுபோல் அவள் எங்கும் வெளியே வந்ததில்லை. பெற்றோர் இருந்தபோதுகூட இப்படி அவளை வெளியில் அழைத்து வந்ததில்லை.

சிறு வயதில் வீட்டிலிருந்து பள்ளிக்குப் போனாள். மாலையில் பள்ளி முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பி வந்தாள். பருவம் வந்ததும் கல்லூரிக்குப் போனாள். கல்லூரி முடிந்ததும் மாலையில் வீட்டிற்குத் திரும்பி வந்தாள். அதன் பின் வேலை கிடைத்ததும் வேலைக்குப் போனாள். மாலையில் வேலை முடிந்ததும் வீட்டிற்குத் திரும்பி வந்தாள்.

கண்களின் இரு பக்கமும் பட்டை தொங்க விடப்பட்டு வாழ்க்கைப் பாதையில் ஓடப் பணிக்கப்பட்ட ஓர் மனிதக் குதிரை தான் தாரிணி. அவளைப் பொறுத்தவரை அன்று பள்ளிக்குப் போய் வீடு திரும்பியதற்கும் இன்று கல்லூரிக்குப் போய் வீடு திரும்புவதற்கும் பெரிய வித்தியாசம் எதுவுமில்லை. எல்லாமே அவளுக்கு ஒன்றுதான்.

மாற்றமில்லாத வாழ்க்கை வாழ்ந்தவளின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வந்தவன் விக்னேஷ்.

அவளை அவளுக்காக நேசித்த முதல் ஜீவன்.. அவன். அவளைப் பெற்றவர்களுக்கு அடுத்து அவள் மேல் அக்கறை காட்டியவனும் அவன் தான்.

''என்ன வேண்டும் சொல்லு... சர்வர் வெயிட் பண்றார் பார்.''



தாரிணி மெனு கார்டை அவன் பக்கம் தள்ளினாள். அவன் புரியாமல் அவளைப் பார்த்தான்.

''என்ன தாரிணி?''

''உங்களுக்கு எது பிடிக்குமோ.. அதை ஆர்டர் பண்ணுங்கள்.''

''ஏய்...''

''ப்ளீஸ்...''

விக்னேஷ் வேண்டியவற்றைச் சொல்லி சர்வரை அனுப்பி விட்டு அவர் முகம் பார்த்தான்.

''என்ன வேண்டும்ன்னு சொல்லக் கூடாதா?''

''தெரிந்தால்தானே சொல்ல...''

''ஏய்... என்ன சொல்றே...''

''தெரியாதுங்க... அப்பாம்மா இருக்கும் வரை.. அம்மா சமைக்கிற எல்லாமே பிடிக்கும். அது நன்றாகவும் இருக்கும். அவங்களுக்கு பின்னால் போட்டதைச் சாப்பிடப் பழகிக்கிட்டேன். என்ன பிடிக்கும்ன்னு என்னை யார் கேட்டாங்க... அவங்களுக்குப் பிடிச்சதை சமைப்பாங்க. மீந்ததைப் போடுவாங்க. படித்த சம்பாதிக்கும் அநாதை தான் நான். இதில் பிடித்ததைச் சொல்லுடின்னா எதைச் சொல்ல? உங்களைத்தான் எனக்கு முதன் முதலாய் பிடித்தது. உங்களைச் சொல்லவா?''

விக்னேஷ் மனம் வருந்தினான். அவனுடைய தாரிணியின் மனதில் துயரமிருக்கிறது என்பதை அறிந்து அதைத் துடைக்கத்தான் அவளைத் தனியே சாப்பிட அழைத்து வந்தான். இங்கு வந்தும் இவள் கலங்குவதா.

மெல்ல அவள் கரம் பற்றி அழுத்தினான். அவள் அவன் தோளில் மெல்ல தலை சாய்த்துக் கொண்டாள்.

சர்வர் வந்து உணவுத் தட்டுக்களை பரப்பி விட்டுச் சென்றான். விக்னேஷ் தாரிணியின் பக்கம் தட்டை நகர்த்தி,

"சாப்பிடு" என்றான்.

அவள் சாப்பிட ஆரம்பித்ததும் மெதுவாகக் கேட்டான்.

"உன் அக்காவும் தங்கையும் வந்திருந்தாங்களா?"

"ம்ம்.."

"அதற்காகப் போய் வருத்தப்படலாமா?"

"அவங்க என்ன சொன்னாங்க தெரியுமா?"

"சொல்லிவிட்டுப் போகட்டுமே.. அதை ஒதுக்கித் தள்ளிவிடத் தெரியாவிட்டால் நாளை எப்படி என்னுடன் குடும்பம் நடத்தப் போகிறாய்? நமக்கும் குழந்தைகள் பிறக்கும்... நீ தைரியமாய் இருந்தால் தானே அவங்களை வளர்க்க முடியும்? ஒரு சொல் தாங்க முடியாமலிருந்தால் எப்படி அவங்களுக்கு தைரியம் கொடுத்து வளர்ப்பாய்?"

"இல்லைங்க... அவங்க..."

"சும்மா சும்மா மற்றவங்களைச் சொல்லாதே... உன் கூடப் பிறந்தவங்கன்னு இல்லை. இன்றைக்கு உலகம் இருக்கும் இருப்பே இப்படித்தான்.. யாருக்கு என்ன வீக் பாயின்டோ... அதைக் குறி வைத்து அடிப்பார்கள். அதை எதிர்த்து நின்று ஜெயிக்கக் கற்றுக் கொள் புரிந்ததா?"

விக்னேஷ் புத்திமதி சொல்ல... தாரிணி கேட்டுக் கொண்டு தலையாட்டிக் கொண்டிருந்தாள். அப்போது



அவர்கள் எதிரிலிருந்த சேரில் இளங்கோ வந்து அமர்ந்தான்.

## 35



பூப்போன்ற என் மனதின் முள் நீக்கி
பூக்கோலம் போட்டு விட்டாள் விஷ்ணு துர்க்கை.

"ஹலோ.. ஐ ஆம் இளங்கோ.. உங்க வுட்பி கூடத்தான் வேலை பார்க்கிறேன்.. என்ன தாரிணி மேடம்.. என்னை உங்க வருங்காலக் கணவருக்கு அறிமுகப் படுத்தி வைக்க மாட்டீங்களா?" இளங்கோ தோரணையாய் தாரிணியைப் பார்த்து வினவினான்.

Uploaded by Naghu

அவன் பேசிய முறை விக்னேஷிற்கு பிடிக்கவில்லை. அவன் ஏதோ வம்பிழுக்க வந்திருக்கிறான் என்று அவனுக்குப் புரிந்து விட்டது. ஆனால் அவனுக்கும் தாரிணிக்கும் என்ன பிரச்னையென்று தான் அவனுக்குப் புரியவில்லை. எப்படியும் எதிரே வந்து உட்கார்ந்திருக்கிறவன் அதையும் சொல்லத்தான் போகிறான். அதை அவன் வாயாலேயே கேட்டுக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் மோவாயைத் தடவியபடி அவனையே பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான் விக்னேஷ்.

"என்ன மாப்பிள்ளை சார்... நான் யார்ன்னு தெரியவில்லையா... ஒரு காலத்தில் உங்களை இப்ப காதலிக்கும் இந்த தாரிணி மேடத்தை உருகி உருகிக் காதலித்தவன் நான்... நேரடியாய் காதலைச் சொல்லக் கூடாதுன்னு தமிழ்

பண்பாடைக் காப்பாற்றுகிறேன் பேர்வழின்னு இவங்க அண்ணன் கிட்ட பெண் கேட்கப் போனேன். அவன் ஆள் வைத்து அடித்தான். ஆஸ்பத்திரியில் கிடந்தேன். மேடம் என்னைத் தேடி வந்தாங்க. ஆறுதல் சொல்லப் போறாங் களனு நினைச்சேன். என்னைக் காதலிக்க உனக்கு என்னடா தகுதியிருக்கு? நீயென்ன பெரிய லார்டு லபக்குதாஸான்னு கேட்டாங்க... அவங்களுக்குக் காரும் பங்களாவும் வைத்திருக்கிற பெரிய பிஸினெஸ் மேனைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசையாம். சரி.. நம்ம ரேஞ்சுக்கு நம்ம அத்தை மகள்தான் லாயக்குன்னு அவளைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு செட்டிலாயிட் டேன். ரெண்டு குழந்தைகள். இப்ப மேடத்துக்கு கல் யாணம்ன்னு சொன்னாங்க. காதல் கல்யாணமாமே.. சார் எப்படி? உங்களுடைய காரும் பங்களாவும்தான் அவங் களை இம்ப்ரெஸ் பண்ணியதா? நீங்கள் என்ன பிஸினெஸ் பண்ணுகிறீர்கள்? என்ன டிகிரி படித்திருக்கிறீர்கள்?"

தாரிணி பதறிப் போய் ஏதோ பேசப் போனாள். அவள் கையை இறுகப் பிடித்தான் விக்னேஷ். அவன் விரல்கள் கூறிய சேதியைப் புரிந்து கொண்டு மௌனமானாள் தாரிணி. ஆயினும் அவள் விரல்கள் நடுங்கின. அதைப் புரிந்து கொண்டவனாய் அவன் அவள் கைவிரல்களை லேசாய் அழுத்தி தைரியம் கொடுத்தான்.

"ஆமாம் இளங்கோ சார். தாரிணி என்னிடம் இருக்கும் காரையும் பங்களாவையும் பார்த்துத்தான் இம்ப்ரெஸ் ஆனாள். கார் ஹோட்டல் வாசலில் இருக்கிறது. பங்களா புதியது. எங்கள் கல்யாணம் முடிந்தவுடன் நேராய் என் புது வீட்டில்தான் என் தாரிணி கால் வைத்து கிரஹப்



பிரவேசம் செய்யப் போகிறாள். அப்புறம் எனக்கு என்ன பிஸினெஸ்ன்னு கேட்டிங்க இல்ல? இப்போ பண்ணுகிற பிஸினெஸ் டிராவல் ஏஜன்ஸி.. அதை விரிவு பண்ணும் ஐடியா இருக்கிறது. என்ன படிச்சிருக்கேன்னா.. இப் போதைக்கு உலகத்தை படிச்சுகிட்டு இருக்கேன். ஒரு நாலைந்து வருசம் கழிந்து வந்து கேட்டிங்கன்னா... ரெண்டு குழந்தைகளுக்கு தகப்பனும் ஆகியிருப்பேன். இரண்டு டிகிரிக்கு சொந்தக்காரனாகவும் ஆகியிருப்பேன். போதுமா சார்.. தாரிணி சாப்பிட்டு விட்டாள். நாங்க கிளம்ப வேண்டும்."

விக்னேஷ் கம்பீரமாய் எழுந்தான். தாரிணியின் கரம் பிடித்துக் கொண்டு நடந்தான். இளங்கோ அயர்ந்து போய் அமர்ந்திருந்தான்.

Uploaded by Naghu

காரில் கல்லூரிக்குத் திரும்பும்போது விக்னேஷ் மௌனமாய் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

"என்ன நடந்ததுன்னு கேட்க மாட்டிங்களா?" தாரிணி தாங்க முடியாமல் வினவினாள்.

விக்னேஷ் தாரிணியின் தலையை லேசாய் தடவிக் கொடுத்தான்.

"ஏன் குழம்பிக்கிறாய்... அவன் தான் சொன்னானே.. அதற்கு மேல் உன்னை என்ன கேள்வி கேட்பது?"

"விக்னேஷ்.. நான் அவரை இன்சல்ட் பண்ணனும்னு நினைக்கலை பட். அப்படிப் பேசினால் தான் அவ ருடைய அத்தை மகளை ரோசப்பட்டு கல்யாணம் பண் ணிக் கொள்வாருன்னு கணக்குப் போட்டுப் பேசினேன். பிகாஸ்... அவருடைய பேரன்ட்ஸும், அத்தை மகளும் என்னைத் தேடி வந்து கையெடுத்துக் கும்பிட்டாங்க. நோ

அதர்வே. நான் அவரை அவமானப்படுத்துவது போல் பேச வேண்டியதாகி விட்டது."

கல்லூரி வாசலில் காரை நிறுத்திய விக்னேஷ் தாரிணியைக் கனிவாகப் பார்த்தான்.

"யாரோ ஒரு பெண்ணிற்காக நீ கெட்ட பெயர் ஏற்றுக் கிட்டே... எனக்கு உன்னை நினைத்தால் பெருமையாய் இருக்கு."

"ஆனால் என்னால் தானே உங்களுக்கு இந்த நிலைமை?"

"என்ன நிலைமை?"

"பங்களா இருக்கா. கார் இருக்கான்னு."

"கேட்டால் என்ன? நான் பொய் சொல்லவில்லையே... இது என்னுடைய கார்... பங்களா என்றதும் நிஜம்தான். சொந்த வீடு எது என்றாலும் நமக்கு அது பங்களா தானே. எப்போது நீ பெண் கேட்டு வரச் சொன்னாயோ அப்போதே அட்வான்ஸ் கொடுத்து அக்ரிமெண்ட் போட்டு விட்டேனே..."

"எதற்கு?"

"புது வீடு வாங்கத்தான்."

"எப்படிங்க பணம் ஏது?"

"கொள்ளை அடித்தேண்டி..."

"ச்சு... தெரியாமல்தானே கேட்கிறேன்."

"இதுகூட உன்னால்தான்..."

"என்னாலா... அது எப்படி?"

Uploaded by Naghu



"உன்னை மறக்க முடியாமல் ராத்திரி பகலாய் டிரிப் அடித்தேன். பணம் சேர்ந்தது. கொஞ்சம் கடன் வாங்கினேன். வீடு வாங்க லோனும் கிடைத்தது. நேற்றுத்தான் பத்திரம் முடித்தேன். ஆக்சுவலாய் உன் பெயரில்தான் வாங்கணும்னு நினைத்தேன். பட் என் பெயரில் வாங்கினால்தான் உனக்குப் பெருமை. அதனால் தான் என் பெயரில் வாங்கியிருக்கிறேன். நம் கல்யாணம் முடிந்தவுடன் அங்கு தான் நாம் நேரே போகப் போகிறோம். அதைப் போல நான் டிகிரி வாங்கப் போவதும் உண்மைதான். கரெஸ்பாண்டன் ஸ்கோர்ஸில் பி.ஏ. படிக்க அப்ளை பண்ணிட்டேன். எம்.ஏ. பட்டம் வாங்கும் வரை ஓய மாட்டேன். இப்போது என்னிடம் வேனும், காரும் இருக்கிறது. இன்னும் இரண்டு கார்கள் வாங்க முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். கால் டாக்ஸி நம்பர் போட்டு டிராவல் ஏஜன்ஸி வைக்க யோசனை. இளங்கோவிடம் நான் சொன்னது எதுவும் பொய்யில்லை தாரிணி. எல்லாமே உண்மைதான் இனி உன்னை யாரும் உனக்கு சமமில்லாதவனை காதல் என்கிற பெயரில் ஏமாந்து போய் கல்யாணம் பண்ணிக்கிட்டயேன்னு சொல்ல முடியாது."

"விக்னேஷ்...!"

"கன்னியின் கடைக்கண் பார்வை கிடைத்தால் போதும் எதையும் சாதிக்கலாம். எனக்கு உன் காதலே கிடைத்து விட்டது. நான் சாதிக்க மாட்டேனா? என்ன.. கடன் வாங்கக் கூடாதுங்கிற கொள்கையோடு இருந்தவன் நான். ஆனால் இப்போது கடன், லோன் இப்படி என் கொள்கையை மாற்றிக் கொண்டிருக்கிறேன். இதுவும் உனக்காக..."

''எனக்காக.. எனக்காகன்னு சொல்லி இவ்வளவு சாதித்திருக்கிறீர்களே விக்னேஷ். உங்களுக்காகன்னு எதுவும் செய்துகொள்ள நினைக்கவில்லையா...?''

''எனக்காகவா... ம்ம்... உன்னைக் கல்யாணம் செய்து கொள்ள நினைத்திருக்கிறேன்.''

''உங்களை...''

தாரிணி சிரித்தாள். விக்னேஷும் சிரித்தான். அவனுக்கு கை அசைத்து விட்டுக் கல்லூரிக்குள் திரும்பிய போது மதியம் அவள் மனதில் குடி கொண்டிருந்த கலக்கம் பறந்து ஓடியிருந்தது.

அன்றிலிருந்து ஆறாம் நாளில் ஊருக்கெல்லாம் பத்திரிகை கொடுத்து அழைத்து விஷ்ணு துர்க்கை அம்மன் கோவிலில் விக்னேஷ் தாரிணியின் கழுத்தில் தாலி கட்டினான்.

மாப்பிள்ளையின் தாய் தகப்பனாக அபிராமியும், சோமசுந்தரமும் தாரை வாங்கிக் கொள்ள பெண்ணின் தாய், தகப்பனாக மேனகாவும், தினகரனும் தாரை வார்த்துக் கொடுத்தனர்.

குவார்ட்டர்ஸை சேர்ந்தவர்கள் அனைவரும் தங்கள் வீட்டுத் திருமணம் போல் நினைத்து திருமண ஏற்பாடுகளை ஓடி ஓடிக் கவனித்து அந்தத் திருமணத்தை நடத்திக் கொடுத்தனர்.

கணவன், மனைவியாகி விஷ்ணு துர்க்கையம்மன் சந்நிதியில் மாலையும் கழுத்துமாய் இருவரும் நின்று விஷ்ணு துர்க்கையை வணங்கினர். பாலன் குருக்கள் தீபாராதனை காட்ட தீப ஒளியில் சிரித்த முகத்துடன் ஆசிர்வதித்த விஷ்ணு துர்க்கையைக் கண்டு, 'தாயே! உன் சந்நிதியில் இவரை என்னவராக மனதில் வரித்தேன். இன்று ஊர் அறிய உன் முன்னிலையில் அவர் எனக்கு தாலிகட்டி மனைவியாக்கிக் கொண்டார். கேட்டவர்க்கு கேட்ட வரம் கொடுக்கும் விஷ்ணு துர்காதேவியே! உன் அருள் என்றும் எங்களுக்கு இருக்க வேண்டும்!' என்று வேண்டிக் கொண்டாள் தாரிணி.



'எண்ணம் கவர்ந்தவளைக் கை பிடிக்கும் தகுதியைக் கொடுத்தாய்... அவளை அழைத்துச் செல்ல எனக்கென்று வீடும் கொடுத்தாய்... வாழ்க்கை கொடுத்தாய்... என்றுமே உன் அருளையும் தருவாய்.. தாயே.' விக்னேஷ் வணங்கிக் கொண்டான்.

நவகிரகங்களையும் வணங்கி முடித்து கோவில் சந்நிதியில் அமர்ந்து எழுந்து விக்னேஷின் காரில் ஏறிக் கொண்டு அவனுடைய புது வீட்டில் கிரஹப் பிரவேசம் செய்யச் சென்றார்கள் அவர்கள் இருவரும். தொடர்ந்து அவனது வேனில் சோமசுந்தரம், அபிராமி, குமரன், தினகரம் மேனகா அவர்களின் குழந்தைகள் எல்லோரும் ஏறிக் கொண்டு அவர்களை தொடர்ந்து சென்றார்கள்.

தாரிணி ஹோமத்தில் விக்னேஷ் பக்கத்தில் மனையில் அமர்ந்து கொண்டாள். பாலை நல்ல முறையில் காய்ச்சி அனைவருக்கும் கொடுத்தாள்.

''குமரா இது உன்னுடைய ரூம்'' விக்னேஷ் ஒரு ரூமைக் காட்ட அபிராமி சண்டைக்கு வந்தாள்.

''ஏம்ப்பா.. என் சமையலை ரசிக்கன்னு அவன் ஒருத்தன் தான் இருக்கிறான். அது உனக்குப் பொறுக்கலையா?''

''இல்லைம்மா.. எனக்கென்று இருப்பது இவன் ஒருத்தன் மட்டும் தான்.''

''அப்போ.. என்னைப் பெற்றவள்ன்னு சொன்னது பொய்யா?''

''அம்மா நான் அப்படிச் சொல்லவில்லை.''

''அடடா.. ஏண்டா நீயும், அம்மாவும் வழக்கடித்துக் கொள்கிறீர்கள். விக்னேஷ் நேற்றுத்தான் ஒரு விசயம் கேள்விப்பட்டேன்.''

''என்னடா?''

''தாரிணிக்கு சமைக்கத் தெரியாதாமே.''

விக்னேஷ் தாரிணியைப் பார்க்க அவள் இதழ் கடித்து கை பிசைந்தாள்.

''உனக்கே தெரியும் என் நாக்கைப் பற்றி.. அம்மாவின் கைச் சமையலுக்கு நான் அடிமை. உனக்குக் கோடி புண்ணியமாய் போய் விடும். என்னை விட்டுவிடு.''

அன்று இரவு... அழகான அவ்வீட்டின் படுக்கை அறையில் விக்னேஷின் கரம் பற்றிய தாரிணி அவன் கைகளுக்குள் அடைக்கலமானாள்.

எண்ணிய எண்ணம் நிறைவேற அருள் புரியும் விஷ்ணு துர்க்கை அவர்களது வாழ்வை நிறைத்து பூக்கோலம் போட்டு விட்டாள். இனி அவர்கள் வாழ்வில் ஏற்றம் தான்... இறக்கமில்லை.